


# நினைவில் நிறைந்தவை....

ரொரன்ரோ-கனடா
2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நிறைந்தவை

அன்புடன்,

[illegible]

[illegible] 03-08-2009

றொரன்ரோ - கனடா

2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடியுறை

எல்லாப் புகழும் எல்லாக் கனமும்
எல்லா மகிமையும் பரம தந்தையாகிய
இறைவனுக்கே உரியவை.

அவனருளாலே நடைபெற்ற
எங்கள் திருமணம்,
அவனருளாலே ஐம்பதாண்டுகள்
நிறைவுறுவதனை முன்னிட்டு
அவனருளாலே எழுதப்பட்ட,
"நினைவில் நிறைந்தவை"
என்னும் இந்நூல்
அவன் தாள்களுக்கே
அடியுறையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்: நினைவில் நிறைந்தவை

நூலின் வகை: வாழ்க்கைச் சரிதம்

நூலாசிரியர்: கனரத்தினம் செபரத்தினம்

பதிப்பு: முதற் பதிப்பு, ஜூலை 2009

எழுத்தமைப்பு: "செல்வா கிராபிக்ஸ்" கனடா

அச்சமைப்பு: "விவேகா அச்சகம்" கனடா

பதிப்புரிமை: நூலாசிரியருக்கே உரியது

Title: Ninaivil Nirainthavai

Subject: Autobiography

Author: Kanagaratnam Sebaratnam

Edition: First Edition - July 2009

Typesetting: Selva Graphics - Canada

Printer: Viveka Printers - Canada

Copy Rights: © Copy Rights Reserved



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

பக்கம்

அடியுறை .................... 1
வணக்கம் .................... 6

**வாழ்த்துக்கள்:**

1. அருட்திரு பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன் 7-9
2. அருட்திரு ஸ்ரீதரன் ஜெயராஜா .................... 10-11
3. செவாலியர், கலாநிதி ச. அடைக்கலமுத்து 12
4. கலாநிதி க.தா. செல்வராசகோபால் .................... 13
5. கலாநிதி, கவிநாயகர் வி. கந்தவனம் .................... 14

**நன்றிக்குரியவர்கள்:**

1. வண. ரீ.எஸ். வேதநாயகம் போதகர் .................... 15-19
2. வைத்திய கலாநிதி க. வைத்தியநாதன் .................... 20-22
3. பேராசிரியர் வி. செல்வநாயகம் .................... 23-26
4. தமிழவேள் க.இ.க. கந்தசாமி .................... 27-31
5. திரு. திருமதி இரத்தினப்பிரசாசம் .................... 32-34
6. திரு. திருமதி இராசதுரை .................... 35-37
7. திரு. திருமதி ஐங்கரப்பிள்ளை .................... 38-40
8. டாக்டர், கலாபூஷணம் மா. கந்தசாமி .................... 41-43
9. திரு. திருமதி சச்சிதானந்தசிவம் .................... 44-46
10. திரு. செ. சத்தியமூர்த்தி .................... 47-49
11. திரு. அ. சிவானந்தநாதன் .................... 50-54
12. திருமதி பொன்னாச்சி செனவரத்தினம் .................... 55-59
13. திரு. திருமதி சோமசுந்தரம் .................... 60-61
14. திரு. பெனடிக்ற் தேவகுமார் .................... 62-64
15. திரு. திருமதி ஜோர்ஜ் தேவகுமார் .................... 65-67
16. திரு. ந. பாலசிங்கம் .................... 68-71
17. திரு. எஸ்.எம். லீனா .................... 72-75
18. திரு. திருமதி விஜயரத்தினம் .................... 76-78
19. திரு. திருமதி அல்பிரட் ஜெயரத்தினம் .................... 79-81



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறந்த பொன்னாடு:**

1. படம் (மட்டக்களப்பு மாநாடு) ........ 82
2. பிறந்த பொன்னாடு ........ 83-85
3. பிறந்த ஊர் ........ 86-89

எனது பெற்றோர் ........ 90-94
எனது உடன் பிறந்தோர் ........ 95-100
எழுத்தறிவித்த இறைவர்கள் ........ 101-107

**நல்லறமாம் இல்லறம்** ........ 108

1. பழுகாமம் ........ 108-110
2. நேசம்மா அவர்களின் குடும்பத்தார் ........ 110-115
3. எங்கள் திருமணமும் மக்கட் பேறும் ........ 116-134

**அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்** ........ 135-140
**எனது சமய, சமூக, எழுத்துப் பணிகள்** ........ 141-161

**கனடாவின் எழுத்தாள நண்பர்கள்**

1. திரு. குரு அரவிந்தன் ........ 162-164
2. பண்டிதர், கலாநிதி அலெக்ஸ்சாந்தர் ........ 165-174
3. திரு. அஜந்தா ஞானமுத்து ........ 175-178
4. திரு. சு. இராசரத்தினம் ........ 179-182
5. திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ........ 183-186
6. கலாநிதி பார்வதி கந்தசாமி ........ 187-191
7. கலாநிதி, கவிநாயகர் வி. கந்தவனம் ........ 192-198
8. அதிபர் பொன். கனகசபாபதி ........ 199-204
9. பேராசிரியர் வண. யோசப் சந்திரகாந்தன் ........ 205-207
10. திரு. தங்கராசா சிவபாலு ........ 208-211
11. கலாநிதி க.தா. செல்வராசகோபால் ........ 212-221
12. வித்துவான் க. ஞானரத்தினம் ........ 222-225
13. திரு. இளையதம்பி தங்கராசா ........ 226-231
14. திரு. எஸ். திருச்செல்வம் ........ 232-237
15. திரு. சி. பத்மநாதன் ........ 238-241
16. பேரறிஞர் முருக. வே. பரமநாதன் ........ 242-246
17. கலாநிதி இ. பாலசுந்தரம் ........ 247-251




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் ........................ 252-256
19. திரு. த. வசந்தகுமார் ........................ 257-260
20. கலாநிதி சு. சிவநாயகமூர்த்தி ........................ 261-264

**ஐக்கிய இராச்சியத்தில் நாங்கள்:** ........................ 265-266

**இலண்டன் நண்பர்கள்:**
1. திரு. திருமதி சிறிதரன் ........................ 267-268
2. செவாலியர் கலாநிதி அடைக்கலமுத்து ........................ 269-275
3. திரு. என். செல்வராசா ........................ 276-278
4. களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கம் ........................ 279-280
5. திரு. எஸ். கருணானந்தராசா ........................ 281-283
6. 'வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்'
திரு. சிறீக்கந்தராசா ........................ 284-287
7. திரு. திருமதி றோஷான் ........................ 288-289
8. திரு. எஸ்.கே. ராஜன் (IBC) ........................ 290-291
9. திரு. உதயகுமார் கண்ணன் (தீபம்) ........................ 292
10. கலாநிதி மு. நித்தியானந்தன் (தீபம்) ........................ 293-295

**அவுஸ்திரேலிய நாட்டில் நாங்கள்:** ........................ 296-297
1. வணக்கத்துக்குரிய ஜோன் ஜெகசோதி ........................ 298-301
2. கலாநிதி பொன். பூலோகசிங்கம் ........................ 302-306
3. பேராசிரியர் ரீ. வேலாயுதம் ........................ 307-309
4. பேராசிரியர் கே. ஜெகசோதி ........................ 310-312
5. திரு. து. நிசாகரன் ........................ 313-316
6. திரு. சு. ஸ்ரீகந்தராசா ........................ 317-321
7. திரு. பாலசிங்கம் பிரபாகரன் ........................ 322-324

நன்றி ........................ 325



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணக்கம்

எங்கள் அன்புக்குரிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உளம் நிறைந்த வணக்கத்தைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

"நினைவில் நிறைந்தவை" என்னும் பெயரிய இந்நூலானது, எங்கள் வாழ்க்கைச் சரிதத்தோடு எனது இலக்கிய, சமய, சமூகப் பணிகளையிட்டும் எங்களின் நன்றிக்குரியவர்களின் விரிவான செய்திகளையிட்டும் எங்களுடன் தொடர்புடைய அன்பர்களின் இலக்கியப் பணிகளையிட்டும் கூறுவதாய் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் இங்கிலாந்து தேசத்துக்கும் அவுஸ்திரேலியா தேசத்துக்கும் நாங்கள் சென்றிருந்தபோது சந்தித்த அன்பர்களின் செயற்பாடுகளையிட்டும் இந்நூலிலே குறிப்பிட்டுள்ளோம்.

எங்களின் நன்றிக்குரியவர்களதும் எங்களுடன் தொடர்புடையவர்களதும் பெயர்களை அகரவரிசை ஒழுங்கிலேயே எழுதியிருக்கிறோம் என்பதனை அன்புடன் அறிவித்துக் கொள்கிறோம்.

எங்களின் நினைவில் நிறைந்திருக்கும் செய்திகளையே இந்நூலில் எழுதியிருக்கிறோம். அச்செய்திகளில் தவறுகள் ஏதும் ஏற்பட்டிருக்காதென்று கருதும் போதிலும் எங்கள் அறியாமை, மறதி என்பன காரணமாக செய்திகளில் ஏதும் தவறுகள் ஏற்பட்டிருப்பின்,

"குற்றம் களைந்து குணமறிந்து கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்"


எனும் சான்றோர் கூற்றினை நினைவுறுத்தி அமைகிறோம்.

திரு. திருமதி செபரத்தினம்
31 Muskox Avenue
Scarborough, ON
M1B 6E7
Canada.
Tel.: 416-282-4338



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து சால்பு ஊன்றிய தூண்



இனிய தமிழ்ப் பேராசானாக வும் தமிழியல் ஆய்வாளராக வும் அருந்தமிழ் நூல்களின் ஆக்கியோனாகவும் கண்ணியம் நிறைந்த கல்லூரி அதிபராகவும் சமயப் பற்றுள்ள கிறிஸ்தவனா கவும் தனது குடும்பத்தின் பாச மிகு தலைவனாகவும் விளங் கும் 'தமிழ் ஒளி', வித்துவான் க.செபரத்தினம் அவர்களையும் அவரது வாழ்க்கைத் துணைவியான அன்பும் பரிவும் அமைதியுடன் கூடிய அருளுணர்வும்மிக்க திருமதி நேசம்மா செபரத்தினம் அவர்களையும் அன்னாரின் திருமண மங்கல வாழ்வின் ஐம்பது ஆண்டு நிறைவினை யொட்டி வாழ்த்திப் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரியர் செபரத்தினம் 1950களின் இறுதியில் பேரா தனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் எனது தந்தையாருடன் சமகால மாணாக்கனாக வித்துவான் பட்டத்திற்கான பாடப் படிப்பினை மேற்கொண்டவர். அக் காலத்திலிருந்து இக்காலம் ஈறாக இவர்களது வயது வளர்ந்ததுபோல நட்பும் தமிழ்ப் பற்றும் வளர்ந்ததென்ப தனை நான் அறிவேன்.

ஆசிரியர் செபரத்தினம் அவர்களின் முதல் நூலான "வாழையடி வாழை" என்னும் நூல் வெளிவந்த கையோடு அந்நூலின் சில பிரதிகளை எனது தந்தையாருக்கு அன்பளிப்பு செய்வதற்காக 1962இல் இளவாலையில் அமைந்துள்ள எமது இல்லத்திற்கு வந்து ஆசிரியர் தங்கிச் சென்ற நினைவு எனது அடிமனதில் இன்றும் பசுமையாகவே உள்ளது. அப்போது நான் எட்டு வயதுச் சிறுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றாண்மை பற்றி வரையறுத்துக் கூறும் வள்ளுவரின் குறள் வரிகளுள் ஒன்று சான்றோனின் தனிப்பெரும் பண்புகள் ஐந்தினை இரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது. அக்குறள் பின்வருமாறு;

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்"

குறளாசிரியர் குறிப்பிடும் ஐந்து பண்புகளும் ஆசிரியர் செபரத்தினம் அவர்களிடம் மிகவும் வெளிப்படையாகக் கண்டுணரக்கூடியவையாகும். தனது மாணவர்கள், நண்பர்களிடத்தில் அவர் கொண்டிருக்கும் கரிசனையும் அன்பும் தீமைகளை நாணச் செய்யும் வகையில் நன்மை செய்ய வேண்டும் என்ற நல்லுணர்வுடன் அவர் செயற்படும் திறனும் அதனை உறுதிப்படுத்தும் அவரது ஆழ்ந்த கிறிஸ்தவ சமய நம்பிக்கையும் தனது மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தம்மால் இயன்றவற்றைச் செய்திட வேண்டும் என்ற ஒப்புரவு உணர்வும் வருந்தித் துன்புறும் எம்மினமக்கள்மீது குறிப்பாகக் கிழக்கு மாகாண மக்களின் மீதும் தமது பழைய மாணவர்கள், அவர்களின் குடும்பங்கள் மீதும் அவர் கொண்டிருக்கும் இரக்கம் நிறைந்த கண்ணோட்டமும் இதற்குச் சான்றாகும். வாய்மை இவரது தனிப்பெரும் பண்புகளுள் ஒன்று என்பது இவரின் எழுத்திலும் பேச்சிலும் எப்போதும் வெளிப்படும் உண்மை.

இவை தவிர தனக்குக் கல்வியூட்டிய ஆசிரியர்களையும் பேராசிரியர்களையும் தனது மனதில் மிக உயரத்தில் வைத்தே இவர் எப்போதும் நன்றியுணர்வுடன் நினைவுகூருவார். ஒரு சில உரையாடல்களின்போது தனது பல்கலைக்கழக அனுபவங்கள் பற்றி இவர் மிகவும் செழுமையான நினைவுகளைப் பகிர்ந்து கொள்வார். குறிப்பாக பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகியோரைத் தனது வழிகாட்டிகளாகவும் தமிழியல் ஆய்வுப் பணியில் தனக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்த பேரறிஞர்களாகவும் நினைவுகூருவார்.

சிறுகதை நூல் ஒன்றினையும் பல கட்டுரைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் ஆசிரியர் எழுதியுள்ளபோதிலும் காலத்தால் நின்று நிலைக்கும்படியாக அவர் எழுதிய நூல் ஒன்றைப்பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஆற்ற வேண்டிய பணியொன்றினை ஆசிரியர் தனித்து நின்று தமிழுலகிற்கு அளித்துள்ளார். ஈழத்தமிழ்ப் புலமைத் தளத்தில் தடம் பதித்துச் சென்ற பேரறிஞர்களின் வாழ்வையும் பணியையும் வகுத்தும் பகுத்தும் மதிப்பீடு செய்து பாரியதோர் ஆய்வுத் தேடல் வழியாக "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்ற அரிய நூலை எழுதி வெளியிட்டுள்ளார். நூலாசிரியர் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சான்றோரின் பட்டியலானது கால அடிப்படையில் இரண்டு நூற்றாண்டுகளை உள்ளடக்கியுள்ளது. புவியியல் நில அடிப்படையில் தமிழீழப் பிரதேசங்களாகிய திருகோ ணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கற்பிட்டி முதலிய பரந்து விரிந்த பெருநிலப்பரப்பினை அடியொற்றியவை.


தமிழ்ப் பேரறிஞர்களின் வாழ்வு, குடும்பம், சமூகப் பின்னணி முதலியவற்றை வரலாற்றியல் நேர்மையுடனும் சமூகக் கட்டமைப்புகளுடனும் புறநிலைப்படுத்தப்பட்ட புலமையாய்வு நோக்குடனும் விரிந்து வியந்தும் விமர் சித்தும் விளக்கியும் கூறுவது என்பது இலகுவான செயல் அல்ல. இது பல பாரிய சவால்களையும் ஆய்வுக் கூர்மை யையும் உள்ளடக்கி இந்நூலினை இவர் தமிழுலகிற்கு அளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களும்" என்ற அரிய நூலினை யாத்துள்ளார். வித்துவான் - தமிழ் ஒளி க. செபரத்தினம் அவர்களின் பணி தொடர வேண்டும் என இவரையும் இவரது அன்புத் துணைவியாரையும் வாழ்த்தி பல ஆண்டுகள் காலம் வாழ இறைவனை வேண்டி நிற்கிறேன்.

**பேராசிரியர் அமுது யோசப் சந்திரகாந்தன்**
**ரொறன்ரோ பல்கலைக்கழகம்**
**ரொறன்ரோ - கனடா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றேன்!



கடவுள் முதன் முதலில் ஆதாமைப் படைத்து அவன் தனிமையாய் இருப்பது நல்ல தல்ல என்று கண்டு அவனுக்கு ஏற்ற துணையை அவனது விலா எலும்பில் இருந்து உருவாக்கி அவர்களைக் குடும்பமாக, ஒரே மாம்சமாக இணைத்தார். கடவுள் இணைத்ததை மனுஷன் பிரிக்கா திருக்கக் கடவன் என்று கட்டளையும் கொடுத்தார்.

தம்பிலுவில் திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வித்துவான் க. செபரத்தினம் அவர்கள் திருப்பழு காமம் என்ற ஊரைச் சேர்ந்த நேசம்மாவை தனக்குரிய வாழ்க்கைத் துணையாகத் தெரிந்தெடுத்துக் கொண்டார்.

கடவுளுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து இத்தம்பதியினர் கடவுளுடைய சமூகத்தின் முன்பாகவும் சமுதாயத்தின் முன்பாகவும் நற்சாட்சிகளாய் வாழ்ந்து வருகிறார்கள். கலாசாரம் மாறுபட்ட தேசத்தில் வாழ்ந்தா லும் இவர்களுடைய வாழ்வு நம் சமூகத்தவர் முன்பாகக் கலை, கலாசாரம் எதுவும் மாறிடாமலும் கடவுளுக்குப் பிரியமான வாழ்க்கையை நடாத்துகின்றனர். இவர்கள் தம் பிள்ளைகளை நல் வழியில் வளர்த்து இருக்கின்றனர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவைகள் இவர்களிருவருடையை வாழ்வில் மிளிர்கின்றது.

இவர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் முன் மாதிரி என்னவெனில் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் கடவுளுடைய வார்த்தையான "முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; அப்பொழுது உங்களுக்கு எல்லாம் கூடக் கொடுக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும்" என்ற வார்த்தையின் படியும் "பெருமையுள்ளவனுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்; தாழ்மை உள்ளவர்களுக்கோ கர்த்தர் கிருபை அளிக்கிறார்" என்ற வார்த்தையின் படியும் இவர்கள் இருவரும் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு அறிவாற்றல் ஆழமாயிருந்தும் அவைகளைக் குறித்துப் பெருமை பாராட்டாமல் எல்லாவற்றிலும் தாழ்மையாய், பொறுமையாய் நடந்து கொள்ளுவதனால் கர்த்தர் இவர்களைத் தமது கிருபையினால் உயர்த்தி வைத்திருக்கிறார். இது நாம் நமது கண்ணால் காணும் சாட்சி. இவர்கள் வாசிக்கப்படும் நிருபங்களாய் இருக்கிறார்கள்.

இவர்கள் இவ்வாறு உயர்ந்து நிற்கக்காரணம் இவர்களுடைய பெயருக்கேற்றால்போல் (செபம் + ரத்தினம், நேசம் + அம்மா) கர்த்தரை நோக்கி செபம் செய்யும் அவர்களுடைய வாழ்க்கையும் அம்மாவின் நேசம் (அன்பு) ஆகியவைகளினால் கர்த்தர் இவர்களை இரத்தினம்போல் ஜொலிக்கச் செய்கிறார். இவர்களுடைய மணவாழ்வினில் பல மைல் கற்களைக் கடந்து இன்று தமிழுக்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் கலங்கரை விளக்காய் ஒளி விடுகின்றார்கள்.

இவர்களை இதுவரை காலமும் வழிநடத்தி வந்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே இன்னும் பல ஆண்டுகள் இவர்கள் இருவருக்கும் உடல் சுகம், பெலம், தைரியம் யாவற்றையும் கொடுத்து நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**என்றும் அன்புடன்**
**அருட்திரு ஸ்ரீதரன் ஜெயராஜா**

---

Rev. Sritharan Jeyarajah, Senior Pastor
Phone: 905-232-3910 / 416-697-1321
E-mail: sritharanjeyarajah@gmail.com

"Jesus Christ is the same yesterday and today and forever"
- Hebrews 13:8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செவாலியர், கலாநிதி, வித்துவான்,
சொல்லின் செல்வர், பாவேந்தர்,
தமிழ்க்கங்கை
திரு.ச. அமுதசாகரன் அடைக்கலமுத்து
(பிரிய நண்பன் இளவாலை அமுது)
அவர்களின் வாழ்த்து

## நெஞ்சினிலே நெசவு செய்த
## பூந்தமிழ்ப் பொன்னாடை

புன்னகையின் தாமரையை முகத்தில் கொண்டோன்
பொழுதெல்லாம் உண்மைநெறி போற்றும் சான்றோன்
பொன்னருவிக் கங்கைநதி காலைச் சுற்றிப்
பூச்சொரியும் உயர்பேரா தனைக்குச் சென்றான்
அன்னையவள் தமிழுக்கு நிதியம் கண்டான்
ஆய்ந்தறிவில் அரங்கேறிப் பட்டம் பெற்றான்
மன்னுபுகழ் வித்துவான் மணியும் ஆனான்
மங்கையவள் நேசம்மா மதியும் கண்டான்.

மீன்பாடும் மட்டுநகர் பிறந்த தோன்றல்
விண்ணாட்டு வழிகாட்டும் இயேசு தாசன்
தேன்பாயும் பேச்சினொடு எழுத்தில் வல்லோன்
தீந்தமிழில் ஈழத்தின் சான்றோர் தம்மை
வான்பாயும் மழைபோல எழுதித் தந்து
வையத்தில் முன்னோரை வாழ வைத்தோன்
மான்பாயும் மருதநிலத் தமிழின் பண்ணை
மாணவர்க்குப் பழந்தமிழை வளர்த்த திண்ணை.

எத்தனைநாள் படித்தாலும் சலிப்பே யில்லை
எழுத்தவற்றைச் சொன்னாலும் சுவைதீ ராது
அத்தனையும் தேனீக்கள் திரட்டும் செல்வம்
ஆராய்ச்சி வடித்திட்ட அறிவின் வெல்லம்
சித்தத்தில் உறைந்திடவே கதைகள் ஆக்கி
திக்கெல்லாம் கைதட்டப் பரிசும் பெற்றோன்
நித்தியமாய்த் தமிழ்க் குலத்தின் நெஞ்சில் வாழ்ந்து
நினைதோறும் மணம் பரப்பும் நேச முல்லை.

பழக்கத்தால் பாசத்தால் குணத்தின் குன்றால்
பால்மொழியால் கண்விழியால் அன்பின் ஊற்றால்
ஒழுக்கத்தால் அறிவுரையால் நீதி நேர்மை
உள்ளத்தால் நூலறிவால் கற்றோர் போற்றும்
பழக்கத்தால் ஆசிரியப் பணியால் நட்பால்
மனங்களிக்க எழுதிவிடும் வசன ஊற்றால்
குளக்கரையில் மலர்மணக்கும் தென்றற் காற்றாய்
குறையாத நிறைகுடமாய் நீடு வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐம்பதாண்டு மண வாழ்க்கையில்
## ஆயிரம் மக்கள்!
## இதுவொரு அருட்கொடை

# வித்துவான் க. செபரெத்தினம்
# நேசம்மா தம்பதியினரின்
# திருமணப் பொன் விழா வாழ்த்து


பெருநில மண்ணில் பிறக்கும் மாந்தருள்
குருவாய் அமைவது குறைவிலா மாதவம்
திருப்பழு காமத் தெரிவை நேசம்மா
அருந்தமிழ் இறைவி ஆசிரி யைதன்
குருமகள் கரத்தைக் குவிபெறப் புனைந்த
தருதம் பிலுவில் தகைபதி யாளன்
கருவிற் கிறித்து கற்பனை பூண்ட
மருக்கொழுத் தன்ன மனிதருள் மதிமிகு
உருவெனும் வித்துவான் உயர்செப ரெத்தினப்
பெருந்தகை ஆசான் பெருநலங் கொள்ள
திருமறை ஆதாம் திகழ்தரு ஏவாள்
இருவர் இணைந்த இயல்பதாய் மணந்து
உருவம் இரண்டும் உள்ளத் தொடர்பினால்
முருகுற ஒன்றென முகைத்து மலர்ந்த
தருமில் வாழ்வில் தளைத்து மாணவ
விருப்புறு மக்கள் விருத்தியால் பலர்க்கு
மருளகல் பெற்றார் மதிப்புடன் துலங்கி
பொருள்படு வாழ்க்கை பொலிந்து பொன்விழா
திருநாட் காணத் திகழுமிவ் வேளை
மருளறு மகிழ்ச்சி மாண்பது கொண்டு
வருடம் பலவாய் வளர்தமிழ் செய்யும்
அருளதை இயேசு அளிப்பா ராமேன்.

**கலாநிதி க.தா. செல்வராசகோபால்**
**(ஈழத்துப் பூராடனார்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிநாயகர், கலாநிதி வி. கந்தவனம் அவர்களின் வாழ்த்து



வித்துவான் செப ரத்தினம் தமிழ்
விற்பன்னர் மணி ரத்தினம்
உத்தமர் ஒழுக் கத்திலே நடை
ஒப்பிலா வொரு புத்தகம்!

நாடகம் கவி கட்டுரை கதை
நாம் சுவைத் தெழத் தந்தவர்
மேடையிற் பெரு நாவலர் தமிழ்
விழுமியங் களின் காவலர்!

அரிய பேற்றினர் இல்லறத் தினை
ஐம்ப தாண்டுகள் ஆற்றினர்
உரிய இன்பத்தை உலகத்தா ருக்கும்
உரைக்கும் நூலொன்றை இயற்றினர்!

ஆற்றலார் வழி ஆன்ற தாதலால்
அவரின் வாழ்க்கை வழிமுறை
ஏற்று மக்களும் பின்பற்றித் தங்கள்
இல்லறத் தைந டத்தலாம்!

மாசிலா தவர் வாக்கினைத் தெய்வ
மந்திர சக்தி காக்குமால்
வீசுவான் புகழ் வித்துவான் நூலை
வேண்டிக் கற்றுமே லோங்குவாம்!

பணிகள் தக்கவை செய்து பைந்தமிழ்ப்
பண்பை மிக்க வளர்த்தவர்
இணையி லாதவர் எங்கள் வித்துவான்
ஏறுபோல் என்றும் வாழ்கவே!

இன்னும் பற்பல ஆண்டுகள் செப
ரத்தினம் ஐயா வாழ்கவே
மன்னு காதல் துணையொடும் அன்பு
மக்கள் பேரரும் சூழவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்:

## வணக்கத்துக்குரிய
## ரீ.எஸ். வேதநாயகம் போதகர்

ஆண்டவராகிய இயேசுநாதர் உலக மக்கள் அனைவரதும் பாவச் சுமையைப் போக்கிடத் தம்மைத் தாமே பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். சாபமாகக் கருதப்பட்ட சிலுவை மரத்திலே தொங்கி தமது உயிரைப் போக்கியதன்மூலம் பாவமன்னிப்புக்குரிய வழி திறக்கப்படலாயிற்று. இச்செயற்பாடு நற்செய்தி என்றும் சுவிசேஷம் என்றும் அழைக்கப்படுகிறது.

அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையிலிருந்து உயிர்த் தெழுந்த ஆண்டவர் பரலோகத்திற்கு எழுந்தருளிப் போவதற்கு முன்னர் தமது சீடர்களிடம், "நீங்கள் உலகமெங்கும் போய் சகல மக்களுக்கும் நற்செய்தியைப் பிரசங்கியுங்கள்" என்று கட்டளையிட்டுள்ளார்.

ஆண்டவரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்த சீடர்கள் நற்செய்தியைப் பிரசங்கிக்கும் பணியில் தீவிரமாக ஈடுபடலாயினர். இப்பணி பல நூற்றாண்டுகளாக நடை-பெற்று வருவதை அறிந்திருக்கிறோம். பிரித்தானியப் பேரரசு செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் மிஷனரிமார் என அழைக்கப்படும் அடியார்கள் நற்செய்தி பரப்பும் பணியில் அர்ப்பணிப்போடு மிகுந்த அக்கறை காட்டினர். இந்தியா, இலங்கை முதலிய கீழைத் தேசங்களிலும் நற்செய்தி பரப்பப்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பியர் கீழைத் தேசங்களில் செல்வாக்குச் செலுத்திய காலங்களிலேயே நற்செய்தியைப் பிரசங்கிக்கும் பணி தீவிரமாக நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

காலப் போக்கிலே உள்ளூர் மக்களிலும் நற் செய்தியைப் பிரசங்கிக்கும் ஊழியர்கள் எழலாயினர். கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் ஞானமுத்துப் போதகர், காசிநாதர்ப் போதகர், சேதுகாவலர்ப் போதகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியோரைக் குறிப்பிடலாம். அவ்வாறு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கற்கோவளத்திலிருந்து போதகராகப் பணியாற்றியவர்களுள் ஒருவரே ரீ.எஸ். வேதநாயகம் போதகர் ஆவார்.

1865ஆம் ஆண்டளவில் பிறந்தவரான வேதநாயகம் போதகரவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நிறைந்த பாண்டித்தியம் பெற்றுத் திகழ்ந்தார். அதேவேளையில் கிறிஸ்தவ வேதாகமத்திலும் கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளிலும் கிறிஸ்தவ சபை வளர்ச்சி பற்றிய வரலாற்றிலும் வியத்தகு புலமை பெற்றிருந்தாரெனக் கூறப்படுகிறது. தமிழிற் கவிதை புனையும் ஆற்றலும் தமிழ் உரை நடையினைக் கையாளும் திறமையும் கொண்டவராக அவர் விளங்கினாரென கிறிஸ்தவ சபைச் சரித்திரத்திற் காண்கிறோம்.

மேலே குறிப்பிட்ட ஆற்றல்கொண்ட வேதநாயகம் போதகரவர்கள் தமது இருபத்தாறாவது வயதில் அதாவது 1891இல் அரசடி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் போதனாசிரியராக இணைக்கப்பட்டார். அவருடைய வருகை பயிற்சிக் கலாசாலையின் கல்வித் தரத்தை வெகுவாக உயர்த்திவிட்டது. அவருடைய போதனையால் மாணாக்கர் அனைவரும் வளம் பெற்றனர். அக்காலத்தில் அவர் பாடிய மட்டக்களப்பின் வளம் பற்றிய பாடல்கள் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டதாக அறிகிறோம்.

போதகரவர்களின் ஆற்றலை குறுகிய வட்டம் ஒன்றினுள் அடக்குவதைவிட மாவட்டம் முழுமைக்கும் பயன்படுத்த விழைந்த மெதடிஸ்த சபாசங்கத்தினர் அவரைப் போதகராகத் திருநிலைப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டம் முழுவதற்குமான நற்செய்திப் பணியாளராக நியமித்தனர்.

வேதநாயகம் போதகரவர்கள் மட்டக்களப்பு மாவட்டங்களின் முக்கிய கிராமங்களில் பாடசாலைகளை நிறுவும் பணியைத் தொடங்கினார். இதன் மூலம் நன்மை அடைந்த கிராமங்கள் மிகப் பல. நிறுவப்பட்ட மெதடிஸ்த பாடசாலைகளில் கிறிஸ்தவ சமயமும் போதிக்கப்படலாயிற்று. இதனைச் சைவசமயப் பெற்றோர் விரும்பாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதிலும் இலவசமாக அளிக்கப்படும் கல்வியை இழக்க அவர்கள் விரும்பவில்லை. பாடசாலைகளைத் தொடர்ந்து கிறிஸ்தவ தேவாலயங்களை நிறுவும் பணிகள் ஆரம்பிக் கப்பட்டன. அதிக மக்களைக் கொண்ட ஊர்களைத் தெரிந்து தேவாலயங்களை அமைக்கலாயினர். இதற்கு சைவ சமய மக்கள் தெரிவித்த பலத்த எதிர்ப்புகளால் மஞ்சந்தொடுவாய், களுதாவளை, பெரிய கல்லாறு, அக்கரைப்பற்று, திருக்கோவில், கோமாரி, பொத்துவில் ஆகிய இடங்களில் மட்டுமே ஆலயங்களை அமைக்க முடிந்தது. குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி, காரைதீவு, தம்பிலுவில் முதலிய இடங்களில் பலத்த எதிர்ப்பு காரணமாக கிறிஸ்தவ ஆலயங்களை அமைக்க முடியாமற் போயிற்று.

தம்பிலுவில் பழைமை வாய்ந்த சைவசமய மக்களைக் கொண்ட கிராமமாகும். இக்கிராமத்தில் கிறிஸ்தவ பாடசாலையினை அமைக்கக் கூடியதாக இருந்தாலும் ஆலயம் கட்டுவதையிட்டு நினைத்துப் பார்க்கக்கூட முடியாத நிலையே காணப்பட்டது. சமயப் பிரசாரத்துக்கென வந்த வேதநாயகம் போதகரின் தலை மையிலான குழுவினர் ஓட ஓட விரட்டப்பட்டனர். அவர் களின் வாகனங்கள் கல்வீச்சுக்கு இலக்காயின. பிரசாரத் துக்கு உதவியாகக் கொண்டு வரப்பட்ட படக்காட்சிச் சாதனங்கள் உடைக்கப் பட்டன. இவ்விதமான எதிர்ப்புச் செயற்பாடுகளில் எங்களுடைய தந்தையாராகிய கனக ரத்தினம் அவர்கள் அவருடைய நண்பர்களான கணபதிப் பிள்ளை, கண்ணமுத்து ஆகியோரின் தலைமையிலும் வழி நடத்தலிலும் ஊர் வாலிபர்கள் ஈடுபட்டதாக அறிகிறோம்.

மேற்படி எதிர்ப்பியக்கத்தின் முக்கிய தலைவராக விளங்கிய எங்கள் தந்தையார் இருபத்தைந்து வயது வாலிபர்; அழகிய தோற்றம் கொண்டவர்; பார்வையிலேயே சண்டித்தனம் இணையப் பெற்றவர்; தலைமைப் பண்பு இயல்பாகவே அமையப் பெற்றவர். இவரை நேருக்கு நேராகப் பார்த்த வேதநாயகம் போதகரவர்களுக்கு இவரில் இனந்தெரியாத ஓர் ஈர்ப்பு ஏற்பட்டு விட்டது. இவரைப் பார்த்தவுடன் ஆதித் திருச்சபையைப் பல்லாற்றாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பப்படுத்திச் சீரழித்த வைராக்கியமான யூத சமயத்தைச் சேர்ந்த சவுல் எனப்பட்ட பவுலின் நினைவே தமக்கு வந்ததாகப் பின் ஒருபோது எனது தந்தையாரிடம் வேதநாயகம் போதகர் கூறியதாக அறிந்தேன். எனது தந்தையாரை எப்படியாகுதல் கிறிஸ்து பெருமானின் சபையில் சேர்த்துவிட வேண்டுமென உறுதிபூண்ட போதகரவர்கள் பல தடவைகள் தாம் ஒருவராகவே அப்பாவுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டதாக அறிகிறோம்.

கல்வி, கேள்வியிற் சிறப்புற்றிருந்த அப்பாவுக்கு கிறிஸ்து பெருமானையிட்டும் உலக மக்கள் அனைவரதும் பாவத்தைப் போக்கவே அவர் பிறந்து, உபதேசித்து, தம்மைத்தாமே பாவ நிவாரண பலியாக ஒப்புக் கொடுத்தா ரென்னும் சத்தியத்தையிட்டும் விளக்குவதில் போதகரவர் களுக்கு அதிக சிரமம் இருக்கவில்லை என அறிகிறோம். "கரைப்பவர் கரைத்தால் கல்லும் கரையும்" என்பதுவும், "அடிக்குமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்பதுவும் பட்டறிவின் பாற்பட்ட உண்மைகளன்றோ?

வேதநாயகம் போதகரவர்கள் பலநாள்களை அப்பாவுடன் செலவிட்டாரென அறிகிறோம். கிறிஸ்தவ வேதாகமத்தின் புதிய ஏற்பாடு என்னும் பகுதி விளக்க மாகக் கற்றுக் கொள்ளப்பட்டதாகவும் அறிகிறோம். இயேசு நாதரின் அன்பு அப்பாவை ஆட்கொண்டுவிட்டது. சண்டித் தனத்தோடு பாவ வழியில் வாழ்ந்து வந்த அவர் சூரியோ தயத்தைக் கண்டு அநுபவிக்கலானார். வேதநாயகம் போதகர் தம்பிலுவிலில் வாழ்ந்த சவுலை - பவுலாக்கி விட்டார். ஆம், அப்பா கிறிஸ்து பெருமானை வழியும் சத்தியமும் ஜீவனுமாக ஏற்றுக் கொண்டார். இதனையிட்டு அப்பாவால் இயற்றப்பட்ட இரட்சணிய அம்மானை என்னும் பிரபந்த நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையில்,

"ஆணவமே உருவெடுத்து ஆகாமியத்தில மூந்தி
அந்த காரத்திலும் பாவச் சேற்றிலும் மூழ்கி
அல்லும் பகலும் அலைந்து திரிந்த அடியேனை
அரவணைத்து ஆதரித்து ஆட்கொண்ட ஆண்டவராகிய
இயேசு சுவாமிக்கு அனந்த ஸ்தோத்திரம்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

எனது தந்தையார் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய செய்தி மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் காட்டுத் தீபோல் பரவி விட்டது. அப்பாவுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட செயல்பாடுகள் அனைத்தும் வாய்க்காது போய் விட்டன. அப்பாவின் விசுவாச நிலை மேலும் உறுதிப்பட லாயிற்று. இதனையிட்டு மெதடிஸ்த திருச்சபையின் தலைவராகப் பணியாற்றிய வணக்கத்துக்குரிய ஜேம்ஸ் - மேதர் போதகரவர்கள் எழுதிய குறிப்பிலிருந்து ஒரு பகுதி வருமாறு:

"I have known Mr. A. Paul. Kanagaratnam from the time he became a christian, amidst much opposition. I can never forget the stir created at the time all over Batticaloa district, that this young man from an orthodox hindu family had accepted Jesus Christ as his savior and Lord."

இவ்வாறு எங்கள் தகப்பனாரை ஆண்டவராகிய இயேசுநாதரிடம் வழிநடத்தி அவருடைய இரட்சிப்பின் நற்செய்தியை உணரச் செய்து அவருக்குப் புதிய ஒரு வாழ்வு கிடைத்திட வழிவகுத்துக் கொடுத்த வணக்கத்துக் குரிய ரீ.எஸ். வேதநாயகம் போதகரவர்கள் எங்கள் அனைவரதும் நன்றிக்குரியவராகிறார். அப்பெருந்தகையா ளரை மனம் நிறைந்த நன்றியறிதலுடன் நினைவில் நிறுத்தி வைத்துள்ளோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்திய கலாநிதி
# கந்தையா வைத்தியநாதன்

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்"

"அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு"



என்னும் குறள்கள் மூலம் நோயின்றி நீண்ட காலம் வாழ்வதற்குரிய வழியை வள்ளுவனார் விளக்கிக் காட்டியுள்ளார். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதும் பொருள் பொதிந்த கூற்றன்றோ.

நானும் என் மனைவியாரும் கனடா நாட்டுக்கு 1996 ஜுன் மாதத்தில் வந்தது தொடக்கம் குறித்துச் சொல்லக் கூடிய அளவில் பாரிய நோய்களின் பாதிப்புக்கு ஆளாகாமல் இருப்பதற்கு எல்லாம் வல்ல ஆண்டவரின் கிருபையே காரணம் என்போம். ஆண்டவருக்கு அடுத்ததாக எங்கள் சுக நலத்தில் அதிக அக்கறை கொண்டிருப்பவர் எங்கள் குடும்ப வைத்தியரான வைத்திய கலாநிதி கந்தையா வைத்தியநாதன் அவர்களே என்பதனை மிகுந்த நன்றி உணர்வுடன் கூறிக்கொள்ளுகிறோம்.

நாங்கள் இங்கு வந்த நாள் தொடக்கம் எங்கள் குடும்ப வைத்தியராக இருந்துவரும் வைத்தியர் அவர்களது பெயர்ப் பொருத்தம் உண்மையிலேயே எங்களை வியக்க வைக்கிறது. வைத்தியர்களுக்கெல்லாம் வைத்தியராக விளங்கும் இறைவனை வைத்தியநாதன் என அழைப்பது எமது மரபாகும். அந்த இறைவனின் பிரதிநிதியாகவே சாந்தமும் அன்பும் பொறுமையும் கரிசனையும் ஒருங்கிணையப் பெற்ற வைத்திய கலாநிதி வைத்தியநாதன் திகழ்கிறார் என்று கூறினால் அக்கூற்று மிகைப் படுத்தப்பட்ட கூற்றன்று. வைத்தியர் அவர்களிடம் சிகிச்சைக்காக வரும் ஆயிரக்கணக்கான வாடிக்கைக் காரர்கள் இக்கூற்றினைப் பூரணமாக ஒப்புவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.11.1951இல் யாழ்ப்பாணத் தமிழகத்திற் பிறந்த வைத்தியரவர்கள் ஒழுங்காகக் கற்று எம்.பி.பி.எஸ் (M.B.B.S) பட்டத்துடன் பல்கலைக் கழகத்திலிருந்து வெளி யேறி இரண்டு ஆண்டுகள் இலங்கையிற் பணியாற்றிய பின்னர் 25.04.1981ல் இலண்டன் மாநகரை அடைந்து அங்கு ஆகஸ்ட் 1990வரை பணியாற்றினார். அங்கிருந்து 19.09.1990ல் கனடாவிலுள்ள சஸ்கச்சுவான் மாகாணத்தை வந்தடைந்த வைத்தியரவர்கள் ஜெரால்டன், ஒஷாவா முதலிய வைத்தியசாலைகளிற் சில ஆண்டுகள் பணி யாற்றிய பின்னர் 01.04.1995 தொடக்கம் ஸ்காபரோவில் குடும்ப வைத்தியராகப் பணியாற்றி வருகிறார். அன்று தொடக்கம் 2100 எல்ஸ்மியர் வீதியிலுள்ள 109ஆம் அறையிலேயே தொடர்ந்து பணியாற்றி வருவதானது வைத்தியர் அவர்களின் தனித்துவத்துக்குச் சான்று தருகிறதல்லவா! அத்துடன் ஏறத்தாழ 2500 பேர் அவரிடம் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்னும் செய்தியும் அவருடைய தனித்துவத்தையும் தனிப்பெரும் சிறப்பையும் உணர்த்தி நிற்கிறதல்லவா.

ஏற்கனவே பெற்றிருந்த எம்.பி.பி.எஸ் (M.B.B.S) பட்டத்துடன் எல்.எம்.சீ.சீ (LMCC), சீ.சீஎப்.பீ (CCFP) என்னும் பட்டங்களையும் பெற்றுத் தமது தகைமைகளைக் கூட்டிக்கொண்ட வைத்தியரவர்கள் சுவாச காசம் (Asthma), நீரிழிவு (Diabetes), ஆண்களின் பாலுறவுச் சிக்கல்கள் (Male sexual Dysfunction) முதலிய நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதிலும் விசேட திறமை பெற்றிருக்கிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோய்கள் தொடர்பாக அரசினர் வைத்தியசாலைகளுக்குச் சென்று விரிவுரைகளை ஆற்றி வரும் சிறப்பும் இவருக்கு உண்டு.

இரத்த அழுத்தம், இருதய நோய், கண், காது, பல் தொடர்பான நோய்கள், புற்றுநோய் முதலிய கொடிய நோய்களாற் பாதிப்படைந்துவரும் தமது வாடிக்கையாளர் களைச் சம்பந்தப்பட்ட நோய்களுக்குரிய விசேட வைத்தியர்களிடம் அனுப்பி வைப்பதில் எங்களின் குடும்ப வைத்தியரவர்கள் மேற்கொண்டுவரும் நடவடிக்கை பாராட்டுக்குரியது. அவரால் அனுப்பப்படும் கடிதங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பில் "மிக அவசரம்" என எழுதி சிவப்புப் பேனாவினால் கோடிட்டு அவை அனுப்பப்படும்போது விசேட வைத்தியர்களின் முன் உரிமையைப் பெற்று விடுகின்றன. மற்றவர்கள் பார்த்து ஆச்சரியப்படத்தக்க வகையில் விசேட வைத்தியர்களின் பரிசோதனைகள் பல குறுகிய கால அவகாசங்களிற் கிடைத்தமையோடு அவற் றிற்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டமையையும் நன்றியோடு நினைவு கூருகிறோம்.

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" என்னும்

வள்ளுவனார் வாக்கு இங்கு விளக்கம் பெறுகிறதல்லவா!


ஓய்வூதியப்படிவம் (Pension Forms), வாழ்வுறுதிப் பத்திரம் (Life Certificates) முதலியவற்றினை உறுதிப் படுத்தித் தருவதோடு வேறுபல உதவிகளையும் மலர்ந்த முகத்தோடு செய்துவரும் குடும்ப வைத்தியர் அவர்கள் எங்களின் நன்றிக்குரியவராக இருக்கிறாரென்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறோம்.

எங்கள் வைத்தியர் அவர்களின் துணைவியார் சில பல வேளைகளில் வைத்தியர் அவர்களின் அலுவலகம் வந்து உதவி செய்வதைப் பார்த்திருக்கிறோம். வைத்திய ரைப் போன்றே அவரின் துணைவியாரும் மலர்ந்த முகத் துடன் காணப்படுவது இறைவனின் அருட்கொடையே. இன்றுபோல் என்றும் மலர்ந்த முகத்துடன் பணியாற்றிட எல்லாம் வல்ல வைத்தியநாதனாம் இறைவன் வைத்திய கலாநிதி வைத்தியநாதன் தம்பதியினருக்கு நல்லருள் பாலிப்பானாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர்
## வி. செல்வநாயகம் அவர்கள்



தேமதுரத் தமிழ்ச் சுவையைத் துய்த்திட வழி சமைத்து என்னை ஆற்றுப் படுத்தி உதவியவர் எனது குருநாதர் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களாவார். அப்பெருந்தகையின் ஆற்றுப் படுத்துதல் எனக்குச் சித்தியாதிருந்தால் நான் முகவரி அற்ற ஒருவனாகவே இருந்திருப்பேன்.

தமிழ் இலக்கிய வரலாறுகூறும் நூல்களுக்கெல்லாம் முன்னோடி நூலாகக் கருதப்படும் பேராசிரியர் அவர்களின் "தமிழ் இலக்கிய வரலாறு" என்னும் நூலானது 1951இல் வெளியிடப்பட்டு ஆறு பதிப்புக்களைக் கண்ட பெருமைக் குரியது. இதன் பின்னர் பேராசிரியர் அவர்களால் 1957ல் வெளியிடப்பட்ட "தமிழ் உரைநடை வரலாறு" என்னும் நூலும் அத்துறையிலெழுந்த தனித்துவமான நூலாகக் கொள்ளப்படுகிறது. இவ்விரு நூல்களும் பல்கலைக் கழகங்களிலும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் கல்லூரி உயர் வகுப்புகளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதானது அவற்றின் இன்றியமையாமையை எடுத்தியம்புகின்றதல்லவா.

ஆங்கில மொழிப் புலமையிலும் ஆற்றல் பெற்றிருந்த பேராசிரியரவர்கள் இலக்கியத் திறனாய்வு என்னும் துறையினை ஆரம்பித்து அதனை வளர்த்தெடுத்தமையும் அதன் விளைவாக இலக்கியத் திறனாய்வாளர்கள் பலர் உருவாக்கப்பட்டமையும் ஆரோக்கியமான செய்திகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக் கழகத்திலே வித்துவான் வகுப்பு மாணாக்கனாகச் சேர்ந்து பேராசிரியர் செல்வ நாயகம் அவர்களின் திருவடி நீழலில் அமர்ந்து நான் கற்றுக்கொண்டவை பல; அவரால் எனக்கு உணர்த்தப் பட்டவையோ பலப்பல.

பேராசிரியர் அவர்களுக்கும் எனக்குமிடையில் அதிசயிக்கத்தக்க ஓர் உறவு ஏற்பட்டது. எனக்கு பக்தியுடன் இணைந்த உறவு; பேராசிரியருக்கோ பாசத்தோடு இணைந்த உறவு. இஃது எல்லாம் வல்ல இறைவனின் திருவருளும் திருச்சித்தமுமே என்பேன். படிப்பு முடிந்தது; ஆனால் உறவோ தொடர்ந்தது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிற் சேர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் ஆறுமுக நாவலரவர்களின் வாழையடி வாழையான பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களையும் விபுலாநந்த நாவலர வர்களின் வாழையடி வாழையான புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை அவர்களையும் ஒப்பிட்டு அவர்கள் வாழும் காலத்திலேயே "வாழையடி வாழை"என்னும் பெயரில் ஒரு நூலினை எழுதிட இனந்தெரியாத ஓர் உந்துதல் ஏற்பட்டது. அந்நூலினை பேராசிரியரவர்கள் தந்த தமிழால் எழுதிட விழைந்தேன்.

பேராசிரியரவர்களுக்கு என் விருப்பத்தினை ஒரு கடிதமூலம் அறியத் தந்த அடுத்தநாளே யாழ்ப்பாணம் புறப்பட்டுச் சென்றேன். தவமுனிவர் பண்டிதமணி அவர்களை மட்டுவிலிற் சந்திப்பதும் அவரின் அன்புச் சீடர்களாகிய கனக. செந்திநாதன் அவர்களையும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்களையும் சந்தித்துத் தகவல்களைச் சேகரிப்பதுவுமே எனது நோக்கம். நோக்கத்தைச் செவ்வனவே நிறைவேற்றிய மகிழ்வுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு வந்து சேர்ந்த என்னைப் பேராசிரியர் அவர்களின் கடிதம் வரவேற்றது.

"நீர் புத்தகம் எழுதாவிட்டால் தமிழ்மொழிக்கு எவ்வித நலிவும் ஏற்பட்டுவிடாது. நீர் இன்னும் உம்மைத் தகுதியாக்கிட வேண்டும். உம்மிடத்திலிருந்து நான் அதிகம் எதிர்பார்க்கிறேன். விரைவில் என்னைச் சந்திக்கவும்"

இதுதான் கடிதத்தின் சுருக்கம். ஏமாற்றமும் அதிர்ச்சியும் ஏற்பட்டபோதிலும் சுதாகரித்துக் கொண்டேன். ஏற்கனவே புலவர்மணி அவர்களை அவருடைய குருக்கள் மடத்து இல்லத்திலே பல தடவைகள் சந்தித்து அவரைப் பற்றிய குறிப்புகளைச் சேர்த்துவிட்டேன். யாழ்ப்பாணப் பயணம் பண்டிதமணி அவர்களைப் பற்றிய குறிப்புகளைப் பெற்றிட உதவியது. பேராசிரியர் அவர்களைச் சமாளித்துக் கொள்ளலாம் என்னும் தைரியத்தில் புத்தகம் எழுதும் பணியிற் தீவிர கவனமெடுத்து முடித்து விட்டேன்.

நண்பர் எம்.ஏ. ரஹ்மான் அவர்களது அரசு வெளியீட்டகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட "வாழையடி வாழை" பிரதியுடன் பேராசிரியர் அவர்களைச் சந்திக்கப் பேராதனை சென்றேன்.

பேராசிரியரின் வீட்டுக்குள் காலடி வைத்ததும் "நூலாசிரியர் அவர்களே! வாருங்கள்; வாருங்கள்" என்ற அவருடைய அழைப்பு எனது எண்சாண் உடம்பை ஒரு சாண் ஆக்கிவிட்டது. அவருடைய பார்வையின் கடுமை என்னைச் சுட்டுவிட்டது. இந்த நிலையில் அவரை நான் ஒருநாளும் கண்டதில்லை. வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டேன். கண்ணீருக்கு வலிமை இருக்கத்தான் செய்தது.

பேராசிரியரின் முகத்தில் வழமையான சாந்தம். என் உள்ளம் மலர்ந்தது. வெளிவாரி மாணாக்கனாக பொதுக் கலைப்பட்டத்தினை நான் பெற்றுக் கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கான வழிவகைகளை எல்லாம் அவர் செய்திருந்தார். பரீட்சைக்குப் பதிவு செய்வதற்கான படிவம் அவர் மேசையிலே இருந்தது. பொதுக்கலைத் தகுதித் தேர்வுக் குரிய பாடங்களாகத் தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களை அவரே தெரிவு செய்திருந்தார். செய்முறை களைக் கொண்ட புவியியல் வெளிவாரி மாணாக்கருக்கு அதிக சிரமமான பாடமாயிருக்குமே என்று வினவியபோது புவியியல் பேராசிரியர் குலரத்தினம் அவர்கள் உதவி விரிவுரையாளர் ஒருவரின் உதவியைப் பெற்றுத் தருவ தற்கும் விரிவுரையாளர்களுக்குரிய நூலகத்தைப் பயன் படுத்துவதற்கான அனுமதியைத் தருவதற்கும் முன்வந் துள்ளதாகப் பதில் கிடைத்தது. பேராசிரியரவர்கள் என்னில் கொண்டிருந்த கரிசனையுடன் கூடிய அன்பு என்னைச் சிலிர்க்க வைத்தது. இன்று நான் பட்டதாரியாக, பட்டப்பின் படிப்பான கல்வி டிப்ளோமாப் பட்டதாரியாக, இலங்கைக் கல்வி நிருவாக சேவை அதிபராக உயர்ந்தமைக்கு, அடித்தளமிட்டு என்னைத் தூக்கிவிட்ட பெருமைக்குரிய பெருந்தகை பேராசிரியர் செல்வநாயகம் ஐயா அவர்களே காரணராக இருந்தார் என்பதனை திரிகரண சுத்தமாகக் கூறிக்கொள்வதில் நிறைவடைகிறேன்; அவர் நினைவில் நான் வாழ்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழவேள்
# திரு.க.இ.க. கந்தசுவாமி அவர்கள்



தமிழவேள் கந்தசுவாமி அவர்கள், வரலாற்றுப் பெருமையும் தமிழ்த்திருவும் அமையப் பெற்ற இணுவில் என்னும் ஊரிலே 01.09.1919இல் பிறந்தார். உரிய முறையிலே கல்விச் செல்வத்தைப்பெற்று ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய தமிழவேள் அவர்கள் அரசியலிற் கொண்டிருந்த ஈடுபாட்டின் காரணமாக கொழும்பு மாநகருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். கொழும்பில் ஆசிரிய பணியாற்றிக் கொண்டிருந்தபோது கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடனான தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அத்தொடர்பு அவருடைய வாழ்வில் புதியதொரு மாற்றத்தினை ஏற்படுத்தலாயிற்று. தமிழ்சங்கமே அவருடைய வாழ்வாகி, அதுவே அவருடைய மூச்சுக்காற்றாகி, அதுவே அவராகி, அஃது அவருடன் இரண்டறக் கலந்து விட்டதைக் காண்கிறோம்.

கொழும்பு தமிழ்ச்சங்கத்தையிட்டு ஒரு வார்த்தை. 1924ல் "திருக்குறள் பயிற்சிக் கழகம்" என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு, 1938ல் "கொழும்பு தமிழர் முன்னேற்றக் கழகம்" எனப் பெயர் மாற்றப்பட்ட அமைப்பே 1942இல் "கொழும்புத் தமிழ்ச் சங்கம்" என்னும் பெயர் சூட்டப்பட்டு ஈடிணையற்ற தமிழ்ப்பணி ஆற்றிவருகிறது.

தமிழவேள் அவர்கள் 06.01.2008ல் எனக்கு எழுதிய கடிதத்தில், "மிக இளமையில் தமிழ் கற்று அதன் வயம் ஆனேன். மீண்டும் தமிழ் உயர ஆவன செய்வதென உறுதி பூண்டேன். தலைநகர் வந்ததும் தமிழ்ச் சங்கப்பணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமாக ஈடுபட்டேன். இந்நாட்டில் முன்போல் உயரிய தமிழ்ச் சங்கம் அமைத்தல் என் நோக்கம் ஆயது. நாவலர் வழியில் என்னைத் தமிழுக்கு முற்றாக அர்ப்பணித்தேன்" என்று குறிப்பிட்டிருப்பது பொருள் பொதிந்த கருத்தல்லவா?

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக, செயற் குழு உறுப்பினராக, பொதுச் செயலாளராகத் தமிழவேள் அவர்கள் பணியாற்றியதன் மூலம் சங்கம் கண்ட வளர்ச்சி இமாலய வளர்ச்சி என்பேன். சங்கக் கட்டடத்தின் ஓர் அறையில் வசித்துக் கொண்டு அவர் நடத்தி வந்த இலவச தமிழ் வகுப்புகளாற் பயனடைந்தோரின் எண்ணிக்கை மிகப்பல. திரு. எம்.ஜி இராமச்சந்திரன் அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் இலங்கை அரசின் அமைச்சராக இருந்த திரு. செல்லையா இராசதுரை அவர்களூடாக பன்னீராயிரம் தமிழ் நூல்களைக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு தமிழ்நாடு அரசின் அன்பளிப்பாகப் பெற்றுக் கொடுத்த இறவாப் புகழ் தமிழவேள் அவர்களுக்கே உரியது.

1983இல் ஏற்பட்ட இனக் கலவரத்தின்போது கொழும்புப் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டு அவர்கள் தம் உடைமைகள் யாவும் தீக்கிரை யாக்கப்பட்ட வேளையிலே தமது உயிரைப் பணயம் வைத்து தமிழ்ச் சங்கத்தினையும் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பல்லாயிரக்கணக்கான நூல்களையும் தமிழவேள் என்னும் வீர மறவரே அழிவிலிருந்து பாதுகாத்தாரென்ற செய்தி எம்மை அதிசயிக்க வைக்கிறதல்லவா?

ஈழத்துப் புலவர்களை ஒன்று சேர்த்து, "ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம்" என்னும் பெயரில் ஓர் அமைப்பினை 2003ஆம் ஆண்டில் நிறுவி அதன் முதல் மகா நாட்டினை யாழ்ப்பாணத்து நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் 2003 மே மாதம் 14, 15, 16 ஆம் நாள்களில் மிகச் சிறப்பாக நடத்தி முடித்த பெருமையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழவேள் அவர்களுக்கே உரியது. இது தொடர்பாக கனடாவில் வாழ்ந்து வரும் எனக்கு 01.01.2003இல் தமிழவேள் அவர்கள் எழுதிய கடிதத்தில், "தாங்கள் நல்ல நூல்கள் எழுதி இருக்கிறீர்கள். தாங்கள் இம் மகாநாட்டில் பங்குபற்றி இவ்வரிய பணிக்கு ஆதரவு தருக" என்று குறிப்பிட்டிருந்தார். என்னால் மகாநாட்டிற் பங்கேற்றிட முடியாதிருந்த போதிலும் என்னால் எழுதப்பட்ட "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூலுக்கு மகாநாட்டின் பாராட்டுச் சான்றிதழும் பணப் பரிசிலும் கிடைத்தமையை நன்றியறிதலுடன் நினைவில் நிறுத்தியுள்ளேன். எனது வேண்டுகோளை ஏற்று பணப்பரிசிலை மட்டக்களப்பு மங்கையர்க்கரசியார் சிறுமியர் இல்லத்துக்கு அனுப்பி உதவிய தமிழவேள் அவர்களை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனாருக்கு ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தின் சார்பாக விழா எடுத்து கட்டுரை நூலொன்றினையும் வெளியிட விழைந்த தமிழவேள் அவர்கள் அதற்காக கட்டுரை ஒன்றினை எழுதி அனுப்புமாறு கடிதம் எழுதியிருந்தார். "தொல்காப்பியமும் ஈழத்தமிழகமும்" என்னும் தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரையினை அனுப்பினேன். கட்டுரை கிடைக்கப் பெற்றதும் 28.09.2004இல் அவர் எழுதிய கடிதத்தில், "தாங்கள் பயனுள்ள கட்டுரை அனுப்பி உதவி யுள்ளீர்கள். தொல்காப்பிய வளர் பணியில் இலங்கை அறிஞர்கள் பங்களிப்பை உலகறியச் செய்திருக்கிறீர்கள்" என்று தமிழவேள் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

தமிழவேள் அவர்கள் 07.09.2005இல் எழுதிய கடிதத்திலும் எனது கட்டுரையையிட்டு, "தமிழ் உலகில் தாங்கள் பெரும் அறிஞராக விளங்குகிறீர்கள். தங்கள் தொல்காப்பியக் கட்டுரை ஈழத்தமிழர் தமிழ்த் திறனை உலகிற்கு உணர்த்தியுள்ளது. அதனால் இந்நூலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் கட்டுரை முதலிடமாக உள்ளது" என்று பெருமனதுடன் குறிப்பிட்டுள்ளமை அவரது உயர் பண்பை உணர்த்தி நிற்கிறது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தினர் எனது எழுபத்தைந்து வயது நிறைவினையொட்டிப் பவள விழா எடுத்து விழா மலரினையும் வெளியிட்டு தங்களின் பெருந் தன்மையை வெளிப்படுத்தினர். பவள விழா மலரின் பிரதி ஒன்றினை தமிழவேள் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பிரதி கிடைத்ததும் பதில் எழுதினார். கடிதம் வருமாறு:

"அன்புள்ள ஐயா, தங்கள் பவள விழா மலர் 08.04.2006 இல் கிடைத்தது. தமிழ் உலகில் தாங்கள் மிகப் பெரியவர். தங்களுக்குத் தமிழறிவில் ஒப்பாக எவரும் இலர். தாங்கள் எழுதிய நூல்கள், கட்டுரைகள் படித்துள் ளேன். தங்கள் ஆக்கங்கள் தனித்துவம் ஆனவை; நிறைவானவை. தங்கள் தமிழறிவு கடலிலும் ஆழமானது. மலையிலும் உயர்ந்தது. வானிலும் பரந்தது. தாங்கள் இளமையில் பல்கலைக் கழகத்திலும் சிறந்த தமிழறிஞர் களிடம் கல்வி கற்றவர். இறையருளும் உண்டு. தங்கள் தமிழ்த் திறனைத் தங்கள் பவள விழா மலர் ஓரளவு நிறைவு செய்கிறது. தங்கள் தமிழ்ப் புலமைத் திறனையும் தங்கள் தமிழ்ப் பணிகளையும் பெரிதும் உளமார வாழ்த்து கின்றேன்; போற்றுகின்றேன். எமது தமிழ்ப் பணிகளுக்குப் பெரிதும் உதவியுள்ளீர்கள். தங்கள் தமிழ்ப் பணிகள் வளர்க. தங்களுக்கும் தங்கள் பணிகளுக்கும் இறையருள் என்றும் துணையாகட்டும்.

"வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு
வழிவழி சிறந்து பொலிமின்"

என வாழ்த்துகிறார் ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்.

தமிழன்பன் தமிழவேள் இ.க. கந்தசுவாமி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழவேள் அவர்கள் தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி அவர்களின் இருநூறாவது ஆண்டு நிறைவினைச் சிறப்பாக நினைவுகூரும் நோக்குடன் அறிஞர்கள் பலரைச் சேர்த்து "தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி நினைவுப் பணிப் பெருமன்றம்" என்னும் அமைப்பினை நிறுவி 2007 மார்ச் மாதம் 21ஆம் திகதியன்று பல செயற்பாடுகளில் ஈடுபட ஒழுங்குகளை மேற்கொண்டார். அன்றையதினம் பேரறிஞர் அவர்களைப் பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் சிலவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடப்படலாயிற்று. பதினான்கு கட்டுரைகளை உள்ளடக்கிய மேற்படி நூலிலே என்னால் எழுதி வெளியிடப்பட்ட ஈழத்துத் தமிழ்ச்சான்றோர் என்னும் நூலில் இடம்பெற்ற முதலாவது கட்டுரையாகிய "சைமன் காசிச் செட்டி" என்னும் கட்டுரையையும் சேர்த்துதவிய தமிழவேள் அவர்களது அன்பைப் பெரிதும் மதிக்கிறேன். அப்பெருந்தகை என் நன்றிக்குரியவராக உயர்ந்து நிற்கிறார்.

தமிழவேள் அவர்கள் என்னிற் கொண்டிருந்த மாசற்ற அன்பும் எனது தமிழ்ப்பணியினை வெளி உலகு அறிந்திடச் செய்த அப்பெருந்தகையின் அரும்பெரும் செயற்பாடுகளும் என்னை அவர்பால் ஈர்த்து நிற்கின்றன. தமது இறுதி மூச்சுவரை, "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்னும் திருமூலனாரின் வாக்கினைத் தமது தாரக மந்திரமாக வரிந்து கொண்டு தமிழ்ப்பணி ஆற்றிய தமிழவேள் கந்தசுவாமிப் பெரியாரின் அடியொற்றித் தமிழ்ப்பணியைத் தொடர்ந்து ஆற்றுவதே அச்சான்றோனுக்கு நாம் செய்யும் கைம்மாறாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி இரத்தினப்பிரகாசம் அவர்கள்

திரு. முருகப்பர் இரத்தினப்பிரகாசம் அவர்கள் திரு. முருகப்பர் விதானையாருக்கும் திருமதி கனகம்மா அவர்களுக்கும் மகனாராகப் பிறந்தவர். திருமதி கனகம்மா அவர்கள் எனது துணைவியாரான நேசம்மா அவர்களின் தாயாரான திருமதி அழகம்மா அவர்களின் இளைய சகோதரியாவார். அவ்வகையில் அவர் எனக்கு மைத்துனர் உறவினராவார்.

இரத்தினப்பிரகாசம் அவர்கள் சி.பா.த பத்திரப் பரீட்சையிற் திறமையாகச் சித்தியடைந்ததைத் தொடர்ந்து இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் வேலைப் பகுதியில் இணைந்து கொண்டார். தண்டவாளம் போடுதல், பிழை திருத்தங்களை மேற்கொள்ளுதல், புகையிரதம் ஓடுதலை மேற்பார்வை செய்து அங்கீகரித்தல் முதலிய செயற்பாடுகளில் போதிய பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டார். இயல்பாக அமையப்பெற்ற புத்திசாதுரியத் தினாலும் தொழிலிற் காட்டிய அர்ப்பணிப்போடு இணைந்த ஆர்வத்தினாலும் வேலையில் ஈடுபடும் தொழில் செய்வோரிற் காட்டிய அக்கறையோடு கூடிய அன்பினாலும் விரைவாகவே பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டார். வடக்குப் புகையிரதப் பாதையின் முழுப் பொறுப்பு, கிழக்குப் புகையிரதப் பாதையின் முழுப் பொறுப்பு என அவருடைய வேலைப் பகுதியின் எல்லைகளும் விரிவடைந்தன. வேலைப்பகுதியின் மேலதிகாரியாகப் பதவி உயர்ந்தபோதும், “பணியுமாம் என்றும் பெருமை” என்று வள்ளுவனார் கூறும் கூற்றுக்குத் தக்கதோர் உதாரணமாக அவர் திகழ்ந்தார். தற்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இரத்தினப்பிரகாசம் அவர்களின் துணைவியாராகிய திருமதி இந்திரா அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. இராசக்கோன் அவர்களுடைய ஒரே ஒரு மகளாவார். சி.பா.த. பத்திரப் பரீட்சையிற் திறமைச் சித்தியடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று விசேட பயிற்சி பெற்ற விஞ்ஞான ஆசிரியையாக வெளியேறினார். அவருடைய தாயார் மட்டக்களப்பைச் சேர்ந்தவராயிருந்ததால் அவர் புனித மிக்கேல் கல்லூரி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம், மண்டூர் மகா வித்தியாலயம் முதலிய பாடசாலைகளிலும் கற்பிக்கும் சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தார். நான் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் ஆசிரியனாகப் பணியாற்றிய காலத்திலேயே திருமதி இந்திரா அவர்களும் ஆங்கு ஆசிரியையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருக்கும் திருமதி இந்திரா அவர்கள் ஆற்றல்மிக்க நல்லாசிரியையாக ஆசிரியர்களாலும் அதிபர்களாலும் மாணாக்கர்களாலும் விதந்தேற்றப்பட்டிருந்தார்.

திரு. திருமதி இரத்தினப்பிரகாசம் தம்பதியர் யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த காலத்தில் புகையிரதப் பகுதியில் வேலைப்பகுதி அதிபருக்குரிய அரசாங்க வீட்டிலேயே வசித்து வந்தார்கள். அவர்களுக்கு ஆஸ்திக்கு ஓர் ஆணும் அழகுக்கு ஒரு பெண்ணுமென பிள்ளைச் செல்வங்கள் இருவர் இருந்தனர். மகனின் பெயர் ரோய் பிரதீபன்; மகளின் பெயர் இவாஞ்சலின் அருணாளினி. அவ்வேளையில் திருமதி இந்திரா அவர்கள் யாழ்ப்பாணம் புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எங்கள் மூத்த மகள் சுகவீனமாயிருந்ததால் அவரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல வேண் டியதாயிற்று. எங்களுடைய இளைய மகன் காங்கேசன் துறை லங்கா சீமெந்து நிறுவனத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்ததால் இவ்வாறான தீர்மா னத்தை மேற்கொண்டோம். நாங்கள் யாழ்ப்பாணத்திலே தங்களுடன் நிற்கலாமென்றும் அங்கு சகல வசதிகளும் இருக்கின்றன என்றும் திரு. திருமதி இரத்தினப்பிரகாசம் அறிவித்திருந்ததனால் அவர்களின் வீட்டிலேயே நின்றோம். எங்கள் மகனும் காங்கேசன்துறையில் இருந்து அடிக்கடி வந்து போனார். அவருக்கு மாமனார் வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த வீடாகவே இருந்ததை எங்களால் உணர முடிந்தது. இரத்தினப்பிரகாசம் அவர்களும் துணைவியார் இந்திரா அவர்களும் எங்களிற் காட்டிய அன்பும் அவர் களுடைய உபசரிப்பின் உயர் பண்பும் எங்களை மெய் சிலிர்க்க வைத்தன. மகன் பிரதீபன் மகள் அருணாவும் எங்களில் அன்பைச் சொரிந்தனர். எங்கள் மகளின் சுகவீன நிலையைக் காட்டுவதற்காக வைத்தியரிடம் போகும் வேளைகளிலும் வைத்தியம் மேற்கொள்ளப்பட்ட வேளைகளிலும் திரு. திருமதி இரத்தினப்பிரகாசம் அவர்களும் பிள்ளைகள் இருவரும் செய்த உதவிகளை யும் காட்டிய கரிசனையோடு இணைந்த அன்பினையும் நாங்கள் இன்றும் எங்கள் நினைவில் வைத்திருக்கிறோம். நாங்கள் அவர்களுக்கு எவ்வித உதவிகள் செய்யாதிருந்த போதிலும் அவர்கள் குடும்பமாக எங்களுக்குச் செய்த உதவிகள் வாழ்நாள் முழுவதும் நினைவில் நிலைத்திருக்க வேண்டியவை.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது" (குறள் 101) என வள்ளுவனார் கூறுவது உண்மை பொதிந்த கூற்றல்லவா?

நாங்கள் மட்டக்களப்புப் பட்டணத்தில் வசிக்கத் தொடங்கிய காலத்தில் இரத்தினப்பிரகாசம் அவர்களின் குடும்பமும் மட்டக்களப்பில் உள்ள அவர்கள் வீட்டில் வசித்து வந்தார்கள். நாங்கள் அடிக்கடி சந்திக்கக் கூடிய தாக இருந்ததால் எங்களுடைய உறவும் வளர்ச்சி அடைந்தது. நாங்கள் கனடாவுக்கு வரும் நாள்வரை அந்த உறவிலும் அன்பிலும் நிறைந்திருந்தோம்; அஃது இன்றும் நிலைத்திருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி இராசதுரை அவர்கள்

எங்களுடைய மூத்த மகன் பாஸ்டர் சாம் அமுதநாதன் அவர்களுடைய மனைவியாராகிய திருமதி வத்சலா அவர்களின் பெற்றோரே திரு. திருமதி இராசதுரை ஆவர்.

திரு. சபாபதி எட்வேட் இராசதுரை அவர்கள் மட்டக்களப்பு கல்லடித் தெருவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சி.பா.த. பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்த அவர் ஆங்கில உதவி ஆசிரியராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். கோயிற்போரதீவைச் சேர்ந்த திரு. குமாரதாஸ் காடியரின் மகளாரான பூமணி அவர்களை வாழ்க்கைத் துணை ஆக்கிக்கொண்டார். திருமணத்தின் பின்னர் கோயிற்போரதீவின் கிராம சேவையாளர் பதவியை ஏற்றுக்கொண்டார்.

நாட்டிலே உள்நாட்டு யுத்த நிலை ஏற்பட்டபோது வாவியின் மேற்குக்கரைப் பிரதேசமானது அதிக பாதிப்புக்குள்ளானது. வசதி படைத்தோர் மட்டக்களப்புப் பட்டணத்திற்குச் சென்றனர். வேறு பலர் மேற்குக் கரைப் பட்டணங்களான களுவாஞ்சிக்குடி, குருக்கள் மடம் முதலிய இடங்களுக்குச் சென்றனர்.

கிராம சேவையாளர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற திரு. இராசதுரை அவர்கள் குடும்பத்தாரோடு மட்டக்களப்பு செல்வதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு எங்களையும் வரும்படி கேட்டுக்கொண்டார். நான் பிரசைகள் குழுத் தலைவராகப் பணியாற்றியதால் எங்கள் பகுதியில் வாழ்ந்து வரும் வசதி குறைவான மக்களின் மத்தியில் வாழ்வதையே விரும்பினேன். திரு. இராசதுரை குடும்பம் மட்டக்களப்பிலே முதலியார் தெருவில் அவர்களுடைய உறவினர்களின் வீடுகளில் ஒன்றில் வசிக்கத் தொடங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். அந்த வீடு பெரியதாக இருந்ததால் நாங்கள் விரும்பிய நேரத்தில் அங்கு வந்து நிற்கலாமென செய்தி அனுப்பியிருந்தார்கள்.

எங்கள் பகுதியின் நிலை வரவர மிகவும் மோசமாகத் தொடங்கியதால் எங்களது மகள்மார் இருவரும் மட்டக்களப்புக்குத் தங்களை அனுப்புமாறு நச்சரிக்கத் தொடங்கினார்கள். வேறு வழியின்றி அவர்களை மட்டக்களப்புக்கு அனுப்பி வைத்தோம். இராசதுரை அவர்களின் குடும்பத்தினர் எங்கள் பிள்ளைகளை அன்புடன் ஏற்றுக்கொண்டனர். தங்களின் சொந்தப் பிள்ளைகளைப் போலவே அவர்களையும் பேணினார்கள். விருந்தினரை உபசரிக்கும் பண்பும் அவர்களைப் பேணி நடத்தும் மாண்பும் அவர்களின் பிறவிச் சொத்துக்கள். எவரும் எந்த நேரத்திலும் போகலாம். முகமலர்ச்சியுடன் வரவேற்பதற்கு முந்தி நிற்பார்கள்.

“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று” (குறள் 83)

என்று வள்ளுவனார் கூறுவதுபோல் அவர்களுடைய வாழ்க்கை துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போகவே இல்லை. அதற்கு மாறாக அவர்களுடைய வாழ்க்கையில் ஈந்துவக்கும் இன்பமே நிறைந்திருந்தது.

நாங்கள் கனடாவுக்கு வந்த பின்னர் எங்களுக்குத் தேவைப்பட்ட நூல்கள், கடிதங்கள், தகவல்கள், படிவங்கள் யாவற்றையும் திரு. திருமதி இராசதுரை தம்பதியினரே பெருமனதுடன் அனுப்பி வருகிறார்கள். எங்களின் ஓய்வூதியம் தொடர்பான படிவங்களைச் சமர்ப்பித்தல், தேவைப்படும் விபரங்களைக் கொடுத்தல், எங்களுக்கு அறிவிக்கும்படி ஓய்வூதியத் திணைக்களத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினரால் கூறப்படும் காரியங்களை அறிவித்தல் என அவர்கள் செய்துவரும் உதவிகள் மிகப்பல.

இவற்றைவிட எங்கள் பிரதேசச் செய்திகள், உற்றார் உறவினர்களைப்பற்றிய செய்திகள் யாவற்றையும் அறிவித்து தொடர்பினை நிலைநாட்டிவரும் நற்பணியினை யும் இராசதுரை குடும்பத்தினரே ஆற்றிவருகிறார்கள். உதவி செய்வதில் அவர்கள் சோர்ந்துபோனதேயில்லை. உண்மையாகவே அவர்களின் அன்பு பாராட்டப்பட வேண்டியது. அவர்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

திரு. இராசதுரை அவர்கள் இலங்கைத் தீவு முழுவதற்குமான சமாதான நீதிபதியாக இலங்கை அரசினால் நியமிக்கப்பட்டமை எங்களுக்கு மிகுந்த மன நிறைவைத் தந்தது. மிகப் பொருத்தமான ஒருவருக்கு பொருத்தமான பட்டம் வழங்கப்பட்டமை மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சியாகும். கடவுளின் பாதுகாப்பும் ஆசீர்வாதங்களும் எப்போதும் சித்திக்கப் பிரார்த்திக்கிறோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி ஐங்கரப்பிள்ளை அவர்கள்

நேசம்மா அவர்களின் மூத்த பெரியம்மாவாகிய இராசம்மா அவர்களுக்கும் பொன்னம்பலம் அவர்களுக்கும் 05.05.1919இல் பிறந்த ஒரே மகனே ஐங்கரப்பிள்ளை ஆவார். சந்தணப்பிள்ளை அவர்களின் நேர் இளைய சகோதரனான இவர் அன்னையர்கள் ஐவரதும் மூத்த ஆண் பிள்ளையாக இருந்ததால் அவர்கள் அனைவரதும் செல்லப்பிள்ளையாக வளர்ந்தார். பிற்காலத்தில் இவர் டானியல் என்னும் கிறிஸ்தவ மதப்பெயரையும் சூடிக் கொண்டார்.

கல்வியை ஒழுங்கு முறையிற் பெற்றுக் கொண்ட ஐங்கரப்பிள்ளை அவர்கள் அரசடி கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியரானார். தமது கல்வித் தகைமையை மேலும் மேம்படுத்திட விழைந்த அவர் யாழ். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பிரவேச பண்டிதம், பிரித்தானிய செஞ் சிலுவைச் சங்கத் தராதரப் பத்திரம், சித்திர ஆசிரியர்த் தராதரப் பத்திரம், உடற்பயிற்சித் தராதரப் பத்திரம், தாய் மொழி ஆசிரியர்களுக்கான விஞ்ஞான தராதரப் பத்திரம், ஆங்கில மொழியூடான சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், ஆசிரியர் ஆலோசகர் தராதரப் பத்திரம் ஆகிய மேலதிக சான்றிதழ்களையும் தமதாக்கிக் கொண்டார்.

ஐங்கரப்பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்த அரியநாயகம் சின்னத்துரை ஆசிரியர் அவர்களின் மகளாரான லில்லி தங்கமலர் அவர்களை 20.08.1951இல் திருமணம் செய்து கொண்டார். தங்கமலர் அவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியையாவார். றூத் - ஜெயரஞ்சினி, எலிசபெத் - ஜயந்தினி, சாமுவேல், தயாளன் ஆகியோர் இத்தம்பதியினரின் பிள்ளைச் செல்வங்களாம்.

கணவரை இழந்த நிலையிலிருந்த ஐங்கரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையவர்களின் தாயாரிலும் அதே நிலையிலிருந்த சிறிய தாய்மாரிலும் அவர்களுடைய பிள்ளைகளிலும் ஐங்கரப்பிள்ளை அவர்களைப் போலவே மட்டக்களப்புக்கு வந்து அவருடன் வாழ்க்கையைத் தொடங்கிய தங்கமலர் அவர்களும் பரிவும் பாசமும் கொண்டிருந்தார். ஒருமனப் படுதல் என்பதற்குத் தக்க உதாரணமாக அவர்களிருவரும் விளங்கினர்.

ஐங்கரப்பிள்ளை அவர்களும் மனைவியாரான தங்கமலர் அவர்களும் நேசம்மா அவர்களையும் அவர்தம் தமையன்மார் இருவரையும் சொந்தச் சகோதரர்களாகக் கொண்டு அன்பு செலுத்தி வந்தனர். அவர்கள் மூவரும் நல்லூர் கிறிஸ்தவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்த காலங்களில் அவர்களுக்கான பணத்தினை மாதாமாதம் கட்டுவதற்கான ஒழுங்கு அத்தம்பதியினராலேயே செய்யப் பட்டது. அவர்களது உதாரணத்துவமான செயற்பாடு எஞ்ஞான்றும் நன்றிக்குரியதாம்.

நேசம்மா அவர்கள் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று வந்த காலத்தில் திருமதி ஐங்கரப்பிள்ளை அவர்களின் சாவகச்சேரி வீட்டுக்கு அடிக்கடி சென்று உறவினர்களின் அன்போடிணைந்த விருந்தோம்பலை நன்கு அனுபவித் துள்ளார். அத்துடன் அவர் நோய்வாய்ப்பட்ட வேளைகளில் சாவகச்சேரி வீட்டிற் தங்கியிருந்து சிகிச்சை மேற்கொண்ட சந்தர்ப்பங்களை அவர் நன்றியுடன் நினைவில் வைத்துள்ளார்.

எங்களின் திருமணத்தின் பின்னர் அவர்கள் எங்களுடன் கொண்டிருந்த உறவும் தொடர்பும் எங்களில் பாராட்டிய அன்பும் கரிசனையும் எங்கள் நினைவில் ஆழமாகப் பதிந்துள்ளன. அவர்கள் என்றென்றும் எங்கள் நன்றிக்குரியவர்களே.


திரு. ஐங்கரப்பிள்ளை அவர்கள் கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபையின் உள்ளூர் அருளுரையாளர் பரீட்சையிற் சித்தியடைந்து கிறிஸ்தவ சபைகளின் வளர்ச்சிக்குத் தம்மாலான பங்களிப்பினை மனமகிழ்ச்சியோடு நல்கி உள்ளார். கிறிஸ்து பெருமானில் அதிசயிக்கத்தக்க வகையில் பக்தி வைராக்கியம் கொண்டிருந்த இக்குடும்ப மானது கடைசி மூச்சுவரை தங்கள் விசுவாசத்தைக் காத்துக் கொண்டமையை நெருங்கிப் பழகியவர்கள் நன்கறிவர்.


திருமதி தங்கமலர் ஐங்கரப்பிள்ளை அவர்கள் 05.09.1999ஆம் திகதியிலும் திரு. டானியல் ஐங்கரப் பிள்ளை அவர்கள் 04.06.2004ஆம் திகதியிலும் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலக வாழ்வுக்குள் பிரவேசித்து விட்டார்கள். அவர்கள் இருவரதும் இனிய நினைவுகள் என்றென்றும் எங்களின் உள்ளங்களில் பசுமையாகவே இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர், கலாபூஷணம், கலைஞர் மாசிலாமணி கந்தசாமி அவர்கள்



பெற்றால்தான் பிள்ளையா? என்னும் வினாவுக்கு 'இல்லை' என்பதே எனது விடையாகும். நாம் பெற்றெடுக்காத ஒருசிலர் பெற்றெடுத்த பிள்ளைகளை விட நம்மிற் பரிவும் பாசமும் கொண்டவர்களாக விளங்குவதை நாம் கண்டிருக்கிறோம் அல்லவா? மட்டக்களப்பு சின்ன ஊறணியிலே திரு. மாசிலாமணி, திருமதி பொன்னம்மா என்னும் தம்பதியர் 03.03.1945இல் பெற்றெடுத்த டாக்டர் கந்தசாமி அவர்கள் எங்களின் பிள்ளையாகவும் இருக்கிறார். அவரைப் பிள்ளையாகக் கொண்டிருப்பதில் பெரு மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகிறோம்.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலே எங்களிடம் கற்ற கந்தசாமி அவர்கள் க.பொ.த.ப சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்ததைத் தொடர்ந்து உதவி ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். ஒரு சில வருடங்களின் பின்னர் ஹோமியோபதி மருத்துவம் கற்று தனிப்பட்ட வைத்திய சேவையை ஆரம்பித்து தொடர்ந்து வைத்தியராகப் பணியாற்றி வருகிறார்.

இயல்பாகவே சிற்பக்கலையில் மிகுந்த நாட்டங் கொண்டிருந்த கந்தசாமி அவர்கள் அக்கலையிலே போதிய பயிற்சி பெற்று இன்று நாடறிந்த சிற்பக் கலைஞராக விளங்குகிறார். இவராற் செதுக்கப்பட்ட மகாத்மா காந்தி, மகாகவி பாரதியார், கல்விமான் வி. நல்லையா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை ஆகியோரின் சிலைகள் கந்தசாமி அவர்களுக்குப் பேரும் புகழும் ஈட்டிக் கொடுத்துள்ளன. இவரது சிற்பக்கலைச் சிறப்பினைப் பார்த்து மகிழ்ந்த முன்னாள் இந்து கலாசார அமைச்சர் திரு. செல்லையா இராஜதுரை அவர்கள் "கிழக்கின் இளஞ்சிற்பச்சுடர்" என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக் கலையில் கந்தசாமி அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடுண்டு. கர்ணனின் கடைசி ஆசை, பாஞ்சாலி சபதம், குந்தி கேட்ட வரம், பண்டார வன்னியன் முதலிய வரலாற்று நாடகங்களையும் வாழ்க்கைப் புயல், இதுவா நீதி, மண்ணில் சரிந்த மகுடம் முதலிய சமூக நாடகங் களையும் எழுதி, நெறிப்படுத்தி அவரும் முக்கிய பாத்திரத்தில் நடித்துமுள்ளார். "மட்டக்களப்பு பாரம்பரிய கூத்துகள்" என்னும் சிறந்த ஆய்வு நூல் ஒன்றினை எழுதியுள்ளதோடு அதனை வெளியிடுவதற்கான ஒழுங்கு களையும் மேற்கொண்டுள்ளார்.

கவிதை புனையும் ஆற்றல் கைவரப் பெற்ற கந்தசாமி அவர்கள் கவிதைப் போட்டிகளில் பங்கேற்று பரிசில்களும் பெற்றுள்ளார். "ஊற்றுநீர்க் கவிஞர்" என்னும் புனை பெயரில் அவராற் படைக்கப்பட்ட கவிதைகள் மிகப்பல.

சிறந்த கட்டுரையாசிரியராக விளங்கும் கந்தசாமி அவர்கள் தமிழ்ச் சான்றோர்களையிட்டும் பாரம்பரிய கலைகளையிட்டும் சமய விழாக்களையிட்டும் கட்டுரை கள் பலவற்றினை எழுதியுள்ளார். அண்மையில் இலங்கைத் தீவைத் தாக்கிய சுனாமி பற்றி கந்தசாமி அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல சங்கங்களிலும் மன்றங்களிலும் பங்குகொண்டு சமூகப் பணியாற்றி வரும் கந்தசாமி அவர்கள் மட்டக் களப்பு அம்பாறை இந்து ஆலயங்கள் ஒன்றியத்தின் சிறப்பு ஆலோசகராகவும் மட்டக்களப்பு கலைஞர் ஒன்றியத்தின் தலைவராகவும் மட்டக்களப்பு திருநாவுக்கரசர் திருப்பணி மன்றத்தின் தலைவராகவும் கொழும்பு இந்துப் பேரவை யின் உப தலைவர்களுள் ஒருவராகவும் மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் உபதலைவராகவும் மட்டக்களப்பு ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும் மட்டக்களப்பு இந்து ஆலோசனைச் சபையின் உப தலைவராகவும் சிறுவர் துஸ்பிரயோக குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் மட்டக்களப்புக் கிளையின் உபதலைவராகவும் பங்கேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிருப்பது அவரின் சிறப்புக்குச் சான்று தருகிறது.

15.12.2008இல் நடைபெற்ற 2008ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவத்தில் டாக்டர் கந்தசாமி அவர்களுக்கு அவருடைய சிற்பக்கலையினைப் போற்றும் வகையில் கலாபூஷண விருது வழங்கப்பட்டமை அவரின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாய் அமைந் திருக்கிறது.

கந்தசாமி அவர்களின் இரத்தத்தோடு கலந்திருக் கும் குருபக்தி வியந்து பாராட்டப்பட வேண்டியது. என்னிடத்தில் மட்டுமல்ல அவருக்குக் கல்வி புகட்டிய ஆசிரியர்கள், ஆசிரியைகள் அத்தனை பேரிலும் அவர் கொண்டுள்ள குருபக்தியே அவருடைய இன்றைய உயர்ச்சிக்கான அடித்தளம் என்று கூறிக்கொள்வதில் நிறைவடையும் பண்பு அவருடையது.

நாங்கள் ஓர் அவசரக் கோலத்துடனேயே கனடா வுக்கு வந்தோம். எங்களின் மட்டக்களப்பு அலுவல்கள் யாவும் அப்படி அப்படியே விடப்பட்டிருந்தன. ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை. அத்தனை காரியங்களையும் எங்களுடைய சொந்தப் பிள்ளையைப்போல் நிறைவாகச் செய்தவர் கந்தசாமி அவர்களே என்பதை நன்றியறிதலுடன் நினைவில் வைத்துள்ளோம். தமது சிரமத்தையோ சுகவீனத்தையோ ஒரு சிறிதும் பொருட்படுத்தாது எங்களுடைய காரியங் களைத் தமது காரியங்களாகக் கொண்டு இன்றும் உதவிவரும் டாக்டர் கந்தசாமி அவர்கள் எங்கள் அன்புக்கும் நன்றிக்கும் என்றென்றும் உரியவர்களே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி சச்சிதானந்தசிவம் அவர்கள்

திரு. சச்சிதானந்தசிவம் அவர்கள் எங்களுக்கு மருமகன் முறையினர். அவருடைய தந்தையாரான திரு.க. விநாயகமூர்த்தி ஆசிரியர், நேசம்மா அவர்களின் ஒன்றுவிட்ட சகோதரர். அவருடைய தாயாரான திருமதி ஞானம்மா விநாயகமூர்த்தி அவர்களும் எங்களின் நெருங்கிய உறவினரே. திரு. திருமதி விநாயகமூர்த்தி இருவரும் எனது உடனாசிரியர்கள். அவர்கள் இருவரும் மிகச் சிறந்த ஆசிரியர்கள். திரு. விநாயகமூர்த்தி அவர்கள் பழுகாமம் மகாவித்தியாலயத்தின் வெள்ளி விழாவின் போது ஆற்றிய ஈடிணையற்ற சேவை இன்றும் மனதில் பதிந்திருக்கிறது. விபுலாநந்த அடிகளாரின் திருவுருவச் சிலையினைப் பாதுக்கையில் வசித்த சிற்பி திரு. நல்லரத்தினம் அவர்களிடம் சென்று செய்வித்ததிலும் அதனை எடுத்து வருவதிலும் தோளோடு தோள் நின்று அவர் தந்த ஒத்துழைப்பினைப் பெரிதும் மதிக்கிறேன். திருமதி ஞானம்மா விநாயகமூர்த்தி அவர்களின் மூளை ஒரு கணினி மூளை. மாணாக்கரின் பெயர்கள், பிறந்த திகதிகள், பெற்றோரையிட்ட விபரங்கள் யாவும் அவருக்கு மனப்பாடம். அத்துடன் ஆரம்ப வகுப்புகளில் பிள்ளை களைச் சேர்த்தல் அவருக்குக் கைவந்த கலை. எங்கள் பாடசாலைக்கு அவர் ஒரு வரப்பிரசாதம்.

திரு. சச்சிதானந்தசிவம் அவர்கள் பொதுவாக 'சிவம்' என்றே அறியப்படுபவர். அவர் இருக்குமிடம் கலகலப்பாக இருக்கும். அவர் சோம்பி இருந்ததை நாங்கள் அங்கும் காணவில்லை; இங்கும் காணவில்லை. எங்கள் பிள்ளைகளோடு சிவம் அவர்களும் அவரின் அண்ணா கருணாநிதி அவர்களும் தங்கை யாழினி அவர்களும் நெருங்கிப் பழகியதால் அவர்களை உள்ளும் புறமும் தெரிந்திருந்தோம். சிறந்த ஆசிரியர்களின் பிள்ளைகள் ஆதலின் கல்வியிற் சிறப்புப் பெற்றனர். சிவம் அவர்கள் கனடாவுக்கு வந்த பின்னர் உயர் கல்வி கற்று பொறியியலாளராகப் பெரும் பதவி வகிக்கிறார். அவரு டைய தம்பி சுத்தானந்தன் அவர்களும் உயர் கல்வி கற்று பெரும் பதவி வகிப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சச்சிதானந்தசிவம் அவர்களின் துணைவியரின் பெயர் சுகுமாரி ஆகும். அவர் களுவாஞ்சிக்குடியில் வாழ்ந்து வந்த திரு. திருமதி முத்துலிங்கம் அவர்களின் மகளாவார். திரு. முத்துலிங்கம் அவர்கள் கைத்தொழிற் திணைக்களத்தில் பதவி வகித்தவர். சுகுமாரி அவர்கள் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்திற் கற்றவர். எனது அன்புக்குரிய மாணவி. எங்கள் வித்தியாலயத்திலிருந்து பட்டப்படிப்புக்காக பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சிறந்த குணநலப் பண்புகளின் இருப்பிடமாகிய சுகுமாரி அவர்கள் புவியியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர்.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பது பொருள் பொதிந்த கூற்றல்லவா! கல்வியிற் சிறந்த சுகுமாரி அவர்களுக்கும் கல்வியிற் சிறந்த சச்சிதானந்தசிவம் அவர்களுக்கும் கனடாவில் திருமணம் நடைபெற்றது. இத்தம்பதியர்க்கு ஷிவாணி, சாயி சிவா என்னும் பிள்ளைச் செல்வங்கள் இருவர் உளர். ஆஸ்திக்கொன்று அழகுக் கொன்று என்பது நடைமுறையில் உள்ள ஒரு பழமொழி ஆகும்.

ஷிவாணி அவர்கள் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து உயர் கல்வி கற்கிறார். சாயி அவர்களும் இடைநிலைக் கல்வியைக் கற்று வருகிறார். பிள்ளைகள் இருவரும் கல்வியிற் சிறப்புற்றிருப்பது போன்றே தெய்வ பக்தியிலும் பெற்றோரை மதிப்பதிலும் மூத்தோரைக் கனம் பண்ணுவதிலும் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள். இவ்வாறு பிள்ளைகள் விளங்குவதற்குத் தகுந்த முன்மாதிரியைப் பெற்றோரிடமிருந்தே பெற்றிருக்கிறார்கள்.

திரு. சச்சிதானந்தசிவம் எவ்வாறு பெற்றோரை மதித்தார்கள், பெருமைப்படுத்தினார்கள், போற்றினார்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம். பெற்றோர்கள் இறைவனடி சேர்ந்தபோது அவர்கள் அடைந்த துன்பத்தையும் வேதனையையும் சோகத்தையும் நாங்கள் நேரிற் கண்டவர்கள். பெற்றோர்களின் நினைவாக அவர்களால் வெளியிடப்பட்ட அஞ்சலி நூலும் ஆலயங்களில் நடத்திய அஞ்சலி ஆராதனைகளும் நெஞ்சத்தை நெகிழ வைப்பனவாக இருந்தன.

திருமதி சுகுமாரி சச்சிதானந்தம் அவர்களின் குரு பக்தியால் நிறைந்தவன் நான். எங்கள் பாடசாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தபோது வைத்திருந்த அதே குருபக்தி இன்றும் அதே நிலையில் தொடர்வது வியத்தகு பண்பல்லவா! தம்முடைய பெற்றோர்களிலும் இரண்டு சகோதரிகளிலும் திருமதி சுகுமாரி அவர்கள் கொண்டுள்ள பாசம் மிகமிக உயர்ந்தது. "பண்பாடென்பது பாடறிந்து ஒழுகுதல்" எனக் கூறப்படுகிறதல்லவா! அதற்குத் தக்கதோர் உதாரணமாக திருமதி சுகுமாரி அவர்கள் திகழ்வது பெருமைக்குரிய தல்லவா? "கூட்டுக் குடும்பம்" என்னும் உயரிய தத்துவம் இன்றும் திருமதி சுகுமாரி அவர்கள் பேணும் குடும்ப உறவு முறையில் விளக்கம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

எங்களில் சிவம் அவர்களின் குடும்பம் கொண்டுள்ள உறவும் வெளிப்படுத்திவரும் அன்பும் போற்றுதற்குரியவை. எனது புத்தக வெளியீடுகள், பாராட்டு விழாக்கள் அத்தனையிலும் மகிழ்வுடன் பங்கேற்றும் வாழ்த்துதல் களைத் தெரிவித்தும் வருவதை முக்கிய கடமையாகக் கருதுகிறார்கள்.

ஒருமுறை நாங்களிருவரும் மொன்றியால் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டபோது எங்களை அன்புடன் அழைத்துச் சென்றதோடு அன்றிரவு தங்கி நிற்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்து தந்தும் அடுத்தநாட் காலையில் முக்கியமான இடங்களைக் காட்டியும் திரு. சச்சிதானந்த சிவம் குடும்பத்தார் செய்த உதவியை நன்றியுடன் நினைவில் வைத்துள்ளோம்.

"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது" (குறள் 103)

என்னுங் குறளின் மெய்ப்பொருள் சிவம், சுகுமாரி தம்பதியர் எங்களிற் காட்டிவரும் அன்பின் மூலம் விளக்கம் தருவதாய் இருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. செனவரெத்தினம் சத்தியமூர்த்தி அவர்கள்

பழுகாமத்தில் நேசம்மா அவர்களின் குடும்பத்தாருக்கு மிக நெருக்கமாக இருந்த உறவினர்களுள் திருமதி பொன்னாச்சி செனவரெத்தினம் குடும்பத்தார் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். பொன்னாச்சி அவர்களின் மூத்த மகனாரே திரு. சத்தியமூர்த்தி ஆவார்.

திரு. சத்தியமூர்த்தி அவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பார ஊர்தி ஓட்டுநராகப் பணியாற்றி குறிப்பிடத்தக்க பணம் சம்பாதித்து தமது குடும்பத்தினை வழமாக வாழச் செய்தவர். அவருக்கு இளையவர்களாகிய சகோதரிகள் மூவரதும் பிரகாசமான குடும்ப வாழ்வுக்கான அனைத்தையும் செய்த சிறப்பு அவருக்கு உண்டு.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து மேற்கு ஜேர்மனி சென்ற திரு. சத்தியமூர்த்தி அவர்கள் அங்கும் ஏற்றதொரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டார். அவ்வேளையில் எங்கள் மூத்த மகன் அமுதநாதன் அவர்கள் உயர் கல்வியில் நாட்டம் கொள்ளாமல் கிறிஸ்தவ சமயப் பணியில் ஈடுபாடு காட்டத் தொடங்கினார். வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பிவிட்டால் திருப்பம் ஏதும் ஏற்படலாம் என்னும் நப்பாசையினால் சத்தியமூர்த்தி அவர்களின் உதவியை நாடினோம். எங்களுக்கு உதவி செய்திட அவர் காட்டிய ஆர்வம் எங்களை வியக்க வைத்தது.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என வள்ளுவம் கூறுகிறது. ஆனால் சத்தியமூர்த்தி அவர்கள் சொல்லிய வண்ணம் செய்தார். ஜேர்மனியில் இருந்து இலங்கை வந்த சத்தியமூர்த்தி அவர்கள் ஜேர்மனிக்குத் திரும்பச் சென்றபோது எங்கள் மகனையும் அழைத்துச் சென்றார். அவர் காலத்தினாற் செய்த நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களால் ஞாலத்தின் மாணப் பெரிதாகக் கொள்ளப் பட்டது. அவர் எங்களின் நன்றிக்குரியவர்.

நாங்கள் கனடா வருகிறோம் என்னும் செய்தியை எங்கள் மகள் மூலம் அறிந்து கொண்ட சத்தியமூர்த்தி அவர்கள் தங்களுடைய சுயாதீன மெதடிஸ்த ஆலயத்தில் இலங்கைக்கு மெதடிஸ்த திருச்சபையின் மூலம் கிறிஸ்து பெருமானையிட்ட நற்செய்தி கொண்டு வரப்பட்ட நாளின் 172ஆவது ஆண்டு நிறைவினையொட்டி செய்தி ஒன்றினை வழங்க வேண்டுமென தொலைபேசி மூலம் என்னைக் கேட்டுக் கொண்டார். என்னுடைய மாணவராகவும் விளங்கும் சத்தியமூர்த்தி அவர்கள் என்னில் வைத்துள்ள மரியாதையுடன் இணைந்திருந்த அன்பு என்னை நெகிழச் செய்தது. 24.06.1996ஆம் திகதி கனடா வந்து சேர்ந்த நானும் எனது துணைவியாரும் 30.06.1996 ஞாயிற்றுக் கிழமை சத்தியமூர்த்தி அவர்களுடைய ஆலய வழிபாட்டிற் பங்கேற்றதோடு செய்தி வழங்கியமையையும் ஈங்கு அறிவிப்பது ஏற்புடைத்தெனக் கருதுகிறேன்.

கனடா வந்து சேர்ந்த எங்களை பியர்சன் விமான நிலையத்தில் அழைத்து வந்து வீட்டிற்குக் கூட்டி வந்து விட்டுச் சென்றோர்களில் சத்தியமூர்த்தி அவர்களும் அடங்குவர். இரண்டொரு நாள்களில் சத்தியமூர்த்தி அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து என்னை அழைத்துக் கொண்டு அவருடைய வாகனத்தில் வெளியே சென்றார். தைத்த உடைகள் விற்கும் ஒரு பெரிய நிறுவனத்தின் வாகனத் தரிப்பு நிலையத்தில் வாகனம் நிறுத்தி வைக்கப் பட்டது. நிறுவனத்துட் சென்று காற்சட்டை, கோற் விற்பனை செய்யும் பிரிவுக்குப் பொறுப்பான ஒருவரிடம் எனக்குப் பொருத்தமான காற்சட்டை, கோற் ஆகிய வற்றைக் கொடுக்கும்படி சத்தியமூர்த்தி அவர்கள் கேட்டுக் கொண்டார். எனக்குக் கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டது போன்ற நிலை. நிகழ்ந்தவை யாவும் கனவில் நிகழ்பவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத் தெரிந்தன. எனக்குரிய உடைகள் தெரிவு செய்யப் பட்டாயிற்று. நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். சத்தியமூர்த்தி அவர்கள் என்னை ஆச்சரியப்பட வைத்து விட்டார். அத்துடன் அவர் என் நன்றிக்குரியவராகவும் ஆகிவிட்டார்.


கனடாவில் நாங்கள் கால்பதிக்கும் வரையிலும் எவ்வாறெல்லாம் எங்களுக்கு உதவி செய்யவேண்டுமோ அவ்வாறெல்லாம் சத்தியமூர்த்தி அவர்களும் அவருடைய துணைவியாரான சலாக்கியநிதி அவர்களும் மகன் காபிரியேல் அவர்களும் செய்துள்ளார்கள். அவர்களுடைய வீட்டுக்குப் பல தடவைகள் சென்று அவர்களின் விருந்தோம்பலை அனுபவித்துள்ளோம்; அவர்களுடன் பல இடங்களுக்கும் சென்றுள்ளோம். அவர்களுடன் மொன்றிய லுக்குப் போய்வந்த நினைவு இன்றும் பசுமையாக இருக்கிறது. அவர்கள் மூவரும் எங்கள் நன்றிக்கும் அன்புக்கும் உரியவர்களாகவே இன்றும் இருக்கிறார்கள்; என்றும் இருப்பார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. அருளம்பலவனார் சிவானந்தநாதன் அவர்கள்



ஈழத்து உரையாசிரியர், சங்க நூற் செல்வர், மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினர் என்றெல்லாம் பெருமைப் படுத்தப்பட்ட பண்டித மணி சு. அருளம்பலவனார் அவர் களுக்கும் சித்தாந்தச் செல்வி, திருவாசகமணி என்றெல்லாம் போற்றப்பட்ட விஜயசவுந்தரம்மாள் அவர்களுக்கும் பிறந்த மூன்றாவது மகனே சிவானந்தநாதன் அவர்கள் ஆவார். 26.02.1940 அவருடைய பிறந்த நாளாகும்.

சங்க நூல்களில் நீண்ட நாள்களாக மிகுந்த பயிற்சி பெற்றிருந்த பண்டிதமணி அவர்கள் சங்க நூல்களை ஆழமாக ஆராய்ந்து கற்றுக் கொண்டார். அவரது நிறைந்த ஆராய்வின் விளைவுகளாகப் பத்துப்பாட்டின் இரண்டு பாட்டுகளையிட்ட திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி, பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி என்னும் நூல்கள் 1937இல் அப்பெருமகனாரால் வெளியிடப்பட்டன. இவற்றின் தொடர்ச்சியாக எட்டுத்தொகையின் ஒன்றாய பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தினது ஆராய்ச்சியுரை 1956இலும் 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் பத்துக்களின் ஆராய்ச்சியுரை 1960இலும் 6ஆம் 7ஆம் 8ஆம் 9ஆம் பத்துக்களின் ஆராய்ச்சியுரை 1963இலும் வெளியிடப்படலாயின.

20.05.1966இல் பண்டிதமணி இறைவனடி சேர்ந்த தைத் தொடர்ந்து சிவபுராணம் தொடக்கம் நீத்தல் விண்ணப்பம் வரைக்கும் அவரால் எழுதப்பட்டிருந்த திருவாசக ஆராய்ச்சியுரை 1967ஆம் ஆண்டிலும் திருவெம்பாவை தொடக்கம் அச்சோப்பதிகம் வரைக்கும் அவரால் எழுதப்பட்ட திருவாசக ஆராய்ச்சியுரை 1973ஆம் ஆண்டிலும் வெளியிடப்படலாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை அறிஞர் வே. அகிலேசபிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் அவருடைய மகன்களாகிய அ. இராசக்கோன், அ. அளகைக்கோன் ஆகியோர் தந்தையாரின் நூல்களைப் பேணிப்பாதுகாத்து, பதிப்பித்து வெளியிட்டதைப் போலவும் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களின் மகன்களாகிய கு. அம்பலவாண பிள்ளை, கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை ஆகியோர் தந்தையாரின் மறைவுக்குப்பின் அவரது நூல்களைப் பேணிப்பாதுகாத்து, பதிப்பித்து வெளியிட்டது போலவும் மட்டக்களப்பு வித்துவான் ச. பூபாலபிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் அவருடைய மகனாரான பூ.செ. இராச ரெத்தினம் அவர்களால் தந்தையாரின் படைப்புகள் பாது காக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டது போலவும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப்பின் அவரது படைப்புகள் அவருடைய மகனாரான பெ. விஜயரெத்தினம் அவர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டு வருவதைப் போலவும் பண்டிதமணி அருளம்பலவனாரின் மரணத்தின்பின் அவரது அருமருந் தன்ன ஆராய்ச்சியுரைகள் அப்பெருமகனாரின் மகனாரான அ. சிவானந்தநாதன் அவர்களால் பாதுகாக்கப்பட்டு, வெளியிடப்பட்டு வருவதானது அன்னாரது சீரிய தமிழ்ப் பணியாகவே கொள்ளப்படுகிறது. புகழ்பூத்த பெற்றோர்கள் பெற்றெடுத்த மகனாரும் புகழ்பூத்த பணிகளையே மேற் கொண்டு வருகிறார்.

பதிப்பாசிரியராகப் புகழ்பெற்று விளங்கும் திரு. சிவானந்தநாதன் அவர்கள் மிகச் சிறந்த கட்டுரையாசிரியர் ஆகவும் விளங்குகின்றார். தமிழ் நாட்டையும் ஈழத்தையும் சேர்ந்த தமிழ்ச்சான்றோர்களின் நினைவு நாள்களில் அவர்களையிட்ட மிகச்சிறந்த கட்டுரைகளை அவர் எழுதிவருவதானது அவருடைய உயரிய பண்பைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கக் காண்கிறோம். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் பூங்குன்றனார் சுட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு நெறியில் செயற்பட்டுவரும் சிவானந்தநாதன் அவர்களைப் பாராட்டாதார் இலர். இவரால் எழுதப்பட்ட சமயக்கட்டுரைகளும் இலக்கியக் கட்டுரைகளும் மிகப்பல. கனடாவில் வெளியிடப்பட்டுவரும் மிகச் சிறந்த பத்திரிகை களுள் ஒன்றான 'உதயன்' பத்திரிகை சிவானந்தநாதன் அவர்களுடைய கட்டுரைகளை விரும்பிப் பிரசுரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் நடைபெறும் கலை, கலாசார நிகழ்வு களில் பங்கேற்பதனை வழக்கப்படுத்திக் கொண்டிருக்கும் திரு. சிவானந்தநாதன் அவர்கள் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் உயர் குணத்தையும் கொண்டுள்ளார். சிவானந்தநாதன் பங்குகொள்ளாத நூல் வெளியீட்டு விழாக்கள் இல்லை என்று துணிந்து சொல்லலாம். எழுத்தாளர்களின் வெளியீட்டு விழாக்களையிட்டு தெரிந்த வர்களிடம் அறிவிப்பதோடு நூல் விற்பனை நிகழ்விலும் தாமாகவே முன்வந்து உதவும் உயரிய பண்பும் சிவானந்தநாதனிடம் இயல்பாகவே அமைந்திருப்பதனை அறியாதார் இலர்.

திரு. சிவானந்தநாதன் அவர்களின் வீட்டிலே மிகச்சிறந்த நூலகம் இருப்பதனை அங்கு சென்றோர் அறிவர். எல்லாத்துறைகளையும் சேர்ந்த நூற்றுக் கணக்கான நூல்களைப் பார்த்து நான் வியந்து நின்றேன். கிடைத்தற்கரிய நூல்கள், வரலாற்று நூல்கள், சங்ககால நூல்கள், பக்தி இலக்கியங்கள், எமது சான்றோர்களின் அபூர்வ ஆக்கங்கள், புலவர்களின் வரலாற்று நூல்கள் என ஏராளமான நூல்கள் சிவானந்தநாதன் அவர்களின் நூலகத்தை அலங்கரித்து நிற்கின்றன. அவர் தாம் ஒரு "வாழையடி வாழை" என்பதனை உறுதியாக உணர்த்தி வருகிறார்.

திரு. சிவானந்தநாதன் அவர்கள் என்னுடன் கொண்டுள்ள அன்பு மிகவும் தூய்மையானது. என்னைத் தமது மூத்த சகோதரராக வரித்து கொண்டு எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துப் பணிக்கு அவர் தந்துவரும் ஆதரவை வார்த்தைகளில் வடிக்க முடியாது. "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் எனது நூலின் வெளியீட்டு விழாவிலிருந்து என்னுடன் நெருங்கிய உறவு பூண்டு என்னுடைய நிழல்போல் என்னுடன் இணைந்து நிற்கும் அப்பெருமகனை நான் போற்றி நிற்கிறேன். எனது நூல் அறிமுகத்திலும் விற்பனையிலும் அவர் வெளிப்படுத்திய தூய அன்பும் மாயமற்ற அக்கறையும் என்னை வியக்க வைத்தன. அப்பண்பாளரின் அன்பைப் பெற நான் என்ன தவம் செய்தேனோ? என்று அன்று சிந்தித்தேன்; இன்றும் சிந்திக்கிறேன்.

"தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலினை நான் எழுதிக் கொண்டிருந்தபோது திரு. சிவானந்தநாதன் என்னிற் காட்டிய கரிசனையும் அவர் தந்த உற்சாகமும் இன்றும் என் மனதில் பசுமையான நினைவாக நிலைத்திருக்கின்றன. எதிர்பாராத நிலையில் நான் எழுதிக் கொண்டிருந்தபோது, 'பொற்கிழி' வழங்கி என்னை ஊக்குவித்த அவரின் உயர் குணத்தால் நான் உறைந்து போனேன். "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் எனது நூலினை சென்னை மணிமேகலைப் பிரசுரத்தார் அச்சிட்டு முடித்த நிலையில் நூற்பிரதிகளை எனக்கு அனுப்புவதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருந்தபோது தமிழ் நாடு சென்றிருந்த திரு. சிவானந்தநாதன் அவர்கள் பணம் கொடுத்து எனது நூற்பிரதிகள் சிலவற்றைக் கொள்வனவு செய்து ஆறுபடை வீடுகளுக்கு எடுத்துச் சென்று தெய்வ வழிபாடியற்றி இறுதியாக புட்டபர்த்திக்கும் சென்று வழிபாடியற்றி வந்துள்ளார் என்பதனை அறிந்தபோது அவர் சாதாரண மனிதர் அல்லர்; மனிதருள் மாணிக்கம் என்ற உண்மையை உணர முடிந்தது.

மேற்படி நூலினை வெளியிடும் முயற்சியினை மேற்கொண்டிருந்தபோது திரு. சிவானந்தநாதன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் செல்ல வேண்டியதாயிற்று. தம்முடைய வேலைகளின் மத்தியிலே, எனது நூலினையிட்ட விளக்கமான ஒரு கட்டுரையை எழுதி 'புதினம்' என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்ததோடு, 'தீபம்' தொலைக் காட்சியில் திரு. மு. நித்தியானந்தன் அவர்கள் மூலமாக சிறந்ததொரு நூலாய்வினை மேற்கொண்டிடவும் ஒழுங்குகள் செய்திருந்தார். இவற்றிற்கும் மேலாக தமிழ் ஆர்வலர்கள் பலரிடம் நேரிற் சென்று எனது நூலினை யிட்ட விபரங்களை விளக்கிக்கூறி கணிசமான பிரதிகளுக் குப் பணமும் பெற்று வந்தார். அவர் கனடா வந்த பின்னரே பிரதிகளை அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அவருடைய செயற்பாடுகள் யாவும் என்னை வியக்க வைத்து ஆச்சரியத்தின் விளிம்புக்கே இட்டுச் சென்றன. இந்தக் காலத்தில் இப்படியும் அன்பு செலுத்துபவர்கள் ஓரிருவராகுதல் இருக்கத்தான் செய்கிறார்கள்.

திரு. சிவானந்தநாதன் அவர்கள் ஆயிரத்தில் அல்ல பத்தா யிரத்தில் ஒருவர். அவர் மனிதரில் புனிதர்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது" என்கிறார் வள்ளுவர்.

உண்மைதான்! திரு. சிவானந்தநாதன் "செய்யாமற் செய்த உதவிக்கு" மண்ணுலகையும் விண்ணுலகத்தையும் கை மாறாகக் கொடுத்தாலும் ஈடாக முடியாது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி பொன்னாச்சி செனவரத்தினம்



நாங்கள் பழுகாமத்தில் வாழ்ந்த காலத்தில் எங்களில் அன்பைச் சொரிந்து உதவிகள் பலவற்றை பிரதி உபகாரம் கருதாது செய்து வந்தவரே திருமதி பொன்னாச்சி செனவரத்தினம் ஆவார். எனது துணைவியாருக்கு மச்சாள் முறையினரான இவர் எங்கள் குடும்பத்தோடு மிகவும் நெருங்கிய வகையில் தொடர்பு கொண்டிருந்தார்.

எனது மாமியாரின் மூத்த சகோதரியாரான திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை அவர்கள் பொன்னாச்சி அவர்களைத் தமது பெறாமகளாராகவே நடத்தி வந்தார். அவருடைய முன்மாதிரியான வாழ்க்கைப் போக்கினால் ஈர்க்கப்பட்ட பொன்னாச்சி அவர்கள் கிறிஸ்து பெருமானைத் தமது இரட்சகராக ஏற்றுக் கொண்டார். திருமதி வேலுப்பிள்ளை அவர்களின் ஏற்பாட்டின்படியே அக்கரைப்பற்றில் வாழ்ந்த திரு. திசகாமி ஆசிரியருடைய மகனாரான திரு. செனவரத்தினம் அவர்கள் பொன்னாச்சி அவர்களைத் திருமணஞ் செய்து கொண்டார். பழுகாமத்தில் வசிக்கத் தொடங்கிய திரு. செனவரத்தினம் அவர்கள் நான்கு பிள்ளைகள் பிறந்த பின்னர் மனைவியைப் பிரிந்து சென்று விட்டார். குடும்பத்தை இணைப்பதற்காகத் திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை அவர்களும் வேறு பலரும் எடுத்த முயற்சிகள் பலன் தரவில்லை. குடும்பம் நிரந்தரமாகவே பிரிந்து விட்டது.

நான்கு பிள்ளைகளுடன் தனித்து விடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பொன்னாச்சி அவர்கள் கடவுள் நம்பிக்கையை இழக்கவில்லை. உறவினர்களூடாகவும் கிறிஸ்தவ சமய ஊழியர்களூடாகவும் கடவுள் உதவினார். திருமதி பொன்னாச்சி அவர்கள் கடவுளின் துணையுடன் சுய தொழில்கள் பலவற்றை மேற்கொண்டார். கடவுளின் வழிகாட்டலுடன் பிள்ளைகளைப் படிக்க வைத்தார். மூத்த மகன் சத்தியமூர்த்தி படிப்பில் அதிக நாட்டம் காட்ட வில்லை. கல்முனை உவெஸ்லிக் கல்லூரியிற் சேர்க்கப் பட்ட போதிலும் எவ்வித முன்னேற்றமும் காணப்பட வில்லை. ஏனைய பிள்ளைகள் மூவரும் பெண்கள். மூத்த மகளான அற்புதமலர் மிகக் கவனமாகப் படித்து க.பொ.த.ப. சாதாரணதரப் பரீட்சையிற் தேர்ச்சியடைந்தார். சிறிது காலம் கல்லூரி அதிபரின் செயலாளராகப் பணியாற்றிய அற்புதமலர் அவர்கள் பலரின் ஆலோ சனைப்படி தாதிகளுக்கான பயிற்சியை மேற்கொண்டார். அடுத்த பெண் பிள்ளையான கருணையம்மாவும் கல் முனையில் தமது கல்வியை மேற்கொண்டார். இளைய மகளான புனிதம் தாயாருடன் பழுகாமத்தில் கற்கலானார்.

படிப்பில் அக்கறை காட்டாத சத்தியமூர்த்தி அவர்கள் தாயாருக்கு ஒரு பிரச்சினையாகி விட்டார். இந்த நேரத்திலும் திருமதி பொன்னாச்சி அவர்களைப் பெறா மகளாக ஏற்றுக் கொண்ட திருமதி பொன்னம்மா வேலுப் பிள்ளை அவர்களே உதவிக்கு வந்தார். அவர் தமது உறவினரான திரு. குணம், ஹமில்டன், ஞானமுத்து அவர்கள் மூலம் சத்தியமூர்த்தி அவர்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்தார். அங்கு சென்ற பின்புதான் சத்தியமூர்த்தி அவர்களுக்குக் குடும்பப் பொறுப்பினையிட்ட உணர்வு ஏற்பட்டது. தங்களுக்கென்ற அழகான ஓர் இல்லம் அமைக்கப்பட வேண்டும் என்பதனை உணர்ந்த அவர் அதற்கான பணத்தை நண்பர் ஒருவருக்கு அனுப்பினார். வீட்டுக்குரிய மாதிரி அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கப்பட்டதும் வேலை தொடங்கியது. வீட்டுக்கான அடிக் கல்லினை நடும்படி நான் கேட்டுக் கொள்ளப்பட்டேன். இஃது அக்குடும்பத்தாருடன் நாங்கள் கொண்டிருக்கும் நெருக்கமான உறவினைப் புலப்படுத்துகிறதல்லவா? விரைவிலே வீடு அமைக்கப்பட்டது.

விடுமுறை எடுத்து ஊருக்கு வந்திருந்த சீலன் அவர்கள் ஆம்! சத்தியமூர்த்தி அவர்களைச் சீலன் என்றுதான் உறவினர் அழைப்பார்கள். சகோதரியான மலருக்குரிய திருமண ஒழுங்குபற்றி எங்களுடன் ஆலோ சித்தார். அந்த நேரத்தில் எங்கள் பகுதியில் ஆசிரியராகப் பணிபுரியும் யாழ்ப்பாணம் தொண்டைமானாறைச் சேர்ந்த திரு. டானியல் வீரசிங்கம் அவர்களுக்கேற்ற மணப் பெண்ணைத் தேடுகிறார்கள் என்ற செய்தி கிடைத்தது. அவர் விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் என்றும் நல்ல கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவரென்றும் அவர் எங்கள் பகுதியில் சத்திர சிகிச்சை நிபுணராயிருந்த வைத்திய கலாநிதி வீரசிங்கம் அவர்களுடைய தம்பியார் என்றும் அறிந்து கொண்டோம். நானும் சீலன் அவர்களும் அவரைச் சந்தித்தோம். எங்களுடன் சம்பந்தம் வைப்பதனை அவர் ஏற்றுக் கொண்டார். அவருடைய பெற்றோருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டோம். என்னுடைய சுகநிலை ஓரளவு பாதிக்கப்பட்டிருந்த போதிலும் காரியத்தின் முக்கியத்துவம் கருதி நானும் சீலன் அவர்களும் யாழ்ப்பாணம் புறப்பட்டோம்.

நாட்டின் நிலை பாதிக்கப்பட்டிருந்ததால் சிரமத் தோடுதான் தொண்டைமானாறு சென்றோம். திரு. வீரசிங்கம் குடும்பம் பண்பாடு நிறைந்த குடும்பமென அறிந்து கொண்டோம். கிறிஸ்தவ விசுவாசத்தில் உறுதி யானவர்கள் என்றும் அனைவரும் படித்தவர்கள் என்பதும் எங்கள் விசாரணை மூலம் தெரிந்து கொள்ளக் கூடிய தாயிருந்தது. அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசரித்தார்கள். திருமண ஒழுங்கின் பேச்சுவார்த்தை சாதகமாக நிறைவடைந்தது. மகிழ்ச்சியுடன் புறப்பட்டோம்.

திருமணம் சிறப்பாக நடந்தேறியது. திரு. டானியல் அவர்களின் பெற்றோரும் உறவினரும் வந்திருந்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தார்கள்.

திரு. டானியல் அவர்கள் விஞ்ஞானப் பட்டதாரியாக இருந்தபோதிலும் அவருடைய ஆங்கில மொழிப் புலமையே அவரை எங்கள் பகுதியில் புகழ் பெற வைத்தது. ஆங்கிலம் அவருடைய வீட்டு மொழி என்று சொல்லக்கூடிய வகையில் அவருடன் இரண்டறக் கலந்து நின்றது. அவருடைய புலமையினால் ஆங்கில மொழியில் ஆற்றல் பெற்றோர் மிகப்பலர். பல கிராமங்களையும் சேர்ந்தவர்கள் அவரால் நன்மை அடைந்தார்கள். குறிப் பாக அவருடைய துணைவியாராகிய மலர் அவர்களைக் குறிப்பிடலாம். ஆங்கில மொழியில் ஓரளவு அறிவையே பெற்றிருந்த அவர் திரு. டானியல் அவர்களுடைய ஊக்கு விப்பினால் இன்று ஆங்கில மொழியில் அபார ஞானம் பெற்றுள்ளார். இச்சாதகமான சூழ்நிலையே தாய்லாந்துக் கான புலமைப் பரிசிலை அவருக்கு ஈட்டிக் கொடுத்த தோடு சாதாரண தாதியாக இருந்த அவருக்கு துரிதமாகப் பதவி உயர்வுகளையும் பெற வழிவகுத்துக் கொடுத்தது.

திரு. டானியல் திருமதி மலர் தம்பதியர்க்கு பிறேமன் என்னும் பெயரைக் கொண்ட ஒரேயொருவரே பிள்ளைச் செல்வம். ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கும் பிறேமன் வாத்தியக் கருவிகளை மீட்டுவதிலும் இனிமையாகப் பாடுவதிலும் வல்லவர். உயர் கல்வியைக் கற்பதற்குமுன் மெதடிஸ்த சங்கத்தின் தலைமை நிலையம் அமைந்திருக் கும் கொள்ளுப்பிட்டியில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக் கிறார்.

கருணையம்மா, புனிதவதி ஆகியோரும் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து பிள்ளைகளோடு மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். இவர்களின் திருமணங்களுக்கான செலவுகளை கனடாவில் வதியும் சீலன் அவர்களே பொறுப்பேற்றிருந்தாரென்பது குறிப்பிட வேண்டியதே.

நாங்கள் பழுகாமத்தை விட்டு வெளியேறியதால் எங்களின் மெதடிஸ்த திருச்சபை சிறிது பின்னடைவினைச் சந்தித்தது. ஆயினும் எங்கள் சபை முற்றும் செயலற்றுப் போகாமல் தடுத்து நிறுத்திய பெருமை திருமதி பொன்னாச்சி செனவரத்தினம் அவர்களது குடும்பத்தாரை யும் திருமதி லிதியா ஜேசுதாசன் குடும்பத்தாரையும் சாரும். குறிப்பாக திரு. திருமதி டானியல் வீரசிங்கமும் மகன் பிரேமனும் மேற்கொண்டுள்ள அர்ப்பணிப்பான ஈடுபாட்டின் மூலமே எங்களுடைய திருச்சபையின் விளக்கு அணைந்து போகாமல் பிரகாசித்து எரிகிறது. மட்டக் களப்பிலிருந்து வீரசிங்கம் குடும்பத்தார் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மோட்டார் வண்டியிற் புறப்பட்டு பழுகாமம் சென்று ஆராதனையை நடத்தி மட்டக்களப்பு திரும்புகிறார்கள். மிகவும் அபாயகரமான சூழ்நிலையிற் கூட அவர்களின் பயணம் நடைபெற்று வருவதானது அவர்களின் பக்தி வைராக்கியத்துக்குச் சான்று தருகிறது.

திருமதி பொன்னாச்சி செனவரத்தினம் அவர்களும் அவர்களது தாயாரும் அவர்களது குடும்பத்தார் அனைவரும் எங்கள் குடும்பத்தார் அனைவரிலும் காட்டிய அன்புக்காகவும் செய்த எல்லா உதவிகளுக்காகவும் இன்றும் எங்களிற் கொண்டுள்ள கரிசனைக்காகவும் அவர்களுக்கு நன்றி செலுத்துவதோடு கடவுளையும் துதிக்கிறோம். 27.03.1927இல் பிறந்து நல்ல போராட்டத் தைப் போராடி தம் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு 20.11.2004இல் கர்த்தருக்குள் மரித்த திருமதி பொன்னாச்சி செனவரத்தினம் அவர்கள் எங்களின் நன்றிக்குரியவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி சோமசுந்தரம்

நேசம்மா அவர்களின் தாயாரது மூத்த சகோதரி யான இராசம்மா அவர்களின் மூத்த மகளின் பெயரும் நேசம்மா என்பதேயாகும். ஆயினும் அவர் சந்தனப்பிள்ளை என்னும் பெயராலேயே பெரிதும் அறியப்பட்டிருந்தார். ஐந்து தாய்மார்களதும் மூத்த பிள்ளையாக அவர் விளங்கியதால் அனைவரதும் அன்புக்குப் பாத்திரமா யிருந்தார். உரிய முறையிலே கல்வி கற்று சி.பா.த. பரீட்சையிற் தேர்ச்சி அடைந்து யாழ்ப்பாணம் உடுவில் கிறிஸ்தவ பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து கொண்டார். பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த வேளையில் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டதால் பயிற்சியை நிறைவு செய்ய முடியாது வீடு திரும்ப வேண்டிய நிலையினை அவர் அடைந்தார். சிறிது காலத்தின் பின்னர் தராதரப் பத்திமற்ற ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கினார்.

அக்காலத்தில் அரசடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யிலே பயிற்சி பெற்று வெளியேறி ஆசிரியராகப் பணியாற்றி வந்த திரு. நல்லதம்பி சோமசுந்தரம் அவர்கள் சந்தனப் பிள்ளை அவர்களை விரும்பித் திருமணம் செய்து கொண்டார். அவரும் பழுகாமத்தைச் சேர்ந்தவராக இருந்ததால் அவர்களின் திருமணமானது குடும்பங்களின் உறவை மேலும் வளர்க்கலாயிற்று. அவர்களின் திருமண காலத்தில் நேசம்மா அவர்கள் வயதிற் குறைந்தவராக இருந்ததால் அவர்களின் மூத்தபிள்ளையாகவே கணிக்கப் பட்டார். அந்தத் தம்பதியினருக்கு ஒன்பது பிள்ளைகள் பிறந்தனர். அவர்களும் நேசம்மா அவர்களைத் தங்களின் மூத்த சகோதரியாகவே உரிமை கொண்டாடி வந்தனர்.

ஐந்து தாய்மார்களின் குடும்பங்களுள் இராசம்மா அவர்களதும் அழகம்மா அவர்களதும் குடும்பங்கள் இரண்டும் ஒரே குடும்பமாக நெருங்கி வாழ்ந்தமை இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. கணிதம், தமிழ் இலக்கணம், தமிழ் இலக்கியம் ஆகிய பாடங்களில் மிகுந்த ஆற்றல் பெற்றவராக விளங்கிய சோமசுந்தரம் அவர்கள் நேசம்மா அவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார்.

எங்களின் திருமணத்தின்போது தகப்பன் இல்லா திருந்த நேசம்மா அவர்களின் தந்தையாராகவும் தாயாராக வும் திரு. திருமதி சோமசுந்தரம் இருவரும் விளங்கியமை யையும் அந்த நாள்களில் செங்கலடி மெதடிஸ்த பாடசா லையிற் பணியாற்றிக் கொண்டு பாடசாலையுடன் இணைந் திருந்த வீட்டில் வசித்து வந்த அவர்களுடனேயே நாங்களும் சிறிது காலம் வாழ்ந்து வந்ததையும் எங்களின் மூத்த மகன் பிறந்ததும் முப்பத்தொரு நாள்வரை அவர்களே எங்களைப் பராமரித்து வந்தார்கள் என்பதையும் நிறைந்த நன்றியறித லுடன் மனதில் இருத்தி வைத்துள்ளோம்.

கிறிஸ்தவ சமய உள்ளூர் அருளுரையாளராக திரு. சோமசுந்தரம் அவர்களும் கிறிஸ்தவ பெண்கள் சங்கச் செயலாளராகத் திருமதி சந்தனப்பிள்ளை அவர்களும் செங்கலடி, பழுகாமம் ஆகிய இடங்களில் ஆற்றிய கிறிஸ்தவ சமயப்பணியும் அர்ப்பணிப்போடு அவர்கள் இருவரும் ஆற்றிய ஆசிரியர்ப் பணியும் என்றென்றும் நினைவில் வைக்கத் தக்கவை. அவர்களின் நினைவில் நாங்கள் நிறைந்து நிற்கிறோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. பெனடிக்ற் தேவகுமார் அவர்கள்



திரு. பெனடிக்ற் தேவகுமார் அவர்கள் எனது துணைவியாரின் கிராமமாகிய பழுகாமத்திற் பிறந்தவர்; எங்களின் உறவினர். பழுகாமம் மகாவித்தியாலயத்தில் கற்று க.பொ.த.ப. சாதாரணதரத் தேர்வில் தேர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து உயர் கல்விக்காகப் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் இணைந்து கொண்டார். அங்கு என்னுடைய மாணாக்கராக ஈராண்டுகள் கற்று க.பொ.த.ப உயர்தரப் பரீட்சையிற் தேர்ச்சி பெற்றார்.

ஆசிரியர் பதவியை ஆசித்த தேவகுமார் அவர்கள் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்து கொண்டார். எங்களின் மகள் தவச்செல்வி அவர்களும் அதேகாலத்திலேயே ஆசிரியர் பயிற்சி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியராக வெளியேறிய திரு. தேவகுமார் அவர்கள் பழுகாமத்தின் மேற்குத்திசையிலே உள்ள தும்பங்கேணி அரசினர் பாடசாலை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் அவருக்குத் திருமண ஒழுங்குகள் வந்தன. தேவகுமார் அவர்களது இளமைப் பிராயத்தில் அவருடைய தந்தையார் இறைவனடி சேர்ந்து விட்டார். அவரின் சகோதரி குடும்பத்தாருடன் கல்லடியில் வசித்து வந்தார். அவர் தமது அண்ணாவின் மகனாரான தேவகுமார் அவர்களைத் தமது இளைய மகள் அனஸ்ரா நிரஞ்சலா அவர்களுக்குரிய மாப்பிள்ளையாக்கிட விழைந்தார். அந்த ஒழுங்கு குடும்பத்தார் அனைவருக்கும் ஏற்புடையதாக இருந்ததால் திருமணம் இனிதே நிறைவேறியது.

கனடாவில் வாழ்ந்து வந்த நிரஞ்சலா அவர்களின் அண்ணா தனது சகோதரியையும் கணவரையும் கனடாவுக்கு அழைத்துக் கொள்ள விரும்பி அதற்கான பொறுப்பேற்கும் கடிதத்தினை (Sponsoring Letter) உரிய முறையில் அனுப்பி வைத்தார். தேவகுமார் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடயத்தில் அதிக நாட்டம் கொள்ளவில்லை. அவர் கொழும்புக்குச் சென்று அங்கு இடம் பெயர்ந்தோர் (Displaced) என்னும் ஒழுங்கின் அடிப்படையில் கொட்டாஞ்சேனை புனித அன்ரனிஸ் கல்லூரியில் ஆசிரியர் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார். அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கும் வேளையில் நாட்டின் யுத்த நிலை தீவிரமாகத் தொடங்கியது. நாட்டில் அமைதியாக இருக்க முடியாத சூழ்நிலை ஏற்படவே தேவகுமார் அவர்கள் அதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள லானார். துணைவியாரான நிரஞ்சலா அவர்களின் தமை யனார் அவர்கள் அனுப்பிய பொறுப்பேற்கும் கடிதம் பெரிதும் பயன்பட்டது. உரிய படிவங்களை பூர்த்தி செய்து பொறுப்பேற்கும் கடிதத்துடன் கனடிய தூதுவராலயத்தில் விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்து குறுகிய காலத்தி னுள் அனுமதிக் கடிதம் கிடைத்து விட்டது. கனடா வந்து சேர்ந்த திரு. பெனடிக்ற் தேவகுமார் குடும்பம் இங்கு தங்க ளை வசதியாகவும் உறுதியாகவும் நிலைநாட்டி உள்ளனர்.

நிரந்தர வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ள திரு. தேவகுமார் அவர்களுக்கு கிறிஸ்ரீன் - தனுஷா, அனிற்றா-கயல்விழி என்னும் இரண்டு மகள்மாரும் டிலன் - ஏற்றியன் என்னும் மகனும் பிள்ளைச் செல்வங்களாம். கிறிஸ்ரீன் அவர்கள் றயர்சன் பல்கலைக் கழகத்தில் (Ryerson University) தாதியர் கற்கை நெறியில் இரண்டாம் வருட மாணவியாக இருக்கிறார். அனிற்றா அவர்கள் மாக்மாஸ்டர் பல்கலைக் கழகத்தில் (McMaster University) பொறியியல் கற்கை நெறியில் முதலாம் வருட மாணவியாக இருக்கிறார். டிலன் ஏற்றியன் அவர்கள் இடைநிலைக் கல்வியினைக் கற்று வருகிறார்.

அனிற்றா அவர்கள் கல்வியிற் சிறப்புற்று இருக்கு மாப்போல் இசைத்துறையிலும் புகழ் பெற்றுத் திகழ்கிறார். பாடும் திறமை கொண்ட அவர் பியானோ வாத்தியத்தினை மீட்டுவதில் சகல தரங்களிலும் தேர்ச்சியடைந்து ஆசிரிய ராகப் பணியாற்றும் தகைமையினைப் பெற்றுள்ளார்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (குறள் 61)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வள்ளுவர் வாக்கின்படி அறியவேண்டியவைகளை அறியும் நன்மக்களைப் பெற்றுள்ள பெனடிக்ற் தேவகுமார், அனஸ்ரா - நிரஞ்சலா தம்பதியினர் கொடுத்த வைத்தவர்கள். நாங்கள் கனடா வந்து சேர்ந்து ஓரிரு நாட்களுக்குள் எங்களை வந்து சந்தித்து தமது அன்பினைத் தெரிவித்துக் கொண்ட எனது நன்மாணாக்கனான தேவகுமார் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். தமது துணைவியார் நடக்க முடியாது படுக்கையிலிருந்த நிலையிலும் என்னையும் என் துணைவியாரையும் தம்முடைய இல்லத்திற்கு அழைத்துச் சென்று விருந்தளித்து உபசரித்த திரு. தேவகுமார் அவர்களின் உயரிய பண்பினைப் பெரிதும் மதிக்கிறோம்.

எங்களுடன் தொலைபேசிமூலம் அடிக்கடி தொடர்பு கொண்டு சுகம் விசாரிப்பதும் வசதி வாய்க்கும்போது வந்து பார்ப்பதும் நாங்கள் போகவேண்டிய இடங்களிருந்தால் எங்களை அழைத்துச் செல்லுவதும் நாங்களும் அவர்களும் போக வேண்டிய இடங்களுக்கு அவர்களோடு எங்களையும் அழைத்துச் செல்லுவதும் திரு. தேவகுமார் அவர்களுக்கு மகிழ்ச்சிதரும் செயற்பாடுகளாம்.

எனக்கு "அன்ஜியோ பிளாஸ்ரி (Angioplasty) சிகிச்சை சென்ரினறி வைத்தியசாலயில் மேற்கொள்ளப் பட்டு அங்கு தங்கி நிற்க வேண்டியிருந்தபோது என்னுடன் கூட நின்ற அவருடைய பெருந்தன்மை போற்றுதற்குரியது. அவருடைய அன்பு என் மனதை நெகிழச் செய்தது. அவருடைய குடும்பம் நிறைவான ஆசீர்வாதங்களால் நிறைந்து விளங்குகிறது. திரு. தேவகுமார் குடும்பத்தாருக்கு எல்லா நலனும் சித்திக்க இறைவனை வழுத்துகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி ஜோர்ஜ் தேவகுமார் அவர்கள்

கவிஞரும் எழுத்தாளருமான பண்டிதர் ச. சந்திர சேகரி அவர்கள் புலவர்மணி கலாநிதி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்களிடம் பாடங்கேட்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையிற் தேர்ச்சி அடைந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியரான அவர் பிரசித்த நொத்தாரிசாக கல்முனையில் பணியாற்றினார். இயேசு காவியம், தனிநாயகம் பிள்ளைத் தமிழ், வாழ்வியல் (கவிதைத் தொகுதி) முதலியன இவர் எழுதிய நூல்களாம்.

பண்டிதர் அவர்களுடைய மகள்மாருள் ஒருவரான திருமதி சாரதாதேவி அவர்கள் கல்முனை, கார்மல் பாத்திமாக் கல்லூரியில் நீண்ட காலமாகக் கடமையாற்றி அக்கல்லூரியின் உதவி அதிபர் என்ற நிலையில் ஓய்வு பெற்றார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மானிப்பாயைப் பிறந்த இடமாகக் கொண்ட திரு. புவனேந்திரராசா அவர்களைத் திருமணம் செய்திருந்தார். இவர்களின் பிள்ளைச் செல்வங்களுள் ஒருவரான சுமித்திரா அவர்களே திரு. ஜோர்ஜ் தேவகுமாரின் துணைவி ஆவார்.

திரு. ஜோர்ஜ் தேவகுமார் அவர்கள் பாண்டிருப்பில் வாழ்ந்து வந்த திரு. திருமதி தேவசுந்தரம் அவர்களின் மகன்மாருள் ஒருவர். திருமதி ஜெயமணி தேவசுந்தரம் அவர்கள் எனது மாமியாரான திருமதி அழகம்மா அவர்களின் உடன் பிறப்பான திருமதி நல்லம்மா அவர்களின் மகளாவார். அந்த வகையில் ஜோர்ஜ் தேவகுமார் அவர்கள் எங்களுக்கு மகன் முறையானவர். வானொலி வித்தகர், வித்துவான் க. ஞானரெத்தினம் அவர்கள் திரு. ஜோர்ஜ் தேவகுமார் அவர்களின் தாய் மாமன் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. ஜோர்ஜ் தமது வாலிபப் பருவத்திலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1985இல் தமிழ்நாடு சென்று இயந்திரவியற் கல்வியில் ஈடுபட்டார். 1986இல் டென்மார்க் சென்று அங்கும் இயந்திர வியற் கல்வியில் ஈடுபட்டு சகல விமானங்களுக்குமான உதிரிப்பாகங்கள் தயாரிப்பில் சிறப்புப் பயிற்சி பெற்றார். பயிற்சி பெற்றதும் டென்மார்க்கில் தொழில் வாய்ப்புப் பெற்று பதினாறு ஆண்டுகள் தொழில் செய்து வந்தார். உயர்ந்த வேதனம் பெற்று வந்ததால் தமது பெற்றோருக்கு உரிய முறையில் உதவிட முடிந்தது.

திரு. ஜோர்ஜ் தேவகுமார் அவர்கள் டென்மார்க்கில் இருக்கும்போதே திருமணப் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. க.பொ.த.ப. உயர் வகுப்பில் படித்துக் கொண்டி ருந்த சுமித்திரா அவர்களுடனான திருமணம் உறுதி செய்யப்பட்டது. மணப் பெண்ணுடன் பெற்றோர் சிங்கப்பூர் சென்று அங்கு திருமணம் நடைபெற்றது.

டென்மார்க்கில் வாழ்ந்து வந்த திரு. திருமதி தேவகுமார் தம்பதியர் டென்மார்க் அரசின் மொழிக் கொள்கையின் இறுக்கத்தினால் 2002ஆம் ஆண்டில் கனடாவுக்குக் குடிபெயர்ந்து வந்துள்ளனர். அவர்களுக்கு நிரோன் (Niron), சிரான் (Sheran), ஜோஷான் (Geoshan) என்னும் பெயர்களைக் கொண்ட மூன்று ஆண் குழந்தைகள் உளர்.

திரு. ஜோர்ஜ் தேவகுமாரை 'குமார்' என்றும் திருமதி சுமித்திரா தேவகுமாரை 'சுமி' என்றும் அவர்களுடைய உற்றார் உறவினர்களும் நண்பர்களும் அழைப்பர். வேலை செய்யும் இடத்திலும் அலுவலங்களி லும் திரு. தேவகுமார் 'ஜோர்ஜ்' என்றே அழைக்கப்படு கிறார்.

பிராம்ரனில் வசித்துவரும் திரு. ஜோர்ஜ் அவர்கள் அவர்களுக்குச் சமீபமாக அமைந்துள்ள விமானங்களுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றில் கணனி இயந்திர இயக்குனராகப் பணியாற்றி வருகிறார். திருமதி சுமி அவர்களும் பக்கத்தில் உள்ள அலுவலகம் ஒன்றில் பணியாற்றி வருகிறார்.


ஜோர்ஜ் - சுமி குடும்பத்தினர் எங்களுடன் நெருக்கமான உரிமையுடன் தொடர்பு கொண்டிருக்கின் றனர். நாங்களும் அவர்களை எங்களின் சொந்த மகனாகவும் மருமகளாகவும் பேரப்பிள்ளைகளாகவும் ஏற்று நடக்கிறோம். நாங்களிருவரும் இடையிடையே அவர்களு டைய வீட்டுக்குச் சென்று தங்கியிருந்து அவர்களுடைய அன்பான விருந்தோம்பலை அனுபவித்து வருகிறோம். எங்களை அவர்களது சொந்தப் பெற்றோராக ஏற்று எங்கள் தேவைகளை நிறைவு செய்வதில் அவர்கள் குடும்பமாக மகிழ்ச்சி அடைகிறார்கள். அவர்கள் எங்கள் வீட்டுக்கும் உரிமையுடன் வந்து உறவு கொண்டாடிச் செல்வதில் நாங்கள் நிறைந்து நிற்கிறோம். எங்கள் அன்புக்குரிய ஜோர்ஜ் - சுமி குடும்பம் கடவுள் எங்களுக்குத் தந்த சொத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. நல்லதம்பி பாலசிங்கம் அவர்கள்



பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி தெற்கிலே 24.04.1930 இல் பிறந்த பாலசிங்கம் அவர்கள் இலண்டன் பி.ஏ பட்டம் பெற்றவர். ஆசிரியராகப் பணி யாற்றிக் கொண்டிருந்த நாள்களில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

நான் பட்டப்படிப்பை மேற்கொள்ளுவதற்காகக் கண்டிப் பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற்று கண்டி நகரிலுள்ள சிரேட்ட தமிழ்ப் பாடசாலைக்கு வந்தேன். பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டம் பெற்றதைத் தொடர்ந்து கண்டி மாவட்டத்திலுள்ள ஹந்தெஸ்ஸ அல்மனார் மகாவித்தியாலயத்துக்கு என்னை இடமாற்றம் செய்தார்கள்.

ஹந்தெஸ்ஸ மகாவித்தியாலயத்திற்குச் சென்ற போது அஃது ஓர் இஸ்லாமிய பாடசாலை என்றும் தமிழ் ஆசிரியர்களாகத் திரு. பாலசிங்கம் அவர்களும் சங்கீத ஆசிரியையாக செல்வி கந்தசாமி அவர்களும் கடமை யாற்றுகிறார்கள் என்றும் அறிந்து கொண்டேன்.

க.பொ.த.ப. உயர் வகுப்பிலே திரு. பாலசிங்கம் அவர்கள் வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களையும் நான் புவியியல், தமிழ் ஆகிய பாடங்களையும் கற்பித்து வந்தோம். அதிபராகப் பணியாற்றிய ஜனாப் கப்பார் (Gaffar) அவர்கள் எங்கள் இருவரிலும் மிகுந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். அங்கு கடமையாற்றிய ஆசிரியர்களும் மாணாக்கர்களும் பண்பு நிறைந்தவர் களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பாலசிங்கம் அவர்களும் நானும் கண்டியில் இருந்தே "வட்டதேனியா" பஸ் மூலம் பாடசாலைக்குப் போய் வந்தோம். உயர் வகுப்பின் ஆசிரியர்களாயிருந்த தனாலும் ஒன்றாகவே பயணத்தினை மேற்கொண்டிருந்த தனாலும் எங்களிடையே நெருங்கிய அன்பு முகிழ்த்தது.

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு" (குறள் 74)

என வள்ளுவனார் கூறியிருப்பது பொருள் பொதிந்த கூற்றல்லவா! நான் ஒருசில மாதங்களே அந்தப் பாட சாலையிற் பணியாற்றியபோதும் எங்களிடையே மலர்ந்த நட்பு உறுதியான அடித்தளத்தினைக் கொண்டிருந்தது.

15.1.1967இல் நான் மட்டக்களப்பு சென்று விட்டேன். திரு. பாலசிங்கம் அவர்கள் சில ஆண்டுகளின்பின் யாழ்ப்பாணம் சென்று விட்டார். வாழ்க்கைப் போக்கின் பல்வேறு சூழ்நிலைகளால் எங்களிடையே நீண்டநாள் களாகத் தொடர்பில்லாதிருந்தது.

1996இல் நாங்கள் குடும்பமாக கனடா வந்து சேர்ந்தோம். உதயன், செந்தாமரை, முழக்கம் ஆகிய பத்திரிகைகளில் என்னுடைய கட்டுரைகள் வெளிவந்தன. நான் எழுதிக் கொடுக்கும் கட்டுரைகளையும் பத்திரிகை களில் வெளிவரும் கட்டுரைகளையும் கீதவாணி ஒலிபரப்பு நிலைய அதிபர் திரு. நடா ராஜ்குமார் அவர்களும் சிங்கப்பூர் திரு. மோகன் அவர்களும் இணைந்து இடையிடையே ஒலிபரப்புச் செய்து வந்தனர்.

இந்த நிலையிலே 2005 பெப்ரவரி மாதத்தில் ஒருநாள் எதிர்பாராத, அறிந்திராத ஓர் இலக்கத்தைக் கொண்ட தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. தொடர்பு கொண்டபோது அஃது எனது நண்பர் பாலசிங்கம் அவர்களிடமிருந்து வந்த அழைப்பென்பதை அறிந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிர்ச்சியும் ஆச்சரியமும் கலந்த ஆனந்த வெள்ளத்தில் மகிழ்ந்தேன். உதயன் பத்திரிகையில் என்னுடைய பெயரில் வந்த கட்டுரை ஒன்றினைத் தற்செயலாக வாசிக்க நேர்ந்ததாகவும் சந்தேகத்துடன் உதயன் ஆசிரியரைத் தொடர்பு கொண்டு விசாரித்ததாகவும் சந்தேகம் நீங்கப் பெற்றவுடன் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுவதாகவும் கூறிய பாலசிங்கம் அவர்களின்கூற்று என்னை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டது. எங்களுடைய வீட்டு முகவரியை அறிந்து கொண்டதோடு வரும் வழியையும் கேட்டுத் தெரிந்து கொண்ட பாலசிங்கம் அவர்கள் அன்று மாலைப் பொழுதில் எங்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அப்போது நாங்கள் 412 மில்னர் அவெனியூவில் குடியிருந்தோம். அன்றிரவு நீண்ட நேரம்வரை உரையாடினோம். ஏறத்தாழ 37 ஆண்டு இடைவெளியின்பின் ஏற்பட்ட சந்திப்பல்லவா? எங்கள் அன்பு எவ்வளவு ஆழமானதாகவும் அகலமானதென்பதை யும் நாங்கள் இருவரும் உணர்ந்து கொண்டோம். இடையிடையே சந்திப்பதாகவும் அடிக்கடி தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ளுவதாகவும் உறுதி பூண்டு பிரிந்தோம். எங்களின் தனிப்பட்ட உறவு குடும்ப உறவாக விரிவடைந்தது. அவர்கள் எங்களிடம் வருவதும் நாங்கள் அவர்களிடம் போவதும் நன்மை தீமைகளிற் பங்கேற்பதும் இயல்பாய் அமைந்தன.

2006 பெப்ரவரியில் தமிழர் தகவல் நிறுவனத்தினர் நடத்திய வருடாந்த விருது வழங்கும் விழாவிலே எனக்கும் விருது வழங்கப்பட்டது. அவ்விழாவுக்கு திரு. பாலசிங்கம் அவர்கள் தமது மகளாரோடு வருகைதந்து என்னைப் பெருமைப்படுத்திய அன்பினை நன்றியுடன் நினைவிற் கொண்டுள்ளேன். அவ்வாறே கனடாத் தமிழ் எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையம் எனது புத்தகங்களின் வெளியீட்டினையும் எழுபத்தைந்து ஆண்டு நிறைவினையும் இணைந்து ஏற்பாடு செய்த விழா 2006 ஏப்ரல் மாதம் நடைபெற்றபோது அவ்விழாவிலும் பங்கேற்று என்னை மகிழ்வித்த திரு. பாலசிங்கம் அவர்கள் எப்போதும் என் அன்புக்கும் நன்றிக்கும் உரியவராகவே இருக்கிறார். கனடியத் தமிழ் ஒலிபரப்பிலே வாரந்தோறும் இடம்பெற்றுவரும் சிறந்த தொரு நிகழ்ச்சியான "உலகம் இவ்வாரம்", திரு. பாலசிங்கம் அவர்களின் மருமகனான திரு. ராஜா யோகராஜா அவர்களால் வழங்கப்படுகிறதென்பது மகிழச்சிக்குரிய செய்தியாகும்.


எனது பவள விழா தொடர்பாக கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தினர் வெளியிட்ட 'வித்துவரத்தினம்' என்னும் மலருக்காக திரு. பாலசிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பந்தியைக் கீழே தருகிறேன்.

"தமிழுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் செபரத் தினம் அவர்கள் செய்துவரும் சேவை பாராட்டுக்குரியது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றியவர் களின் வரலாற்றை வெளியிட்டுவரும் அவரது பணி என்றென்றும் பாராட்டப்படவேண்டிய தொன்றாம். இவ்வாறு அவர் வெளியிட்டு வரும் நூல்கள் மூலம் எங்கள் இளைஞர்கள் மத்தியில் தலைமுறை தலைமுறையாக அவர் நினைவுகூரப்படுவார் என்பது திண்ணம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியப் பெருமகனார் திரு.எஸ்.எம். லீனா அவர்கள்



மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வங்காலை என்னும் ஊரிலே 28.11.1908இல் பிறந்து, வளர்ந்து, கல்விகற்று, 05.07.1931 இல் மட்டக்களப்பு மாவட்டத்திற் குடியேறி, கோடி புண்ணியந் தரும் ஏழைக்கு எழுத்தறி விக்கும் பணியினைச் சீராக ஆற்றி, வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துக்கு விருந்தாகச் சென்ற ஆசிரியப் பெருமகனே திரு. எஸ்.எம். லீனா அவர்கள்.

மன்னார் புனித சேவியர் கல்லூரியில் ஆங்கில மொழி மூலமான கல்வியைப் பெற்றுக்கொண்ட திரு. லீனா அவர்கள் மட்டக்களப்பு புனித செபஸ்தியார் உயர்நிலைப் பாடசாலையில் பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்களிட மும் பின்னர் விபுலாநந்த அடிகளாரிடமும் தமிழ் மொழியை முறையாகக் கற்றுக்கொண்டு ஆசிரியர் பணியை ஆரம்பித்த சிறப்புக்குரியவர்.

திரு. லீனா அவர்கள் திருமணத் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்ட தன்னாமுனை, நான் பிறந்த ஊராகிய தம்பிலுவில், எனது அயற் கிராமமாகிய அக்கரைப்பற்று, நான் திருமணத் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட ஊராகிய பழுகாமம் என்பன அவருடைய அர்ப்பணிப்பான சேவையினால் நன்மை அடைந்து எழுச்சி பெற்ற ஊர்களிற் சில. இவை அத்தனையும் அப்பெருந்தகைக்கு நன்றிக்கடன் பட்டவை.

திரு. லீனா அவர்கள் தங்களின் திருமண வைர விழாவினைக் கனடாவில் கொண்டாடிய 1996ஆம் ஆண்டிலேயே நானும் எனது துணைவியாரும் கனடா வந்தோம். அதன் பின்னரே அவருடனான நெருங்கிய தொடர்பு எனக்கேற்பட்டது. அத்தொடர்பினால் நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுக் கொண்டவை மிகப்பல. "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் வள்ளுவர்கூற்று இவரிடம் விளக்கம் பெற்றுக் கொண்டது. "உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கிலே ஒளியுண்டாகும்" என்னும் பாரதியார் கூற்று தெளிவுரை பெற்றுக்கொண்டது. "தான் கெடினும் தக்கார்கே டெண்ணற்க" என்னும் நாலடியார் வாக்கு விளக்கவுரை பெற்றுக் கொண்டது. "நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்" என்னும் புறநானூற்றுக் கருத்து விரிவுரை விரித்தது. அப்பெரியாரின் இறுதிமூச்சு வரை எனது கற்றல், அவரது கற்பித்தல் முயற்சிகள் இடம் பெற்றுக்கொண்டே இருந்தன.

கிறிஸ்மஸ், ஈஸ்டர் நாள்களில் வாழ்த்து அட்டைகளை அனுப்புவதோடு அமையாது தொலைபேசி மூலமும் வாழ்த்துவது அப்பெருந்தகையின் பண்பு. நாள் தோறும் காலை வேளைகளில் தொலைபேசி ஊடாக, "தம்பி! சுகமாய் இருக்கிறீர்களா?" என்று விசாரிப்பதை நாளாந்தக் கடமையாக்கிக் கொண்ட அப்பெருமகனாரின் அன்புக்கு நான் அடிமை.

இடையிடையே கடிதத் தொடர்பும் இருந்ததுண்டு. எனது 'ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூலின் வெளியீட்டு விழாவுக்கு அப்பெரியவர் வருவதாக வாக்களித்திருந்தார். எதிர்பாராத தடை ஏற்பட்டு விட்டது. அவர் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியைக் கீழே தருதும்.

"எதிர்பாராத வகையில் பென்சில்வேனியாவுக்குப் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் 17ம் திகதி சனிக்கிழமை அங்கு போகிறேன். உங்கள் நூல் வெளி யீட்டு விழாவுக்கு வரமுடியாமைக்கு மிகவும் வருந்து கிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள். நல்லவர் நிகழ்ச்சி நலமாக நிறைவேறும். "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" நூலின் ஒரு பிரதியை தயவு செய்து எனக்கு அனுப்பி வைக்குமாறு பணிவன்புடன் உங்களை வேண்டுகிறேன்"

இவ்வாறு என்னால் திரட்டி எழுதப்பட்டு ஈழத்துப் பூராடனார் அவர்களால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்ட, "கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் - இரண் டாம் பகுதி" இல் திரு. லீனா அவர்களின் வாழ்க்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புகளையும் இடம்பெறச் செய்ய வேண்டுமென விழைந்து அப்பெரியாரை அணுகியபோது சாதகமான பதில் கிடைக்கவில்லை. இவ்விடயமாக ஏற்கனவே அணுகிய பலரும் தோற்றுப் போனதாக அறிந்து ஒரு கடிதம் வரைந் தேன். அஃது உரிமையோடு எழுதப்பட்டதால் அவரால் உதாசீனஞ் செய்ய முடியாது போய்விட்டது. வாழ்க்கைக் குறிப்புகள் சுருக்கமாகத் தரப்பட்டன. அனுப்பப்பட்ட கடிதத் திலிருந்து மூன்று வரிகளைக் கீழே தருகிறேன். எங்கள் அன்பின் ஆழத்தினை அதிலிருந்து புரிந்திட முடியும்!

"உங்கள் தூய்மையான அன்புக்குப் பணிந்தும் எங்கே உங்கள் அன்பை இழந்து விடுவேனோ எனப் பயந்தும் என் வாழ்க்கைக் குறிப்புகளில் முக்கியமான வற்றை கீழே தருகிறேன்" 10.04.2003

நானும் என் துணைவியாரும் ஒருநாள் பொழுதைத் தம்முடன் செலவிட வேண்டுமென அப்பெரியார் விழைந்த மைக்கமைய அவருடைய மகளின் மகனாகிய பீலிக்ஸ் - புகழேந்தி அவர்களை எங்களிடம் அனுப்பி அழைத்துக் கொண்டார். ஒரு முழுநாள் அவரோடு இணைந்திருக்கக் கிடைத்த வாய்ப்புக்காக கடவுளைத் துதித்தோம். அவரால் பேணப்பட்டுவரும் நூல்களின் வகைகளும் தொகைகளும் என்னை மலைக்க வைத்தன. அறிஞர் கால்ட்வெல், ஞானப்பிரகாச அடிகள், தனிநாயக அடிகள், தாவீது அடிகள் முதலியோரின் படைப்புகள், சங்க நூல்கள், அறிஞர்கள் பலரது உரைகளுடன் கூடிய திருக்குறட் பிரதிகள், ஆங்கில மொழி பெயர்ப்புகளிலான திருக்குறள், திருவாசகம், ஆங்கில மொழியிலான மொழி ஆராய்ச்சி தொடர்பான நூல்கள், வகை வகையான அகராதி நூல்கள் என ஏராளமான நூல்கள் அவராற் பயன் படுத்தப்பட்டவையாய் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு நூலிலும் திரு. லீனா அவர்களால் அடிக் கோடிடப்பட்ட பகுதிகளையும் அடிக்குறிப்பு எழுதப்பட்ட பக்கங்களையும் குறிப்புகள் எழுதப்பட்ட பக்கங்களின் ஓரங்களையும் பார்த்தபோது அவற்றை அப்பெரியார் எவ்வாறு பயன் கொண்டாரென்பதனை உணர்ந்து உளம் பூரித்து நின்றேன். உலகப் பல்கலைக் கழகம் ஒன்றினுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைப் பேராசான் ஒருவரோடு அறிவு பூர்வமான உரையாடலில் ஒன்றித்து நிறைந்து நின்ற மன உணர்ச்சியில் திளைத்துப் போனேன்.

திரு. லீனா அவர்களின் அருமை மகளார் திருமதி நிர்மலா இன்பராஜா அவர்கள் தயாரித்து வைத்துச் சென்ற அறுசுவை உணவை செவிக்குப் போதிய உணவு கிடைத்ததன் பின்னர் அருந்தினோம். தம்பி புகழேந்தி அவர்களே எங்களை அழைத்து வந்து வீட்டில் விட்டார்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்றே"

என்னும் செய்யுளின் உட்பொருளை உரிய முறையில் உணர்ந்து கொண்டேன்.

திரு. லீனா அவர்களின் உயிர் பிரிவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் எம்மைப் பார்த்திட விரும்புவதாக அறிந்து அவரிடம் சென்றோம். படுக்கையிலே பேச முடியாத நிலையில் இருந்தார். இரண்டொரு நாள்களாக எவரிடமும் பேசவில்லையாம். என்னையும் எனது துணைவியாரையும் கண்டபோது அவர் முகத்தில் ஏற்பட்ட மலர்ச்சி சூழ நின்றோரை வியக்கச் செய்தது. என்னை அவருக்கருகில் வந்து நிற்கும்படி குறிப்புக்காட்டினார்; சென்றேன். அவருடைய மூடிய நிலையிலிருந்த வாய் திறந்தது. பேசத் தொடங்கினார்; பேசிக் கொண்டே இருந்தார். அதிர்ச்சியில் உறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்த உறவினர்கள் வெளியேறி விட்டார்கள். அவர் தொடர்ந்து பேசினார். பல விடயங்களையிட்டுப் பேசினார். இடையிடையே களைப்பு மேலிடத்தான் செய்தது. பேசுவதற்கு நிறைய இருக்கிறது; அடுத்த நாளும் வரச்சொன்னார். விடை பெற்றோம். அடுத்த நாள் போகவில்லை. ஆம்! அப்பெரிய மனிதர் போய்விட்டார்... ஆண்டவர் அவரை அழைத்துக் கொண்டார்.

எங்கள் அன்புக்கும் நன்றிக்கும் உரியவரான ஆசிரியப் பெருந்தகை திரு. லீனா அவர்களை நாங்கள் நினையாத நாளில்லை; அவர் நினைவு சுகம் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி விஜயரெத்தினம் தம்பதியர்

எனது எழுத்துப் பணிக்கு பல்லாற்றானும் உரமூட்டி உதவிவரும் பெருமக்களுள் முதன்மையானவர்கள் திரு. திருமதி விஜயரெத்தினம் தம்பதியினரே எனக் குறிப்பிடுவதில் மன நிறைவும் பெரு மகிழ்ச்சியும் அடைகிறேன்.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்"

என்று வள்ளுவம் கூறுகிறது. ஆனால் எனக்குச் செய்யப் பட்டதுவோ பனைத்துணை நன்றி. அதுவும் செய்யாமற் செய்த நன்றி! அவர்கள் என்றென்றும் எங்கள் நன்றிக்கு உரியவர்கள்.

மட்டக்களப்புத் தமிழகம் பெற்றெடுத்த மாமணியாம் இலக்கியக் கலாநிதி, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் மகனாரான விஜயரெத்தினம் அவர்கள் கல்வி டிப்ளோமாப் பட்டம் பெற்ற கலைப்பட்டதாரி ஆசிரியராகப் பணியாற்றியவர். கல்முனையிலே வாழ்ந்த காலத்தில் கல்முனை இந்து இளைஞர் மன்றப் பொருளாளராகவும் கல்முனை சித்தி விநாயகர் ஆலயப் பரிபாலன சபை உறுப்பினராகவும் கல்முனை விழிப்புக் குழுத் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார்.

கொழும்பை வதிவிடமாகக் கொண்ட பின்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொள்ளலானார். சங்கத்தின் துணைத் தலைவர், பொருளாளர், தலைவர் எனும் பதவிகளை வகித்து சங்கத்தின் வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். உலகச் சைவப்பேரவை துணைத்தலைவராகவும் இந்து இளைஞர் மன்ற உறுப்பினராகவும் விஜயரெத்தினம் அவர்கள் ஆற்றிய சமயப் பணிகள் பாராட்டுக்குரியவையாக இருந்தன.

கொழும்புக்கு வந்த பின்னரே அவரிடம் இயல்பாய் அமைந்திருந்த எழுத்தாற்றல் பிரகாசிக்கத் தொடங்கியது எனலாம். தமிழ்ச் சான்றோர்களையிட்டும் தமிழ்த் தொண்டாற்றிய ஐரோப்பியச் சான்றோர்களையிட்டும் அவரெழுதிய கட்டுரைகள் பெரும் வரவேற்பைப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயரெத்தினம் அவர்களால் தொகுக்கப்பட்டு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினரால் 1998இல் வெளியிடப் பட்ட "தமிழ் தந்த புலவர்மணி" என்னும் நூல் வட கிழக்கு மாகாண 2000 ஆம் ஆண்டுக்குரிய பல்துறை இலக்கியத் துக்குரிய பரிசிலைப் பெற்றுள்ளது. இவரால் தொகுக்கப் பட்ட "புலவர்மணி கட்டுரைகள்" என்னும் நூல் வட கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் 1999இல் வெளியிடப்பட்டது. அத்துடன் "புலவர்மணி கவிதைகள்" என்னும் நூலை விஜயரெத்தினம் அவர்கள் மணிமேலைப் பிரசுரமாக மீள்பதிப்புச் செய்துள்ளார்.

இலங்கைப் புகையிரதப் பகுதியில் நிலைய உயர் அதிகாரியாகப் பணியாற்றிய பரசுராமர் அவர்களின் மகளாரான சிவகாமசுந்தரி அவர்கள் கொழும்பு மெதடிஸ்த மகளிர் கல்லூரியிற் கற்று பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானவர். கலைப்பட்டதாரியான இவர் கல்வி டிப்ளோமாப் பட்டமும் பெற்றவர். உதவி ஆசிரியை யாகத் தமது பணியினை ஆரம்பித்த சிவகாமசுந்தரி அவர்கள் கல்முனை இராமகிருஷ்ண சங்கப் பாடசாலை யின் அதிபராகச் சேர்ந்து அதன் வளர்ச்சிக்காக அயரா துழைத்து அதனை மகா வித்தியாலயமாக உயர்த்தி உள்ளார். அதேவேளையில் அப்பாடசாலையில் க.பொ.த. உயர்தர வகுப்பினை ஆரம்பிக்கக் காரணராயிருந்த பெருமையும் அவருக்கே உண்டு. விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினை இவ்வித்தியாலயத்திலே சிறப்பாக நடத்தி சிறப்பு மலரினை வெளியிடவும் ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை நிறுவிடவும் திருமதி விஜயரெத்தினம் அவர்கள் முன்னின்றுழைத்தமை பலரது பாராட்டுதலைப் பெற்றிருந்தது.

இலங்கை கல்விச் சேவையின் முதற்தர அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் தற்போது கொழும்பில் வாழ்ந்துவரும் திருமதி சிவகாமசுந்தரி விஜயரெத்தினம் அவர்கள் தமது கணவனாரோடிணைந்து கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பினராகி சங்க வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டு வருகிறார். அத்துடன் உலக சைவப் பேரவை உறுப்பினராகவும் கொழும்பு இந்து மகளிர் மன்ற




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினராகவும் பின்னர் அதன் தலைவராகவும் இவர் ஆற்றிவரும் பணிகள் பாராட்டத் தக்கவையாம். இன, மத ஒருமைப்பாட்டைப் பேணி அதன் அடிப்படையில் இவரது கல்வி, சமூக, சமய, தமிழ்ப் பணிகள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. திருமதி விஜயரெத்தினம் தம்பதியினரின் பொதுப்பணிகளின் சிறப்பினைப் பாராட்டும் வகையிலே இலங்கை அரசாங்கமானது இவர்கள் இருவரையும் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிபதிகளாக நியமித்துப் பெருமைப்படுத்தியுள்ளது.

எங்கள் மிக நெருங்கிய உறவினர்களாகிய திரு. திருமதி விஜயரெத்தினம் இருவரும் எங்களிற் பாராட்டி வரும் அன்பு ஈடிணையற்ற ஒன்றாகும். எனது எழுத்துப் பணிக்குத் தேவைப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள், கட்டுரைகள் முதலியவற்றை எல்லாம் எவ்வித பிரதி உபகாரமும் கருதாது மகிழ்ச்சியுடன் அனுப்பி உதவிவரும் அன்புக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் அனுப்பி வைக்கும் பிரதிகளை, இலங்கையிலுள்ள அன்பர்களுக்குக் கொடுக்கும் பணியிலும் அவர்களை நான் அதிகம் கடமைப்படுத்தி உள்ளேன். தனிப்பட்ட முறையிலே என்னில் அவர்கள் வைத்துள்ள அன்பு உண்மையாகவே இறைவன் எனக்குத் தந்த மகத்தான கொடை என்பேன். எல்லாம் வல்ல இறைவன்தாமே இத்தம்பதியரை ஆசீர்வதிப்பாராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி அல்பிரட் ஜெயரத்தினம் அவர்கள்

கிறிஸ்தவ வேதாகமத்திற் கூறப்பட்டுள்ள பத்துக் கற்பனைகளையும் ஆண்டவராகிய இயேசுநாதர் இரண்டு கற்பனைகளுள் அடக்கித் தந்துள்ளார். "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவா யாக". இது முதலாம் பிரதான கற்பனை. "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவா யாக" என்பது முதலாம் கற்பனைக்கு ஒப்பான இரண்டாம் கற்பனையாகும். 'பிறன்' என்னும் சொல்லானது தெரிந்த வர்களை மட்டுமல்ல முன்பின் தெரிந்திராத அந்நியர் களையும் உளப்படுத்தி நிற்பதை ஆண்டவராற் கூறப்பட்ட "நல்ல சமாரியன்" உவமை தெளிவு படுத்தியிருக்கக் காண்கிறோம்.

ஆண்டவரின் விளக்கத்தை நன்கு புரிந்தவர்களுள் ஒருவராக வாழ்ந்துவரும் திரு. ஜெயரத்தினம் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த கல்லாறு என்னும் ஊரில் 28.06.1944இல் பிறந்தார். அவருடைய தந்தையாராகிய திரு. தம்பிராஜா அவர்கள் எனது கிராமமாகிய தம்பிலுவி லில் அமைந்திருந்த மெதடிஸ்த பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர். நான் சிறுவனாக அங்கு படித்துக் கொண்டிருந்தபோது அவரைப் பார்த்திருக்கிறேன். அவர் உருவம் என் உள்ளத்திற் பதிந்திருக்கிறது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் கற்றுத் தேறிய ஜெயரத்தினம் அவர்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை முடித்து ஆசிரிய ராக வெளியேறி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் நாட்டின் சீரற்ற அரசியற் காரணங்களால் 1986 டிசம்பர் மாதம் கனடாவில் குடியேறினார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் தாரக மந்திரத்தை தமது உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் ஜெயரத்தினம் அவர்கள் ஆண்டவரின் உவமையிலே கூறப்பட்ட நல்ல சமாரியனாகவே வாழ்ந்து வருவதைப் பலர் அறிந்து வைத்துள்ளனர்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது"

என்ற வள்ளுவனார் கூற்றுக்கமைய தாம் எவரிடமிருந்தும் எவ்வித உதவியும் பெற்றுக் கொள்ளாத நிலையிலே பலருக்குக் காலத்தினால் இவர் செய்த உதவிகள் மிகப்பல. "ஈந்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவனார் கூறுவதைப் போல் "செய்துவக்கும் இன்பம்" ஜெயரத்தினம் அவர்களுக்குரியது.

ஆங்கில மொழியில் அவர் பெற்றிருக்கும் பாண்டித் தியம் அவரை நாடி வருவோர் பலரது அகதி உரிமைக் கோரிக்கை, உறவினர்களைப் பொறுப்பேற்றல், குடிவரவு தொடர்பான விடயங்கள், கடவுச் சீட்டு பெறுதல், கனடா ஓய்வூதியம் முதலிய பல விடயங்கள் தொடர்பாக சம்பந்தப் பட்ட அலுவலகங்களுக்குச் சென்று காரியங்களை முடித்துக் கொடுத்திட பேருதவியாக இருக்கிறது. தமது சொந்த வாகனத்திலேயே உதவிபெற வந்தவர்களை அழைத்துச் சென்று தமது நேரத்தைக்கூடக் கவனிக்காமல் உதவிவரும் ஜெயரத்தினம் அவர்கள் பலரது நன்றிக்கும் அன்புக்கும் பாத்திரராகி இருக்கிறார்.


1996 ஜுன் மாதம் நாங்கள் கனடாவுக்கு வந்தது தொடக்கம் எங்களது குடிவரவு தொடர்பான சகல விடயங்களிலும் நிரந்தரவதிவுரிமை பெறும் விடயத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த அர்ப்பணிப்போடு ஜெயரத்தினம் அவர்கள் செய்த உதவிகளை நாங்கள் என்றும் மறவோம். எங்கள் காரியங்களில் ஈடுபட்டு அவரடைந்த சிரமங்களை அவர் முகமலர்ச்சியோடு தாங்கிக் கொண்டமைக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டுள்ளோம். அது "பயன் தூக்கார் செய்த உதவி"

திரு. ஜெயரத்தினம் அவர்களின் மனைவி திருமதி றூத் செல்வலட்சுமி அவர்களும் இலங்கையில் ஆசிரியை யாகப் பணியாற்றியவர். 'பேபி' என அனைவராலும் அழைக்கப்பட்டுவரும் செல்வலட்சமி அவர்களும் கணவ ரின் பணிகளுக்கு ஆதரவாக இருந்துவருவது குறிப்பிடத் தக்கது. றோஷான், சாந்தா, றோஹான் ஆகியோர் இத்தம்பதிகளின் மக்கட்செல்வங்கள். திரு. ஜெயரத்தினம் தொடர்ந்து மக்கள் பணி ஆற்றிவர எல்லாம்வல்ல இறைவன் அருள்பாலித்திட அவன்தாள் பணிகிறோம்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மாநாடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காவும் பொழிலுங் கழிமுகமும் புள்ளணிந்த
ஏரியும் மல்கி இரத்தினத் தீவமென
ஆரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
ஏரார் இயன்றசெந்நெல் இன்சுவைத்தீங்
கன்னலொடு
தெங்கி னிளநீருந் தீம்பலவி னள்ளமிர்தும்
எங்குங் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக் களப்பென்னு மாநாடந் நாட்டினிடை"

என யாழ் நூலாசிரியர் விபுலாநந்த அடிகளாரால் விதந்தோதப்படும் மட்டக்களப்பென்னும் மாநாடே நான் பிறந்த பொன்னாடாகும்.

மட்டக்களப்பு என்னும் இடப் பெயரிலுள்ள 'மட்டம்' என்னும் சொல்லானது சிறுமை, தாழ்மை, குறைவு முதலிய பொருள்களை உடையதாய் ஈங்கு ஆழமற்ற தன்மையினைச் சுட்டி நிற்கிறது. 'களப்பு' என்னும் சொல்லானது கடல் நீர் பெருக்கெடுக்கும் காலங்களில் நிலப்பகுதியினுட் சென்று ஆற்று நீருடன் கலப்பதனால் உண்டாகும் நீர் நிலைகளைச் சுட்டி நிற்கிறது. சுரி மண்ணும் சேறும் கொண்டனவாய் அமையப் பெறும் நீர் நிலைகளாக மட்டக்களப்பு, பெரியகளப்பு, கோரைக்களப்பு என்பன இலங்கையின் கிழக்குக் கரையில் காணப் படுகின்றன. இவற்றுள்ளே மட்டக்களப்பானது வடக்குத் தெற்காக முப்பது மைல் நீண்ட ஒரு சதுப்பேரியாக இருக் கிறது. காலப்போக்கிலே மட்டக்களப்பு என்னும் பெயர் அக்களப்பினைச் சூழவுள்ள பிரதேசத்தினைச் சுட்டும் பெயராக மாறியதோடு அப்பிரதேசத்தின் தலை நகரமும் மட்டக்களப்புப் பட்டணம் என அழைக்கப்படலாயிற்று.

கிழக்கில் கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமும் நடுவண் வயலும் வயல் சார்ந்த மருத நிலமும் மேற்கில் காடும் காடு சார்ந்த முல்லை நிலமுமென பண்டைத் தமிழகத்தின் நாநிலப் பண்புகள் அமையப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாநிலத்திலே பண்டுதொட்டு வாழ்ந்துவரும் மக்களின் பேச்சிற் பயின்றுவரும் செந்தமிழ்ச் சொல் வளமும் மக்கள் வாழ்விலே பின்னிப் பிணைந்துள்ள கிராமியப் பாடல்கள், கிராமியக் கூத்துகள், சோதிடம், வைத்தியம், மாந்திரிகம் முதலிய செழுமைமிகு கலை வளமும் வந்தோரை வாழ வைக்கும் அவர்கள் தம் பாரம்பரிய பண்பாட்டு வளமும் இம்மாநிலமானது நீண்ட நெடுங்காலத்திலிருந்தே தமிழ் பேசும் மக்களின் தாயக மாகத் திகழ்ந்து வருவதனை வலியுறுத்தி நிற்கக் காண்கிறோம்.

மட்டக்களப்பு மாநிலத்தில் புகழ்பூத்த மைந்தர் களுள் ஒருவரான கலாநிதி, மகாவித்துவான், பண்டிதர் வி.சீ. கந்தையா அவர்களால் ஆக்கப்பட்ட "மட்டக்களப்புத் தமிழகம்" என்னும் நூலுக்கு பிறமாநில அறிஞர் பெருமக்கள் சிலர் வழங்கியுள்ள அணிந்துரைகளில் மட்டக்களப்பு மாநிலத்தினையிட்டுக் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை கீழே தருதும்:

**தவப் பெருந்திரு தெய்வசிகாமணி குன்றக்குடி அடிகளார்:**

"இத்தமிழகத்திற் பயிலும் நாடோடிப் பாடல்களில் நிறைந்துள்ள தமிழின்பமும் அதனோடு இணைந்து நிற்கும் கருத்து வளமும் பேச்சு மொழி நலமும் நினைத்தொறும் இன்பந் தருவன...!

இவ்வினிய நூலைப் படித்து முடித்தவுடன் நம்முடைய நெஞ்சத்திலிருந்து எழுந்த உணர்ச்சி மட்டக்களப்புத் தமிழ் நிலத்திடை வளைந்து சூழ்ந்து கிடக்கும் வாவி தமிழ்ச்சுனை; ஆங்கு வாழும் மக்கள் பண்பட்ட தமிழ்க் குடிகள் என்றுதானே சொல்லுகின்றது"

**பேரறிஞர் சேவியர் தனிநாயகம் அடிகளார்:**

"ஈழத்திருநாட்டிற் சிறந்தோங்கும் மட்டக்களப்புப் பிரிவினது இயற்கை வனப்பு, கலை, மொழி வளம், பண்பாடு முதலியவற்றில் நிறைந்த ஆர்வம் எனக்குண்டு... மட்டக்களப்பு செல்லும் வெளிநாட்டார்க்கு வியப்பூட்டும் வகையில் அங்கு வளங்குவதும் பழங்காலத் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையதுமான மொழிச் செல்வம் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ள ஒன்று.

இத்தமிழகத்தினரிடை அழியாதிருக்கும் பழைய இலக்கியச் செல்வங்களான "கண்ணகி வழக்குரை", "குளுத்திப் பாடல்", "மழைக் காவியம்", "உடுகுச் சிந்து" முதலானவற்யையும் கலை பொலிந்த ஆடல்களான "கொம்பு விளையாட்டு", "வசந்தனாடல்", "குரவையயர் தல்" என்பவற்றையும் விளக்கும் "கண்ணகி வழிபாடு" என்னும் பகுதி படிக்கும்போது புதிய இன்பந் தருவ தொன்றாக அமைகின்றது"

## பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள்:

"பழந்தமிழ் நாட்டில் விளங்கிய இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் போற்றி வளர்த்து வரும் மட்டுநாடு"

## அறிஞர் சு. நடேசபிள்ளை அவர்கள்:

"இந்திய நாட்டில் பண்டைக்காலத்துத் தமிழ் மக்களிடையே நிலவிய சில பழக்க வழக்கங்களும் சொல்லாட்சிகளும் மட்டக்களப்புத் தமிழ் தொன்மைத் தொடர்பைப் புலப்படுத்துகின்றது. கண்ணகி வழிபாடு இந்திய நாட்டுத் தமிழகத்தில் மறைந்தும் மட்டக்களப்பிற் பன்னூறாண்டுகளாக நிலை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க தாகும். தொன்மைத் தொடர்புள்ள தமிழ்க்கூத்து வகைகள் மட்டக்களப்பில் இன்றுங் காணக்கூடியவையாக உள்ளன"

மட்டக்களப்பு, அம்பாறை என்னும் ஆட்சிப் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மட்டக்களப்பு மாநாடானது வடக்கே மகாவலி கங்கையின் கிளையான வெருகல் ஆறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறுவரை பரந்ததாயும் மேற்கே ஊவா மலைப் பிரதேசத்தையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் எல்லைகளாகக் கொண்டு விரிந்ததாகவும் அமைந்துள்ளது. இதன் மிகக்கூடிய நீளம் 135 மைல் எனவும் மிகக்கூடிய அகலம் 50 மைல் எனவும் கணிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த ஊர்

நான் பிறந்த ஊராகிய தம்பிலுவில் மட்டக்களப்புப் பட்டணத்திற்குத் தெற்கே நாற்பத்தைந்து மைல் தொலை வில் அமைந்துள்ளது. இதன் வடக்கிலே தம்பட்டை என்னும் கிராமமும் தெற்கிலே திருக்கோவில் என்னும் கிராமமும் கிழக்கிலே வங்காள விரிகுடாவும் மேற்கிலே பெரியகளப்பு என்னும் நீரேரியும் எல்லைகளாக உள்ளன.

தமிழ் மக்களின் பாரம்பரிய ஊராகிய எங்கள் கிராமத்தின் பண்டைய பெயரை அறியக்கூடிய ஆதாரங் கள் எதுவும் கிடைத்தில. மட்டக்களப்பு என்னும் நீரேரியின் பெயர் சூழ உள்ள பிரதேசத்தினையும் சுட்டிடும் பெயராகக் கொள்ளப்பட்டது போன்று எங்கள் கிராமமும் மேற் கெல்லையில் அமைந்திருக்கும் நீரேரியின் பெயராகிய பெரியகளப்பின் பெயரால் சுட்டப்பட்டிருக்கலாம்.

தம்பிலுவில் என்னும் பெயர் எவ்வாறு ஏற்பட்ட தென்பதை மட்டக்களப்பு மான்மியத்தின் மூலம் புரிந்திட முடிகிறது.

கலிங்க குமரனான புவனேயகயபாகுவுக்கும் சோழ மன்னன் ஒருவனின் மகளாகிய தம்பதிநல்லாள் என்னும் அவனது மனைவிக்கும் பிள்ளைப்பேறு இல்லாததால் ஆலய தரிசன நோக்குடன் திருக்கோவிலில் அமைந் துள்ள வேற்பெருமான் ஆலயத்துக்கு வந்ததாகவும் அவர்களின் வரவை அறிந்த மட்டக்களப்பு மன்னனின் வேண்டுகோளை ஏற்று திருக்கோவில் ஆலயத்தை சிறந்த முறையில் அமைத்துக் கொடுத்ததாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. ஆலயப்பணி கண்டு மகிழ்ந்த மட்டக்களப்பு மன்னன் தனது நாட்டின் தென்பகுதியை புவனேயகயபாகுவுக்கு வழங்கி அவனை அப்பகுதியின் மன்னனாக்கினானென்றும் மான்மியம் கூறுகிறது. ஆலயத் தில் எழுந்தருளியிருந்த வேற்பெருமானின் அருளால் புவனேயகயபாகுவுக்கும் தம்பதிநல்லாளுக்கும் பிறந்த மகன் தந்தைக்குப் பின் மனுநேயகயபாகு என்னும் பெயர்பூண்டு மன்னனான் என்றும் மான்மியம் கூறுகிறது.

மனுநேயகயபாகு என்னும் மன்னன் திருக்கோவிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மித்து வடதிசையிலிருந்த கிராமத்தில் குளம் ஒன்றினை அமைத்து அதற்குத் தனது தாயாரின் நினைவாக அவரின் பெயரால் "தம்பதிவில்" எனப் பெயரிட்டானென்றும் மான்மியம் கூறுகிறது.

'வில்' என்னும் சொல் தூய தமிழ்ச் சொல்லாகும். வில் போன்ற வளைவான வடிவத்தில் அமைந்த அல்லது அமைக்கப்பட்ட நீர் தேங்கி நிற்கும் குளத்தினை 'வில்' என்னும் பெயரால் அழைக்கப்படுதல் மரபாகும். குளத்தின் பெயர், சூழ உள்ள பிரதேசத்தின் பெயராதலும் புதிய செய்தியல்ல. 'தம்பதிவில்' என்னும் பெயர் காலப்போக்கில் 'தம்பிலுவில்' என்று மருவி வழங்கப்படலாயிற்று.

எருவில், ஒலிவில், கோளாவில், பொத்துவில் முதலிய ஊர்கள் மட்டக்களப்பு மாநாட்டில் காணப் படுவதும் அப்பெயர்களின் ஈற்றில் இணைந்திருக்கும் 'வில்' என்னும் சொல் குளத்தினைச் சுட்டி நிற்பதும் ஈண்டு அறிந்து கொள்ளுதற்குரியது. அத்தோடு யாழ்ப்பாணத் தமிழகத்தில் இணுவில், மட்டுவில், நுணாவில், கொக்கு வில், கோண்டாவில், மிருசுவில் முதலாம் பல ஊர்களின் இறுதியில் இணைந்துள்ள 'வில்' என்னும் சொல் குளங்களைக் குறித்து நிற்பதும் கருத்திற் கொள்ளத் தக்கதே.

எனது கிராமத்திலுள்ள கண்ணகை அம்மன் கோவில் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. இக் கோவிலுக்கு முதலாம் விஜயபாகு மன்னன் மானியம் வழங்கியமைக்கு கல்வெட்டுச் சாசனம் சான்று பகருகிறது.

கண்ணகை அம்மன் வழிபாடானது கண்டியில் இருந்து பண்டைய காட்டு வழியூடாக வீரமுனைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து காரைதீவுக்கும் பின்னர் தம்பிலுவிலுக்கும் கொண்டு வரப்பட்டதாக நம்பப்படுகிறது. இதன் பின்னரே மட்டக்களப்பு மாநாட்டின் வடபகுதிக்குக் கொண்டு போகப்பட்டதாகவும் ஏற்கப்படுகிறது.

எனது கிராமம் நாட்டுக்கூத்து, வசந்தன்கூத்து, நாட்டுப்பாடல், கொம்பு விளையாட்டு, கும்மி, குரவை, கரகம் முதலிய கலைவளம் செறிந்து விளங்கி வருகிறது. அம்மன் கோவில் முற்றத்தில் அமைக்கப்பட்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்துக்களரிகள் வரலாற்றுச் சிறப்புக் கொண்டவை.

கண்ணகை அம்மன்மீது "தம்பிலுவில் பிராமணப் பெடியன்" என அழைக்கப்பட்ட கண்ணப்பன் என்பவராற் பாடப்பட்ட மழைக்காவியம் அறிஞர்களாற் பாராட்டப்பட்ட பெருமைக்குரியது. அறுசீரடியாலமைந்த 15 ஆசிரிய விருத்தங்களைக் கொண்ட மேற்படி பிரபந்தமானது உடுக்கை அடித்துப் படித்தற்குரியது.

தம்பிலுவில் கணபதி ஐயர் முதலியோராற் பாடப் பட்ட வசந்தன் பாடல்களும் எழுதப்பட்ட நாட்டுக் கூத்து களும் ஏடுகளிற் பொறிக்கப்பட்டுள்ளன. மொட்டை வேலாப் போடியார் என்பவரால் ஆக்கப்பட்ட "தம்பிலுவிற் பள்ளு" என்னும் படைப்பும் சிறப்புக்குரியதாகப் போற்றப்படுகிறது.

19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலத்திற் பிறந்து 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எமது கிராமத்தின் பெரியார்கள் பலர் குறிப்பிடத்தக்க தமிழ்ப் பணியாற்றிச் சென்றுள்ளனர். அவர்களுள் மூவரின் பணிகளைப் பதச் சோறாகக் காட்டுதும்:

மூத்ததம்பி என்னும் இளமைப் பெயரைக் கொண்ட வரும் பிற்காலத்தில் உவில்லியம்பிள்ளை என அழைக்கப் பட்டவருமான பெரியார் ஆங்கிலேயரான கிறீன் என்பாரின் தென்னந் தோட்டத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றியதன் பெறுபேறாக ஆங்கில மொழியிலும் பாண்டித்தியம் பெற்றுக் கொண்டார். இதனால் ஆங்கில மொழி நாடகங்களைத் தழுவி, "இந்திராபுரி இரகசியம்", "மஞ்சட் பூதம்" அல்லது "இழந்த செல்வம்" ஆகிய இரண்டு நாடகங்களைப் படைத்திடும் ஆற்றல் அவருக்குக் கிடைத்தது. அவ்வாறே ஆங்கிலமுறை தழுவிய "சுந்தர விலாசம்", "மதுரை வீரன்" என்னும் சிறு நாடகங்களையும் அவர் படைத்துள்ளார்.

"கண்டிராசன் சரிதை" என்னும் வடமோடி நாடகம், "பவளேந்திரன்" என்னும் தென்மோடி நாடகம், விலாச மெட்டில் அமைந்த, "புவனேந்திரன் விலாசம்", வட மோடியில் அமைந்த "நச்சுப் பொய்கைச் சருக்கம்" என்பன உவில்லியம்பிள்ளை அவர்களுக்குப் புகழ் தந்த நாடகங்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவில்லியம்பிள்ளை அவர்களின் காலத்தவரும் எனது தந்தையாருமான கனகரெத்தினம் உபாத்தியாயர் அவர்கள் கிறிஸ்தவ சமயத்தினராயிருந்தமையால் கிறிஸ்தவ சமயப் பாடல்கள் பலவற்றை ஆக்கியுளளார். இவரால் எழுதப்பட்ட, "இரட்சணிய அம்மானை" என்னும் பிரபந்த நூல் அறிஞர்கள் பலராற் பாராட்டப்பட்டுள்ளது. "புத்தம் புதியதோர் தலையங்கம் பூண்டு முதன் முதலாக இத்தகையதோர் நூல் எமது நாட்டில் வெளிவருவது சாலச் சிறப்பும் கிறிஸ்தவ சாகியத்திற்கு ஓர் தனிப் பெருமையு மாகும்" என்று தேசத்தொண்டன் பத்திராதிபராக விளங்கிய பண்டிதர் ஜே.எஸ். ஆழ்வாப்பிள்ளை அவர்கள் குறிப்பிட் டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முறையாகத் தமிழ் கற்றுத் தேர்ந்து ஆங்கு ஆசிரியராகப் பணியாற்றிய பண்டிதர் குஞ்சித்தம்பி அவர்கள் பிறந்த ஊருக்கு மட்டுமல்ல மட்டக்களப்பு மாநாட்டுக்கே புகழ்தேடித் தந்துள்ளார். இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழிலும் புலமை பெற்று விளங்கிய குஞ்சித்தம்பி அவர்கள் நடிப்புக் கலையிலும் ஆற்றல் பெற்றிருந்தார். "சிறுத்தொண்டர் சரிதம்", "அலாவுதீன்" என்ற அராபியக்கதை என்பன இப்பெரியாரது பாடல், வசனம் ஆகியவற்றுடன் நாடகங் களாக ஆக்கப்பட்டன. திருக்கோவில் சிவசுப்பிரமணியக் கடவுள்மீது கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் பதின் மூன்றினைக்கொண்ட "வருக்கமாலை" என்னும் பிரபந்தத் தினை அவர் ஆக்கியுள்ளார். தம்பிலுவில் கண்ணகை அம்மன் பேரில் அவர் படைத்துள்ள பஜனாமிர்தம் என்னும் நூலானது சிறந்ததோர் இசைப்பாடல் நூலாகப் போற்றப்படுகிறது. அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றியுள்ள இப்பெரியார் இளம் வயதிலேயே இயற்கை எய்தியமைக்கு எம்மக்களின் தவக்குறைவே காரணம் என்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பெற்றோர்



"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", "தாயிற் சிறந்ததொரு கோவிலுமில்லை", "மாதா, பிதா, குரு - தெய்வம்" முதலிய கூற்றுகள் யாவும் பட்டறிவின் விளைவு களாம் சத்தியங்கள். இவை மனம், வாக்கு, காயங்களி னால் பேணிக்காக்கப்பட வேண்டியவை.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாள்கள் நீடித்திருப்பதற்கும் நீ நன்றாயிருப்பதற்கும் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக"

என கிறிஸ்தவ வேதாகமத்தின் உபாகமம் என்னும் நூலின் 5ஆம் அதிகாரம் 16ஆம் வசனத்திற் கூறப்பட்டிருப் பது இங்கு நோக்குதற்குரியது.

என் முன்னறி தெய்வங்களாகிய தகப்பனையும் தாயையும் கனம் பண்ணி வாழ்ந்தமையே - வாழ்கின்ற மையே இந்த வாழ்வுக்கான அடித்தளமென மனத்தாழ்மை யுடன் கூறிவைக்க விழைகிறேன்.

## ஈன்று புறந்தந்த தாய்

வயிரமுத்து எஸ்தர் சின்னாச்சி என்பது எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் பெயர். 05.01.1899இல் பிறந்த எனது தாயார் தமது பதினைந்தாவது வயதிலேயே எனது தந்தையாரைத் திருமணஞ் செய்து கொண்டார். மூத்தபிள்ளை அக்கா; தொடர்ந்து மூன்று ஆண் பிள்ளைகள்; நான் ஐந்தாவது பிள்ளை. எனக்குப்பின் பிறந்த தங்கை இளம் வயதிலேயே இறைவனால் எடுத்துக் கொள்ளப்பட நான் கடைக் குட்டியாகி அம்மாவின் செல்லமாக வளர்க்கப்பட்டேன். அம்மாவுக்கு என்னிலும் எனக்கு அம்மாவிலும் கொள்ளை ஆசை.

தாய் ஒருத்தியின் கடமையினையிட்டுக் கூறிப் போந்த பொன்முடியார் என்னும் புலவரின்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" என்னும் கூற்றுக்குப் பிள்ளையைப் பெற்று, வளர்த்து வெளியே அனுப்புதல் தாய் ஒருத்தியின் தலையாய முதற்கடமை-யென விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தாயின் வயிற்றில் பிள்ளை உருவாகும் காலத்திலேயே அதன் கற்றல் முயற்சி தொடங்கி விடுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

கர்ப்பம் தரித்துள்ள பெண்கள் சமய நூல்களுடன் அறிவுசார்ந்த நூல்களையும் படிப்பதோடு இனிய பாடல்களுக்கும் நற்சிந்தனை உரைகளுக்கும் செவி கொடுத்தல் அவசியமென நீண்ட நெடுங்காலமிருந்தே அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கருவிலே திரு அமையப் பெறுதல் இந்த ஆலோசனை களின் விளைவேயாம்.

கிறிஸ்து பெருமானில் ஆழமான பக்தி வைராக்கியம் கொண்டிருந்த என் தாயார், வேத வாசிப்பிலும் பிரார்த் தனையிலும் மிகுந்த ஈடுபாடுள்ளவராகத் திகழ்ந்தார். நாங்கள் எதைத் தவறினாலும் அதிகாலையிலும் மாலை யிலும் இடம் பெறும் குடும்ப வழிபாட்டினை மறவாதிருக்கக் கற்றுக்கொண்டோம்.

குழந்தைப் பருவத்திலே அம்மா சொல்லித்தந்த கதைகளும் கற்றுத்தந்த பாட்டுகளும் பிற்காலத்தில் எனக்குப் பயன்தந்தமையை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் உயர் கல்வி கற்ற காலத்தில் விடுமுறைக்கு வீட்டுக்கு வரும் போதெல்லாம் என் படிப்பு வேளைகளில் அம்மா காட்டிய பரிவும் பாசமும் நினைக்குந் தோறும் நெஞ்சை நெகிழச் செய்கின்றன. இரவு வேளைகளில் மேசை விளக்கு வெளிச்சத்திலே நான் படித்துக் கொண்டிருக்கும்போது நுளம்புக்கடியிலிருந்து என்னைப் பாதுகாக்கும் நோக்குடன் அம்மா வைக்கும் புகைச் சட்டியை நினைத்துப் பார்க்கிறேன். புகைச் சட்டிக்குள் வேப்பிலையும் போடுவதனால் உண்டாகும் வாசனை இதமாக இருக்கும். புகைமட்டும் போதாதென்ற நினைவில் தனது சேலையின் முன்றானையினால் விசிறிக்கொண்டே இருந்த அம்மாவின் அன்புக்கு ஈடும் எடுப்பும் உண்டா? பால் நினைந்தூட்டுபவளல்லவா தாய்! இறைவன் என் அம்மாவை எடுத்துக் கொண்ட நாள் வரையும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அம்மாவின் மடியில் தலை-வைத்துப் படுத்திருப்பேன்; அம்மா என் தலை மயிரைப் பாசத்தோடு தடவி விடுவார். கிடைத்தது அலாதியான ஓர் இன்பம்; நினைக்குந்தோறும் மனம் விம்மிக் கனக்கிறது. என் நிலையைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது; அனுபவித்துத்தான் அறிய முடியும்.

27.10.1970இல் ஆண்டவரால் எடுத்துக் கொள்ளப் பட்ட எனது தாயாரின் இனிய நினைவுகளில் நிறைந்து வாழ்கிறேன்.

## சான்றோனாக்கிய தந்தை

அருணாசலம் பவுல் கனகரெத்தினம் என்பது எனது தந்தையாரின் பெயர். 10.11.1891ஆம் திகதியன்று பிறந்த தந்தையார் ஆரம்ப காலத்திற் சைவ சமயத்தவராக இருந்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் கிறிஸ்தவ சமயப் போதகரும் 'தீபம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியருமான வேதநாயகம் போதகர் அவர்களின் தீவிர மத போதனையின் விளைவாக எனது தந்தையார் கிறிஸ்தவ சமயத்தைத் தமது வாலிபப் பராயத்திற் தழுவிக் கொண்டார். மட்டக்களப்புக் கிராமங்களிலே கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளை நிறுவும் பணியில் ஈடுபட்டு வந்த வேதநாயகம் போதகர் எங்கள் கிராமத்திலும் ஒரு பாடசாலையினை ஆரம்பிக்கலானார். தமிழறிவும் தமிழ்ப் புலமையும் வாய்க்கப் பெற்றிருந்த எனது தந்தையார் மேற்படி பாடசாலையின் உதவி ஆசிரியர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார்.

தம்பிலுவிற் பிரதேசத்துக்கு கிராமச்சசங்கம் ஒன்றினை அமைத்துக் கொடுக்க விரும்பிய ஆட்சியாளர்கள், "அக்கரைப்பற்றுத் தென்பகுதிக் கிராமச் சங்கம்" என்னும் பெயரில் அதனை நிறுவி அதற்குரிய தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரைப் பொதுக்கூட்டம் ஒன்றினைக் கூட்டித் தெரிவு செய்தனர். மட்டக்களப்பு அரசாங்க அதிபரால் கூட்டப்பட்ட முதலாவது கூட்டத்திலேயே எனது தகப்பனார் தலைவராகவும் வேறு சிலர் உறுப்பினர்களாக வும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து மூன்று தடவைகள் எனது தகப்பனார் கிராமச்சசங்கத் தவைராகத் தெரிவு செய்யப்பட்ட பெருமையினைப் பெற்றுக் கொண்டார்.

எனது தந்தையார் இரண்டாம் உலக யுத்தக் காலத்தில் 'ஏ.ஆர்.பி' என்ற அமைப்பின் முதன்மை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். விமானத் தாக்குதல்களில் இருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக 'V' வடிவக் குழிகளும் 'W' வடிவக் குழிகளும் வெட்டப்படுதல், காதுகளை அடைத்துக் கொள்வதற்கான பஞ்சு, பற்களின் இடையில் வைப்பதற்கான பென்சில் ஆகியவற்றினை வழங்குதல், உணவுப் பொருள்களை கட்டுப்பாட்டு அடிப்படையில் வழங்குதல், இரவு வேளைகளில் வெளி யிற் தெரியும் படியாக விளக்குகளையோ வெளிச்சங்களை யோ வைக்காதபடி பார்த்துக் கொள்ளுதல் முதலிய பல கடமைகளை எனது தந்தையார் மேற்கொண்டார்.

கிராம முன்னேற்றச் சங்கம், கூட்டுறவுச் சங்கம், மக்கள் மகாசபை முதலிய பல அமைப்புக்களூடாகவும் எனது தந்தையார் பொதுப்பணி ஆற்றியுள்ளார்.

கிறிஸ்தவ சமயப் பாடல்கள் பலவற்றை ஆக்கி யுள்ள எனது தந்தையார், "இரட்சணிய அம்மானை" என்னும் பிரபந்த நூலினையும் எழுதி வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954இல் ளியிடப்பட்ட மேற்படி நூலுக்கு இலக்கிய கலாநிதி, புலவர்மணி, பண்டிதமணி ஏ. பெரியதம்பிப் பிள்ளை அவர்கள் எழுதிய அணிந்துரையின் ஒரு பந்தியினைக் கீழே தருகிறோம்.

"ஆசிரியர் திரு.அ.ப. கனகரெத்தினம் அவர்கள் மட்டக்களப்பில் பக்திப் பாடல்களுக்கு இருப்பிடமான பழம் பதியாகிய தம்பிலுவில் கிராமத்தைச் சேர்ந்தவர்; நெடுங் காலம் தமிழாசிரியத் தொழிலில் ஈடுபட்டவர்; உள்ளூர்க் கிறிஸ்தவ வேத உபதேசிகராகச் சமயத் தொண்டும் புரிபவர்; கிராமச் சங்கம் முதலிய பொதுச் சபைகளிற் தலைமை தாங்கி உழைத்துவரும் சேவையாளர்; தமிழ்ச் செய்யுள்களில் மிகவும் மனம் பதிந்தவர். இத்தகைய இயல்புகளையுடைய ஆசிரியரது அம்மானைநடை இயற் கையான அமைப்பும் இனிமையும் எளிமையும் தெளிவும் உடையதாய்ப் படிப்போருள்ளத்தை இடங்கள் தோறும் கொள்ளை கொள்ளும் உணர்ச்சியும் பொருந்தி உள்ளது"

அப்பாவின் செல்வாக்கு என்னுள் செறிந்து நின்றது. தமிழ்ப்பணியிலும் பொதுப் பணியிலும் ஈடுபட வழி காட்டியவர் என் தந்தையாரே. அப்பா என்னிலே மிகுந்த நம்பிக்கையோடிணைந்த எதிர்பார்ப்பை வைத்திருந்தார். அப்பாவின் விருப்பப்படியே நான் ஆசிரியர்த் தொழிலை மேற்கொண்டேன். அப்பா மிகவும் கண்டிப்பானவர். தவறு களுக்காக நான் பல தடவைகள் தண்டிக்கப்பட்டிருக் கிறேன். அப்பாவிடமிருந்து நான் கற்றுக்கொண்ட காரியங் கள் மிகப்பல. அவை யாவும் என்னை வளப்படுத்தி உள்ளன. அப்பா சோம்பியிருந்ததை நான் கண்டதே இல்லை. எப்போதும் உற்சாகமாகவே இருந்தார். கடைசி மூச்சு இருக்கும்வரை அவர் உழைத்துக் கொண்டு இருந் தார். ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து மட்டக்களப்பு அமிர்தகழியிலிருக்கும் மெதடிஸ்த சபையின் கௌரவ ஊழியராக அவர் பணியாற்றி வந்தார்.

காலையில் என்னுடன் உரையாடிக்கொண்டிருந் தார். நான் பாடசாலைக்குப் போய்விட்டேன். மாலையில் அப்பா இறைவனடி சேர்ந்து விட்டார். 27.06.1960 அப்பா இறைவனடி சேர்ந்த திகதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறந்தோர்



மேரி செல்லம்மா அவர்களே எங்கள் குடும்பத்தின் மூத்த பிள்ளை. எனது அக்கா அவர். இவர் கல்முனையில் இருந்த மெதடிஸ்த சங்க பெண்கள் பாடசாலையிற் கற்று சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரத் தேர்வில் தேர்ச்சி அடைந்தார். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் உடுவில் பெண்கள் ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்து பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளியேறினார். ஹரியற் அக்கா (பிற்காலத்தில் திருமதி ஹரியற் தம்பிராசா) அவர்களே எங்கள் கிராமத்தின் முதலாவது பயிற்றப்பட்ட ஆசிரியையாவார். இரண்டாவது இடம் எங்கள் அக்காவுக்குரியது.

பயிற்சியை முடித்து வந்த எங்கள் அக்கா ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த தம்பிலுவில் மெதடிஸ்த தமிழ்க் கலவன் பாடசாலையின் உதவி ஆசிரியையாகச் சேர்க்கப்பட்டார். இதே பாடசாலையிலேயே எனது தந்தை யாரும் கடமையாற்றிக் கொண்டிருந்தாரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அப்பாவிடம் கீழ்ப்பிரிவிற் பாடங் கேட்ட எனக்கு மேற்பிரிவின் ஆசிரியையாக அக்கா வாய்த்தார். நினைவுகள் இன்றும் பசுமையாகவே இருக்கின்றன.

மெடிஸ்த சபையானது எங்கள் கிராமத்திலே பெண்களுக்கென்று தனியாக ஒரு பாடசாலையை ஆரம்பித்ததைத் தொடர்ந்து நாங்கள் படித்துக் கொண்டிருந்த பாடசாலை ஆண்களுக்குரிய பாடசாலையாக மாறியது. அப்பாவும் அக்காவும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பெண்கள் பாடசாலைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டனர். பெண்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பதவி வகித்தவர் எதிர்பாராத வகையில் இறைவனடி சேர்ந்ததால் அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் தலைமை ஆசிரியராக அக்கா நியமிக்கப் பட்டார். இதனால் எங்கள் கிராமத்தின் முதற் தலைமை ஆசிரியை என்னும் சிறப்பு அக்காவுக்குக் கிடைக்க லாயிற்று.

வாழைச்சேனைப் பகுதியைச் சேர்ந்த கிரான் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவரும் தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவருமான திரு. கே.ஈ. சௌந்தரராஜா அவர்களை எங்கள் அக்கா திருமணஞ் செய்து கொண்டதைத் தொடர்ந்து திரு. சௌந்தரராஜா அவர்கள் தம்பிலுவில் மெதடிஸ்த சங்க ஆண்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். அக்கா பெண்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் அத்தான் ஆண்கள் பாடசாலையின் தலைமை ஆசிரியராகவும் விளங்கியமை பெருஞ் சிறப்பாகவே கருதப்பட்டது.

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் அக்காவும் அத்தானும் இடமாற்றஞ் செய்யப்பட்டு அரசாங்க பாடசாலைகளிற் பணியாற்ற வேண்டியவர்களானார்கள். அறுபது வயது நிறைவுற்ற பின்னரே அவர்களிருவரும் ஓய்வு பெற்றனர்.

அக்காவுக்கு ஆண்கள் இருவர்; பெண்கள் இருவர் எனப் பிள்ளைகள் நால்வர். அவர்களுள் ஆண்கள் இருவரும் குறிப்பிடத் தக்கவர்கள். மூத்த மகன் கருணாகரன் சௌந்தரராஜா கணிதப்பட்டதாரி. கணித பாட முதன்மை ஆசிரியராகவும் இலங்கை அரசின் கல்வித் திணைக்கள பாடநூல் உறுப்பினராகவும் பணியாற்றிய கருணாகரன் அவர்கள் மிகச் சிறந்த ஓவியராகவும் இசைக் கலைஞராகவும் விளங்கினார். மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்களின் கவிதைப் படைப்புகளில் வரும் ஓவியங்களை "சௌ" எனும் பெயரில் வரைந்த பெருமை கருணா கரனுக்கு உண்டு. கருணாகரனால் வரையப்பட்ட ஓவியங் கள் மிகப்பல. அமெரிக்காவில் கிறிஸ்தவ சமயப் போதக ராகப் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தைத் தழுவிக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

அக்காவின் இளைய மகனான குணசீலன் சௌந்தரராஜா பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர், கலைப்பட்டதாரி. மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயம் (மகாஜன கல்லூரி), கோட்டைமுனை இந்துக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகக் கடமையாற்றிய ஜி. சௌந்தரராஜா என அறியப்பட்ட குணசீலன் சிறந்த கவிஞராகவும் நாடக ஆசிரியராகவும் விளங்குகிறார். சிறிது காலம் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராகவும் கடமையாற்றியுள்ள குணசீலன் தற்போது ஓய்வுபெற்று வீட்டிலிருக்கிறார்.

28.09.1914 இல் பிறந்த எனது அக்கா தனது கணவர் இறந்த பின்னர் நீண்டகாலம் சுகபலத்துடன் வாழ்ந்து பிள்ளைகளின் பிள்ளைகளையும் அவர்களின் பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்து 30.06.2006இல் தமது 92ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.




எனது மூத்த அண்ணரின் பெயர் ஜோன் விநாயகமூர்த்தி ஆகும். அக்காவின் பின்னர் நீண்டகாலம் பிள்ளை இல்லாதிருந்த காரணத்தினால் அக்காலத்தில் தீவிர சைவ சமயத்தினராயிருந்த எங்கள் பெற்றோர் நோன்பிருந்து பெற்றுக் கொண்ட பிள்ளையே எங்களின் மூத்த அண்ணர். இக்காரணம் பற்றியே அவருக்கு விநாயகமூர்த்தி எனப் பெயரிடப்பட்டது.

15.04.1921இல் பிறந்த எனது தமையனார் மட்டக்களப்பு அரசடி வித்தியாலயத்திற் கற்று சிரேட்ட தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்தார். ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்திட வாய்ப்பிருந்த போதிலும் அதற்குரிய பணத்தினை மாதாமாதம் செலுத்திடும் ஒழுங்கிற் சிக்கல் ஏற்பட்டது. எங்களின் தமையன் முறையினரான வடிவேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவருக்கு ஆசிரியர் பயிற்சிக்குரிய பணத்தைக் கட்டுவதாக வாக்குறுதி அளித்திருந்தமையே அச்சிக்கலா கும். இச்சிக்கல் எனது தமையனாருக்கு சினத்தை ஏற்படுத்தியதால் அவர் கோபித்துக் கொண்டு கொழும்பு சென்று விட்டார். எங்களுக்குத் தெரிந்த ஒருவரின் உதவியினால் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் அவர் சேர்ந்து கொண்டார். கரபந்தாட்டம், குண்டெறிதல், பரிதி வட்டம் வீசுதல் முதலியவற்றில் மிகுந்த திறமை பெற்றிருந்த காரணத்தினால் பயிற்சி நிறைவடைந்ததும் கொழும்பு மாநகரிலேயே அவருக்கு வேலை கிடைத்தது. அவர் பொலிஸ்காரனாக இருப்பதை விரும்பாத எங்கள் பெற்றோர் கொழும்பு சென்று பாராளுமன்ற உறுப்பினராக விருந்த திரு. வி. நல்லையா அவர்களின் உதவியுடன் தமையனாரை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்த்து விட்டனர். ஆசிரியராக, பாடசாலை அதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற எனது மூத்த தமையனார் தமது அறுபத்து நாலாவது வயதிலே 03.06.1985இல் இறைவனால் எடுத்துக் கொள்ளப்பட்டார்.



எனது இரண்டாவது அண்ணரின் பெயர் சாமுவேல் வேதநாயகம் ஆகும். எங்கள் பெற்றோர் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய பின்னர் இவர் பிறந்த காரணத்தால் தாங்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிட வழிவகுத்த வேதநாயகம் போதகரை நினைவுகூரும் வகையில் அவரின் பெயரை அண்ணருக்குச் சூட்டியதாகக் கூறப்பட்டது.

வேதநாயகம் அண்ணர் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்வதையே தமது பணியாக விரும்பி ஏற்றுக் கொண்டு அதற்குரிய பயிற்சிகளை இந்தியாவிலே பெற்றதன் பின்னர் இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் ஊழியஞ் செய்தார். இந்தியாவிலே பயிற்சியினை மேற்கொண்டிருந்தவேளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமுறை காலத்திலே இலங்கைக்கு வராமல் தென் இந்திய சுற்றுப் பிரயாணம் ஒன்றினை மேற்கொண்டார். சுற்றுப் பிரயாணம் முடிவடைந்தபின், "எனது தென்னிந்திய சுற்றுப் பிரயாண அனுபவம்" என்னும் நூலினை எழுதி வெளியிட்டார். புவியியல், வரலாறு, சமய, சமூக, பண்பாட்டுத் தகவல்கள் பலவற்றைக் கொண்டிருந்த அந்நூல் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டது. அண்ணரின் ஒரே மகனான சிறிபால்ராஜ தமது ஆசிரியர் பணியுடன் இறைபணியையும் ஆற்றிக் கொண்டிருக்கிறார். 05.08.1924இல் பிறந்த வேதநாயகம் அண்ணர் தமது ஐம்பத்தெட்டாவது வயதில் 16.09.1982இல் இறைவனால் எடுத்துக் கொள்ளப்பட்டார்.

எனது மூன்றாவதும் நேர் மூத்தவருமான அண்ணரின் பெயர் பவுல் செபராசா. எங்களுக்குள் இரண்டு வயது வித்தியாசம் இருந்த போதிலும் நாங்கள் நண்பர்கள் போலவே பழகிவந்தோம். நான் அவரை 'அண்ணா' என்று அழைக்கவில்லை; 'அது' என்றே அழைத்து வந்தேன். ஏன் அவ்வாறு அஃறிணையில் அழைத்தேன் என்பதற்கு இன்றுவரை காரணம் அறியேன்.



நாங்களிருவரும் ஆங்கிலமொழிமூலக் கல்வியைப் பெறுவதற்காக மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரிக்கு அனுப்பப்பட்டோம். இரண்டாவது உலக யுத்தம் நடந்த காலம். விடுதியிலே கொடுக்கப்பட்ட உணவு எனக்குப் போதாதிருந்தது. அண்ணனால் சமாளிக்க முடிந்தது. சமாளிக்க முடியாத நான் ஊருக்கு வந்து விட்டேன். அண்ணன் தொடர்ந்து படித்தார். அவர் சிரேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் தேறி சிறிது காலம் ஆங்கில உதவி ஆசிரியராகப் பணியாற்றியபின் கூட்டுறவுப் பரிசோதகர் பயிற்சிபெற்று கூட்டுறவுப் பரிசோத கராகப் பணியாற்றலானார்.

கணிதத்தில் மிகுந்த திறமையினைப் பெற்றிருந்த அண்ணர், கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கறிக்கை களைப் பரிசீலனை செய்யும் பிரிவில் இணைக்கப்பட்டார். இதன்மூலம் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்களுடனான நெருங்கிய தொடர்பு அவருக்கு ஏற்பட்டு மது அருந்தும் பழக்கத்துக்கும் அடிமையாகத் தொடங்கினார். குடியை அவர் விட்டுவிட விரும்பினாலும் குடி அவரை விட்டுவிட ஆயத்தமாயிராத நிலை ஏற்பட்டுவிட்டது. மித மிஞ்சின குடியினால் உயரத்திலிருந்து விழுந்து முள்ளந் தண்டெலும்பு முறிந்து நீண்ட காலம் தங்கியிருந்து சிகிச்சை பெற்று மீண்ட போதிலும் குடியைக் கெடுக்கும் குடியை அவரால் விடவே முடியவில்லை. இதனால் அவர் இழந்தவை மிகப்பல. தேடிவந்த பதவி உயர்வுகள் யாவும் கைநழுவிப் போய்விட்டன. குடும்ப மரியாதை வெகுவாகப் பாதிக்கப்பட்டது; உடல்நலம் சீர்செய்ய முடியாத இழிநிலையை அடைந்தது. பிள்ளைகளுடைய நல்வாழ்வும் சோதனைக்குள்ளானது. நீண்ட காலமாகத் தலைமை அலுவலகப் பரிசோதகர் என்ற நிலையில் நீடித்து வந்தவருக்கு ஓய்வு பெறும் காலம் நெருங்கிவந்த போது பதில் ஆணையாளர் என்னும் பதவி உயர்வினைத் திணைக்களம் வழங்கியது. அப்பதவி உயர்வுடன் அவர் ஓய்வு பெற்றார்.

இளமைப் பருவத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த எனது அண்ணன் எல்லாச் சிறப்புகளையும் தொலைத்து விட்டு சீரழிந்த நிலையில் அவரின் முதுமைப் பருவத்தைக் கழிக்க நேர்ந்தது. யானை தன் தலையில் தானே மண் அள்ளிப்போட்ட கதையைக் கேட்டிருக்கிறேன்; கதையின் பொருளை அண்ணனின் வாழ்வு தெளிவாக உணரச் செய்தது.

21.09.1928இல் பிறந்த அண்ணன் 04.09.2006இல் தனது ஓட்டத்தை முடித்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தறிவித்த இறைவர்கள்

எழுத்தென்று கூறிடும்போது அஃது எண்ணையும் உளப்படுத்தி நிற்பது போதரும். இவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று பிரிபடாவண்ணம் பின்னிப் பிணைந்தவை; ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதவை. அவை இரண்டும் இரண்டு கண்கள்.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என வள்ளுவனாரும்,
"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று ஔவையாரும் கூறும் விளக்கம் மனங்கொள்ளத் தக்கது.

எண்ணையும் எழுத்தையும் ஐயம் திரிபற ஓதி உணர்ந்த ஒருவனாலேயே அவற்றை அறிவிக்க முடியும். ஆகவே கற்றல், கற்பித்தல் என்பவை ஒரு தொடர் முயற்சி என்பதையும் அஃது ஒரு சந்ததியினரிலிருந்து அடுத்த சந்ததிக்குக் கொடுக்கப்பட வேண்டிய செல்வம் என்பதையும் நம்மால் உணர முடிகிறதல்லவா?

"எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் -மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதல்நூற் பொருளுணர்ந்து
கட்டறுத்த வீடு பெறும்"

என்று திருக்குறளின் உரையாசிரியரான பரிமேலழகரவர்கள் உரைவிளக்கத்துக்கென எடுத்தாண்ட உதாரணச் செய்யுளிலும் எழுத்தை அறிவதன்மூலம் விளையும் நன்மைகளையிட்டு அறிய முடிகிறது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆங்கில மொழிமூலக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக எனக்கு நேர்மூத்த அண்ணருடன் அனுப்பப்பட்டு உணவுப் பிரச்சினையால் திரும்பவும் ஊருக்குத் திரும்பி வந்த எனது செயலையிட்டு முன்னர் கூறியிருந்தேன். எட்டாம் வகுப்பிற் சேர்க்கப்பட்ட எனக்கு பாடசாலையின் தலைமை ஆசிரியரான திரு.வி. பரநிருபசிங்கம் அவர்களே தமிழ் மொழி கற்பிக்கும் பாட ஆசிரியராகவும் இருந்தார். இலக்கிய இலக்கண அறிவு நிறைவாகப் பெற்றிருந்த அவர் நன்னூலைக் கற்பிக்கத் தொடங்கினார். நன்னூற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூத்திரங்களை மனப்பாடம் செய்வித்தார். இலக்கண அறிவுக்கான அடித்தளத்தினை இட்ட பெருமை அவரையே சாரும். அப்பாடசாலையிற் கற்று தமிழ் மொழி மூலமான சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையிற் தேர்வடைந்தேன்.

ஆங்கிலமொழி மூலக் கல்வியைத் தொடர வேண்டுமென்னும் ஆசை ஏற்பட்டதும் அம்மாவின் மூலம் அப்பாவை அணுகினேன். திரும்பவும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிற் சேர்க்கப்பட்டேன். சற்று வயது கூடியவனாக இருந்தபடியால் காரியங்களை விளங்கிக் கொள்ளுதல் இலகுவாயிருந்தது. ஏழாம் வகுப்பிற் சேர்க்கப்பட்ட என்னால் வகுப்பேற்றப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற முடிந்தது. ஆங்கில மொழிமூலக் கல்வியாக இருந்தபோதிலும் ஊக்கமும் விடா முயற்சியுமே எனக்குத் துணைசெய்தன. எட்டாம் வகுப்புக்கல்வி எனக்குச் சுவையாயிருந்தது. ஆங்கில மொழியை அதிபர் திரு. எஸ்.வி.ஓ.சோமநாதர் அவர்களும் ஆங்கில இலக்கியத்தை திரு. பிறின்ஸ் காசிநாதர் அவர்களும் தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றை பண்டிதர் எஸ். சதாசிவ ஐயர் அவர்களும் போதித்தார்கள். இவர்கள் மூவரையும் எழுத்தறிவித்த இறைவர்களாக இன்றும் போற்றுகிறேன்.

திரு. சோமநாதர் அவர்கள், “காட்சிக் கெளியர் கடுஞ் சொல்லர் அல்லர்.” ஆங்கில மொழிப் பாடம் எங்களுக்குச் சுவை விருந்து. அவர் ஆசிரியராகவே பிறந்தவர்; அவர் கையாண்டமுறை மாணாக்கரை வெகுவாகக் கவர்ந்தது. மரபுச் சொற்களைப் பற்றிய பாடமாக இருந்தால் நாங்கள் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் அவருடைய கற்பித்தல்முறை அமைந்திருக்கும். அடுத்த நாள் பாடவேளையிலே மரபுச் சொற்றொடர்களைப் பயன்படுத்தி நாங்கள் உரையாட வேண்டும். அவர் கற்பித்துத்தந்த ஒரு பாடல் இந்த வயதிலும் என்நினைவில் நிலைத்து நிற்பதொன்றே அப்பெரியாரின் சிறப்பை விளக்கும் சான்றாகும்.

“ When you have work to do
Do it with a will
Those who reach the top



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First must climb the hill
Standing at the foot and
Gazing at the sky
How can you get up
If you never try
Try and try you will
Succeed at last" இதுவே அந்தப் பாடல்.

விடுதலை நாள்களில் அவருக்குக் கடிதம் எழுதும்படி கேட்டுக் கொள்ளுவார். எங்களின் கடிதங்களைப் பார்வை யிட்டு சிவப்புப் பேனாவினாற் பிழைகளை குறித்துக் காட்டியும் சரியான சொற்களை குறிப்பிட்டு எழுதியும் கடிதங்களை எங்களுக்கு அனுப்பி வைப்பார். நாங்கள் சரியாக எழுதி அனுப்ப வேண்டும். இவ்வாறு வகுப்பு மாணாக்கர் ஒவ்வொருவரிலும் தனித்தனியாக அக்கறை காட்டும் ஆசிரியர்களை எம்மால் பார்க்க முடியுமா? இவரைப் போன்று எழுத்தறிவிக்கும் ஆசிரியர்களை இறை வர்களாகக் கொள்ளுவது பொருத்தமான செயலன்றோ! திரு.எஸ்.வி.ஓ. அவர்களைப் போற்றுவோமாக.

திரு. பிறின்ஸ் காசிநாதர் அவர்களின் நாவிலே "ஆங்கிலவாணி" நடம் புரிகின்றாள். ஆங்கில மொழிப் பிரவாகம் மடைதிறந்த வெள்ளம்போல் பாய்ந்து கொண்டே இருக்கும். The poet's way, "This modern world" ஆகியவை எங்கள் வகுப்புக்குரிய ஆங்கில இலக்கிய பாட நூல்கள். அவருடைய கற்பித்தற் திறமையினால் நாங்கள் அனைவரும் ஈர்க்கப்பட்டு விடுவோம். ஆங்கில இலக்கி யத்தைச் சுவையுடன் கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரே. அவர் கற்றுத் தந்தவை இத்தனை ஆண்டுகள் கழிந்த போதிலும் இன்றுவரை சிலையில் எழுதப்பட்ட எழுத்தினைப் போன்று நின்று நிலவுவதே அவருடைய ஈடிணையற்ற கற்பித்தற் திறமைக்குத் தக்க சான்றாகும்.

பண்டிதர் சதாசிவ ஐயரவர்கள் தமிழ்ப் புலமை மிக்கவர். அவருடைய ஆழ்ந்த தமிழறிவு எங்களை எல்லாம் அவர்பால் ஈர்த்து நின்றது. நான் சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தமிழ் மொழி மூலம் தோற்றிச் சித்தியடைந்திருந்ததால் என்னிலே ஐயரவர்களுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனித்துவமான அன்பிருந்தது. தமிழ் மொழியினை ஐயம் திரிபறக் கற்றிட அவருடைய கற்பித்தல் வழிவகுத்துத் தந்தமையை நன்றியுடன் நினைவில் வைத்திருக்கிறேன்.

எங்கள் கல்லூரியில் ஆங்கிலமொழி மூலமான கல்வி போதிக்கப்பட்டு வந்ததால் பல்லின மாணாக்கர் ஒன்று சேர்ந்து கற்று வந்தோம். அவ்வாறே பல்லின ஆசிரியர்களும் கற்பித்து வந்தார்கள். எங்கள் வகுப்பிலே தமிழர், இஸ்லாமியர், சிங்களவர், பறங்கிக்காரர், கேரள தேசத்தார் எனப் பல்லின மாணாக்கர் சகோதர பாசத்துடன் கற்று வந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

எட்டாம் வகுப்பு இறுதியில் கனிட்ட தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெற்றது. எனக்கு எழுத்தறிவித்த இறைவர்களாம் ஆசிரியர்களின் ஆசியினால் மிகக் கூடிய திறமைச் சித்திகளுடன் முதலாம் பிரிவிற் சித்தியடைந் தேன். இவ்வாறு முதலாம் பிரிவிற் தேறியோர் ஒரு சிலரே என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1948இல் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சைக்கான முதலாம் ஆண்டு வகுப்பின் விஞ்ஞானப் பிரிவிலே கற்றுக் கொண்டிருந்த என்னால் அடுத்த வருடப் படிப்பைத் தொடர முடியாத ஒரு நிலை எனக்கு ஏற்பட்டது. எனது தகப்பனார் ஆசிரியர்த் தொழிலிலிருந்து ஓய்வு பெறவேண்டிய காலம் அண்மித்துக் கொண்டிருந்ததால் நான் நிரந்தரமான தொழிலுக்குரிய பயிற்சி ஒன்றினைப் பெறுவதன் அவசியம் உணரப்பட்டது. என் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த எனக்கு அவர் கூறிய ஆலோசனை ஏற்புடையதாகவே இருந்தது. “தந்தை சொல் மிக்க மந்திரமில்லை” என்ற அடித்தளத்தில் கட்டப்பட்ட வாழ்க்கை எங்களது சொத்தல்லவா? 1949இல் நடைபெற்ற ஆசிரியர் கலாசாலை புகுமுகத் தேர்வுக்குத் தோற்றி 1950 ஜனவரியில் யாழ். நல்லூரில் அமைந் திருந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்க்கப்பட்டேன்.

ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியிற் பயின்றது ஒரு கனவு போலிருக்கிறது. கற்றுக் கொண்டவையோ, பெற்றுக் கொண்டவையோ பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தவே இல்லை. பண்டத்தரிப்பு செல்லத்துரை ஆசிரியர், ஈச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்டை சச்சிதானந்தசிவம் முதலிய ஓரிருவரது நட்பினைப் பெற்றுக் கொண்டேன். பசுபதி, வெண்ணிலா ரகுநாதன், இராஜகோபால் முதலிய எழுத்தாளர்களுடன் பழக முடிந்தது; அவ்வளவுதான்.

பயிற்சி முடிந்து வெளியேறியதும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலேயே ஆசிரியர் பதவி கிடைத்தது. என் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய அதிபர் ஐயா சோமநாதர் அவர்களோடு ஆசிரியனாகப் பணி யாற்றக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அஃது ஆண்டவனின் அருள். அதிபர் அவர்களுடன் திரு. பிறின்ஸ் காசிநாதர், துணை அதிபர் திரு. றொபர்ட் சேதுகாவலர், பண்டிதர் சதாசிவஐயர் முதலிய எனது ஆசிரியர்கள் பலருடன் சேர்ந்து என்னை உருவாக்கிய மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆசிரியனாகப் பணி யாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தை இன்றும் பெருமையாகப் போற்றி நிற்கிறேன்.

எனக்கு வாழ்நாள் நீடித்த கல்வி (Life long learning) பற்றிய தீர்க்கமான தெளிவு அந்நாட்களில் இல்லாது விட்டாலும் படிக்க வேண்டும் என்னும் ஆசை என்னுள் மேலோங்கி நின்றது. ஆங்கில மொழி மூலமான சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சைக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டேன். தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விஞ்ஞான பாடங்களுக்குத் தோற்றுவதில் இடர்ப்பாடுகளை அறிந்து கொண்டதால் புவியியல், குடியியல், சரித்திரம், எண் கணிதம் ஆகிய பாடங்களுடன் பரீட்சைக்கு விண்ணப் பித்து திறமைச்சித்தி அடைந்தேன். என்னைவிட என் அதிபர் அடைந்த மகிழ்ச்சியும் என் பெற்றோர் அடைந்த மகிழ்ச்சியும் தொடர்ந்து படித்திட எனக்கு ஊக்கந்தந்தன.

நான் பெற்றுக்கொண்ட திறமைச் சித்திகள் இந்தியா சென்று பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தாராள மானவையாக இருந்தன. என் தந்தையாரின் அன்புக் குரியவரான வணக்கத்துக்குரிய ஜேம்ஸ் மேதர் அவர்கள் மெதடிஸ்த திருச்சபையின் தலைவராகக் கொழும்பில் இருந்தார். அவருக்கூடாகச் சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிற் சேருவதற்கான விண்ணப்பப் படிவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தோம். கல்லூரியிற் சேருவதற்கான அனுமதியுடன் வொயிட் (Boyd) மண்டபத்தில் தங்கியிருந்து படிப்பதற்கான ஒப்புதலும் கிடைத்தது. எனக்குத் தேவைப் படும் பணத்தினை மாதாமாதம் அனுப்ப வேண்டிய ஒழுங்கிலே எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டதால் இந்தியப் பயணம் தடைப்பட்டு விட்டது.

அந்தத்தடை வேறொரு வழிக்கு என்னை இட்டுச் சென்றது. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் கற்கை நெறி ஒன்று இருப்பதாகவும் அந் நெறிக்கு போட்டிப் பரீட்சை மூலம் பயிற்றப்பட்ட தமிழாசிரியர்கள் சேர்க்கப்பட்டு வருவதாகவும் அறிந்து கொண்டேன். மேற்படி கற்கை நெறியில் தமிழ் இலக்கண இலக்கிய பாடங்களுடன் சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய மொழிகளும் கற்பிக்கப்படுவதாகக் கூறப்பட்டது. எனக்கு சமஸ்கிருதமோ, சிங்களமோ ஒரு சிறிதும் தெரியா திருந்ததால் அம்மொழிகளில் ஓரளவாகுதல் அறிவினைப் பெற்றிடும் நோக்கில் எனது அதிபர் அவர்களின் சம்மதத்துடன் கொழும்பு மருதானையிலிருந்த ஒரு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றேன். பிரபல தமிழறிஞர் வித்துவான் என்.எம்.ஜே. வேதநாயகம் அவர்களிடம் சமஸ்கிருத மொழியையும் கொட்டாஞ் சேனை புனித பெனடிக்ற் கல்லூரி ஆசிரியர் திரு. சில்வா அவர்களிடம் சிங்கள மொழியையும் கற்றுக் கொண்ட தோடு வித்துவான் பாடநெறிக்கான போட்டிப் பரீட்சைக்கும் ஆயத்தம் செய்தும் வந்தேன். போட்டிப் பரீட்சையிற் தேறி நேர்முகத் தேர்விலும் தெரிவு செய்யப்பட்டதும் எனது வாழ்வில் புது அத்தியாயம் தொடங்கிற்றெனலாம். ஆசிரிய சம்பளத்துடன் படித்திட அனுமதி கிடைத்தமை உண்மை யில் வரப்பிரசாதமே.

வித்துவான் கற்கை நெறிக்கான பாடத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அதிரடியான சில மாற்றங்களை பல்கலைக் கழகத்துக்குச் சென்ற பின்னரே அறிய முடிந்தது. சமஸ்கிருதம், சிங்களம் ஆகிய பாடங்களுக்குப் பதிலாக புவியியல், சரித்திரம் ஆகிய பாடங்கள் சேர்க்கப் பட்டிருந்தன. ஆங்கிலம் கட்டாய பாடமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாட மாற்றம் பிற்காலத்தில் எனக்குப் பேருதவியாக இருந்தது. அதனையிட்டு பின்னர் கூறுவாம்.

என் அறிவு ஆழமும் அகலமும் அடைந்திட பல் கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் வழிவகுத்துத் தந்தனர். தமிழ் இலக்கண, இலக்கிய வளத்தை விரிவாக்கியதில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, முதுநிலை விரிவுரை யாளர் வி. செல்வநாயகம், கலாநிதி சு. வித்தியானந்தன், கலாநிதி ஆ. சதாசிவம் ஆகியோர் பெரும் பங்காற்றினர்.

குறிப்பாக மொழியியல், கல்வெட்டியல் ஆகியவற் றில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் பெற்றிருந்த புலமை என்னை வியக்க வைத்தது. இலக்கிய வரலாற்றி னையும் இலக்கியத் திறனாய்வினையும் போதிப்பதில் ஈடிணையற்றவர் பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள். 'தமிழர் சால்பு' பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களுக் குக் கைவந்த கலை. மொழியியல் ஆய்வுத்துறை பேராசிரியர் சதாசிவம் அவர்களாற் துலங்கியது.

புவியியற் பாடம் பேராசிரியர் குலரெத்தினம், கலாநிதி ஜோர்ஜ் தம்பையாபிள்ளை ஆகியோரால் எங்களுக்குப் போதிக்கப்பட்டது. ஏற்கனவே புவியியலில் நான் பெற்றிருந்த அறிவு ஆழமும் அகலமும் பெற்றது.

சரித்திர பாடத்தினை பேராசிரியர் ராய், கலாநிதி ஜி.சி. மெண்டிஸ், கலாநிதி அரசரெத்தினம் ஆகியோர் போதித்தனர். புதிய செய்திகளும் தரவுகளும் விளக்கங் களும் எங்கள் அறிவை விரிவு செய்தன.

ஆங்கில மொழியினை பேராசிரியர் பசே, செனட்டர் டொறிக்-டி-சூசா, செல்வி சித்திரா விக்கிரமசிங்கா ஆகியோரிடம் கற்றுக் கொண்டோம். இரண்டு வருடங் களைக் கொண்ட வித்துவான் கற்கைநெறியால் நிறையக் கற்றுக்கொண்டோம். எழுத்தறிவித்த இறைவர்களான பேரா சிரியர்களிடம் இருந்து நிறையக் கற்றுக் கொண்டதோடு அவர்களின் நிறைவான ஆசியையும் பெற்றுக் கொண்டோம். அத்துடன் "கல்விக்குக் கரையில்லை" என்ற உண்மையைப் புரிந்து கொள்ளவும், "வாழ்நாள் நீடித்த கல்வி" என்னும் கூற்றின் பொருளை மேலும் அறிந்து கொள்ளவும் எங்களுக்கு நிறைந்த சந்தர்ப்பம் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லறமாம் இல்லறம்

"நல்லறமாம் இல்லறத்தை நடத்துவதற்காகவே ஆணும் பெண்ணும் கடவுளால் உண்டாக்கப் பட்டார்கள்" என கிறிஸ்தவ வேதாகமம் கூறுகிறது. அவர்கள் இருவராய் இராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்னும் தத்துவமும் வேதாகமத்தில் உறுதிபடக் கூறப்பட்டிருப்பதையும் காண்கி றோம். அவ்வாறு கடவுளால் இணைக்கப்படுபவர்களை மனிதன் பிரிக்கக்கூடாதென்றும் கடவுளால் கட்டளை இடப்பட்டுள்ளது.

தமிழ் வித்துவான் படிப்பை முடித்து வெளியேறிய எனக்குத் திருமணஞ் செய்து வைத்து இல்லற வாழ்வை ஏற்படுத்தித்தர எனது பெற்றோர் ஆசைப்பட்டார்கள். நான் அவர்களின் கடைக்குட்டியாக இருந்ததால் அவர்களுடன் இணைந்ததாகவே எனது இல்லற வாழ்வும் அமைவதை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். அவர்களாகவே பெண்ணையும் பார்த்து ஒப்புதலும் தெரிவித்து விட்டார்கள். தாய் சொல்லைத் தட்டாமல் வளர்க்கப்பட்ட நான், "தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதிலும் உறுதியுடையவன். உலக ஒப்புதலுக்காக எனது மூத்த தமையனாருடன் பெண் பார்க்கப் போயிருந்தேன். பெற்றோர் பார்த்து விரும்பிய பெண்தானே! அவரின் பெயர் நேசம்மா. பயிற்றப்பட்ட தமிழாசிரியை. அவரின் ஊர் பழுகாமம்.

## பழுகாமம்

30 மைல் நீளமான மட்டக்களப்புக் கடலேரியின் கிழக்குப் பகுதி "எழுவான்கரை" என்றும் மேற்குப் பகுதி, "படுவான்கரை" என்றும் காரணப் பெயர்களால் அழைக்கப் படுகின்றன. 'எழு' என்ற சொல் 'எழுகின்ற' என்னும் பொருளினையும் 'வான்' என்பது இடவாகு பெயராகி, ஞாயிறுக்குப் பெயராகி, அது ஞாயிறு எழுகின்ற பகுதியைக் குறித்து நிற்கிறது. அவ்வாறே 'படுவான்' கரை என்னும் பெயர், ஞாயிறு படுகின்ற கரையினை அதாவது ஞாயிறு மறைகின்ற பகுதியைக் குறித்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுகாமம், வாவியின் படுவான்கரையிலே மட்டக் களப்புப் பட்டணத்திற்குத் தெற்கே 17 மைல் தூரத்தில் அமைந்துள்ள ஊராகும். களுதாவளை என்னும் ஊரில் அமைந்துள்ள துறையின் ஊடாக வள்ளங்கள் மூலம் பழுகாமத்தை அடையலாம். அல்லது பட்டிருப்பு என்னும் ஊரில் அமைந்துள்ள துறையின்மேல் போடப்பட்டுள்ள பாலத்தின் ஊடாக வாகனங்கள் மூலம் பழுகாமத்தை அடையலாம்.

பழுகாமம் என்பது ஒரு காரணப் பெயராகும். இப்பெயரானது பழு + கமம் எனப் பிரிக்கப்பட்டு, 'பழு' என்ற சொல் விளைந்த அல்லது முற்றிய என்னும் பொருளையும் சுட்டி நின்று 'விளைந்த வயல்' நிலத்தைக் கொண்ட ஊரின் பெயராகி நிற்கிறது. 'பழுகமம்' என்ற பெயர் காலப்போக்கில் 'பழுகாமம்' ஆயிற்று. 'காமம்' என்னும் ஈற்றுச் சொல்லைக் கொண்ட கிராமப் பெயர்கள் பல தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களிற் காணப் படுகின்றன. ஒரு சிலவற்றை உதாரணமாகக் காட்டலாம்.

மட்டக்களப்புப் பிரதேசம் - இறக்காமம், உறுகாமம்
யாழ்ப்பாணப் பிரதேசம் - கொடிகாமம், வீமன்காமம்
முல்லைத்தீவுப் பிரதேசம் - பனங்காமம்
திருகோணமலைப் பிரதேசம் - தம்பலகாமம்
தென்கிழக்குப் பிரதேசம் - கதிர்காமம்

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள ஊர்களிற் பெரும் பாலானவற்றின் பெயர்கள் விவசாயத்துடன் தொடர்பான வையாக அமைந்திருப்பதைச் சுட்டிடல் பொருந்தும். உதாணமாகச் சில பெயர்களைத் தருகிறோம் வெல்லா வெளி, மாவடி முன்மாரி, காயாங்கேணி, காக்காச்சிவட்டை.

பாரம்பரிய கூத்துகளாகக் கரகம், கோலாட்டம், சோதிடம் முதலிய கலைகள் பழுகாமத்திற் பேணப்பட்டு வருகின்றன. மேற்படி கலைகளில் பாண்டித்தியம் பெற்ற கலைஞர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர். கவிஞர்கள், எழுத்தாளர்கள் எனப் பழுகாமத்துக்குப் புகழ் சேர்த்தவர் களின் பட்டியலில் "திரௌபதி அம்மன் காவியம்" என்னும் பக்தி இலக்கியத்தினை ஆக்கியதோடு பழுகாமம் மாவித்தியாலயத்தை நிறுவியும் உதவிய பண்டிதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுமணி அவர்கள் முதலிற் குறிப்பிடப்பட வேண்டியவர். ஏராளமான இலக்கியப் படைப்புகளின் ஆசிரியரும் இலண்டன் மாநகரில் கிராமியக் கலை அரங்கினை நிறுவித் தமிழ்ப்பணி ஆற்றிவரும் 'முத்தமிழ் பாவலர்' ஞான மணியம் அவர்களும் பழுகாமத்தின் பெருமைக்குரிய மைந்தர்களுள் ஒருவராவர். 1940ஆம் ஆண்டில் திருநாடு என்னும் மாத சஞ்சிகையை அச்சிட்டு வெளியிட்ட ஆசிரியர் கதிரேசபிள்ளை அவர்களும் குறிப்பிடப்பட வேண்டியவரே. பிரபல வைத்தியரும் தேசத்து வன்னிமையு மான ஆசிரியர் சதாசிவம்பிள்ளை அவர்கள் பக்தி இலக்கி யங்கள் ஆக்கிட வழி வகுத்த சிறப்புக்குரியவராவார்.

பழுகாமத்தில் அமைந்துள்ள திரௌபதி அம்மன் ஆலயமும் அதன் வருடாந்த திருவிழாவில் இடம்பெறும் தீ மிதிப்பு நிகழ்வும் மட்டக்களப்பு மாநிலத்தில் நன்கு அறியப்பட்டவையாம். பாரதப் பாடல்களை ஒருவர் படிக்க மற்றொருவர் அதற்கு உரைகூறக் கேட்டல், திருவிழாவின் சிறப்பினைச் சிறப்பிக்கும் நிகழ்வாகும். பாண்டவர் வனவாசம், திரௌபதி தீக்குளிப்பு என்பன அடியார்களைப் பக்தி வெள்ளத்தில் மிதக்க வைப்பவையாம்.

## நேசம்மாவின் குடும்பம்



நேசம்மாவின் குடும்பமானது மட்டக்களப்பு, குருக் கள் மடம் என்னும் ஊருடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தது. அந்த ஊரிற் பிறந்த குமரப்பெருமாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார், கதிர்காமத்தம்பி கிளாக்கர் என்னும் சகோதரர் இருவர் பழுகாமத்தில் சகோதரிகள் இருவரைத் திருமணம் செய்து கொண்டார்கள். குமரப்பெருமாள் உடையாருக்கு கண்ணம்மை என்ற மகளும் கதிர்காமத்தம்பி கிளாக்கருக்கு உமையாத்தை என்ற மகளும் பிறந்தனர். கிளாக்கரின் மகளாகிய உமையாத்தை குருக்கள் மடத்தைச் சேர்ந்த கந்தப்பெருமாள் என்பவரை மணஞ்செய்து இராசம்மா, பொன்னம்மா, அழகம்மா, கனகம்மா, நல்லம்மா என்னும் ஐந்து பெண்களைப் பெற்றெடுத்தார். இவர்களுள் அழகம்மா அவர்களே நேசம்மாவின் தாயாராவர்.

## நேசம்மாவின் தாயார்



06.08.1906இற் பிறந்த அழகம்மா அவர்கள் குருக்கள் மடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை என்பவரைத் திருமணஞ் செய்து கந்தையா, வேல்முருகு என்னும் ஆண் மக்கள் இருவரைப் பெற்றெடுத்திருந்தார். பிள்ளைகளின் இளமைப் பருவத்தில் கணவன் இறந்துவிட கணவனின் சகோதரர் முறையினரான சீனித்தம்பி என்பவரை மறுமணஞ் செய்து கொண்டார். அத்தம்பதியினருக்குப் பிறந்த பிள்ளையே நேசம்மா. நேசம்மா சிறுபிள்ளையாக இருந்தபோது அவரின் தந்தையாரும் இறந்துவிட தாயார் விதவையாகி விட்டார்.

அந்நாள்களில் கதிர்காமத்தம்பி கிளாக்கரின் இரண்டாம் பேத்தியாரான பொன்னம்மா அவர்கள், பழுகாமத்தைச் சேர்ந்த கிறிஸ்தவரான வேலுப்பிள்ளை ஆசிரியரைத் திருமணம் செய்வதற்காகக் கிறிஸ்தவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திற் சேர்ந்து கொண்டார். கிறிஸ்து பெருமானைத் தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பக்தி வைராக்கியம் கொண்ட கிறிஸ்தவராக மாற்றமடைந்த பொன்னம்மா அவர்களின் செல்வாக்கினால் அவரின் சகோதரிகள் அனைவரும் கிறிஸ்தவ சமயத்திற் சேர்ந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவ சமயத்திற் சேர்ந்து கொண்ட அழகம்மா அவர்கள் கணவனை இழந்த நிலையிலும் தமது பிள்ளைகள் மூவரையும் சீராக வளர்த்தெடுத்தார். வயல் நிலத்தாற் கிடைத்த வருமானத்தை ஆண்டவர் ஆசீர் வதித்துக் கொடுத்தார். கிறிஸ்தவ பாடசாலைகள் பிள்ளை களின் கல்விக்குக் கை கொடுத்தன. பிள்ளைகள் மூவரும் ஒழுங்காகக் கற்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளி யேறினர். கிறிஸ்தவ பாடசாலைகளிலே ஆசிரியர்களாக சேர்ந்து கொண்ட மூவரும் உரிய காலத்திலே திருமணஞ் செய்து கொண்டனர். அழகம்மா அவர்கள், பிள்ளைகளின் பிள்ளைகளையும் பார்த்த மகிழ்ச்சியுடன் 24.04.1990இல் இறைவனின் சமூகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்

## நேசம்மாவின் உடன் பிறந்தோர்



வேலுப்பிள்ளை கந்தையா அவர்கள் நேசம்மாவின் மூத்த சகோதரராவார். பழுகாமத்தில் இவர் சிவஞானம் என்னும் பெயராலேயே அழைக்கப்பட்டார். எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களில் ஒருவர் இரண்டு பெயர்களால் அழைக்கப் படுதல் சாதாரண காரியமாகும். 22.08.1925இல் பிறந்த கந்தையா அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியராவார். ஆசிரிய பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் மெதடிஸ்த திருச்சபையில் திருப்பணியாளராக இணைந்து பொத்து வில் மெதடிஸ்த சபையில் ஆண்டவரின் ஊழியத்தினை ஆற்றிவந்தார். அங்கு சில ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் சுகவீன காரணத்தினால் தமது சொந்த ஊரான பழுகாமத்துக்கு வந்து விட்டார். அந்த நிலையிலும் பழுகாமம் மெதடிஸ்த சபை ஊழியருக்குத் தம்மாலான உதவி ஒத்தாசைகளை வழங்கிட அவர் பின்நிற்கவில்லை.

31.12.2002இல் அதிகாலை வேளையில் அவருடைய உடல்நிலை சிறிது பாதிப்படைந்ததால் மட்டக்களப்புப் பட்டணம் சென்று வைத்தியரிடம் காட்டி வரலாம் என்று தீர்மானித்த கந்தையா அவர்கள் அன்றிரவு ஆண்டிறுதி யில் நடைபெறவிருக்கும் விழிப்பிரவு ஆராதனைக்கு வந்து விடுவதாகவும் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறும் கூறிப் புறப்பட்டுச் சென்றார். மட்டக்களப்பு மாகாண வைத்தியசாலையிற் சேர்க்கப்பட்ட கந்தையா அவர்கள் அன்று மாலையிலேயே இறைவனால் எடுத்துக் கொள்ளப் பட்டார். செய்தியானது ஆச்சரியத்துடன் இணைந்த அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியது. காலையிற் சென்றவர் மாலையில் மரித்து விட்டாரென்ற செய்தியை நம்புவது மிகக் கடினமான செயலாகவே இருந்தது. ஏற்கனவே தாயாரை இழந்த நிலையிலிருந்த கந்தையா அவர்களின் நான்கு ஆண் மக்களும் மூன்று பெண் மக்களும் தந்தையாரையும் இழந்ததால் நிலைகுலைந்து நின்றனர். எல்லாம் வல்ல இறைவனின் திருச்சித்தத்தை ஏற்றுக்கொள்ளுவதைத் தவிர நம்மால் செய்யக்கூடியது எதுவுமில்லையல்லவா? கடைசி மகனைத் தவிர ஏனைய ஆறு பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்து பிள்ளைகளின் பிள்ளைகளையும் பார்த்து மகிழ்ந்திருந்த கந்தையா அவர்கள் நிறைந்த வாழ்வினை வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தமை குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியதாய் அமைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலுப்பிள்ளை வேல்முருகு அவர்கள் நேசம்மாவின் இரண்டாவது தமையனாராவார். 31.03.1929இல் பிறந்த வேல்முருகு அவர்கள் சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையிற் தேர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து கரடியனாறு அரசினர் விவசாயப் பயிற்சிப் பாடசாலையிற் சேர்ந்து பயிற்சி பெற்றதன் பின்னர் நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் பயின்று ஆசிரியராக வெளி யேறினார். உதவி ஆசிரியர், பாடசாலை அதிபர் முதலிய நிலைகளிற் பணியாற்றி ஓய்வு பெற்ற வேல்முருகு அவர்கள் தமது தமையனாரின் வழியில் மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணியாளராக இணைந்து தாம் திருமணஞ் செய்ததன் பேரில் புக்ககமாகக் கொண்ட நிலாவெளி மெதடிஸ்த சபையில் பணியாற்றியுள்ளார். அத்துடன் நிலாவெளி "அருளகம்" மெதடிஸ்த சிறுமியர் இல்லப் பொருளாளராக அவர் இறைவனால் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள்வரை பணியாற்றியுள்ளார். நிலாவெளித் திருச்சபையை முழுமனதுடன் நேசித்து அத்திருச்சபை மக்கள் அனைவரையும் தமது குடும்பத்தினராகவே கொண்டு அன்புடன் வழி நடத்தி வந்த வேல்முருகு அவர்களை அத்திருச்சபை மக்கள் தங்கள் திருச்சபை யின் தந்தை என்று போற்றி மதித்து வந்தார்கள்.

தமது மனைவியாரை 1998 ஜனவரியில் ஆண்டவர் அழைத்துக்கொண்ட போதிலும் வேல்முருகு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது மூன்று பெண் மக்களையும் இரண்டு ஆண் மக்களையும் இல்லற பந்தத்தில் இணைத்து வைத்து பிள்ளைகளின் பிள்ளைகளையும் கண்டு பெருவாழ்வு வாழ்ந்துள்ளார். அவர் தமது 79வது வயதினை 31.03.2008 இல் நிறைவு செய்து மூன்று நாள்களில் அதாவது 03.04.2008இல் இறைவனால் எடுத்துக் கொள்ளப்பட்டார். வேல்முருகு அவர்கள் மரணத்தைத் தழுவும் நேரத்தில் இடம்பெற்ற நிகழ்வுகள் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவை. அந்த வேளையில் அவருடைய பிள்ளைகள் அனைவரும் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்களோடு சேர்ந்து அவரைச் சூழ்ந்து நின்று கடவுளைத் துதித்துப்பாடி, ஜெபித்து, ஒவ்வொருவராக அவரை முத்தமிட்டு, வைத்த கண் வாங்காது அவரையே நோக்கிக் கொண்டிருக்க அவர்கள் அனைவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டவர் போன்று அவரது மூச்சு அடங்க கண்கள் மூடிக்கொண்டன. அமைதியாகவும் மிகுந்த சமாதானமாகவும் இடம்பெற்ற வேல்முருகு அவர்களது விண்ணகப் பயணம் அனைவரையும் ஆச்சரியப்பட வைத்ததோடு சிந்திக்கவும் செய்தது. அவருடைய பிள்ளைகள் அனைவரும் தங்கள் பிள்ளைகளுடன் குடும்பங்களாக ஒலிவ மரக்கன்றுகளைப்போல அவரைச் சூழ்ந்து நின்று பிரியாவிடை கொடுத்து வழியனுப்பி வைத்த நிகழ்வானது உண்மையாகவே வேல்முருகு அவர்கள் நற்பேறு பெற்றவரென்பதனை உறுதிபட உணர்த்தி நிற்கிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் திருமணமும் மக்கட் பேறும்

நான் திருமணஞ் செய்வதற்குரிய பெண்ணாக நேசம்மா அவர்களை என்பெற்றோர் தேர்ந்தெடுத்தமை பற்றி முன்னரே குறிப்பிட்டிருந்தேன். பழுகாமத்தில் வசித்து வந்த நேசம்மாவின் தாயார் எங்களின் திருமணத்தினை போக்குவரத்திலுள்ள சிரமத்தை உத்தேசித்து பழுகாமத் தில் நடத்திட விரும்பவில்லை. அதற்குப் பதிலாக அவரு டைய மூத்த சகோதரியான இராசம்மா அவர்கள் வசித்து வந்த செங்கலடியில் நடத்துவதை அவர் பெருமளவில் விரும்பினார். இராசம்மா அவர்களின் மூத்த மகளும் அவரின் கணவரும் செங்கலடி மெதடிஸ்த சங்கப் பாடசாலையில் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள் என்ப தனையும் அப்பாடசாலையுடன் இணைந்திருந்த வீட்டில் வசித்துக் கொண்டிருந்தார்கள் என்பதனையும் குறிப்பிடு வது பொருத்தமென நினைக்கிறேன்.


நான் முன்னர் குறிப்பிட்ட ஐந்து தாய்மார்களுள், நேசம்மாவின் தாயாரான அழகம்மா அவர்களும் நேசம்மா வின் மூத்த பெரியம்மாவாகிய இராசம்மா அவர்களும் அவர்களுடைய வாழ்நாளில் பெரும் பகுதியை ஒன்றாகவே கழித்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சான்றோனாக்கிய தந்தையாரைப்பற்றி எழுதிய போது ஆசிரியர் பதவியிலிருந்து அவர் ஓய்வு பெற்ற பின்னர் அமிர்தகழி மெதடிஸ்த சபையின் கௌரவ ஊழிய ராகப் பணியாற்றியமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். என் திருமண காலத்தில் எனது பெற்றோர் அமிர்தகழியிலேயே வசித்து வந்தனர். செங்கலடியில் திருமணத்தை நடத்திட அவர்களும் ஒப்புதல் தெரிவித்தனர்.

செங்கலடி மெதடிஸ்த தேவாலயத்திலே 15.08.1959 இல் எங்கள் திருமணம் நடைபெற்றது. 15ஆம், 16ஆம் திகதிகளில் செங்கலடியிலும் 17ஆம், 18ஆம் திகதிகளில் அமிர்தகழியிலும் கொண்டாட்டம் இடம் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள் திருமண நிகழ்வுக்கு வருகைதந்து ஆசியுரை வழங்கிட விருப்போடிருந்த எனது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய ஆசிரியர்ப்பிரான் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் அவரது தமையனாரின் எதிர் பாராத இழப்பினால் வருகைதர முடியாது போய் விட்டாலும் திருமணத்துக்குத் தேவையான பூக்கள் அனைத்தையும் பேராதனையிலிருந்து பெருமனதுடன் அனுப்பி உதவியமையை மனம் நிறைந்த நன்றி உணர்வுடன் குறிப்பிடுவது எனது கடமையன்றோ! பெரியவர்கள் என்றும் பெரியவர்களே!

வித்துவான் வகுப்பிற் சேர்வதற்கான தேர்வுக்கு ஆயத்தம் செய்வதற்காக கொழும்பிலுள்ள மருதானை மெதடிஸ்த பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற போது அப்பாடசாலையின் தலைமை ஆசிரியையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய திருமதி மார்த்தா - நைனன் அம்மையார் என்னைத் தமது மகனாக ஏற்று அன்பு தந்தார். எனது திருமண உடை அந்த அம்மையாரின் அன்பளிப்பென் பதனை நினைவு கூருகிறேன். தமிழ்நாடு தஞ்சாவூரைச் சேர்ந்த அந்தத் தாயார் எங்கள் திருமண நாள்களில் தஞ்சாவூர் போக இருந்த போதிலும் திருமணத்தின்பின் ஒருவாரம் கொழும்பிலே இருந்த தமது வீட்டில் நாங்கள் இருவரும் தங்கி நிற்பதற்கான எல்லா ஒழுங்குகளையும் செய்து வைத்திருந்தார். நாங்கள் இருவரும் அனுபவித்த அந்த அற்புதமான அம்மாவின் அன்புக்கு ஈடுமில்லை; எடுப்புமில்லை. மறுமைக்குட் பிரவேதித்துள்ள அந்த அம்மாவின் நினைவு இன்றும் எங்கள் உள்ளங்களில் பசுமையாகவே இருக்கிறது.

தமது தமையனாரின் மரணச்சடங்கிற் பங்கேற்றிட யாழ்ப்பாணம் சென்றிருந்த பேராசிரியர் செல்வநாயகம் அவர்கள் பேராதனை திரும்பிய பின்னர் நானும் எனது மனைவியாரும் அவர் வீட்டுக்குச் சென்று அப்பெரியாரதும் அவர்களுடைய மனைவியாரதும் ஆசியைப் பெற்றுக் கொண்டமை எங்களின் பெரும் பாக்கியமாகும். அவர் களின் ஆசி எங்களை வாழ வைத்திருக்கிறது.

## மக்கட்பேறு

"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைக் கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளை கள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக் கன்றுகளைப் போல இருப்பார்கள்" என்று கூறும் கிறிஸ்தவ வேதாகம மானது, "இதோ; பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்" என்றும் கூறுவதைப் பார்க்கிறோம்.

வேதாகமம்கூறும் இக்கருத்துடன்,

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றுஅதன்
நன்கலம் நன்மக்கட் பேறு"

என வள்ளுவனார் கூறும்கருத்தும் நோக்குதற்குரியது. அத்துடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற"

என்னும் குறளின் மூலம் மக்கட்பேறின் தனித்துவமான சிறப்பு வள்ளுவரால் சுட்டப்பட்டிருப்பதையும் காணலாம்.

எங்களுக்கு ஆண்கள் இருவர், பெண்கள் இருவர் என நான்கு மக்கட் செல்வங்களை ஆண்டவர் அருளி இருக்கிறார்.



சாமுவேல் அமுதநாதன் அவர்களே எங்களின் மூத்த மகன். எங்கள் திருமணம் நிறைவேறியதும் அப்பா, அம்மாவுடன் அமிர்தகழி மெதடிஸ்த மிசன் வீட்டிலேயே வாழ்ந்து வந்தோம். மட்டக்களப்பு அரசடி உயர்தரப் பாடசாலையிற் கற்பித்து வந்த என் மனைவியாருக்கு அமிர்தகழி மெதடிஸ்த மிசன் பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்தது. பாடசாலையானது மிசன் வீட்டுக்குச் சமீபமாக இருந்ததால் மனைவியாருக்கு மிக்க மகிழ்ச்சி. நான் தொடர்ந்து மத்திய கல்லூரியிலேயே கற்பித்து வந்தேன்.





எங்கள் மகன் 25.05.1960இல் மட்டக்களப்பு மாவட்ட வைத்திய சாலையிலே பிறந்தார். எனது மாமி யார் பழுகாமத்திலிருந்து செங்கல டிவந்து தங்கியிருந்ததால் எனது மனைவியையும் மகனையும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத காலம் அங்கு போயிருப்பதற்கான ஒழுங்கு செய்திருந் தோம். எனது தந்தையாரின் காலில் ஒரு காயம் ஏற்பட் டிருந்ததால் அவருக்கு நடப்பதில் சிறிது சிரமம் இருந்தது. அதனால் தாயையும் சேயையும் செங்கலடிக்குக் கொண்டு செல்வதற்கு முன்னதாக அமிர்தகழிக்குக் கூட்டிச் சென்று காட்டினோம். எங்கள் மகனின் உச்சிமோந்து ஆசீர்வதித்து பிரார்த்தனையோடு எங்களை அனுப்பி வைத்தார். எங்கள் மகனை அதன் பின்னர் அப்பா பார்க்கவேயில்லை. மகன் பிறந்து ஒரு மாதம் நிறைவு பெற்ற வேளையில் அப்பாவின் உலக வாழ்வு நிறைவு பெற்று விட்டது. ஆம்! 27.06.1960இல் அப்பா மறுமைக்குள் பிரவேசித்து விட்டார். அவருடைய கடைக்குட்டி மகனான எனது மகனையும் பார்த்த மகிழ்வுடன் அவருடைய வாழ்க்கை ஓட்டம் முடிவடைந்து விட்டது.

யூதரல்லாத மக்களுக்கு நற்செய்தியை அறிவிப் பதற்காக யூத மார்க்கத்தில் அதீத வைராக்கியம் கொண்டிருந்த பவுல் என்பவரை ஆண்டவராகிய இயேசு பயன்படுத்தியமைபற்றி வேதாகமம் கூறுகிறது. ஆச்சரியப் படத்தக்க ஊழியத்தைச் செய்து முடித்த நிலையில், "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என்று பவுலடியார் தீமோத்தேயு என்னும் பெயரிய அடியாருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அவ்வண்ணமே சைவ சமயத்தில் அதீத வைராக்கியம் கொண்டிருந்த எனது தந்தையாரும் கடைசி மூச்சுவரை ஆண்டவரின் ஊழியத்திற் பங்கு கொண்டிருந்து நல்ல போராட்டத்தைப் போராடினார்; ஓட்டத்தை முடித்தார்; விசுவாசத்தைக் காத்துக் கொண்டாரென்று துணிந்து கூறலாம்.

எங்கள் மகன் அமுதநாதன் மிகுந்த திறமை கொண்டவராகவும் அற்புதமான நினைவாற்றல் மிக்கவராக வும் திகழ்ந்தார். கிழக்கிலங்கைத் தமிழாசிரியர் நடத்திய ஐந்தாம் வகுப்புப் பொதுப் பரீட்சையில் அதிவிசேட சித்திகளுடன் முதற் பிரிவிற் தேர்ச்சி அடைந்தார். அவருடைய இளமைப் பருவத்திலே ஆண்டவராகிய இயேசுநாதரில் அவர் கொண்டிருந்த பக்தியும் பாசமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களை வியக்க வைத்தன. இடைநிலைக் கல்வியைப் பெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் பழுகாமத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ இளைஞர்களுடன் இணைந்து "நாற்சதுரசபை" (Four square church) என்னும் கிறிஸ்தவ அமைப்புடன் சேர்ந்து கிறிஸ்தவ வீடுகளுக்குச் சென்று பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்தி வந்தார். எங்கள் கிராமத்தைத் தவிர அருகிலிருந்த பெரிய போரதீவு, கோயிற் போரதீவு, முனைத்தீவு மற்றும் குடியேற்றக் கிராமங்கள், களுவாஞ்சிக்குடி, கல்லாறு முதலிய பல கிராமங்களிலும் அவர்களுடைய கூட்டங்கள் நடைபெற்றன. பாடசாலை விடுமுறை நாள்களையே அவர் பயன் கொண்டமையால் எங்களுக்கு மேற்படி கூட்டங்களையிட்டு அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கவில்லை.

காலப்போக்கில் பொதுக் கல்வியில் அவருடைய நாட்டம் குறைந்து போய் சமயத்துடன் தொடர்பான விடயங்களே அவருடைய கவனத்தை ஈர்க்கத் தொடங்கின. கல்வி கற்று உரிய தகைமைகளைப் பெற்று தகுந்த தொழிலைப் பெற்ற பின்னர் மற்றவர்களிற் தங்கியிருக்காமல் ஆண்டவருடைய ஊழியத்தையும் சுதந்திரமாகச் செய்யலாம் என்று நாங்கள் கூறிய ஆலோசனைக்கு எங்கள் மகன் செவி கொடுக்கவில்லை. கருத்து வேறுபாடும் மனவருத்தமும் ஏற்படத் தொடங்கின. இடமாற்றம் நன்மை பயக்குமென நினைத்து க.பொ.த.ப. உயர் வகுப்பினை யாழ்ப்பாணத்திற் கற்றிட ஒழுங்குகளைச் செய்தோம். ஆரம்பத்தில் எல்லாம் ஒழுங்காகத்தான் காணப்பட்டன. ஒரு சில வாரங்களுக்கள் பாஸ்டர் குணச்செல்வம் என்னும் ஊழியக்காரருடன் தொடர்பு கொண்டு அவருடைய ஊழியத்திற் பங்கெடுக்கத் தொடங்கி விட்டார். இதனையிட்டு ஒரு வருடத்தின் பின்னரே நாங்கள் அறிய முடிந்தது.

வெளிநாட்டுக்கு அவரை அனுப்பி வைத்தால் அவருடைய போக்கில் மாறுதல் ஏற்படலாமென்னும் நப்பாசையில் ஜேர்மனியில் தொழில் செய்து வந்த எங்கள் உறவினரான சத்தியமூர்த்தி (சீலன்) என்பவரின் உதவியை நாடினோம். விடுதலையில் பழுகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருந்த அவர் எங்கள் மகனைத் தம்முடன் அழைத்துச் செல்வதாக உறுதி வழங்கினார். அதற்குரிய பணத்தை ஒழுங்கு செய்து அவரிடம் கொடுத்தோம். சத்தியமூர்த்தி அவர்கள் உறுதி வழங்கியபடி எங்கள் மகனைத் தம்முடன் ஜேர்மனிக்குக் கூட்டிச் சென்றார். நாங்கள் நினைத்தது ஒன்று; கடவுள் நினைத்தது வெறொன்று என்பதைப் புரிந்து கொள்ளச் சில மாதங்கள் எடுத்தன. ஆம், ஜேர்மனியில் ஆண்டவருடைய ஊழியஞ் செய்துவந்த பாஸ்டர் டானியல் அவர்களுடன் இணைந்து கொண்டார். வேதாகமத்தை முறைப்படி கற்று கிறிஸ்தவ சபை வரலாற்றிலும் தேர்ச்சி பெற்று வேத சாத்திரக் கல்லூரி ஒன்றினால் ஆண்டவரின் ஊழியனாக எங்கள் மகன் திருநிலைப்படுத்தப்பட்டார். ஆண்டவரின் அதிசிறந்த ஊழியக்காரனான பவுலடியார் கலாத்திய சபையாருக்கு எழுதிய கடிதத்தில், "நான் என் தாயின் வயிற்றிலிருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்" என்று குறிப்பிட்டுள்ளார். நாங்களும் எங்கள் மகன் அமுதநாதன் அவர்களையிட்டு அவ்வாறுதான் நினைக்கின்றோம். தீமோத்தேயு என்னும் பெயரிய ஊழியக்காரனின் விசுவாசத்தின் உயர்வினையிட்டுக் கூறவந்த பவுலடியார், "உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருகிறதினால் என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்தரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக் குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். ஆம், அவ்வாறு தான் எங்கள் மகன் சாமுவேல் அமுதநாதன் அவர்களிடம் காணப்படும் மாயமற்ற விசுவாசம் முந்தி அவருடைய அம்மம்மாவாகிய அழகம்மா அவர்களுக்குள்ளும் அவருடைய தாயாராகிய நேசம்மா அவர்களுக்குள்ளும் நிலைத்திருந்தது. அஃது அமுதநாதன் அவர்களுக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று ஆண்டவருக்குள் நம்புகிறோம்.


தற்போது மட்டக்களப்பிலே "ஜெபவீடு ஊழியம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(House of prayer ministries) என்னும் பெயரில் ஆண்டவருடைய ஊழியத்தினைச் செய்துவரும் எங்கள் மகன் தாம் விரும்பிய வத்சலா என்பவரைத் திருமணஞ் செய்து சேரா, யோனத்தான் என்னும் மக்கட் பேற்றினை யும் பெற்றுள்ளார். ஆண்டவருக்கென்று பிரமாண்டமான ஆலயம் ஒன்றினை மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் எல்லைவீதி தெற்கிலே அடியார்களின் உதவியுடன் எங்கள் மகன் கட்டி திறப்பு விழாவினையும் மேற்கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





எங்களின் இளைய மகனான ஜோன் ஆனந்தநாதன் 19.12.1962இல் பிறந்தார். இவர் பிறக்கும் காலத்தில் எனது மனைவியாருக்கு அவருடைய பிறந்த ஊரான பழுகாமத் தில் இருந்த இராமகிருஷ்ண சங்கப் பாடசாலைக்கு இடமாற்றம் கிடைத்திருந்தது. நான் மட்டக்களப்பில் நிற்க, மனைவியா ரும் அவருடைய தாயாரும் மூத்த மகனும் பழுகாமம் சென்று விட்டார்கள். தமையனாரைப் போலவே தம்பியாரும் கல்வியிற் சிறந்து விளங்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் ஐந்தாம் வகுப்புப் பொதுப் பரீட்சையில் அதிவிசேட சித்திகளுடன் முதற் பிரிவிற் சித்தியடைந்தார். படிப்பைத் தவிர வேறு எக்கருமத்திலும் தமது நேரத்தைச் செலவிட இவர் விரும்பவில்லை. இவ்விடயத்தில் தமையனார் வட துருவம்; தம்பியார் தென் துருவம். உயர் வகுப்பை அடைந் ததும் தமையனார் தெய்வப் பணியைத் தெரிந்து கொண்டார். தம்பியாரோ நிறைந்த இறை பக்தி கொண்டவராய் இருந்தபோதிலும் கற்றற் பணியைத் தெரிந்து கொண்டார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்திலே பொறியியற் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுச் சென்ற எங்கள் இளைய மகனுக்குச் சில சோதனைகள் ஏற்பட்டன. அங்கு சென்று இரண்டு ஆண்டுகள் நிறைவடையும் காலத்தில் புதிய மாணாக்கரைப் பகிடிவதை செய்தபோது பிடிபட்டு பரீட்சை எடுப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டார். மூன்றாம் ஆண்டு நிறைவடையும் காலத்திலும் பகிடிவதை செய்து பிடிபட்டு பரீட்சை எடுப்பதிலிருந்து தடை செய்யப்பட்ட தோடு பல்கலைக் கழகத்திலிருந்தும் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டார். நானும் என் மனைவியும் செய்தி அறிந்து உறைந்து போனோம். எல்லாம் வல்ல இறைவனி டம் மன்றாடினோம். இறைவனின் அருளோடு எனது மதிப்புக்குரிய ஆசிரியரான பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களை அணுகினேன். அந்த நாள்களில் பேராசிரிய ரவர்கள் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரான பேராசிரியர் பண்டிதரத்தினா அவர்களை நேரிற் சந்தித்து நட்பு ரீதியாக உரையாடியதன் பெறுபேறாக எங்கள் மகனுக்கு பரீட்சைக்குத் தோற்ற மட்டும் இசைவு தெரிவிக்கப்பட்டது.

எதிர்பாராத நிகழ்வினால் அதிர்ந்து போயிருந்த எங்கள் மகன் மூன்று பரீட்சைகளுக்கு ஒரே நேரத்தில் முகங்கொடுக்க வேண்டிய நிலையை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்டார். அவர் கொண்ட உறுதி அவருடைய முகத்திலே பளிச்சிட்டது. பரீட்சைகள் நிறைவுற்று பெறு பேறுகள் வந்து விட்டன. எங்கள் மகன் சாதித்தே விட்டார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் மூன்றாண்டுப் பரீட்சைகளிலும் அவர் சித்தி பெற்ற தோடு இரண்டாம் ஆண்டுப் பரீட்சையில் ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டு எவராலும் கடக்கப்படாதிருந்த சாதனையை விஞ்சிய எங்கள் மகன் புதியதொரு சாதனையை நிலைநாட்டியும் விட்டார். எனது மவியாரும் நானும் ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்து நின்றோம். எல்லாம் வல்ல இறைவனை நன்றியோடு துதித்தோம். மகனின் பரீட்சைப் பெறுபேற்றினை அறிந்து கொண்ட துணைவேந்தர் வித்தியானந்தன் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அந்தப் பெருந் தகையினால் காலத்தினாற் செய்யப்பட்ட - ஞாலத்தின் மாணப் பெரிதான நன்றியினை என்றும் மறவோம்; அது செய்யாமற் செய்யப்பட்ட உதவியல்லவா?

எங்கள் மகன் ஆனந்தநாதன் அவர்களுக்கு காங்கேசன்துறை "லங்கா சீமென்ற்" நிறுவனத்தில் பொறி யியலாளர் வேலை கிடைத்தது. உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தம் தீவிரமடைந்ததால் சீமெந்து தொழிற்சாலைகள் இழுத்து மூடப்பட்டன. எங்கள் மகன் புத்தி சாதுரியமாகச் செயற்பட்டு, பீஜிதீவுகளிலுள்ள சீமெந்துத் தொழிற்சாலை ஒன்றில் பொறியியலாளராகச் சேர்ந்து கொண்டார். ஒருசில ஆண்டுகளுள் உற்பத்திப்பிரிவு முகாமையாளராகப் பதவி உயர்வு பெறக்கூடிய வகையில் அவருடைய வேலைத் திறமை காணப்பட்டது.

எங்கள் இளைய மகன் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியதும் வீட்டுப் பொறுப்புகள் யாவும் குறையத் தொடங்கின. அவரோடு இணைந்துள்ள குடும்பப் பொறுப் புணர்வும் சகோதர பாசமும் வியக்கத் தக்கவை. பெண்களுள் மூத்த சகோதரியின் கல்வி வளர்ச்சியில் எங்கள் மகன் காட்டிய அக்கறையையும் அவர் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்த வேளையில் அவர் அடைந்த மகிழ்ச்சியையும் நினைக்குந் தோறும் மனம் நெகிழ் வடைகிறது. மூத்த மகளின் திருமணத்தினை பிஜித்தீவு களில் இருந்து கொண்டே நடத்தி வைத்தமையையும் இளைய மகளின் திருமணத்தைக் கனடாவுக்கு வந்து பெற்றோராகவும் தமையனாராகவும் நின்று நடத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தமையையும் எங்களின் நெஞ்சகங்களில் பதிவு செய்து வைத்துள்ளோம். எங்களின் இளைய மகனின் நினைவு வரும்போதெல்லாம் கிறிஸ்தவ வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ள யோசேப்பு என்பவரின் நினைவும் கூடவே வருகிறது.


யோசேப்பின் தந்தையாராகிய யாக்கோபு தமது இறுதி நாள்கள் நெருங்கி வருவதை உணர்ந்தபோது தமது பன்னிரு மகன்களையும் ஆசீர்வதித்திட விழைந்தார். மூத்த மகனான ரூபன் தொடக்கம் ஒவ்வொருவராக அழைத்து அவர்களின் தலைகளின்மேல் கைகளை வைத்து ஆசீர்வதிக்கலானார். பதினோராவது மகனாகிய யோசேப்பை ஆசீர்வதிக்கும்போது,

"யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதன் கொடிகள் சுவரின் மேல் படரும். உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாய் இருந்தது. நித்திய பர்வதங்களின் முடிவு மட்டும் எட்டுகின்றன; அவைகள் யோசேப்புடைய சிரசின் மேலும் தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக" என்று கூறியதாக ஆதியாகமம் 49ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எங்கள் இளைய மகன் ஆனந்தநாதனும் பெற்றோரின் ஆசீர்வாதங்களுக்கு உரியவர் ஆகிறார்.

ஆனந்தநாதன் அவர்கள் சிராணி என்பவரைத் திருமணஞ் செய்து அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வருகிறார். ஷெல் கம்பனியில் (Shell) பொறுப்புள்ள பதவி வகித்துவரும் எங்கள் மகனுக்கு நிரோஜினி என்னும் பெயருள்ள மகளும் யோசுவா என்னும் பெயருள்ள மகனும் மக்கட்பேறுகளாவர். திராவிடர் (Dravida) என்னும் அரியதொரு நூலினை ஆங்கில மொழியில் எழுதி 1945இல் வெளியிட்ட திரு. ஈ.எல். தம்பிமுத்து அவர்கள் சிராணி அவர்களின் பாட்டனார் என்பது குறிப்பிடத்தக்கது. நேரங் கிடைக்கும்போதெல்லாம் ஆண்டவரின் பணியில் எங்கள் மகன் குடும்பமாக ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய காரியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேரி தவச்செல்வி அவர்கள் எங்களின் மூத்த மகளாவார். 31.01.1965இல் பிறந்த இவர் தமது கல்வியை ஒழுங்காகக் கற்று க.பொ.த. உயர்தரப் பரீட்சையிற் தேர்ச்சியடைந்த போதிலும் பல்கலைக் கழகத்திற் சேர்வதற்குரிய புள்ளிகளைப் பெறத் தவறி விட்டார். இரண்டாம் தடவை மேற்படி பரீட்சைக்குத் தோற்றி சிறப்பாகத் தேர்ச்சியடைந்தார். ஆயினும் அந்த வருடத்திலே பல்கலைக் கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகளின் எல்லை கூட்டப்பட்டு வைத்திய பிரிவுக்குத் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கை குறைக்கப் பட்டதால் எங்கள் மகளுக்கு அனுமதி கிடைக்கவில்லை.



மேற்படி காரணங்களால் யாழ். பல்கலைக் கழகத்தின் சித்த வைத்திய பீடத்தில் சேர்ந்து கொள்ளு வதற்கு விண்ணப்பித்து சித்த வைத்திய பட்டத்துக்கான கற்கை நெறியில் 1986இல் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அங்கு ஒழுங்காகக் கற்றுக் கொண்டிருந்தபோது யாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவட்டத்திலே யுத்தபீதி அதிகரிக்கத் தொடங்கியது. ஆகாய விமானங்களிலிருந்து நடத்தப்பட்ட குண்டு வீச்சினால் கட்டடங்கள் பல தகர்ந்து போயின; உயிரினங்கள் பல காவு கொள்ளப்பட்டன; சித்த வைத்திய வளாகத்தினுள்ளும் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. எங்கள் மகள் பயத்தால் உறைந்து போனாள். காங்கேசன் துறை லங்கா சீமெந்து தொழிற்சாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த எங்களின் இளைய மகன் ஆனந்தநாதன் சகோதரியின் செய்தி அறிந்து அவரைக் கூட்டிக்கொண்டு மட்டக்களப்பு வந்து சேர்ந்தார்.

சித்த வைத்தியப் படிப்பைத் தொடர முடியாத மகள், மாணவ ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டு சில ஆண்டுகள் கடமையாற்றி வந்தார். அந்நாட்களிலே ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்வதற்கான பரீட்சைக்குத் தோற்றி விஞ்ஞான கற்கை நெறிக்குத் தேர்வாகி 1990 - 1991 காலப் பகுதியில் பயிற்சி பெற்று விஞ்ஞான ஆசிரியையாக வெளியேறினார்.

ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருந்த எங்கள் மகளுக்கும் பழுகாமத்தைச் சேர்ந்தவரும் எங்கள் உறவினருமான வித்தியானந்தன் அவர்களுக்கும் திருமணம் செய்து வைத்தோம். வித்தியானந்தன் அவர்கள் ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரியிலும் மொறட்டுவைப் பல் கலைக் கழகத்திலும் கற்று தொழில் நுட்ப உதவியாளராக வெளியேறியவர். கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது பரீட்சையிற்தேறி உதவிப் பொறியியலாளராகப் பதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வு பெற்றார். நீர் விநியோக வடிகாலமைப்புச் சபையின் மட்டக்களப்பு அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

மூத்த சகோதரி ஒருவரையும் மூத்த சகோதரர் இருவரையும் இளைய சகோதரர் ஒருவரையும் கொண்டிருந்த வித்தியானந்தன் அவர்களின் குடும்பமானது பிள்ளைகளின் இளம் வயதிலே தந்தையாரை இழந்து தாயாரின் பராமரிப்பிலேயே வளர்க்கப்பட்டனர். இவ்வாறு வளர்க்கப் பட்டுவரும் காலத்தில் இரண்டாம் மகனாகிய மாணிக்க பிள்ளை என்பவர் இராணுவத்தின் கொலை வெறியில் பலியானார். இவர் கிறிஸ்தவ வேதாகமக் கல்லூரியிற் சேர்ந்து இறுதி ஆண்டு மாணாக்கராக இருந்தவர் என்பதும் விடுமுறை நாள்களில் தனது ஊருக்கு வந்திருந்தபோதே மேற்படி சோகச் சம்பவம் நடந்ததென்பதும் குறிப்பிடத் தக்கது. "துன்பம் ஒரு தொடர் கதை" என்பதும், "பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்" என்னும் முதுமொழிகள் இவர்களின் வாழ்க்கையில் உண்மையானவை என்றே நினைக்கத் தோன்றுகிறது. மேற்படி இழப்பு நிகழ்ந்த சில ஆண்டுகளின்பின் இவர்களுடைய இளைய சகோதரராகிய கோணேசன் அவர்கள் கொழும்பு நோக்கிய அவரது பயணத்தின்போது மட்டக்களப்பைச் சேர்ந்த கொம்மாதுறை என்னும் இடத்தில் வைத்து இராணுவத் தாரால் வாகனத்திலிருந்து இறக்கப்பட்டார். நெல் சந்தைப் படுத்தும் சபையின் சம்மாந்துறை நிலையத்தின் முகாமை யாளராகப் பணியாற்றிய கோணேசன் அவர்கள் காணாமற் போய் ஏறக்குறைய இருபது வருடங்களாகின்றன. கணவரையும் இழந்து வயது வந்த ஆண் பிள்ளைகள் இருவரையும் இழந்து துன்பத்தில் உறைந்தபோது தாயாராகிய செல்லம்மா ஆசிரியை அவர்கள் தமது மகனாகிய வித்தியானந்தன் அவர்களின் பாதுகாப்பைக் குறித்துப் பெரிதும் கவலைப்படலானார். அவரின் கவலையில் நாங்களும் சேர்ந்து கொண்டோம். இதன் விளைவாக வித்தியானந்தன் அவர்களும் எங்களின் மகளும் அவரின் துணைவியருமான தவச்செல்வி அவர்களும் இலங்கையை விட்டு வெளியேறிவிட வேண்டும் எனத் தீர்மானம் மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டனர். இலண்டனுக்குப் போவதற்குரிய சந்தர்ப்பம் கிடைத்தபோது அவர்கள் அதைப் பயன்படுத்தி பிள்ளைகளுடன் 2001இல் புறப்பட்டு விட்டனர்.

தற்போது ஸ்கொத்லாந்தின் கிளாஸ்கோப் பட்டணத்தில் நிரந்தர வதிவிட உரிமை பெற்றவர்களாய் வாழ்ந்து வரும் திரு. திருமதி வித்தியானந்தன் தம்பதியர் தங்கள் தகைமையை அதிகரித்துள்ளனர்.

வித்தியானந்தன் அவர்கள் தமது தொழில் நுட்பக் கல்வியைத் தொடர்ந்து படித்து மேலதிக தகைமையினைப் பெற்றுள்ளார். மொழி பெயர்ப்புத் துறையிலும் பயிற்சி பெற்று பரீட்சையிற் தேறி தொழில் பார்க்கும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளார். தவச்செல்வி அவர்கள் பாலர், ஆரம்ப, இடைநிலை வகுப்புகளிற் கற்பிப்பதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டு அவற்றிற்கான சான்றிதழ்களைப் பெற்றுள்ளார். அத்துடன் தாதிமாருக்கான பயிற்சியையும் நிறைவு செய்துள்ளார். இவர்கள் இருவரும் கிறிஸ்தவ வேத சாஸ்திரக் கல்லூரியிற் சேர்ந்து தேவ ஊழியர்களுக்கான கற்கை நெறியினை நிறைவு செய்துள்ளனர். "தமிழ் நற்செய்தி ஊழியம்" என்னும் பெயருடன் கிறிஸ்தவ சபை ஒன்றினை நிறுவியுள்ள இவர்களின் சபையிலே இலங்கை, தமிழ்நாடு ஆகிய இடங்களைச் சேர்ந்த தமிழ் மக்கள் கடவுளை வழிபட்டு வருகிறார்கள்.

வித்தியானந்தன் அவர்கள் ஸ்கொத்லாந்து நாட்டுக்குப் புதிதாக வரும் அகதிகளை வரவேற்று ஆதரித்து வருவதோடு அவர்களுடைய அகதிக் கோரிக்கை, சமூக நலக் கொடுப்பனவு, சட்டத்தரணிகளை ஏற்பாடு செய்தல், தங்குமிட வசதி முதலியவற்றைத் தன்னலமின்றிச் செய்து கொடுத்து வருகிறார். கிறிஸ்தவ வேதாகமத்தில் குறிக்கப் படும் நல்ல சமாரியனைப் போல் இவர் ஆற்றிவரும் பணி பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

திரு. திருமதி வித்தியானந்தனுக்கு ஜெறுஷா குயிலினி, டெபோரா அருளினி என்னும் இரண்டு மகள்மார் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் கிளாஸ்கோ நகரப் பிள்ளைகளுடன் போட்டி போட்டுப் படித்து முன்னிலையில் இருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றூத் தவநளினி அவர்கள் எங்களின் இளைய மகளாவார். 16.06.1970இல் பிறந்த இவர் எங்களின் கடைசிப் பிள்ளையாதலால் அனைவரதும் அன்புக்குப் பாத்திரராய் விளங்கினார். இயல்பாகவே கல்வியில் நாட்டம் கொண்டிருந்த இவர் க.பொ.த.ப. சாதாரண தரப் பரீட்சையில் அதிக திறமைச் சித்திகளுடன் தேர்ச்சி அடைந்தார். இயல்பாகவே பேச்சுத் திறமையும் விவாத ஆற்றலும் பெற்றிருந்த எங்கள் மகள் சட்டத்தரணியாய் வரும் நோக்கில் உயர்தர வகுப்பிலே கலைப் பிரிவில் சேர்ந்து கற்றிட விரும்பிய போதிலும் நாங்கள் விஞ்ஞானப் பிரிவில் சேர்ந்து கற்றிடுமாறு வலியுறுத்தினோம். எங்களுடைய கட்டாயத்தின் பேரில் விஞ்ஞானப் பிரிவிற் சேர்ந்து படித்த தவநளினி அவர்களின் பரீட்சைப் பெறு பேறுகள் பல்கலைக் கழக அனுமதிக்குப் போதுமானதாக அமையவில்லை. எங்களுக்குப் பெரிய ஏமாற்றம். தவ நளினி அவர்களுக்கு எங்களில் ஏற்பட்ட கோபத்துக்கு அளவேயில்லை. எங்களாற்றான் இந்த நிலை தனக்கு வந்ததென்று விரக்தியின் எல்லைக்கே சென்று விட்டார். நாங்கள் அவரை விஞ்ஞானப் பிரிவிற் சேர்த்தது தவறு தானோ என்று சிந்திக்க வேண்டியதாயிற்று.

மட்டக்களப்பில் வெளிவாரி மாணாக்கர்களுக்காக நடத்தப்பட்டு வந்த பொதுக்கலைப் பட்டப்படிப்புக்கான தகுதிகாண் பரீட்சைக்குரிய வகுப்பில் அவர் சேர்க்கப் பட்டார். கலைப்பட்டத்தைப் பெற்ற பின்னர் சட்டத்துறைக் கான படிப்பை மேற்கொள்ளலாமென்பது எங்கள் திட்டமாயிருந்தது. நாங்கள் இந்த ஒழுங்கினைச் செய்த போதிலும் எங்களிடையே ஏற்பட்ட மனக்கசப்பு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவெளியாகவே இருந்தது. இந்த இடைவெளி காலப் போக்கில் நீங்கி நிலைமை சீராகிவிடுமென எதிர்பார்த்த போதிலும் அதற்கான அறிகுறிகள் காணப்படவே இல்லை.

இந்த நிலையிலே கனடாவில் வசிக்கும் ஒருவருக்கு மட்டக்களப்பில் பெண் பார்க்கிறார்கள் என்ற செய்தியும் அவர்களுக்கு எங்களுடன் சம்பந்தம் ஏற்படுத்துவதற்கு விருப்பம் என்ற செய்தியும் எங்களுக்குக் கிடைத்தன. செய்தி அறிந்து விசாரித்தபோது அக்குடும்பம் எனது கிராமமாகிய தம்பிலுவிலின் அயற் கிராமமான திருக் கோவிற் கிராமத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரின் குடும்பம் என்னும் விபரம் கிடைத்தது. தொடர்பு கொள்ளப் பட்டது. அவர்களின் மகன் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிற் கற்றவரென்றும் கிழக்குத் தொழில் நுட்பக் கல்லூரியிற் பயிற்சி பெற்றவரென்றும் கனடாவில் நிரந்தரமான தொழில் பார்ப்பவரென்றும் அறிந்து கொண்டோம். அவர் கடவுள் பக்தி கொண்டவரென்றும் ஆலய வழிபாட்டிலே மிகுந்த அக்கறை கொண்டவ ரென்றும் ஒழுக்கம், ஒழுங்கு முதலிய நற்பண்புகள் மிக்கவரென்றும் கூறப்பட்டது. ஏற்கனவே அவர்களுடன் எவ்வகைத் தொடர்பும் எங்களுக்கு இருக்காத காரணத்தி னால் தெரிந்த சிலரிடம் விசாரித்துப் பார்த்தோம். அந்தக் குடும்பத்தைப்பற்றி நல்ல செய்திகளே கிடைத்தன. குறிப்பாகக் குடும்பத் தலைவராகிய ஆசிரியர், சிறந்த பக்திமான் என்றும் கிறிஸ்து பெருமானில் பக்தி வைராக்கியம் கொண்டவரென்றும் அறிந்து கொண்டோம்.

பிஜித்தீவுகளிலே பொறியியலாளராகப் பணிபுரிந்து வந்த எங்கள் இளைய மகனோடு தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறியபோது எல்லாம் நல்லபடி இருந்தால் தவநளினி அவர்களுக்கு அந்தத் திருமணத்தைச் செய்து வைக்கலாமென்றும் செலவுக்குரிய பணத்தைத் தான் தருவதாகவும் அறியத்தந்தார். காரியங்கள் விரைந்து மேற்கொள்ளப்பட்டன. குடும்பத் தலைவரான ஆசிரியர் ஏற்கனவே இறைவனடி சேர்ந்து விட்டதால் ஆசிரியரின் மனைவியாரே எங்கள் மகளை கனடாவுக்கு அழைத்துச் செல்வதென்றும் எங்களின் இளைய மகன் பிஜி தீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலிருந்து கனடா சென்று திருமண நிகழ்விலே பங்கேற்ப தென்றும் தீர்மானிக்கப்பட்டன.

கடவுளுடைய ஆச்சரியமான வழிநடத்தலோடு யோசுவா குபேரன் அவர்களுக்கும் றூத் தவநளினி அவர் களுக்கும் கனடாவிலே 16.10.1993இல் திருமணம் நடந் தேறியது. எங்கள் மகன் திருமணத்தில் பங்கேற்றிருந்தார். சாமுவேல் அருண், ஜோன் ஆகாஷ், ஆன் அஷாணி ஆகி யோர் யோசுவா தம்பதியினரின் பிள்ளைச் செல்வங்கள்.

கனடாவுக்கு வந்த தவநளினி அவர்கள் ஆரம்பத் திலே சில நிறுவனங்களில் பணியாற்றிய பின்பு Home Health Care Nursing Assistant க்குரிய பயிற்சியைப் பெற்றுக்கொண்டு VHA நிறுவனத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார். அத்துடன் அடமானக் கடனுதவி அலுவலர்க்கான பயிற்சியினைப் (Mortgage) பெற்று, ஒப்சி டியன் அடமானக் கூட்டுத்தாபனத்தில் (Obsidian Mortgage Corporation) சேர்நது அடமான வசதி ஆலோசகர் (Mortgage Consultant) ஆகவும் பணியாற்றி வருகிறார்.

யோசுவா குபேரன் அவர்களும் றூத் தவநளினி அவர்களும் தங்களின் மூத்தமகன் பிறக்கும் காலத்தில் அவர்களோடு நாங்கள் வந்து நிற்பதை விரும்பினார்கள். அதனை நாங்களும் விரும்பியதால் காரியங்கள் ஒழுங்காக மேற்கொள்ளப்பட்டு 24.06.1996இல் நாங்கள் கனடா வந்து சேர்ந்தோம். தாய் நாட்டின் யுத்த சூழ்நிலையால் அங்கு திரும்பிப்போகும் எண்ணத்தைக் கைவிட்டு கனடாவிலேயே வாழ்ந்து வருகிறோம்.

அண்மையில் எங்களுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க விரும்பிய யோசுவா குபேரன் தம்பதியர் நிலமட்டத்தில் வெளிப்பக்கமாகப் போய் வருவதற்குரிய கதவு அமையப் பெற்ற Basement உடன் கூடிய வீட்டினைக் கொள்வனவு செய்து தேவையான திருத்தங்களைச் செய்து எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். சூரிய வெளிச்சமும் காற்றோட்டமும் இயல்பாகக் கிடைப் பதும் எனது எழுத்து வேலையைத் தொடர்வதற்கான வசதி இருப்பதும் மகிழ்ச்சி தருவனவாய் பேரப்பிள்ளைகளுட னான பொழுது போக்கு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்



விபுலாநந்த அடிகளாரைக் காணக்கூடிய சந்தர்ப் பங்களோ, அறியக்கூடிய சந்தர்ப்பங்களோ எனக்குக் கிடைக்கவில்லை. மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணாக்கனாயிருந்த காலத்தில் 21.07.1947 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எங்கள் கல்லூரி அதிபரால் ஓர் அவசரக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் கூட்டப்பட்டது. இலங்கைப் பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்த விபுலாநந்த அடிகள் இறைவனடி சேர்ந்து விட்டாரென்றும் மட்டக்களப்பைச் சேர்ந்த அப்பெரியாரின் பூதவுடல் ஆனைப்பந்தி விவேகாநந்த மகளிர் ஆங்கில வித்தியாலயத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப் பட்டுள்ளதென்றும் அதிபரவர்கள் அறிவித்ததும் இரண்டு நிமிடங்கள் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. பாடசாலை மாணாக்கர் வகுப்பு வகுப்பாய் ஆசிரியர்களுடன் சென்று அஞ்சலி செலுத்திவந்த பின்னர் மாலை நேரம் பேராசிரியருக்கு மரியாதை செலுத்தும் வகையில் பாடசாலை மூடப்படும் என்றும் அதிபரவர்கள் அறிவித்தார். சி.பா.த. ஆரம்ப வகுப்பு மாணாக்கருடன் நானும் சென்று பேராசிரியரவர்களின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினேன். பௌத்த மதத் துறவி ஒருவரின் பூதவுடல் போன்றே அஃது என் உள்ளத்தில் பதிந்து கொண்டது. காலப்போக்கில் அப்பதிவும் அழிந்து விட்டது.

விபுலாநந்த அடிகளாரையிட்டு அறியவேண்டிய வகையில் அறிந்திராமைக்கு நாங்கள் கிறிஸ்தவர்களாக இருந்தமையே தலையாய காரணமென்பேன். தேசத்துக் கோவிலாகப் புகழ் பெற்றிருந்த திருக்கோவில் ஆலய பரிபாலனத்துக்கு உரியவர்களான எங்கள் பெற்றோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியமை எங்கள் பகுதியில் மிகப்பெரிய தாக்கத்தினை விளைவித்திருந்தது. அத்தாக்கம் கிறிஸ்தவ சமயத்தவர்களுக்கும் சைவ சமயத்தவர்களுக்கு மிடையில் வெளியிற் புலப்படாத ஒரு பிளவை ஏற்படுத்த லாயிற்று. விபுலாநந்த அடிகளாரும் அவரைச் சார்ந்தவர் களும் கிறிஸ்தவ சமயப் பாடசாலைகளுக்குப் போட்டியாக சைவ சமயப் பாடசாலை நிறுவும் பணிமூலம் சைவ சமய மறுமலர்ச்சியினை ஏற்படுத்திட முனைந்தமை சமய அடிப்படையிலான பிளவை மேலும் ஆழமாக்கி விட்டது. இதன் பிரதிபலிப்பாகவே எமது பிரதேசக் கிராமச்சங்கத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்ட அப்பாவுக்கு எதிராக பிரதேச வன்னியனாரை நிறுத்தி அவருக்கு ஆதரவாக விபுலாநந்த அடிகளார் தீவிர பிரசாரம் செய்ததாக அறிகிறோம். போட்டியில் அப்பா வெற்றி பெற்றதோடு தொடர்ந்து மூன்று தடவைகள் அவரே தலைவராக இருக்கவும் செய்தார். நாங்கள் வயதிற் குறைந்த சிறுவர்களாக இருந்ததால் சம்பவங்களை விரிவாக விளங்கிக் கொள்ள முடியாதிருந்தோம்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் வித்துவான் கற்கை நெறிக்காகச் சேர்ந்த பின்னரே விபுலாநந்த அடிகளாரையிட்டு அறிந்துகொள்ளும் வாய்ப்பு எனக்குச் சித்தித்தது. எனக்கு ஆசிரியப் பெருந்தகைக-ளாக அமைந்த பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, சிரேட்ட விரிவுரையாளர் வி. செல்வநாயகம், கலாநிதி சு. வித்தியா னந்தன் ஆகியோர் அடிகளாரிடம் என்னை ஆற்றுப்படுத்தி விட்டனர். அவ்வாறே எங்கள் வித்துவான் வகுப்பு மாணாக் கருக்கு ஆங்கில மொழியைச் சிறப்பான முறையிற் கற்பிக்கும் பொறுப்பினை ஏற்றிருந்த பேராசிரியர் பசே அவர்களும் அடிகளாரை எங்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அடிகளார் தமிழ்ப் பேராசிரியராகப் பணி யாற்றிய காலத்தில் ஆங்கில மொழிப் பேராசிரியராகப் பணியாற்றியவர் பேராசிரியர் 'லுடுவைக்' என்பவராவார். அக்காலத்தில் ஆங்கில மொழிப்பீடத்தில் விரிவுரையாள ராக இருந்த கலாநிதி 'பசே' அவர்கள் தாம் தமது பேராசிரியரைச் சந்திக்கப் போகும் வேளைகளில் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தமிழ்ப் பேராசிரியர் விபுலாநந்த அடிகளாரின் அறையிலிருந்து அவருடன் ஆழமான விரிவுரையில் ஈடுபட்டுக் கொண்டிருப்பாராம். அத்தனை பீடாதிபதிகளும் பேராசிரியர்களும் விபுலாநந்த அடிகளாரிடம் மதிப்பும் மரியாதையுடன் கூடிய அன்பும் கொண்டவர்களாய் இருந்ததைத் தாம் உணர்ந்திருந்ததாக பேராசிரியர் பசே எங்களிடம் மிகுந்த உணர்ச்சி வயப்பட்டவராக உரைத்தது இன்றும் என் செவிப்பறைகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. பேராசிரியப் பெருந்தகைகளால் விபுலாநந்த அடிகளாரிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட நான் அவர் அமரத்துவ மடைந்து பத்து ஆண்டுகள் நிறைவடைந்த பின்னரே அவருக்கு ஆட்பட்டு விட்டதை உணர்ந்தேன். ஆம், அவரைக் காணாமலே அவருக்கு ஆட்பட்டு விட்டேன்.

தமிழ் வித்துவான் கற்கை நெறியை நிறைவு செய்து மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் இணைந்து மூன்று ஆண்டுகளுள் விபுலாநந்த அடிகளாரின் நிறைவு விழா ஒன்றினை 1962 ஜூலை 19ஆம் நாளிலே கல்லூரியில் வைத்திட ஒழுங்குகள் மெற்கொண்டேன். 1814 ஆகஸ்ட் மாதத்தில் மட்டக்களப்பிலே நிறுவப்பட்ட எங்கள் கல்லூரியானது இலங்கை முழுவதிலும் நிறுவப் பட்ட முதலாவது ஆங்கில மொழிக் கல்லூரியாகும். அத்துணைச் சிறப்புக் கொண்ட கிறிஸ்தவ மத அடிப்படை யிலான கல்லூரியின் ஏறத்தாழ நூற்றைம்பதாண்டு வரலாற்றில் அச்சமயத்தைச் சார்ந்திராத பெரியார் ஒருவருக்கு வைக்கப்பட்ட பிரமாண்டமான விழாவாக அஃது அமைந்திருந்தது. மட்டக்களப்புக் கல்வி வலயத்தில் உள்ள உயர்தரப் பாடசாலைகளின் மாணாக்கரும் ஆசிரியர்களும் பங்கு கொண்ட அவ்விழாவானது வரலாற்றுச் சிறப்பினைப் பெற்றுக் கொண்டது. அந்த விழாவின் விளைவாகவே எங்கள் கல்லூரி மாணாக்கரைக் கொண்ட தமிழ்க் கலா மன்றத்தினர் அடிகளாரின் முழு உருவச் சிலை ஒன்றினைச் செய்து 1963ஆம் ஆண்டில் மட்டக்களப்பு நீதிமன்ற முன்றலிலே நிறுவிப் பெருமை சேர்த்துக் கொண்டனரென்பதை இங்கு சுட்டுதல் பொருத்த மென நினைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிகளாரின் மாணாக்கரான புலவர்மணி அவர் களையும் நாவலர் அவர்களின் மாணாக்கர் பரம்பரையி-னராக பண்டிதமணி அவர்களையும் இணைத்து என்னால் எழுதப்பட்ட "வாழையடி வாழை" என்னும் நூல் 1962 செப்டம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டமையும் அந்நூல் விபுலாநந்த அடிகளாருக்கு சமர்ப்பிக்கப்பட்டமையையும் குறிப்பிடுவதில் மகிழ்கிறேன். சமர்ப்பணச் செய்யுளை கீழே தருகிறேன்.

"உள்ளத் தடத்திற் குருவாய் அமர்ந்துறையும்
வள்ளல்விபு லாநந்த மாதவனைத் - தெள்ளுதமிழ்
வாழ்வை நினைந்தே அவனடிக்கண் வைத்திந்நூல்
தாழ்வேன் தருகதமிழ் என்று"

எனது துணைவியாரின் ஊராகிய பழுகாமத்திலுள்ள மகாவித்தியாலயத்தின் நிறைவேற்று அதிபராக 1970இல் பதவியேற்றுப் பணியாற்றிய காலத்தில் அவ்வித்தியாலயம் நிறுவப்பட்டு இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவடை வதனை முன்னிட்டு 1972 செப்டம்பர் மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை, அக்டோபர் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்களிலும் வெள்ளிவிழா நிகழ்ச்சிகளை நடத்திட ஒழுங்குகள் மேற்கொண்டோம். தமது வாழ்நாள் முழுவதையும் கல்விப் பணிக்கென அர்ப்பணித்த விபுலா நந்த அடிகளாரின் முழு உருவச் சிலையினை பாடசாலை முன்றலில் நிறுவுவதெனவும் அச்சிலையினை அடிகளா ரின் முதன்மை மாணாக்கர் பேராசிரியர் சு. வித்தியானந் தன் அவர்களைக் கொண்டு திறந்து வைப்பதெனவும் பேராசிரியரின் தலைமையில் விழா நடத்துவதெனவும் தீர்மானித்து தீர்மானங்களைச் சிறப்பாக நடைமுறைப் படுத்தினோம்.

பாடசாலை முன்றலில் நிறுவப்பட்ட அடிகளாரின் சிலையானது பாடசாலை ஒன்றில் நிறுவப்பட்ட முதல் முழு உருவச் சிலை என்னும் பெருமையினைப் பெற்றிருப்ப தோடு எமது பகுதி மாணாக்கரின் கல்வி உயர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஓர் உந்து சக்தியாக விளங்கி வருகிறதென் பதையும் குறிப்பிடுவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணை அதிபராகக் கடமையாற்றிய வேளையில் 22.07.1974இல் விபுலாநந்த அடிகளாரின் நினைவு தினத்தை முத்தமிழ் விழாவாகச் சிறப்புடன் நடத்தினோம். பிள்ளைகளின் மத்தியிலே பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, பொது அறிவுப் போட்டி ஆகியவற்றை நடத்தி பரிசில்கள் வழங்கினோம். அதிபரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த விபுலாநந்த அடிகளாரின் மார்பளவுச் சிலைக்கு அலுவலகத்தின் முன்றலில் அழகிய பீடமொன்றினை அமைத்து அதன்மேல் வைத்து மேலே குடை ஒன்றினையும் வைத்து அழகு செய்துள்ளோம்.

களுதாவளை மகா வித்தியாலயத்தில் 15.10.1976 தொடக்கம் 31.12.1977 வரையிலான குறுகியகாலம் அதிப ராகக் கடமையாற்றிய காலத்திலே 19.07.1977இல் விபுலா நந்த அடிகளாரின் நினைவு நாளினை மிகச் சிறப்பாக நடத்தினோம். அங்கும் அதிபரின் அலுவலகத்தினுள் வைக்கப்பட்டிருந்த அடிகளாரின் மார்பளவுச் சிலையை அதற்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட அழகிய பீடம் ஒன்றில் வைத்துச் சிறப்புச் செய்துள்ளோம்.

பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய அதிபராக நியமனம் பெற்று 01.01.1978இல் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் விபுலாநந்த அடிகளார் நினைவு நாளில் சிறப்பு விழாக்கள் இடம்பெற்று வந்தன. பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலய உயர்தர மாணவ இலக்கிய மன்ற வெளியீடான "உள்ளம்" சஞ்சிகையின் இரண்டாம் இதழை "விபுலாநந்தர் நினைவு" மலராகவும் மூன்றாம் இதழை "புலவர்மணி நினைவு" மலராகவும் முறையே 1978, 1979ஆம் ஆண்டுகளில் வெளியிட்டோம். மேற்படி உள்ளம் சஞ்சிகை தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதானது ஓர் ஆரோக்கியமான செயல்பாடாகும்.

நானும் எனது துணைவியாரும் 24.06.1996இல் கனடா வந்தோம். கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் அன்பர்கள் 2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் "சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம்" என்னும் பெயரில் ஓர் அமைப்பினை ஆரம்பித்தார்கள். மேற்படி மன்றமானது 19 ஜூலை 2003இல் விபுலாநந்த அடிகளாரின் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலே மாபெரும் விழா ஒன்றினை நடத்தியது. அவ்வி ழாவிலே அடிகளாரை மையப்படுத்தும் புத்தகக் கண் காட்சி ஒன்று இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்ச மாகும். அத்துடன் "விபுலம்" என்னும் சிறப்பு மலர் ஒன்றும் அவ்விழாவிலே வெளியிடப்பட்டமை சிறப்பு நிகழ்வாகும்.

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றமானது சுவாமி களது ஐம்பத்தேழாவது ஆண்டு நிறைவு விழாவினை 2004 ஜுலை 18ஆம் திகதி எனது தலைமையில் நடத்தி உள்ளது. விழா நடைபெற்ற அரங்குக்கு அடிகளாரின் படைப்புகளை நூல் வடிவாக்கியுதவிய பெருமகனாராகிய அமரர் அருள் செல்வநாயகம் அவர்களின் உயரிய பணியினைப் பாராட்டும் வண்ணம் "அருள் செல்வநாயகம் அரங்கு" எனப் பெயரிடப்பட்டமை மன நிறைவுடன் சுட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மேற்படி விழாவிலே அடிகளாரின் பாடங்கேட்கும் பெரும் பேற்றினைப் பெற்றுக் கொண்டோரில் கனடாவில் வாழ்ந்துவந்த திரு. செபஸ்தி யன் மனுவேல் லீனா, திரு. வேலுப்பிள்ளை போல் நல்ல நாயகம், திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை ஆகிய மூவரும் பாராட்டப்பட்டமை விழாவுக்குப் பெருமை தந்த தாய் அமைந்தது. மட்டக்களப்பு சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச்சபைப் பிரமுகரும் நூற்றாண்டு நினைவு மலர் தொகுப்பாசிரியரும் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபருமான கலாநிதி வித்துவான் சா. கமலநாதன் அவர்கள் விழாவுக்கு குடும்பமாக வருகை தந்து சிறப்புச் செய்தமை குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தியாகும். அப்பெரியாரும் விழாவிலே பாராட்டப்பட்டு பெருமைப் படுத்தப்பட்டமையும் இங்கு சுட்டுதற் குரியதாகும்.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வருகைதந்த பின்னர் என்னால் எழுதி வெளியிடப்பட்ட, "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" (2002), "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" (2005) ஆகிய இரண்டு நூல்களிலும் அடிகளாரைப் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருப்பது உள்ளத்தை உவக்கச் செய்கிறது.

"அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சமய, சமூக, எழுத்துப் பணிகளும் பெற்றுக் கொண்ட பட்டங்கள், பரிசில்கள் பாராட்டுகளும்

## எனது சமய, சமூகப் பணிகள்

### (அ) சமயப் பணிகள்:

கிறிஸ்தவ சமயத்தவனாகிய நான் ஆலய வழி பாடுகளில் ஒழுங்காகக் கலந்து கொள்வதோடு சபைகளின் செயற்பாடுகளிலும் பங்கேற்று வருகிறேன்.

1959ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற உள்ளூர் அருளுரையாளர்களுக்கான (Local Preacher's Examination) பரீட்சையிலே தேர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ஆலய வழிபாடுகளை நடத்தி அருளுரை வழங்கும் தகைமையைப் பெற்றுக்கொண்டேன். மட்டக் களப்புப் பிரதேசத்தின் பல ஆலயங்களிலும் அருளுரை வழங்கிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்தபின் மெதடிஸ்த சுயாதீன தமிழ்ச் சபைகளில் இடையிடையே அருளுரையாற்றி வருகிறேன். ஸ்கொத்லாந்து தேசத்துக்குச் சென்றிருந்த வேளையிலும் அத்தேசங்களிலிருந்த தமிழ்த் திருச்சபைகளில் அருளுரை ஆற்றிடும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தன.

கிறிஸ்தவ சமயந் தொடர்பான நத்தார், பெரிய வெள்ளி, ஈஸ்டர் ஞாயிறு முதலிய சிறப்புப் பண்டிகை களைக் குறித்து என்னால் எழுதப்பட்ட கட்டுரைகள் இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்தன. அவ்வாறான கட்டுரைகள் தற்போது கனடாவில் வெளி யிடப்படும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பிரசுரமாகின்றன.

கனடாவிலிருந்து அண்மைக் காலமாக வெளியிடப் பட்டுவரும் 'சிறகு' என்னும் மாதாந்த பத்திரிகையிலே நான் எழுதும் கிறிஸ்தவ சமய அடிப்படையிலான கட்டுரைகள் தொடர்ந்து பிரசுரமாகி வருகின்றன. இப்பத்திரிகையில் கிறிஸ்தவ சமய அடிப்படையிலான படைப்புகளோடு பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்களைப் பற்றிய படைப்புகளும் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்க காரியமாகும்.

## (ஆ) சமூகப் பணிகள்:

### கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் (1962)

எனது முதலாவது படைப்பாகிய "வாழையடி வாழை" என்னும் புலவர் சரித நூல் 1962 செப்டம்பர் மாதத்திலே வெளியிடப்பட்டது. நூலின் வெளியீட்டு விழா வின் முடிவிலே விழாவிற் பங்கேற்ற அறிஞர் பெரு மக்களின் ஒருமனத்தோடு கூடிய தீர்மானத்துக்கியைய "கிழக்கிலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்" அமைக்கப் படலாயிற்று.

சங்கத்தின் தலைவராக, வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா அவர்களும் துணைத்தலைவராகத் திரு.எஸ். பொன்னுத்துரை அவர்களும் பொதுச் செயலாளராக நானும் தெரிவு செய்யப்பட்டோம்.

### எழுத்தாளர் சங்கம் ஆற்றிய பணிகளுள் ஒருசிலவற்றைக் கீழே தருகிறோம்:

1. திரு. அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்கள் எழுதிய "திரைக் கடல் தீபம்" என்னும் நாடகம் இலங்கைக் கலைக் கழகத்தின் முதற் பரிசினை 1962இல் பெற்றுக் கொண்டமையைப் பாராட்டிப் பெருமைப் படுத்தினோம்.

2. பிரபல எழுத்தாளர்களான இரசிகமணி கனக செந்திநாதன், இளங்கீரன், டொமினிக் ஜீவா ஆகியோரை வரவேற்றுப் பாராட்டியுள்ளோம்.

3. தலைவர், வித்துவான் எப்.எக்ஸ்.சி. நடராசா, துணைத் தலைவர் எஸ். பொன்னுத்துரை ஆகியோரின் பெரு முயற்சியினால் வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் "காப்பியப் பெருவிழா" மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

### மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம் (1967)

பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் துணை அதிப ராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மட்டக்களப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிட வேண்டுமென்னும் எனது நீண்டகாலக் கனவினை நனவாக்கிடும் பணியில் இறங்கினேன். கிழக்கிலங்கையின் அறிஞர் பெருமக்களின் ஒத்துழைப்போடு 01.11.1967 தீபாவளித் தினத்தன்று சங்கம் அமைக்கப் படலாயிற்று.

தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களும் துணைத் தலைவர்களாக பண்டித வித்துவான் வி. சீ. கந்தையா, அல்ஹாஜ் ஆ.மு. ஸரிபுத்தீன், திரு. செ. இளையதம்பி ஜே.பி ஆகியோரும் பொருளாளராக திரு. பண்டிதர் தம்பாப்பிள்ளை பிரசித்த நொத்தாரிஸ் அவர்களும் பொதுச் செயலாளராக நானும் தெரிவு செய்யப்பட்டோம்.

**தமிழ்ச் சங்கம் மேற்கொண்ட செயற்பாடுகள் சிலவற்றைக் கீழே தருகிறோம்.**

1. 20.08.1969 தொடக்கம் தமிழ் இலக்கண வகுப்புகளை மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடத்தி வந்தோம்.

2. மதுரைத் தமிழ் சங்கத்தார் நடத்தி வந்த பண்டிதர், புலவர் வகுப்புகளை அவர்களின் அனுமதியுடன் அவர்களின் முகவர்களாக மட்டக்களப்பில் நடத்திட ஒழுங்குகள் மேற்கொண்டோம்.

3. ஜனவரி 1969 தொடக்கம் பொதுக்கலைத் தகுதித் தேர்வுக்கான (GAQ) வகுப்புகளை மட்டக்களப்பில் ஆரம்பித்தோம்.

4. தமிழ்ச் சங்கத்துக்கென கல்லாற்றைச் சேர்ந்த திரு. கிறிஸ்ரி செல்லப்பா அவர்களின் அன்பளிப்பாக களுவாஞ்சிக்குடியில் காணி ஒன்றினைப் பெற்றுக் கொண்டோம். காணியைத் துப்பரவு செய்து வளைத்துவர முட்கம்பிவேலி போடப்பட்டது.

5. குருமண்வெளியைச் சேர்ந்த தனவந்தரான திரு. திருச்செல்வம் போடியார் தமது காலஞ்சென்ற சகோதரரான திரு. திருத்தணிகாசலம் அவர்களின் நினைவாக எமது சங்கக் காணியினுள் கிணறு ஒன்றினை அமைத்துத் தந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கட்டடம் கட்டுவதற்கான திட்டத்துடன் அடிக்கல் நாட்டினோம்.

**குறிப்பு:** சங்கம் மேற்கொண்ட அனைத்துக் கல்விப் பணிகளுக்கும் கிழக்குப் பிராந்திய கல்வித் திணைக்களம் பூரண ஆதரவு தந்ததோடு பிராந்திய ஆசிரியர்களை எங்கள் வகுப்புகளிற் பங்கு கொள்ளுமாறு ஊக்குவித்தும் வந்தது.

## இலங்கைச் சாகித்திய மண்டலம்

இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் இக்காலக் கவிதைக் குழுவின் உறுப்பினராக 1969 ஜுலை மாதத்தில் நான் நியமிக்கப்பட்டேன். இக்குழுவின் தலைவராக வித்தியாரத்தினம், நவாலியூர் சோ. நடராஜா அவர்கள் பணியாற்றினார். குழு உறுப்பினர்களாக திரு.எஸ். வேலா யுதபிள்ளை அவர்களும் ஜனாப் கமால்தீன் அவர்களும் நானும் நியமிக்கப்பட்டிருந்தோம். சாகித்திய மண்டலத்தின் பொதுச் செயலாளராக திரு. கே.ஜி. அமரதாச அவர்கள் பணிபுரிந்தார்.

## ஆற்றப்பட்ட சில பணிகள் வருமாறு:

1. தமிழ்க் கவிதைக்கான வருடாந்த சாகித்திய மண்டலத்தின் பரிசிலுக்குத் தகுதியான நூல்களைப் பரிசீலனை செய்தோம். அவற்றினையிட்ட கலந்துரையாடல்கள் இடம் பெற்றன.

2. கவிதை பற்றிய கருத்தரங்கினையும் கவியரங்கு ஒன்றினையும் மட்டக்களப்பிலே நடத்தும் பொறுப்பு எனக்குத் தரப்பட்டது.

21.11.1969இல் கவிதை பற்றிய கருத்தரங்கையும் கவியரங்கையும் மட்./ கோட்டைமுனை மகாவித்தியா லயத்தில் நடத்தினோம். முற்பகலில் கருத்தரங்கினை புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் தலைமை யில் நடத்தினோம். 'கவிதை' பற்றிய சிறப்புச் சொற்பொழி வினை கவிராசகேசரி, பண்டிதர் ஆ. சபாபதி அவர்கள் ஆற்றினார். பிற்பகலில் நடைபெற்ற கவியரங்கிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களே தலைமை தாங்கினார். கிழக்கிலங்கையின் புகழ்பெற்ற கவிஞர்கள் கவியரங்கில் பங்கேற்றனர். இரண்டு நிகழ்ச்சிகளிலும் ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணாக்கர், அறிஞர் பெரு மக்கள் பலர் கலந்து கொண்டமை நிறைவு தருவதாக இருந்தது.

## பிரசைகள் குழு

மட்டக்களப்பு மாவட்டப் பிரசைகள் குழுவின் உறுப்பினராக 1980ஆம் ஆண்டு தொடக்கம் பணியாற்றி உள்ளேன். அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அவர்க ளுடனும் திரு. பிறின்ஸ் காசிநாதர் அவர்களுடனும் சேர்ந்து பணியாற்றிய அனுபவம் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது.

போரதீவுப்பற்று பிரசைகள் குழுத் தலைவராகவும் அதேகாலப் பகுதியில் பணி புரிந்துள்ளேன். குழுவின் செயலாளராக எனது வித்தியாலய எழுது வினைஞராகக் கடமை புரிந்த திரு. ஆ. சிவப்பிரகாசம் அவர்கள் பணி யாற்றக் கிடைத்தமை பேருதவியாக அமைந்திருந்தது. இலங்கை இராணுவம், இந்திய அமைதி காக்கும் படை, இலங்கை விசேட அதிரடிப்படை ஆகியவற்றுடன் நெருங் கிய தொடர்பு கொண்டு பிரசைகள் குழுச் செயற்பாடு களை மேற்கொண்டபோது எதிர்கொண்ட சவால்கள் மிகப்பல. கடவுளின் துணையோடு முடிந்தவரை மக்கள் பணியினை ஆற்றிவந்தோம்.

## சுவாமி விபுலாநந்தர் சிறுவர் நிலையம்

நாட்டின் யுத்த சூழ்நிலையில் ஏற்பட்ட பாதிப்பு களால் தந்தையரை அல்லது தாய்மாரை அல்லது இருவரையும் இழந்த நிலையிலிருந்த எங்கள் பிரதேசத் தைச் சேர்ந்த சிறுவர்களுக்காக பழுகாமத்திலே "சுவாமி விபுலாநந்தர் சிறுவர் நிலையம்" என்னும் பெயரில் ஓர் இல்லத்தினை நடத்தி வந்தோம். அதன் தலைவராக 1985 - 1990 காலப் பகுதியில் பணி ஆற்றினேன். பிரதேச மக்களும் தொண்டு நிறுவனங்களும் பொது அமைப்புக ளும் வழங்கிய நன்கொடைகள் மூலம் சிறுவர்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்கக் கூடியதாக இருந்தமையை நன்றியுடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

## (இ) எனது எழுத்துப் பணிகள்:

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் மாணாக்கனாய் இருந்த காலத்தில், "எனது ஊர்", "எனது பாடசாலை", "நான் விரும்பும் பெரியார்" முதலிய விடயங்களையிட்டு நான் எழுதிய சிறிய கட்டுரைகள் பத்திரிகைகளின் சிறுவர் பிரிவில் பிரசுரமாகி உள்ளன. பயிற்சி பெற்ற ஆசிரியராகி வெளியேறிய போதிலும் எழுத்துத் துறையில் நாட்டம் ஏற்படவில்லை.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் வகுப்பு மாணாக்கனாக இருந்த காலத்திலேயே எனது பேரன்புக்குரிய திரு. அடைக்கலமுத்து (அமுது) அவர்களின் தூண்டுதலால் எழுத்துத் துறைக்குள் ஈர்க்கப்பட்டேன். பேராதனைத் தமிழ் சங்கத்தால் ஆண்டு தோறும் வெளியிடப்பட்டு வந்த இதழான 'இளங்கதிரின்' 1958ஆம் ஆண்டுக்கான ஆசிரியராக அமுது அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். பிரபல எழுத்தாளரான அன்ரன் செக்கோ அவர்களால் எழுதப்பட்ட "The Bear" என்னும் ஓரங்க நாடகத்தைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுமாறு அமுது அவர்கள் என்னைக் கேட்டுக் கொண்டார். அவரின் கோரிக்கையினை ஏற்று மொழி பெயர்ப்பில் ஈடுபட்டேன். எனக்கே ஆச்சரியமாக இருந்தது; மொழி பெயர்ப்புச் சிறப்பாக அமைந்திருந்தது. எனது ஆசிரியப் பெருந்தகை சிரேட்ட விரிவுரையாளர் செல்வநாயகம் அவர்களின் பாராட்டுதலைப் பெற்றுக்கொண்டமையானது வசிட்டர் வாயால் மகரிஷி பட்டம் பெற்ற உணர்வைத் தந்தது. மொழி பெயர்ப்பு நாடகமான 'கரடி' பலரின் பாராட்டுக்களை எனக்குப் பெற்றுத் தந்தது.

வித்துவான் பட்டம் பெற்று மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் ஆசிரியனாக அமர்ந்து கொண்டதைத் தொடர்ந்து கட்டுரைகளை எழுத ஆரம்பித்தேன். வீரகேசரி, தினகரன், சுதந்திரன் வார இதழ்கள் சன்மானம் தந்து ஊக்குவித்தன. விபுலாநந்த அடிகள், ஆறுமுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர், மகாகவி பாரதியார் எனத் தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள் பலரையிட்டு கட்டுரைகள் எழுதப்பட்டன. விபுலாநந்த அடிகளாரின் பன்முகப் பணிகளையிட்டு ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளேன். 1968ஆம் ஆண்டு வீரகேசரியில் வெளிவந்த "நல்லைநகர் நாவலரும் காரைநகர் வித்தகரும்" என்னும் ஒப்பீட்டுவகைக் கட்டுரை யானது எனது மதிப்புக்குரிய ஆசான் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட தோடு அவரால் எழுதப்பட்ட "நாவலர் இருவர்" என்னும் கட்டுரைக்கு உந்து சக்தியாக இருந்ததாகவும் அவர் எழுதியிருந்தார். அப்பெருந்தகையாளரின் பாராட்டு என்னை மேலும் ஊக்குவித்தது என்பதனை நன்றி உணர்வுடன் அறிவித்திடக் கடமைப்பட்டுள்ளேன். என்னால் எழுதப்பட்ட மேற்படி கட்டுரையானது 1969இல் வெளியிடப்பட்ட "அடிகளார் படிவ மலர்" என்னும் நினைவு மலரில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அவ்வாறே 02.11.1995இல் வீரகேசரி பத்திரிகையில் வெளி வந்த "அறிவொளி பரப்பிய புலவர்மணி" என்னும் எனது கட்டுரையானது, 1998இல் கொழும்புத் தமிழ்ச் சங்க வெளியீடாக வெளிவந்த "தமிழ் தந்த புலவர்மணி" என்ற நூலில் மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளமையையும் இங்கு சுட்டுதல் பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

மட்./ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய காலத்தில் 19.07.1978இல் வெளியிடப்பட்ட வித்தியாலய மலரான 'உள்ளம்' விபுலா நந்த அடிகள் நினைவு மலராகவும் 19.07.1979இல் வெளி யிடப்பட்ட 'உள்ளம்' புலவர்மணி நினைவு மலராகவும் மலர்ந்துள்ளன என்பதனைக் குறிப்பிடுவதில் மகிழ்கிறேன்.

கனடாவுக்கு வந்த பின்னரும் தமிழ்ச் சான்றோர் களையிட்ட கட்டுரைகளை எழுதி வந்தேன். திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 'உதயன்', திரு சச்சி மாஸ்டர் அவர்களின் செந்தாமரை என்பன எனது கட்டுரைகளை உவந்தேற்றுப் பிரசுரித்தன. காலப் போக்கில் ஆசிரியர் திரு. அவர்களின் முழக்கமும் எனது கட்டுரைகளைப் பிரசுரித்து வந்ததோடு 30.12.2005இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன்மொழியாள் என்பவர் மூலம் நடைபெற்ற என்னுட னான நேர்காணலையும் பிரசுரித்துள்ளது. அத்துடன் அவர்களின் சிறப்புப் பிரசுரமான 'பறை' யிலே எனது "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" நூலின் விரிவான ஓர் அறி முகத்தினையும் திரு. காசி ஆனந்தன் அவர்களையிட்டு என்னால் எழுதப்பட்ட "முளையிற் தெரிந்த விளையும் பயிர்" என்னும் கட்டுரையினையும் பிரசுரித்து உதவி உள்ளது. மேற்படி மூன்று பத்திரிகைகளின் ஆசிரிய அன்பர்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மன நிறைவடைகிறேன். எழுத்தாளர்களை ஊக்குவித்துவரும் இப்பெருமக்களின் பணி தொடர வாழ்த்துகிறேன்.

கனடா தமிழீழச் சங்கம் 2003இல் வெளியிட்ட அதன் வெள்ளி விழா மலரில் என்னால் எழுதப்பட்ட "பண்டைத் தமிழர் அக வாழ்க்கை", "பண்டைத் தமிழரின் ஈதற் சிறப்பு" ஆகிய இரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. கொழும்புத் தமிழ்ச் சங்க மாதாந்த சஞ்சிகையான 'ஓலை'யின் 2004 மே மாத இதழிலே "தமிழ் மொழியும் தமிழ்ச் சங்கங்களும்" என்னும் தலைப்பில் என்னால் எழுதப்பட்ட கட்டுரையும் இடம் பெற்றுள்ளது. ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை தனது பத்தாவது ஆண்டு நிறைவினையும் நாவலர் பெருமானின் 125ஆவது நினைவு தினத்தினையும் குறித்து 2004 செப்டம்பரில் வெளியிட்ட "நாவலர் பெருமான்" என்னும் மலரிலே, "ஆறுமுகநாவலரும் கிறிஸ்தவர்களும்" என்னும் தலைப் பில் என்னால் எழுதப்பட்ட கட்டுரையும் இடம் பெற்றிருப்ப தைச் சுட்டிட விழைகிறேன். ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகம் 2004 நவம்பரில் வெளியிட்ட "ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியக் கட்டுரைகள்" என்னும் நூலிலே என்னால் எழுதப்பட்ட "தொல்காப்பிய மும் ஈழத் தமிழகமும்" என்னும் கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. அவ்வாறே 2007 மார்ச் மாதத்தில் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி நினைவுப் பெருமன்ற மானது கொழும்பில் வெளியிட்ட, "தமிழ்ப் பேரறிஞர் சைமன் காசிச்செட்டி வரலாறும் பணிகளும்" என்னும் நூலிலே, "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் சைமன் காசிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செட்டி 1807-1860" என்னும் எனது கட்டுரையும் இடம் பெற்றிருக்கிறது என்பதனையும் குறிப்பிட விரும்புகிறேன். எனது கட்டுரைகளின் தொகுப்பு ஒன்றினை எதிர்வரும் ஆண்டில் வெளியிடலாமென உத்தேசித்துள்ளேன்.

## எழுதி வெளியிட்ட நூல்கள்:

### 1. வாழையடி வாழை (1962)

மட்டக்களப்புத் தமிழகத்தின் ஒளிவிளக்காகத் திகழ்பவர் விபுலாநந்த அடிகள். அவ்வாறே யாழ்ப்பாணத் தமிழகத்தின் ஒளி விளக்காகத் திகழ்பவர் நாவலர் பெருமான். இவர்களின் வாழையடி வாழையெனக் கொள் ளப்படும் தகைமை பெற்றவர்களுள் முதன்மையானவர்கள் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைஅவர்களும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுமேயாவர். இவ்விரு வாழை யடி வாழைகளையிட்டு அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே எழுதப்பட்ட நூலே வாழையடி வாழையாகும்.

"வாழையடி வாழை" 1962 செப்டம்பர் மாதம் வெளியிடப்பட்ட 103 பக்கங்களைக் கொண்ட சிறியதொரு புலவர் சரித நூலாக இருந்தபோதிலும் இத்துறையில் எழுந்த முன்னோடி நூலாகவே கொள்ளப்படுகிறது. இந்நூலானது மட்டக்களப்புத் தமிழகத்தையும் யாழ்ப்பா ணத் தமிழகத்தையும் இணைக்கும் நூலாகவும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருந்த சான்றோர்களையிட்டு எழுதப்பட்ட நூலாகவும் தோற்றுவாயில் ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றை இரத்தினச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டும் நூலாகவும் அறிஞர்களின் பாராட்டினைப் பெற்றுத் திகழ்கிறது.

**வாழையடி வாழையினையிட்டுக் கூறப்பட்ட கருத்துகள் சிலவற்றைக் கீழே தருதும்:**

**செய்தி:** கண்டியிலிருந்து வெளிவந்த பத்திரிகை (1963) "ஈழத்தில் வாழும் முது தமிழ் அறிஞர்களில் இருவரான பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களினதும் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களினதும் வாழ்க்கை வரலாற்றை இந்த நூல் கூறுகிறது. ஈழநாட்டில்வாழ் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களது வரலாற்றையும் இந்நாட்டு அறிஞர்கள் வாழை யடி வாழையாகச் செய்துவரும் தமிழ்த் தொண்டையும் தொடக்கத்தில் தொகுத்துக்கூறி இவற்றுடன் பண்டிதமணி யினதும் புலவர்மணியினதும் வாழ்க்கை வரலாற்றினை இணைத்துக் கூறியமை சிறப்பாக அமைந்துள்ளது. பலரும் படித்துப் பயனடையக்கூடிய எளியநடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. "என்னுரை" தொடக்கம் "முடிவுரை" வரையும் படிப்போர் மனதைக் கவரும் வண்ணம் இந்நூல் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கது. எமது மத்தியில் வாழும் அறிஞர்களுள் இருவரின் வாழ்க்கை வரலாற்றினை ஒரு நவீன முறையில் எழுதி உள்ள திரு. செபரத்தினம் அவர்களின் முயற்சி போற்றத்தக்கது.

**புதினம் (மார்கழி 1962)**

"...தோற்றுவாய் என்னும் முதல் அத்தியாயத்தில் ஈழத்துப் பூதந்தேவனார் தொடக்கம் விபுலாநந்த அடிகள் ஈறாக ஈழத்தில் புலவர் பரம்பரையை இலக்கிய வழியைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டு விடயத்தினுட் புகுவது ஒரு பூரணத்துவத்தை இந்நூலுக்குக் கொடுக்கிறது. பண்டி தமணியையும் புலவர்மணியையும் தனித்தனி எழுதாது ஒவ்வொரு அத்தியாயத்திலுமே சேர்த்து எழுதிய திறன் போற்றுதற்குரியது.

பண்டிதமணியின் தனித்துவத்தைக் குறிக்கும் எழுத்து என்ற பகுதியை ஆசிரியர் எடுத்தாண்ட முறை பிரமிப்பூட்டுவதாயிருக்கறது. கைதேர்ந்த, நுட்பமான, இரசனைத் திறமையுள்ள ஒருவரால்தான் இந்த 'நறுக்கு மாலையை' வாசனையூட்டிப் பரிமளிக்கச் செய்ய முடியும். காலத்துக்கேற்ற நூல்; அருமையான முயற்சி; ஆதரிக்க வேண்டியது பொதுமக்கள் கடன்...."

**Daily News (December 1962)**

"Valaiyadi Valai" is a neatly produced little book dealing with the life and work of Pandithamani Kanapathipillai and Pulavarmany Periyathambipillai who have kept alive the highest traditions of Tamil scholarship



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and learning. In this interestingly written work Vidhwan K. Sebaratnam has carefully complied all the relevant facts and given us an insight into the ideals that have inspired these two eminent men of letters, who have been responsible for moulding hundreds of teachers. It is indeed a worthy tribute to two men whose first love was and is, Tamil. The first chapter of the book gives a potted history of Ceylon Tamil literature which should be found very useful.

'வாழையடி வாழை'யின் வெளியீட்டு விழா மட்டக்களப்பு நகர மண்டபத்திலும் அறிமுக விழா யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் நடைபெற்றன.

நூலின் முடிவுரையிலே, "இலங்கைப் பல்கலைக் கழகமானது பண்டிதமணி ஐயாவையும் புலவர்மணி ஐயாவையும் கௌரவிப்பதற்கு இனியேனும் முன்வர வேண்டும். பல்கலைக் கழகங்களோடு தொடர்புடைய தமிழறிஞர்கள் இவ்விடயத்தில் ஊக்கம் கொண்டு இப் பெரியார்களிருவரையும் கௌரவிப்பதற்குரிய வழிவகை களைச் செய்திடல் வேண்டும்" எனக் குறிப்பிட்டிருந்தேன். பண்டிதமணி அவர்கள் உயிரோடிருந்த காலத்தில் 1978 மே மாதத்தில் இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டார்கள். புலவர்மணி அவர்கள் இறை வனடி சேர்ந்த பின்னர் 1997 ஏப்ரல் மாதத்தில் இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்யப் பட்டார்கள் என்பதனைத் தெரிவிப்பதில் மகிழ்கிறேன்.

## விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும் (1994)

கொழும்புப் பல்கலைக் கழகத்திலே பட்டப்பின் படிப்பான கல்வி டிப்ளோமாக்கற்கை நெறியினைப் பின் பற்றிய 1975-76ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் ஆய்வுக் கட்டுரை ஒன்றினைக் கையளித்திடல் ஒவ்வொருவருக்கு மான நியதியாயிருந்தது. "விபுலாநந்த அடிகளாரின் கல்விச் சிந்தனைகள்" என்னும் பொருளில் எனது ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்தேன். அக்கட்டுரையினை எழுது வதற்குப் பல நூல்களையும் கையெழுத்துப் பிரதிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் ஆராய வேண்டிய தாயிற்று.

கற்கை நெறியினை நிறைவு செய்து பாடசாலைக் கடமைகளை ஏற்றதைத் தொடர்ந்து நான் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் விபுலாநந்த அடிகளையிட்ட நூலொன்றினை எழுத வேண்டும் என்னும் எண்ணம் மேலோங்கியது. அதன் விளைவுதான் "விபுலாநந்த அடிகளாரின் வாழ்வும் வளமும்" என்னும் நூலாகும். நூலினை இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சினூடாக வெளியிட முயற்சி மேற்கொண்ட போதிலும் அம்முயற்சிக்கு சில தடைகள் ஏற்பட்ட போதிலும் நூல் அச்சிடப்பட்ட பின்னர் நூலின் கணிசமான பிரதிகளை அமைச்சு கொள்வனவு செய்யுமென வாக்குறுதி அளிக்கப்பட்டதோடு வாக்குறுதியை நாணயமாக நிறைவேற்றவும் செய்தது. எனது அன்புக்குரிய மாணாக்கர் திரு.கு. நாகேந்திரன் அவர்களின் முயற்சியினால் எனது நூலினை கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் வெளியிட்டமையை இங்கு நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன். நூலின் வெளியீட்டு விழா மேற்படி கொழும்பு சைவ முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இடம் பெற்றதென்பதனையும் நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

84 பக்கங்களைக் கொண்ட இந்நூலானது விபுலா நந்த அடிகளாரின் கல்விப் பணிகளையும் கல்விச் சிந்த னைகளையுமே முக்கியப்படுத்தி எழுதப்பட்டிருப்பதால் அவருடைய முழுமையான தரிசனத்தை இந்நூலிற் காணமுடியாதென்பதனை விநயத்துடன் கூறிவைப்பது எனது கடமையாகிறது.

## நயனங்கள் பேசுகின்றன
## (சிறுகதைத் தொகுதி) 2000

இலக்கியக் கட்டுரைகளை எழுதி வந்த எனக்கு சிறுகதைகளில் ஈர்ப்பினை ஏற்படுத்தியவர் என்னுடைய நண்பரும் சிறந்த எழுத்தாளரும் புகழ் பெற்ற சிறுகதை எழுத்தாளருமான திரு.எஸ். பொன்னுத்துரை அவர்களே ஆவார். அவருடைய வழிகாட்டலுடன் எழுதிய எனது முதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை 'தாய்மை' ஆகும். அஃது எனது தாயகமான மட்டக்களப்புத் தமிழகத்தின் கிராமியப் பேச்சு நடையில் கிராமத்து மருந்து மாந்திரிக நம்பிக்கையைக் கருவாகக் கொண்டது. 13.05.1962இல் எனது கதை வீரகேசரி ஞாயிறு இதழில் வெளிவந்தது. அதனைத் தொடர்ந்து வீரகேசரியு டன் தினகரன், சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளும் எனது சிறுகதைகளைப் பிரசுரிக்கத் தொடங்கின.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த பின்னர் உதயன், செந்தாமரை, தமிழர் செந்தாமரை, முழக்கம் ஆகிய பத்திரிகைகளிலும் என்னுடைய சிறுகதைகள் இடம் பெறத் தொடங்கின.

"ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர்" என்னும் எனது சிறுகதையானது உதயன் பத்திரிகையின் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி 1998இல் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலாம் பரிசுக்குரிய தங்கப்பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டது.

உதயன் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு நிறைவை ஒட்டி 1999இல் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில், "தமிழன் என்றொரு இனமுண்டு" என்னும் எனது சிறுகதையானது நாலாவது பரிசுக்குரிய தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டது.

"காலத்தினாற் செய்த உதவி" என்னும் எனது சிறுகதையானது தமிழர் செந்தாமரைப் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு நிறைவினை ஒட்டி 1999இல் நடத்தப் பட்ட சிறுகதைப் போட்டியில் பாராட்டப்பட்டு பணப் பரிசினைப் பெற்றுக் கொண்டது.

1962ஆம் ஆண்டிலிருந்து என்னால் எழுதப்பட்டு வந்த சிறுகதைகளுள் பதினாறினைத் தெரிந்தெடுத்து, "நயனங்கள் பேசுகின்றன" என்னும் தலைப்பிலான சிறுகதைத் தொகுதியினை மணிமேகலைப் பிரசுரமாக 2000ஆம் ஆண்டில் வெளியிட்டோம். மணிமேகலைப் பிரசுர அதிபர் திரு. ரவி தமிழ்வாணன் அவர்கள் தமது "எழுத்தளார் - பதிப்பாளர்" முதலீட்டுத் திட்டத்தின் அடிப்படையில் எனது சிறுகதைத் தொகுதியினை வெளி யிட்டமை நன்றிக்குரிய செயலாகும். எனது சிறுகதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதர வில் 25.11.2000ஆம் திகதியன்று கனடாவில் வெளியிடப் பட்டதென்பதனை மிகுந்த நன்றி உணர்வுடன் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது சிறுகதைத் தொகுதி வெளியிடப்பட்ட பின்னரும் சிறுகதைகள் எழுதும்பணி தொடர்கிறது. இலண்டன் 'புதினம்' பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு நடத்தப்பட்ட உலகளாவிய சிறுகதைப் போட்டியில் என்னால் எழுதப்பட்ட "அடைப்புக் குறி" என்னும் சிறுகதை முதலிடத்தைப் பெற்று இலங்கைப் பணம் ஐம்பதாயிரம் (50,000/=) ரூபாவினைப் பெற்றுத் தந்தது. மேற்படி சிறுகதை புதினப் பத்திரிகை யிலும் பிரசுரிக்கப்பட்டதோடு பரிசு பெற்ற 'புதினம்' சிறு கதைகள் என்னும் தொகுப்பு நூலில் முதலாவது சிறு கதையாகவும் இடம் பெற்றுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

என்னால் எழுதப்பட்ட சிறுகதையான "கண்ணூறு" இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு 1994இல் வெளியிட்ட "பரிசுக் கதைகள்" என்னும் தொகுப்பு நூலில் முதலாவது சிறுகதையாக இடம் பெற்றுள்ளமையையும் அறியத் தருவதில் மகிழ்கிறேன்.

## ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் (2002)

19ஆம் நூற்றாண்டிற் பிறந்து தமிழ்த் தொண்டாற் றித் தங்கள் முத்திரையினைப் பதித்துச் சென்ற ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களுள் பதினெண்மரின் வரலாறுகூறும் புலவர் சரித நூலாகிய "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" 2002ஆம் ஆண்டில் சென்னை மணிமேகலைப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. இந்நூலிலே புத்தளம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சான்றோர்களின் தமிழ்ப் பணிகள் விளக்கமாகக் கூறப்படுகின்றன.

உலகிலே தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களி லெல்லாம் இந்நூலின் அறிமுக விழாக்களை மணிமேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப் பிரசுரத்தார் நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்க செயற் பாடாகும். கனடாவிலும் இந்நூலின் அறிமுகவிழா கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் சிறப்பாக நடந்தேறியமையை நன்றியுடன் குறிப்பிடுவது எனது கடமையாகும்.

ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் என்னும் மேற்படி நூலுக்கு 2003 மே மாதத்தில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்திலே நடைபெற்ற ஈழத்துத் தமிழ்ப் புலவர் மகா நாடானது ஈழத்துப் பூதந்தேவனார் பெயரால் நிதிப்பரிசிலும் சான்றிதழும் வழங்கியமையை விநயமாகச் சுட்டிட விழைகிறேன். தமிழ்ப் புலவர் கழகத்தினர் எனது நன்றி யறிதலுக்கு உரியவர்கள்.

## தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் (செப்டம்பர் 2005)

தமிழ் நாட்டினைத் தங்கள் நாடாகவும் தங்கள் ஊராகவும் கொண்டு அங்கு சென்று வாழ்ந்து தமிழ்த் தொண்டாற்றிச் சாதனைகள் படைத்த ஈழத்துச் சான்றோ ரின் எண்ணிக்கை மிகப்பல. அத்தகைய சான்றோருள் இருபத்துநான்கு பேரின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கூறும் நூலே தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் ஆகும். இச்சான்றோரின் வரலாறு, அவர்கள் வாழ்ந்த கால அடிப்படையிலேயே தரப்பட்டுள்ளது. இவர்களுள் பலர் ஈழத்திலும் தமிழ்ப்பணியாற்றியுள்ள போதிலும் இந்நூலா னது அவர்கள் தமிழ் நாட்டில் ஆற்றிய பணிகளையே சிறப்பாக விளக்கி நிற்கிறது.

ஏற்கனவே நான் எழுதிய, "நயனங்கள் பேசுகின் றன", "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" ஆகிய நூல்களை வெளியிட்ட சென்னை மணிமேகலைப் பிரசுரத்தாரே இந்நூலினையும் 2005இல் வெளியிட்டுள்ளனர்.

தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் என்னும் இந்நூலின் வெளியீட்டு விழாவினை மணிமேகலைப் பிரசுரத்தார் கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்திலே மிகச் சிறப்பாக நடத்தியுள்ளனர். அறிமுக விழாக்கள் மட்டக் களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றன. கனடாவிலே கனடா எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில் எனது நூலின் அறிமுக விழா 08.04.2006இல் நடைபெற்றது.

சிறந்த நூல்கள் தமிழ் பேசும் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் அறிமுகம் செய்யப்படவேண்டும் என்னும் உயரிய நோக்கத்தினைக் கொண்டுள்ள இலண் டன் திரு. தமிழினி குலேந்திரன் அவர்கள் தாம் நிறுவி யுள்ள அறக்கட்டளைமூலம் அளித்துவரும் ஆதரவினால் மணிமேகலைப் பிரசுரத்தினர் எனது நூல் உட்பட வேறுசில நூல்களையும் ஐக்கிய அரபு அமீரகத்திலே அல்அயின், அபுதாபி, துவை, ராசல்கைமை, அஜ்மான் ஆகிய இடங்களில் 2006 மார்ச் மாதத்தில் அறிமுகஞ் செய்துள்ள னர். நூல்கள் பெரும் வரவேற்பினைப் பெற்றதாகத் தெரிகிறது. மணிமேகலைப் பிரசுரத்தாரும் திரு. தமிழினி குலேந்திரன் அவர்களும் நன்றிக்குரியவர்கள்.

'வாழையடி வாழை' என்னும் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர், தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் என்னும் நூல்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், தமிழ் நாட்டு பல்கலைக் கழகங்கள் என்பனவற்றிலும் உசாத்துணை நூல்களாக ஏற்கப்பட்டுள்ளன என்னும் செய்தி மன நிறைவு தருகிறது.

## கவிஞர் கந்தவனத்தின் கவிதை வளம் (நவம்பர் 2005)

தமிழ் மொழியிலுள்ள இலக்கிய இலக்கண நூல் களை ஓதியுணர்ந்து தெளிந்த மெய்யுணர்வும் பிரபந்தஞ் செய்யும் பெருவலிமையும் உடையவராகவும் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் தம்மிருகண்களாகக் கொண்டு அவற்றின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்து வருபவராகவும் மனிதப்பண்பு மிக்கவராகவும் "கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்" என்னும் அமைப் பினை உருவாக்கிய முன்னோடிகளுள் முதன்மையானவ ராகவும் கனடாவில் வாழ்ந்துவரும் கவிநாயகர் அவர்களின் கவிதை வளத்தினைக்கூறும், "கவிஞர் கந்தவனத்தின் கவிதை வளம்" என்னும் நூலானது 2005 நவம்பர் மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டது. சென்னை காந்தளகத்தினரால் அச்சிட்டுத் தயாரிக்கப்பட்ட இந்நூலானது தோற்றுவாய் தொடக்கம் நிறைவுரை வரை பன்னிரு அத்தியாயங்களால் ஆனதாகும்.

மேற்படி நூலில் கவிஞரின் தெய்வப்பாடல்கள், தேசியப் பாடல்கள், சமூகப்பாடல்கள், சிறுவர்களுக்கான பாடல்கள், காணிக்கைப் பாடல்கள், நினைவஞ்சலிக் கவிதைகள் என்பன விரிவாக நோக்கப்பட்டு அவற்றின் கவிதை வளம் காணப்பட்டுள்ளன. கவிஞரின் தனித்துவமான படைப்புகள் தனியாக நோக்கப்பட்டுள்ளன.

கவிநாயகரின் எண்ணற்ற படைப்புகளில் புதைந்திருக்கும் கவிதை வளத்தினைக் கண்டறிந்து சுவைத்திட விழைவோரை எனது நூலானது ஓரளவாகுதல் ஆற்றுப்படுத்துமென்பது எனது நம்பிக்கை.

## திரட்டி எழுதிய நூல்

### கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் வாழ்க்கைக் குறிப்புகள் - இரண்டாம் பகுதி

"நம்மிடை இருந்து மறைந்துபோன புகழ்பூத்த பணி செய்தவர்களையும் இப்போது வாழ்கின்ற அத்தகையவர்களையும் அவர்கள் வாழ்ந்த கிராம, வட்டார, மாநில மட்டத்தில் இப்போதுள்ள சந்ததியினருக்கு அறிமுகப் படுத்த வேண்டிய கட்டாயம் நமக்குண்டு. குறைந்தது அவர்களை அறிந்த மக்களிடையாவது நினைவுபடுத்துவதால்தான் நமது வாழ்க்கை வளர்ச்சியை கணித்தறிய முடியும்" என்னும் தெளிந்த நோக்குடன் திரு.க.தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்) அவர்கள் கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டித் தொகுத்திடும் பணியில் ஈடுபட்டார். அவருக்குத் திரு. இரா நாகலிங்கம், திரு. அஜந்தா ஞானமுத்து முதலிய ஒரு சிலர் உதவிட முன்வந்தனர்.

மேற்படி குழுவினர் - சிலைவடிவம் பெற்ற செம்மல்கள், இலக்கியப் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், புலவர்கள், கூத்துக்கலைஞர்கள் என 63 புகழ்பூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைந்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகளைத் திரட்டி எடுத்து திரு. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்) அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு முதலாம் பகுதியை 2001ஆம் ஆண்டில் ரொரன்ரோ ஜீவா பதிப்பகத்தில் அச்சிட்டு ஒரு நிழல் வெளியீடாக வெளியிட்டனர்.

கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்களின் இரண்டாம் பகுதியைத் திரட்டி எழுதும் பணியினை திரு. செல்வராசகோபால் அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்.

பணி ஓரளவு சிரமமாக இருந்த போதிலும் அதன் அவசியத்தை உணர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. ஏற்கனவே இப்பணியில் உதவி செய்து வந்தவர்களோடு கொழும்பு தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திரு. பெ. விஜயரத்தினம் அவர்கள் வித்துவான் ந. நாகலிங்கம் அவர்கள், கவிஞர் சோ. ஞானதேசிகன் அவர்கள், அதிபர் திரு.த. சாந்தலிங்கம் அவர்கள், சிற்பக் கலைஞர் டாக்டர் மா. கந்தசாமி அவர்கள் இலங்கையிலிருந்து விபரங்களைத் திரட்டி அனுப்பி வைத்தார்கள். திரு. செல்வராசகோபால் அவர்களிடமும் சிலரையிட்ட விபரங்கள் இருந்தன. விபரங்கள் அனைத்தையும் திரட்டி எடுத்தேன். மொத்தமாக 119 தமிழரினதும் 26 இஸ்லாமியரதும் வாழ்க்கைக் குறிப்புகளும் சேர்க்கப்பட்டன.

திரட்டப்பட்ட 145 புகழ்பூத்த மைந்தர்களின் வாழ்க்கைக் குறிப்புகளின் அடிப்படையில் துறவற நெறியில் நின்று கிழக்கிலங்கை மண்ணின் உயர்ச்சிக்கு உரமான உத்தமர்கள், சிலை வடிவம் பெற்ற செம்மல்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், கலாநிதிகள், புகழ்பூத்த மூத்த எழுத்தாளர்கள், அரசியற் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா, சமய சமூகத் தொண்டர்கள், தமிழ்மொழி வளர்க்கும் புலவர்கள், வித்துவான்கள், பண்டிதர்கள், கவிஞர்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள், இசைக் கலைஞர்கள், ஓவிய சிற்பக் கலைஞர்கள், தமிழ் மொழி வளர்க்கும் இஸ்லாமியத் தமிழறிஞர்கள், பின்னிணைப்பு தமிழறிஞர்கள், கடல் கடந்து தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும் தமிழ் மைந்தர்கள் என வகைப்படுத்தி எழுதினோம். கிடைத்த புகைப்படப் பிரதிகளை ஏற்ற இடங்களில் தொகுத்துக் கொண்டோம்.

என்னால் திரட்டி எழுதிக் கொடுக்கப்பட்ட மேற்படி நூலினை திரு. செல்வராசகோபால் அவர்கள் தொகுத்து 2003இல் வெளியிட்டார். இந்நூலின் புதுக்கிய இரண்டாம் பதிப்பு 2005 ஜூலை மாதம் வெளியிடப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## நான் பெற்றுக்கொண்ட பட்டங்கள், பரிசில்கள், பாராட்டுகள்

### பட்டங்கள்:

இலங்கை இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு 1993இல் நடத்திய தேசிய தமிழ்ச் சாகித்திய விழாவில் தமிழியல் வளர்ச்சிக்கு நான் ஆற்றிய பணியினைப் பாராட்டி "தமிழ் ஒளி" என்னும் பட்டத்தினை வழங்கியது.

கிழக்குப் பல்கலைக் கழகம் 2004இல் நடத்திய அதன் பொதுப்பட்டமளிப்பு விழாவின்போது எனக்கு கௌரவ இலக்கிய முதுமாணிப்பட்டம் வழங்கியது.

### பரிசில்கள்:

இலங்கைக் கலைக்கழகத் தமிழ் நாடகக்குழு 1967இல் நடத்திய ஓரங்க நாடக எழுத்துப் போட்டியில் பணப் பரிசிலும் பாராட்டுப் பத்திரமும் கிடைத்தன.

கனடாவின் உதயன் பத்திரிகை அதன் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி வட அமெரிக்காவில் வாழும் எழுத்தாளர்களுக்காக 1998இல் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்று சான்றிதழும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டன.

கனடா உதயன் பத்திரிகையின் மூன்றாவதாண்டு நிறைவினை முன்னிட்டு 1999இல் நடத்தப்பட்ட சிறுகதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்று சான்றிதழும் தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டன.

கனடா தமிழர் செந்தாமரைப் பத்திரிகையின் மூன்றாவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு 1999இல் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பாராட்டுதலுடன் பணப் பரிசிலும் வழங்கப்பட்டன.

2003இல் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடை-பெற்ற ஈழத்துப் புலவர் மகாநாட்டிலே எனது "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூல் பாராட்டப்பட்டு ஈழத்துப் பூதந்தேவனார் பெயரால் நிதிப்பரிசிலும் சான்றிதழும் எனக்கு வழங்கப்பட்டன.

இலண்டன் 'புதினம்' பத்திரிகை அதன் பத்து ஆண்டு நிறைவு தொடர்பாக அகில உலக ரீதியில் 2005இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசிலாக இலங்கைப் பணமாக ரூபா 50,000/- வழங்கப்பட்டது.

**பாராட்டுகள்:**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவினை 20.12.2003இல் கொண்டாடிய போது தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் பண்பாட்டைப் பேணுதற்கும் ஆற்றிவரும் அரும்பெரும் பணிகளைப் பாராட்டி நிறைகுடக் கேடயம் வழங்கப்பெற்றது.

கனடாவில் செயற்படும் தமிழர் தகவல் என்னும் மாதாந்த தகவல் மஞ்சரியின் பதினைந்தாவது விருது வழங்கும் வைபவம் 12.02.2006இல் நடைபெற்றபோது தமிழ்ப்பணி மற்றும் எழுத்துப் பணிகளில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக நான் ஆற்றிவரும் சேவைகளுக்கான தங்கப்பதக்கமும் தமிழர் தகவல் விருதும் எனக்கு வழங்கப்பட்டன.

எனது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் வகையில் கனடா தமிழ் எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையமானது 08.04.2006இல் பெருவிழா எடுத்தும் பவள விழா மலர் வெளியிட்டும் பெரும் சிறப்புச் செய்துள்ளது.

கனடாவில் இயங்கிவரும் ஆர்.ஆர். கிரியேஷன் (R.R. Creation) அமைப்பானது அதன் 2006ஆம் ஆண்டுக்கான நாடகப் பெருவிழாவினை 11.11.2006இல் நடத்தியபோது எனது தமிழ்ப்பணியினைப் பாராட்டும் வகையில் தங்கப் பதக்கம் வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் எழுத்தாள நண்பர்கள்



## திரு. குரு அரவிந்தன் அவர்கள்

குரு அரவிந்தன் அவர்கள் தமது பதினான்கு வயதிலேயே எழுதத் தொடங்கியவர். "அணையாத தீபம்" என்னும் அவருடைய சிறுகதை ஈழநாட்டிலே பிரசுரமாகிப் பரபரப்பை ஏற்படுத்தியதாகக் கொள்ளப்படுகிறது. யாழ்ப்பாண மாணவர் வட்டம் நடத்திய சிறுகதைப் போட்டியில் அவர் பரிசு பெற்றுள்ளார்.

1996 இல் உதயன் பத்திரிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் வழங்கப் பெற்ற குரு அரவிந்தன் மிகுந்த உற்சாகத்தோடு எழுதத் தொடங்கினார். எழுதுதல் அவருக்கு கைவந்த கலையாகி விட்டது. சமகால நிகழ்ச்சிகளை, பிறந்தமண்ணின் உறவுகளது வேதனைகளை, அன்றாட அனுபவங்களை, சமூகத்தின் பலத்தை, பலவீனங்களை சிறுகதைகளாகவும் குறுநாவல் களாகவும் நாவல்களாகவும் புனைவதில் அற்புதமான ஆற்றலைப் பெற்றுக் கொண்டார்.

தமிழ் நாட்டின் ஆனந்தவிகடன், கல்கி, குமுதம், ஜேர் மனியின் வெற்றிமணி, பிரான்சின் உயிர்நிழல், இங்கிலாந்தின் புதினம், இலங்கையின் வீரகேசரி, தினக்குரல் முதலிய பத்தி ரிகைகளும் சஞ்சிகைகளும் குரு அரவிந்தன் அவர்களின் ஆக்கங்களை விரும்பிப் பிரசுரித்தன. அவருடைய படைப்புக ளின் களம் குறுகிய வட்டத்தினுள் முடங்கிக் கிடக்காமல் பூகோள அளவிலே பரந்து விரிந்து அமைவதே அவருக்குக் கிடைக்கும் பரந்த அளவிலான வரவேற்புக்குக் காரணமாகும்.

கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையம் 2000ஆம் ஆண்டில் வெளியிட்ட "அரும்பு" என்னும் சிறுகதைத் தொகு தியிலே இடம்பெற்ற பன்னிரு கதைகளுள் குரு அரவிந்தன் எழுதிய "இலை உதிர்க்கும் மரங்கள்" என்னும் சிறுகதையே முதற் கதையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

என் காதலி ஒரு கண்ணகி, இதுதான் பாசம் என்பதா?, நின்னையே நிழல் என்று ஆகியவை குரு அரவிந்தன் அவர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதிகளாம். "உறங்குமோ காதல் நெஞ்சம்" அவரால் வெளியிடப்பட்ட குறுநாவல் ஆகும். "உன்னருகே நானிருந்தால்", "எங்கே அந்த வெண்ணிலா", "நீர் மூழ்கி நீரில் மூழ்கி" என்னும் மூன்று படைப்புகளும் அவரது நாவல்களாம். இவற்றோடு "நெய்தலும் மருதமும்" என்பது அவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும்.

வருங்காலப் பிரசைகளாகிய தமிழ்ச்சிறார்களை குரு அரவிந்தன் அவர்கள் மறந்துவிடவில்லை. தமிழ்ச்சிறார்களுக்கு இலகுவழியிற் கல்வியைப் புகட்டிட விழைந்த அவர் "நதியே! காதல் நதியே" என்னும் இசையும் கதையும் அடங்கிய குறுந் தட்டினையும், "மலரே! காதல் மலரே!" என்னும் குறுந்தட்டினையும், சிறுவர் கற்பதற்கான "தமிழ் ஆரம்" என்னும் ஒளி இழையினையும், சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய "தமிழ் ஆரம்" என்னும் குறும் தட்டினையும், சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய ஒலி நாடாவினையும் வெளியிட்டு உதவி உள்ளார். இவற்றோடு அவர்பணி நின்றுவிடவில்லை. தமிழ் ஆரம் பயிற்சி மலர் 1, பயிற்சி மலர் 2, பயிற்சி மலர் 3 ஆகியவற்றுடன் தமிழ் ஆரம் சொல் தேடலையும் தயாரித்துத் தந்துள்ளார். புலம் பெயர்ந்து வாழும் இளைய தலைமுறையினரின் நல்வாழ்வினையிட்டுச் சிந்தித்து அவர்களின் தமிழ்க் கல்விக்காகக் குரு அரவிந்தன் அவர்கள் ஆற்றியுள்ள பணியானது காலத்தாற் செய்யப்பட்ட நன்றியாகவே கொள்ளப்படுகிறது. குரு அரவிந்தன் அவர்கள் சிறந்த திரைக்கதை வசன கர்த்தாவாகவும் முத்திரை பதித்துள்ளார். கனடாவிற் தயாரிக்கப்பட்டுப் பலரின் பாராட்டைப் பெற்ற வெற்றிப் படங்களாகிய "சுகம் சுகமே", "சிவரஞ்சனி", "வேலி" ஆகியவற்றிற்குத் திரைக்கதை வசனகர்த்தாவாகவும் விளங்குகிறார்.

19.06.1993 இல் அமைக்கப்பெற்ற கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையத்தினர், "நயனங்கள் பேசுகின்றன" என்னும் எனது சிறுகதைத் தொகுதியினைப் பெருமனதுடன் வெளியிட முன்வந்தபோது இணைய உறுப்பினர்களுடன் ஒரு-வராக இருந்த குரு அரவிந்தன் அவர்களும் விழாவிற் பங்கேற்று ஆதரவு வழங்கிய அவரது பெருந்தன்மையை நன்றியுடன் நினைவு கூருகிறேன். அவ்விழாவின் பின்னரே குரு அரவிந்தன் அவர்களின் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. பழகத் தொடங்கிய பின்னர் அவருடைய பண்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழமான அறிவும் இனிமையான சுபாவமும் அவரிலே ஓர் ஈர்ப்பினை ஏற்படுத்திவிட்டன. அவருடைய மலர்ந்த முகமும் மென்மையான இனிய பேச்சும் பழகுவோரைக் கவர்ந் திழுக்கவே செய்யும்.

கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையம் அதன் பத்தாவது ஆண்டு விழாவினை 20.12.2003இல் நடத்தியபோது மூத்த எழுத்தாளர்கள் மூவர் பாராட்டப்பட்டார்கள். கலாநிதி க.தா. செல்வராசகோபால், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகியோருடன் எனக்கும் பாராட்டுக் கிடைத்தது. குரு அரவிந்தன் அவர்களே அக்கால கட்டத்தில் இணையச் செயலாளராகப் பணியாற்றினாரென்பது இங்கு குறிப்பிடத் தக்கது. அவருடைய செயலாற்றும் திறமைக்கு அவ்விழா ஓர் உதாரணமாகத் திகழ்ந்தது.

எனது எழுபத்தைந்தாண்டு நிறைவு தொடர்பாக எழுத்தாளர் இணையம் "பவள விழா" வினைச் சிறப்பாக நடத்தியது. இணையம் வெளியிட்ட பவள விழா மலரிலே தம்பி குரு அரவிந்தன் அவர்களும் ஒரு கட்டுரை எழுதி இருந்தார். "கிழக்கே உதித்து மேற்கில் ஒளிரும் சூரியன்" என்னும் தலைப்பிலான அக்கட்டுரையிலிருந்து ஒரு பந்தியைக் கீழே தருகிறோம்.

"எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் ஈழத்தின் கிழக்குத் திசையில் ஒரு அதிசயம் நடந்தது. புரட்டாதி மாதம் இருபத்து நான்காம் திகதியன்று ஒரே சமயத்தில் இரண்டு சூரியன்கள் எப்படித் தோன்றின என்று எல்லா மக்களும் அதிசயித்தனர். வானத்திலே ஒன்றும், தம்பிலுவில் என்ற புகழ் பெற்ற கிராமத்தில் ஒன்றுமாய்த் தோன்றியபோது ஒரு சிலருக்கு மட்டும் அந்த உண்மை புரிந்தது. தம்பிலுவிலில் உதித்த ஆதவன் எங்கள் தமிழுக்கு ஒளிதர உதித்ததால், "தமிழ் ஒளி" என்று தமிழ் ஆர்வலர்கள் பிறிதொருநாள் அவருக்கு மறுபெயர் சூட்டி மகிழ்ந்தனர். அந்தத் தமிழ் ஒளி வேறுயாருமல்ல அது எங்கள் வித்துவான் க. செபரத்தினம் அவர்கள்தான்"

"அன்பீனும் ஆர்வ முடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு" என்னும் குறளின் பொருள் குரு அரவிந்தன் அவர்களின் எழுத்தில் விளக்கம் பெறுகிறதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டிதர், கலாநிதி ம. செ. அலெக்ஸ்சாந்தர் அவர்கள்



யாழ்ப்பாணத்திலே 1934 ஐப்பசி 19ஆம் திகதி பிறந்த திரு. அலெக்ஸ் சாந்தர் அவர்கள், ஆரம்பக் கல்வியை அமெரிக்கமிஷன் தமிழ்ப் பாடசாலை யிலும் ஆங்கிலமொழி மூலமான உயர் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். அங்கு சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் திறமைச் சித்திகளுடன் முதலாம் பிரிவிற் தேறினார். அதனைத் தொடர்ந்து, இலண்டன் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர பரீட்சையிற் தேர்ச்சியடையும் நோக்குடன் அவர் ஸ்ரான்லி கல்லூரியிற் சேர்க்கப்பட்டார். உயர்தர பரீட்சையிற் தேர்ச்சியடைந்த பின்னர் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற் சேர்ந்து பயிற்றப்பட்ட தமிழாசிரியராக வெளி-யேறினார்.

மலையகப் பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய அலெக்ஸ்சாந்தர் அவர்கள், விசேட ஆங்கில ஆசிரியர் பயிற்சியை மேற்கொள்வதற்காக பலாலி ஆசிரியர் கலாசாலையிற் சேர்ந்து கொண்டார். தமிழ் மொழியில் இயல்பாகவே அவர் கொண்டிருந்த பற்றினால் அம்மொழியில் உயர்கல்வியை மேற்கொண்டு பாலபாண்டிதம், பண்டிதம் ஆகிய தேர்வுகளிலும் சித்தியடைந்தார். 1970ஆம் ஆண்டு வெளிவாரித் தேர்வில் பட்டதாரிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். "கல்விக்குக் கரையில்லை" என்பதனை நன்குணர்ந்திருந்த திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் வாழ்நாள் நீடித்த கல்வியிலே ஆழமான பற்றுறுதி கொண்டிருந்தார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திலே பயின்று கல்வி டிப்ளோமாப் பட்டத்தினையும் அவர் பெற்றுக்கொண்டார். முதுமாணிப் பட்டப்படிப்பிற்காகத் தமது பெயரைப் பதிவு-செய்துகொண்ட திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதியிற் சித்தியடைந்த போதிலும் நாட்டுச்சூழல் நிலையால் இரண்டாம் பகுதிப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போய் விட்டது.

1973இல் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் மட்டக்களப்பு, அளுத்கம, கொழும்புத்துறை, பலாலி ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் விரி-வுரையாளராகப் பணியாற்றி உள்ளார். அவர் தமிழாசிரியர் பயிற்சியினைப் பெற்றுக் கொண்ட கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகப் பணியாற்றிய மையையும் தாம் விசேட ஆங்கில ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொண்ட பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில மொழியூடான பயிற்சிக்குரிய விரிவுரையாளராக நியமிக்கப்பட்டமையையும் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் நினைவுகூருவதில் மகிழ்ச்சியடைகிறார்.

1983இல் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்ற திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் தேசிய கல்வி நிலையத்தில் தமிழ் மொழிமூலக் கற்பித்தலுக்குத் தேவையான நூல்களை ஆக்கும் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். வித்துவான் சி. குமாரசுவாமி, கலாநிதி துரைராசா, கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்), திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி), திரு. வை.கா. சிவப்பிரகாசம் (வைகாசி) முதலிய அறிஞர் பெருமக்களை உறுப்பினர்க-ளாகக் கொண்ட மேற்படி குழுவானது 22 வெளியீடுகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

1987ஆம் ஆண்டில் யாழ். குடாநாடு முழுவதற்குமான தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சிக்குரிய முழுநேரத் தொலைக்கல்விப் பணிப்பாளராகத் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் நியமிக்கப்பட்டு 1993ஆம் ஆண்டுவரை அப்பணியி னைச் செவ்வனே செய்தார். ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு அமைய வழிகாட்டலுடன் அவர் ஆற்றிய பணி அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத் தக்கது.

1993ஆம் ஆண்டில் கனடாவுக்கு வந்து சேர்ந்த திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் ஒன்ராறியோ ஆசிரியர் தகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைப் பெற்று தமது ஆசிரியர் பணியினை கனடாவிலும் தொடர்வதைப் பார்க்கிறோம். தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரியின் நிர்வாக அதிபராய் விளங்கிய திரு.சு. இராச ரத்தினம் அவர்கள் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் வியத்தகு திறமையை நன்கு பயன்படுத்திக் கொண்டார். தமது நிருவாகத்திலுள்ள தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் வகுப்புத் தமிழ்ப் பிரிவுக்குத் தலைவராகத் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களை நியமித்த திரு. இராசரத்தினம் அவர்கள் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களின் பயன்தரும் ஆலோசனைகள் பலவற்றையும் நடைமுறைப்படுத் தலானார். திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களுடன் தமிழ்க்கலை தொழில் நுட்பக்கல்லூரியில் ஆசிரியனாகப் பணியாற்றிடும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தமையிட்டு பெருமையடைகிறேன்.

ரொறன்ரோ கல்விச்சபை புலம் பெயர்ந்து கனடாவில் குடியேறியுள்ள தமிழ் மாணாக்கருக்கேற்ற தமிழ்ப் பாட நூல்களையும் குழந்தைப் பாடல்களையும் ஆக்குவதற்கென அதிபர் பொன். கனகசபாபதி அவர்களின் தலைமையில் நியமிக்கபட்ட குழுவில் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்டார். முதலாம் தரம் தொடக்கம் ஏழாம் தரம் வரையிலான வகுப்புகளுக்குரிய பாட நூல்களை மேற்படி குழு ஆக்கிக் கொடுத்தமை நன்றியுடன் குறிப்பிடப்பட வேண்டிய செயற்பாடாகும்.

அவ்வாறே ஒன்ராறியோ மாகாண கல்விச்சபையால் முதலாம் வகுப்புத் தொடக்கம் மூன்றாம் வகுப்பு வரைக்கு மான தமிழ்ப் பாட நூல்களை எழுதுவதற்கு 1977இல் தெரிவு செய்யப்பட்ட குழுவின் தலைவராகத் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் நியமிக்கப்பட்டார். புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மாணாக்கர் இலகுவான முறையிற் கற்பதற்கு கனடாவின் பொதுப் பாடத்திட்டத்துக்கமைய மிகவும் சிறந்த நூல்களை மேற்படி குழு தயாரித்து வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

"மொழியும் சமயமும்" திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களது இரண்டு கண்கள். மொழி வளர்ச்சிக்கு எவ்வாறு உழைத்தாரோ அவ்வாறே சமயச் செயற்பாடுகளிலும் பங்கேற்று உழைத்துள்ளார். அவருடைய உரையாடலின்போது "இயேசுவே இரக்கமாயிரும்" என்னும் சொற்றொடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படுவதை நம்மால் அவதானிக்க முடியும். கடவுளுக்குப் பயந்து நடப்பவரான திரு. அலெக்ஸ்சாந்தரின் உயர்வுக்கு அவருடைய பெற்றோரின் தெய்வ பக்தியும் அவரது தெய்வ பக்தியுமே முக்கிய காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. ரொறன்ரோவின் கத்தோலிக்க மாதாந்த தமிழ் வெளியீடான "அன்பு மக்களே" என்னும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக எவ்வித ஊதியமும் பெறாது அவர் பணி யாற்றியுள்ளார். பத்திரிகை வெளியிடும் அலுவலகத்துக்குப் போய் இரண்டொரு மணித்தியாலங்கள் பணியாற்றுவதில் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

கல்வித் தேடலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி ஓய்வின்றி உழைத்துவரும் திரு. அகெ்ஸ்சாந்தர் அவர்களின் கல்விப் பணிகளைப் பாராட்டி தமிழர் தகவல் நிறுவனத்தினர் தமது பத்தாவது ஆண்டு நிறைவு விழாவிலே அவருக்கு விருது வழங்கித் தங்கப் பதக்கம் அணிவித்துச் சிறப்புச் செய்துள்ளனர்.

அவ்வாறே 2003இல் தமிழர் தகவல் நிறுவனத்தினர் தாம் நடத்திய கனடா தின விழாவிலே திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களுக்கு அவருடைய தமிழ்ப்பணிகளைப் பாராட்டும் வகையில் திருவள்ளுவர் சிலை வழங்கிச் சிறப்புச் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களது நீண்டகால ஆசிரி யப் பணியையும் ஆசிரியர் பயிற்சிப் பணியையும் தமிழ்ப் பணியையும் சமூக சமயப் பணியையும் அவருடைய கல்வித் தகைமைகளையும் அறிந்து வியந்த அமெரிக்க உலகப் பல்கலைக் கழகமானது அவருக்கு தமிழ்க்கல்வி கலாசார கலாநிதிப் பட்டத்தினை 2003ஆம் ஆண்டில் வழங்கிக் கௌர வித்துள்ளது.

கலாநிதிப்பட்டம் வழங்கப் பெற்ற திரு. அகெ்ஸ்சாந்தர் அவர்களைப் பாராட்டும் வகையில் அவருடைய நண்பர்கள், மாணாக்கர், உறவினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 07.09.2003இல் மாபெரும் பாராட்டு விழா ஒன்றினைச் சிறப்பாக நடத்தினார்கள். அவ்விழாவிலே "அலெக்ஸ்சாந்தம்" என்னும் பெயரில் விழா மலரொன்றும் வெளியிடப்பட்டது. அத்துடன் கலாநிதி அலெக்ஸ்சாந்தர் அவர்களால் எழுதப்பட்டு அகிலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோஷியேற்ஸ் நிறுவனத்தினரால் செப்டம்பர் 2003இல் வெளியிடப்பட்ட "வெற்றி பெற" என்னும் நூலின் வெளியீடும் பாராட்டு விழாவிலே இடம்பெற்றது.

"வெற்றிபெற"என்னும் நூலானது பண்டிதர், கலாநிதி அலெக்ஸ்சாந்தரின் பதினாறு கட்டுரைகளின் தொகுப்பு நூலாகும். இதன் 16ஆம் கட்டுரை 2001 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட தமிழர் தகவலின் பத்தாவது ஆண்டு நிறைவு மலரிலும் இரண்டாம் கட்டுரை 2002 பெப்ரவரியில் வெளியிடப் பட்ட தமிழர் தகவலின் பதினோராவது ஆண்டு நிறைவு மலரி லும் பன்னிரண்டாவது கட்டுரை 2003 பெப்ரவரியில் வெளியிடப்பட்ட தமிழர் தவலின் மாதாந்த மலரிலும் திரு. அலெக்ஸ்சாந்தர் அவர்களால் எழுதப்பட்டவை என்பதும் ஏனைய பதின்மூன்று கட்டுரைகளும் "வெற்றி பெற" என்னும் இந்நூலுக்காகத் தமிழர் தகவலின் பிரதம ஆசிரியர் திரு.எஸ். திருச்செல்வம் அவர்களின் தூண்டுதலின்பேரில் எழுதப் பட்டவை என்பதும் குறிப்பிடத்தக்கவையாம்.

கலாநிதி, பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்கள் பொ-றுமை, மகிழ்ச்சி, சாந்தம், மற்றவர்கள் உள்ளத்தினைப் புண்படுத்தாத உயர் பண்பு, மனித நேயம், ஆழமான சமய நம்பிக்கை, ஆழ்ந்தகன்ற அறிவுடைமை ஆகியவற்றின் மொத்த வடிவம். அவருக்கும் எனக்கும் இடையில் மதிப்புடன் இணைந்த அன்பு நிலவுகிறது. அவருடைய இளைய மகளார் தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரியிலே என்னிடம் பாடம் கேட்டவர். இதனால் எங்கள் அன்பு குடும்பத்தினையும் தழுவியதாகத் திகழ்கிறது.

கலாநிதி, பண்டிதர் அவர்கள் "கம்பனும் புகழேந்தியும் கலந்த கலாநிதி" என்று ஈழத்துப் பூராடனாராலும், "பாரம்பரியக் கவிதை எழுதுவதில் வல்லவர்; வெண்பா அவரின் சிறப்பாற்றல்; வெண்பாவைப் பொறுத்த மட்டில் அவர் ஓர் காளமேகம்" என்று அதிபர் திரு. பொன். கனக சபாபதி அவர்களாலும் விதந்தோதப்படுபவர். அத்தகைய பெரியார் என்னுடைய நிகழ்ச்சிகளிற் பங்கேற்றபோது பாடித்தந்த சில செய்யுள்களைக் கீழே தருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஈழத்துச் சான்றோர்" எழுதிய வித்துவான் செபரத்தினம் ஐயாவிற்கு எனது நெஞ்சுகூறும் வாழ்த்துப்பா

ஈழத்துச் சான்றோர் எழுதிய பேரறிஞ!
ஆழமே காணாத் தமிழ் மொழிக்கு - வேழநிகர்
சேவைசெய் சான்றோர் மறவாத செம்மலே
தேவைதான் நின்னருமை நூல்.

வித்துவான் செபரத்னம் வாழ்க அவர்தம்
உத்தம தமிழ்ப் பணியும் வாழ்க அவர்அகம்
சத்துவமாம் தமிழ்ச்சான்றோர் வாழ்க நலம் பெயரும்
தத்துவமாம் தமிழ்த்தேனும் வாழ்க எங்கணுமாம்!

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவிலே இடம்பெற்ற பாராட்டு விழாவில் பாடியது.

வித்துவான் செபரத்தினம் ஐயாவுக்கு பாராட்டு நிகழும் (20.12.2003) இன்று பேசத் தருணம் இல்லாததால் நெஞ்சு நிறைவால் இயற்றிய நேரிசை வெண்பா

வித்வான் செபரத்னம் வித்தே தமிழ் மொழிக்கே
அத்தநிறை என்றே அயலவரை - மெத்தவுமே
நேசித்து யேசுவழி நிற்கும் உமையென்றும்
ஆசீர் வதிக்கும் இறை.

உத்தமரே வாழ்விலே ஓங்கும் தமிழ் மொழியில்
மெத்த உழைக்கின்ற வித்துவானே - நித்தியமும்
சால்பு படைத்த தமிழ் அறவோர் தம்வாழ்வை
மேலெழுதி வைத்ததுவே மேல்.

வாழ்க செபரத்னம் ஐயா! வளம்பெறவே
சூழ்கவே நற்சுற்ற நல்வாழ்வு - நீள்கவே
வித்துவான் வாழ்வு வளத்தமிழ் தான்பெருக்க
இத்தலத்தில் வேண்டுதுமே யாம்

அன்புடன் பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08.04.2006இல் நடைபெற்ற பவள விழாவின்போது பாடியது

நேரிசை வெண்பா

யேசு நயக்கும் பவள விழாக் காணுகின்ற
நேசச் செபரத்ன வித்வானே - தாசனாய்
யேசுவழி நின்றுநீர் யேசுநிறை சத்தியத்தில்
ஆசிபல பெற்றிடுக ஆழ்ந்து.

வாழ்க! செபரத்னம் வித்வான் தமிழ்ப் பெரியீர்
ஆள்க மரபுத் தமிழ்த் தொண்டு - நீள்க
தமிழ்ச்சால்பு நின் எழுத்தால் என்றென்றும் என்றே
தமிழ் வாழ்த்துக் கூறும் அலெக்ஸ்

ஈ) பவள விழா தொடர்பாகப் பாடப்பட்டவை இணைக்கப்பட்டுள்ளன.

---

பவள விழாக் காணும் செபரத்தினமே வாழ்க!

பண்டிதர் ம. செ. அலெக்ஸ்சாந்தர்

(முன்னாள் தமிழ் விரிவுரையாளர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

குறள் வெண்பா

தம்பிலுவில் தாய்தந்த வித்வான் செபரத்னம்
உம்பர் உவக்கும் மலர்

பவளவிழாக் காணுகின்ற பண்பார் செபரத்தினம்
நவமணியே நந்தமிழ்க்கு நிதம்

தன்னைப்போல் மற்றவரைத் தான்காணும் வித்துவானே!
உன்னதரின் ஆசியுமக் உண்டு

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

மட்டக் களப்பின் மரபுத் தமிழ் வித்வான்
இட்ட தமிழ்ச்சால்பு என்றும் எழுதுவது
தட்டநிறை பூந்தார் தமிழ்க்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா

ஈழத் தமிழறிஞர் இந்தியா சென்றுதமிழ்
ஆளவே ஆற்றிய அர்ப்பணங்கள் - வாழவே
ஆய்ந்து செபரத்தினம் வித்துவான் ஆக்கியநூல்
செய்ந்நன்றி ஆகும் தமிழ்க்கு.

கந்தவனக் கவிஞன் கூறுகவி ஆய்ந்துமே,
செந்தமிழில் வித்வான் செபரத்தினம் - நந்தவனக்
காட்சியாய் நாமெல்லாம் காணவே நூல்தருதல்
தேட்டம் கவிஞனுக்கே தேர்ந்து

## பஃறொடை இன்னிசை வெண்பா

வித்வான் செபரத்தினம் வேண்டும் குணமுடைமை
உத்தமனே! ஓர்ப்புடனே உண்மைநிலை, நன்றியிலே
நேச இயேசு நியாயம் கடைப்பிடியில்
வாசம் தருகின்ற வார்த்தை வழிஒளியில்
பேசும் நெறியையே போற்றியே நிற்கும்
தமிழ் ஒளியே! தார்மீகச் சால்பு நிறைந்த
துமித்தண்மை வார்த்தையிலே துளிர்போலப் பேசும்
செபரத்னம் வித்வான் பவள விழாவில்
செபஞ்செய்து வேண்டல் சிறப்பு.

## இன்னிசைக் கலிவெண்பா

பவளவிழாக் காணுகின்ற பண்புசார் வித்வான்
செபரத்னம் பெற்றோர் பவுல்கனக ரத்னம்
உபதேசி ஆசிரியர் உண்மையைத் தேடிச்
செபவாழ்வு செய்யும்நற் செய்தியாளர் ஆகி
தவப்பேற்றல் எஸ்தர்சின் னாச்சியை இல்லாளாய்
ஆக்கிய வாழ்விலே அன்பு மகனாக
தக்கவித் வான்செப ரத்னம் பிறந்தனரே
மட்டக் களப்பின் மருதஞ்சார் தம்பிலுவில்
இட்ட கிராமத்தை என்றும் மறவார்
நேசமாய் வாழ்விலே நேசம்மா ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசமே போற்றத் தெரிந்து மணந்து
அமுதநாதன் நற்செய்தி ஆற்ற மகனை
சமுகம் மதிக்கும் குருத்தொண்டு செய்யவும்
ஆவலி ஓங்கவே ஆநந்த நாதன்
தவச்செல்வி கூடத் தவநளினி என்னும்
எவரும் மதிக்கும் எழில்மிகு பிள்ளைகள்
ஈன்று அவர்களை ஏற்ற நிலையிலே
நன்மையாய் வாழவும் நாநிலம் போற்றவும்
வழிஒளி ஆகி வளநெறி யூட்டினார்.
வித்வான் தமிழில் விளங்கும் கலைமாணி
வித்தகக் கல்வி விவேகமே ஓங்கவே
அத்துடன் கல்விக் கலையிலே பட்டப்பின்
சான்றிதழ் பல்கலைச் சாலையில் பெற்றனர்
ஆன்ற அவரின் தகைமையைக் கண்டு
கிழக்கிலே பல்கலைச் சாலைமுது மாணி
இலக்கியத் திற்காக ஈந்துகௌர விக்கப்
பலரும் விவிதா கவிதை விருப்புடன்
கட்டி எழுதியே கல்விப் பெரியாரை
இட்டமாய்ச் சேவை இனமாய்க் கனடாத்
தமிழர் தமிழ்க்கலைக் கல்லூரி தன்னில்
தமிழ்மொழி கற்பித்த வித்வான் செபரத்னம்
தன்னார்வத் தொண்டைத் தரணிக் கெழுதுதும்.
அன்னார் இறையின் அமுதவாக்கைப் போற்றி வாழ்வார்
அன்றுமென்றும் எங்குமே அன்பாய்த் திகழ்இறை
என்றும் அருளை எண்ணம்போல் ஈவரே!
வித்வான் செபரத்னம் வேண்டுகின்ற சால்பையே
உத்தம மாயெழுதி உத்தமர் வாழ்வியலை
தத்துவமாய்த் தன்னூலில் தன்உள்ளம் கண்டதையே
பக்குவமாய்த் தானெழுதிப் பாருக் களித்தனரே
அக்கருத்து அன்னைமொழிக் கர்ப்பணம் செய்தோரை
எக்காலம் எல்லாமே ஏற்கும் கருத்தாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கநற் சான்றோர் தரவாழ்வு தந்தாரே!
வித்வான் ஐயாநீர், வேண்டும் குருவேதான்
அத்துடன் கூடவே ஆன்ற அதிபர்நீர்,
மெத்தவுமே மாணவரே மேன்மையின்றும் கொள்வர்
பழுகாமம் மெச்சவிபு லாநந் தசிலை
எழுச்சி பெறநாட்டி வெள்ளிவிழாச் செய்து
முதன்முதலில் பாடசாலை தன்னிலே வைத்த
முதலதிபர் வித்வானை மும்முறையும் போற்றுதும்மே!
பேராசான் வித்தியானந் தன்செல்வ நாயகம்
ஆராய்ச்சி யூட்டும் அறிவுக் கணபதியும்
பேரான ஆசார் பெரிதுவந்து கூறிடுவார்.
நெஞ்சில் நிலைக்கும் விபுலாநந் தர்அடிகள்
விஞ்சும் அவருடைய வேண்டுபணி மெச்சி
மனமார் குருவாய் மகிழ்வாய் மதித்து
இனம்வாழ என்றும் இறையை வேண்டுகிறார்.
வித்வான் செபரத்னம் வேண்டும் அமைதியை
உத்தமமாய் என்றும் உள்ளத்தாலே வாழ்த்துதும்மே!
தத்துவம் சார்ந்த சலனமிலாச் சிந்தனையை
மெத்த உடையவரே வித்வான் செபரத்னம்
சத்தே தமிழுக்கும் சான்றோர் வழிநிலைக்கும்
இத்தகை உள்ளம் இயல்புடை வித்வானே!
என்றுமே நீர்வாழ்க! எந்தமிழ் நின்பணியால்
நின்று சிறப்புறுக! என்றுமே யேசுவின்தாள்
அன்புடன் வேண்டும் அலெக்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஞானமுத்து அஜந்தா அவர்கள்



திரு. அஜந்தா அவர்களின் தந்தையாரான திரு. வேலாயுதம் ஞானமுத்து அவர்கள் எழுதுவி னைஞராகத் தமது பணியினைத் தொடங்கி உதவி அராங்க அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். 1992இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்தபின்னர் யோர்க் பல்கலைக்கழகத்திற் கற்று தமது 71வது வயதில் பி.ஏ. பட்டம் பெற்றவர், தொடர்ந்து கற்றிட விழைந்து எம்.ஏ. பட்டப்படிப் புக்குப் பதிவு செய்தவர், படிப்பைத் தொடர்வதற்கு முன்னரே அமரத்துவம் அடைந்துவிட்டார். எழுத்துத்துறையிலும் ஆராய்ச் சித்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திரு. ஞானமுத்து அவர்கள் எழுதிய கட்டுரைகளில் அவரது ஆராய்ச்சித் திறமை பளிச்சிடக் காணலாம்.

திரு. அஜந்தா அவர்களும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று ஆசிரியராக வெளிவந்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற் கொண்டவர். கனடாவிற்குப் புலம்பெயர்ந்து வந்தபின்னரும் மேற்படிப்பை மேற்கொண்டிட செறிடன் கல்லூரியிற் சேர்ந்து முகாமைத்துவம், தரக்கட்டுப்பாடு ஆகியவற்றில் டிப்ளோமா பட்டம் பெற்றவர்.

இயல்பாகவே தமிழ் உணர்வு மிக்கவரான அஜந்தா அவர்களுக்கு எழுத்தாற்றலும் கவிதை புனையும் ஆற்றலும் கைவந்த கலைகளாகிவிட்டன. தமது சொந்த ஊரான வாழைச்சேனையில் வாழ்ந்த காலத்தில் "கடலலையின் மண் கரைந்தால்" என்ற தலைப்பில் வீரகேசரிப் பத்திரிகையில் அஜந்தா அவர்களால் எழுதப்பட்ட தொடர் கட்டுரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டன. அக்கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதிகள் புத்தகமாகக் கட்டப்பட்டு வாழைச்சேனை நூல் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதானது, அதன் சிறப்பை உணர்த்துவதாய் இருக்கிறது.

அஜந்தா அவர்களின் கவிதைகளின் முதற் தொகுப்பு "மனக் கோலம் என்னும் பெயருடன் 2000 மார்ச் மாதம் கனடாவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அவரின் இரண்டாவது கவிதைத்தொகுப்பு "மனோ பாவம்" என்னும் பெயருடனும் மூன்றாவது தொகுப்பு "மனோ ராகம்" என்னும் பெயருடனும் 2003ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே இளம்பிறை வெளியீடுகளாக வெளிவந்துள்ளன. இத்தொகுப்புகள் யாவும் அஜந்தா அவர்களுடைய புனைபெயரான "சக்திசாந்தன்' என்னும் பெயரிலேயே வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஈழத்துப் பூராடனாரின், "கலாநிதி புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்" என்னும் நூலின் உறுதுணைப் படைப்பாளிகளுள் ஒருவராகப் பணியாற்றிய அஜந்தா அவர்கள் அந்நூலிலே "நாட்டிற்கு நல்லதே செய்த நறுந்தமிழ்ப் புலவர்மணி" என்னும் சிறந்ததொரு கவிதையையும் சேர்த்துள்ளார். அக்கவிதையின் இறுதியிலே "வாழ்ந்து மறைந்த பின்னும் வாழ்கின்ற புகழாளன்" எனவரும் அடியானது உயிர்த் துடிப்புடன் அமையக் காண்கின்றோம். மலர்கள், இதழ்கள், பத்திரிகைகள் எனப்பல ஊடகங்களில் அஜந்தா அவர்களின் கவிதைகள் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

"சுவாமி விபுலானந்த அடிகளின் திருவுருவச் சிலையின் முன்னோடி, தமிழ்வேள் வைத்திய கலாநிதி மா. பரசுராமன் அவர்களின் வாழ்க்கை வரலாறு" என்னும் சிறந்ததொரு படைப்பின் தொகுப்பாசிரியராக அஜந்தா ஞானமுத்து அவர்கள் செயற்பட்டுள்ளார். அப்படைப்பினைப் படிப்போர் தொகுப்பாசிரியரின் திறமையினையும் அவர் கையாண்டுள்ள நுட்பங்களையும் வியக்கவே செய்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஜந்தா அவர்களின் தந்தையார் திரு. ஞானமுத்து அவர்கள் வாழைச்சேனையிலும் தாம் கடமையாற்றிய ஏனைய இடங்களிலும் விபுலானந்தர் மன்றங்களை நிறுவி கலை வளர்ச்சியில் ஈடுபட்டார். ஊர்ப்பணி மன்றங்களை நிறுவி சமூகப்பணி ஆற்றினார். ஊர்ப்பணி மன்றங்களின் ஒன்றிய அமைப்பாளராக அவர் ஆற்றிய பணிகள் மிகப்பல. கமத் தொழிலாளர் சம்மேளனத்தினைக் கோறளைப்பற்றில் நிறுவி அவர் மேற்கொண்ட பணிகள் பாராளுமன்ற உறுப்பனர்க-ளாலும் அமைச்சர்களாலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. தந்தையாரின் அடிச்சுவட்டில் அஜந்தா அவர்களும் கால் பதித்து தமிழ்ப்பணியும் சமயப்பணியும் சமூகப்பணியும் ஆற்றிவருகிறார்.

திரு. அஜந்தா அவர்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையிற் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஆசிரிய கலாசாலையின் தமிழ் மன்றச் செயலாளராகவும் இந்து மாமன்றச் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டு அனைவராலும் பாராட்டத்தக்க வகையிற் பணியாற்றியுள்ளார். அஃது அவருடைய ஆளுமைக்கும் ஆற்றலுக்கும் கொடுக்கப் பட்ட அங்கீகாரமாகவே கொள்ளப்படுகிறது.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த அஜந்தா அவர்கள், கனடிய மட்டக்களப்புச் சமுதாயச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார். அவ்வாறே விபுலானந்தக்கல்வி அபி விருத்திச் சங்கம் 1992இல் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அதன் பொறுப்பாளராகக் கடமையாற்றிவருவது குறிப்பிடத் தக்கதாகும்.

18.02.2003இல் ஆரம்பிக்கப்பட்ட சுவாமி விபுலானந்தர் கலைமன்றம் கனடா, தனது முதலாவது செயலாளராக திரு. அஜந்தா ஞானமுத்து அவர்களையே தெரிவுசெய்தமை அவருடைய ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கிறது. இம்மன்றம், விபுலானந்த அடிகளாரது ஐம்பத்தாறாவது நினைவு நாளாகிய 19 ஜூலை 2003இல் பிரமாண்டமான வகையில் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை நடத்திய பெருமையில் முக்கிய இடம் வகிப்பவர் செயலாளராகக் கடமையாற்றிய திரு. அஜந்தா ஞானமுத்து அவர்களேயாவர். நினைவு விழா தொடர்பாக வெளியிடப்பட்ட "விபுலம்" எனும் பெயரிய சிறப்பு மலர் சிறப்பாய் அமைந்த மைக்கும் செயலாளரே பாராட்டுக்குரியவராகிறார். அம்மலரில், "சக்திசாந்தன்" என்னும் புனைபெயரில் அஜந்தா அவர்கள் வெளியிட்டுள்ள "பொதுச் சொத்தான சுவாமிகள்" கவிதை அவரின் ஆற்றலுக்கு ஒரு பதச்சோறு.

சுவாமி விபுலானந்தர் கலைமன்றம் - கனடாவின் 2008 ஆம் ஆண்டுக்காலப் பகுதிக்குத் தலைவராகப் பணியாற்றிய அஜந்தா ஞானமுத்து அவர்கள் 18.10.2008இல் அடிகளார் நினைவு விழாவினைப் புதியதொரு கண்ணோட்டத்தில் நடத்தி புதுமை செய்துள்ளார். வெளியிடப்பட்ட நினைவுதின மலராகிய "விபுலாநந்தக் கருவூலம்" அஜந்தா அவர்களின் வழிநடத்தலுக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

திரு. அஜந்தா அவர்களின் தந்தையாரான திரு. வேலாயுதம் ஞானமுத்து அவர்கள் எனது துணைவியாரின் கிராமமாகிய பழுகாமத்திற் பிறந்தவர். அவ்வழியில் எனக்குச் சகோதரர் முறையினர். கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த பின்னர் இரண்டொரு தடவைகள் என்னைச் சந்திக்க வந்திருந்தார். இருவரும் இணைந்து செயற்படும் ஆக்க பூர்வமான சில திட்டங்கள் பற்றி உரையாடினார். அவருடைய முதிர்ந்த அறிவு என்னை வியக்க வைத்தது. திட்டங்களைச் செயற்படுத்த ஆவலுடன் காத்திருந்தேன். காலன் அவரைக் கவர்ந்து சென்றுவிட்டான். தந்தையின் உறவு தனயனுடன் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள்



நாங்கள் 1996இல் கனடாவுக்கு வந்த பின்னர் வீட்டில் பொழுது போவது சிரமமாயிருந்தது. ஏதாவது பயனுள்ள செயற்பாட்டில் ஈடுபடுவது நல்லதென சிந்தித்துக் கொண்டிருந்தேன். எங்கள் உறவினர்களும் எனது பழைய மாணாக்கரும் வந்து பார்த்துச் சென்றார்கள். அப்படி வந்தவர்களுள் எங்களுக்கு உறவினராயிருந்த சபாநாதன் என்பவரும் ஒருவர். நான் பட்டிருப்பு மத்தியமகா வித்தியாலய அதிபராகப் பணி யாற்றியிருந்தமை பற்றி அவருக்குத் தெரியும்.

அவரோடு உரையாடிக் கொண்டிருந்த வேளையில் கனடாவில் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று இருப்பதாகவும் அதன் நிருவாக அதிகாரி தனது மனைவியின் சகோதரியின் கணவர் என்றும் அங்கு உயர் வகுப்பு மாணாக்கருக்குத் தமிழ் கற்பிக்கலாம் என்றும் என்னிடம் கூறினார். நான் விரும்பினால் அதனை ஒழுங்கு செய்து தருவதற்குத் தன்னால் முடியுமென்றும் உறுதியுடன் கூறினார். நாங்கள் அந்த நாட்களில் லோறன்ஸ் அவெனியூவில் இருக்கும் தொடர்மாடிக் கட்டடத்தில் தங்கியிருந்தோம். திரு. சபாநாதன் அவர்கள் கூறிய தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியும் அதே லோறன்ஸ் அவனியூவில் மேற்குத் திசையில் சிறிது தூரத்தில் இருப்பதாகவும் அறிந்து கொண்டேன். திரு. சபாநாதன் அவர்கள் கூறிய ஒழுங்கினை நான் ஏற்றுக்கொண்டேன். அடுத்தநாள் என்னிடம் வந்து என்னை அழைத்துச் செல்வதாக வாக்குறுதி தந்தார்.

அடுத்தநாள் மாலைப்பொழுது வந்து என்னை அழைத்துச் சென்றார். திரு. சு. இராசரத்தினம் அவர்களை அவருடைய வீட்டில் சந்தித்தோம். திரு. சபாநாதன் அவர்கள் என்னை அறிமுகம் செய்து வைத்தார். திரு. இராசரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் என்னைப்பற்றிய முழு விபரங்களையும் கேட்டு அறிந்துகொண்டார். கல்லூரியைப் பற்றிய விளக்கத்தையும், உயர்வகுப்புப் பற்றிய விளக்கத்தையும் கூறி, அடுத்தநாள் காலை ஒன்பது மணிக்கு வரும்படி கேட்டுக் கொண்டார். கல்லூரியின் முகவரியைத் தந்து எப்படி வருவது என்பது பற்றியும் விளக்கிக் கூறினார்.

திரு. இராசரத்தினம் அவர்கள் கேட்டுக் கொண்டபடி அடுத்தநாள் காலை ஒன்பது மணிக்குக் கல்லூரியை அடைந்தேன். நிருவாக இயக்குனருக்குரிய அலுவலகத்தில் அவரைச் சந்தித்தேன். அவர் என்னை அன்புடன் வரவேற்று வகுப்பறை ஒன்றினுள் அழைத்துச் சென்றார். அஃது உயர் வகுப்பின் ஒருபிரிவு. ஆண்களும் பெண்களுமாக இருபத்தேழு பேர் இருந்தனர். என்னை மாணாக்கருக்கு அறிமுகஞ்செய்து வைத்த திரு. இராசரத்தினம் அவர்கள் மாணாக்கரை அறி-முகஞ் செய்து கொள்ளுமாறு என்னிடம் கூறி வெளியேறி விட்டார். மாணாக்கரை ஒவ்வொருவராக விசாரித்து அவர்-களைப் பற்றியும் அவர்களின் தமிழறிவின் நிலைபற்றியும் ஓரளவு தெரிந்துகொண்டேன். கல்லூரி முடிவுற்று வீட்டுக்குப் போகமுன்னர் திரு. இராசரத்தினம் அவர்களைச் சந்தித்து, எனது வகுப்புக்குரிய பாடத்திட்டத்தின் பிரதி ஒன்றினைப் பெற்றுக் கொண்டேன். ஒரு வாரத்தினுள் கல்லூரியின் ஒழுங்கு முறைகளைப் பூரணமாகத் தெரிந்து கொண்டதோடு, வகுப்பு மாணவர்களுடனும் சுமூகநிலையினை ஏற்படுத்திக் கொண்டேன்.

திரு. இராசரத்தினம் அவர்கள் மிகச்சிறந்த நிருவாகி. தம்மை முழுவதுமாகக் கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணித்துள்ளவர். தமிழ் மொழியில் பற்றும் பாசமும் கொண்டவர். தமிழை முறையாகக் கற்று தமிழறிவு கைவரப் பெற்றவர். தமிழுணர்ச்சி மிக்கவர். கல்லூரியுடன் தொடர்பான சகல காரியங்களையும் அறிந்து வைத்திருந்தார்.

உயர் வகுப்பின் ஏனைய பிரிவுகளுக்கும் தகுதியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள் பணியாற்றினார்கள். பண்டிதர் ம. செ. அலெக்ஸ் சாந்தர், திரு. பி. பெனடிக்ற், திரு. பொன்னையா விவேகானந்தன் ஆகியோர் ஏனைய பிரிவுகளின் ஆசிரியர்கள். தமிழ்ப் பிரிவுக்கு பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் அவர்களே தலைவராகக் கடமையாற்றினார்.

சிலவேளைகளில் திரு. இராசரத்தினம் அவர்களின் அபார நிருவாகத் திறமைகள் கண்டு வியந்திருக்கிறேன். அவருடைய திட்டமிடும் பணியும் திட்டங்களைச் செயற்படுத்தும் திறனும் செயலாற்றுபவர்களை ஊக்குவிக்கும் ஆற்றலும் அவருடைய வெற்றிகளுக்குரிய படிக்கற்கள் என்பதனைக் குறுகிய காலத்தினுள் அறியமுடிந்தது.

திரு. இராசரத்தினம் அவர்கள் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் கைவரப் பெற்றவர். அவர் எழுத்தாற்றலுக்கு அவரால் 1995இல் வெளியிடப்பட்ட "தமிழீழம் -நாடும் அரசும்" என்னும் நூலும் 2007இல் வெளியிடப்பட்ட, "பண்பாடு வேரும் விழுதும்" என்னும் நூலும் சான்று தருகின்றன.

தமிழ் மக்கள் ஈழத்தமிழகத்திலிருந்து ஏன் புலம் பெயர்ந்து சென்றார்கள்? என்பதற்குரிய அடிப்படைக் காரணத்தை வெளிக்கொண்டுவரும் நோக்கில் திரு. இராசரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "தமிழீழம் - நாடும் அரசும்" என்னும் நூலானது இலங்கை வரலாற்றினை உள்ளபடி எடுத்துக் கூறுவதோடு இலங்கை அரசியலின் படுமோசமான போக்கினையும் போதிய ஆதாரங்களுடன் விளக்குவதாய் எழுதப்பட்டிருக்கிறது. இக்காரணங்களா-லேயே இந்நூல் பெரும் வரவேற்பினைப் பெற்றுக் கொண்ட தோடு அறிஞர்களின் பாராட்டுதலையும் பெற்றுக்கொண்டது.

மேலே குறிப்பிட்ட நூலின் தொடர்ச்சியாகவே "பண்பாடு வேரும் விழுதும்" என்னும் நூலும் எழுதப்பட்டதாகக் கொள்ளலாம். "இந்நூல் புலம் பெயர்ந்து வாழும் என்போன்ற தமிழர்களுக்காக, புலம்பெயர் மண்ணில் தமிழ் மொழியைக் கற்றுவரும் மாணவர்களுக்காக எழுதப்பட்டது" என்று தாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலுக்கு எழுதிய முன்னுரையிற் குறிப்பிடும் ஆசிரியர், "பண்பாடு என்றால் என்ன? அது எவ்வாறு தோற்றம் பெறுகிறது? அது எதன் அடிப்படையில் உலகில் வேறுபட்டுக் காணப்படுகிறது? அது நிலையானதா? மாறக்கூடியதா? மாற்றக்கூடாததா? ஏன் தொடர்ந்தும் அதே பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்? அப்படியாயின் தொடர்ந்து கடைப் பிடிக்க வேண்டியவை எவையெவை? கைவிடக்கூடியவை எவையெவை? எவ்வாறு அவற்றைத் தீர்மானிப்பது? பண்பாடு ஒருவரின் பலமா? பலவீனமா? நாம் எமது மரபு வழிப் பண்பாட்டைப் பின்பற்றி நடப்பது எமது மேம்பாட்டிற்குத் துணை செய்யுமா? இவ்வாறு எழுந்த பலகேள்விகளுக்கு விடைதேடியதின் விளைவே இந்நூல்" என்று நூல்நுவலும் பொருளையிட்டு ஆசிரியர் கூறியிருக்கக் காணலாம்.

"பண்பாடு வேரும் விழுதும்" என்னும் மேற்படி நூலின் சிறப்பினை உணர்ந்துகொண்ட தமிழ்நாடு அரசு அந்நூலுக்குச் சிறப்புப் பரிசில் வழங்கிப் பாராட்டுத் தெரிவித்துள்ளது. தமிழ் நாட்டின் அரசினால் பரிசுவழங்கிச் சிறப்பிக்கப்பட்ட அந்நூலின் ஆசிரியரான திரு. இராசரத்தினம் அவர்களால் ஈழத்தமிழ் மக்களும் பெருமையடைகின்றனர்.

நான் 2002இல் வெளியிட்ட "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூலின் கணிசமான எண்ணிக்கையிலான பிரதிகளைக் கொள்வனவு செய்து தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரி மாணாக்கருக்குக் கொடுத்ததோடு ஐரோப்பிய நாடுகளின் தமிழ் மாணாக்கருக்கும் கொடுத்து, நூற்பிரதி களின் விற்பனையில் திரு. இராசரத்தினம் அவர்கள் செய்த பேருதவியை நன்றியுடன் நினைவில் வைத்துள்ளேன். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் மகிழ்ச்சியடைவது அவருடைய பண்பாகும். அப்பண்பு பாராட்டுக்குரிய உயர்பண்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்கள்



ஈழவளநாட்டிலே காங்கேசன் துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி வள்ளிநாயகி அவர்கள் சிறுவயதிலேயே தமிழார்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்ததைத் தொடர்ந்து 1954இல் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையிற் சேர்ந்து கொண்டார். ஆசிரியர் பயிற்சிக்காலத்தில், கலாசாலை மாணாக்கரிடையே நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் "குறமகள்" என்னும் புனைபெயரில் வள்ளிநாயகி எழுதிய சிறுகதை முதற் பரிசினைப் பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து "குறமகள்" என்னும் புனைபெயர் அவ-ரோடு ஒட்டிக்கொண்டது. அதைவிட "சத்யப்பிரியா" "ராசாத்திராம்" "கோமகள்" "பத்மினி பிரியதர்சஸனி" "காங்கயி" "சக்திக்கனல்" "லங்காராணி" என்னும் புனைபெயர்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார். சிறு கதையுடன் குறுநாவல், நாவல், கவிதை, கட்டுரை, ஆய்வுக் கட்டுரை, நாடகம், நாட்டிய நாடகம் எனப் பல்வேறு துறைகளிலும் அவருடைய ஆளுமை வெளிப்படத் தொடங்கிற்று.

தமது கல்வித் தகைமைகளையும் மேம்படுத்திட விழைந்த வள்ளிநாயகி அவர்கள், தமிழ்நாடு சென்று பட்டப் படிப்பை மேற்கொண்டார். கலைப் பட்டதாரியாகத் தாய் நாடு திரும்பிய அவர் ஆசிரியையாகப் பணியாற்றத் தொடங்கினார். பட்டப்பின் படிப்பாகிய கல்வி டிப்ளோமா பட்டத்தினை இலங்கைப்பல்கலைக் கழகத்திலே பயின்று பெற்றுக்கொண்டதோடு, "நாடக டிப்ளோமா"ப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டார். இதன்மூலம் "நாடக டிப்ளோமா"ப் பட்டம் பெற்ற முதலாவது தமிழ்ப்பெண் என்னும் சிறப்பினை அவர் பெற்றுக் கொண்டார்.

திருமதி வள்ளிநாயகி அவர்கள் எவ்வாறு எழுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் புகழ்க்கொடி நாட்டத் தொடங்கினாரோ அவ்வாறே அவர் பேச்சுத்துறையிலும் புகழ்க்கொடி நாட்டலானார். காத்திர மிக்க கனதியான எழுத்துக்களால் அனைத்து வாசகர்களை யும் வசீகரித்து நின்ற வள்ளிநாயகி அவர்கள் தமது வசீகர மான பேச்சாற்றல் மூலமும் சபையோரைக் கவர்ந்து கொண்டார்.

பெண்கள் சமூக அந்தஸ்துப்பெற்று கல்விநிலையிலும் மேம்பட வேண்டுமென அயராது உழைத்த வள்ளிநாயகி அவர்கள் தாமே சிறந்ததோர் உதாரண மங்கையாகவும் வாழ்ந்து காட்டினார். காந்தீய அடிப்படையில் சமூகசேவை யைத் தமது சிறுவயதிலேயே ஆரம்பித்த வள்ளிநாயகி அவர்கள் காங்கேசன்துறை எல்லைக்குள் தமது சேவையைக் குறுக்கிக் கொள்ளாமல் பரந்தனில் அன்னை கஸ்தூரிபாய் நிலையத்தினை நிறுவி அதற்கூடாகவும் யாழ் பல்கலைக்கழக எல்லைக்குள் பெண்கள் ஆய்வு வட்டத்தினூடாகவும் விரிவாக் கினார். கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த பின்னரும் தென் ஆசியப் பெண்கள் நிலையத்துக்கூடாக அவர் சமூகசேவை யாற்றி வருவதனைக் குறிப்பிடுவதில் மகிழ்வடைகிறேன்.

பயிற்றப்பட்ட ஆசிரியையாகத் தமது பணியைத் தொடங்கிய வள்ளிநாயகி அவர்கள், கல்வித் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், அளுத்கம ஆசிரியப்பயிற்சிக் கலாசாலையிலும் கோப்பாய் ஆசிரியப்பயிற்சிக் கலாசாலை யிலும் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார்.

இலங்கையிலிருக்கும்போது வள்ளிநாயகி அவர்க-ளுடன் நேரிற் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடையா விட்டாலும் அவருடைய பெயர் எனக்குத் தெரிந்ததாகவே இருந்தது. என்னுடைய நண்பர்களாகிய திரு. எஸ். பொன்னுத்துரை, திரு. கனக செந்திநாதன், திரு. சு. வேலுப்பிள்ளை (சு.வே), திரு. இ. நாகராஜன் ஆகியோருடன் திருமதி வள்ளிநாயகி-இராமலிங்கம் (குறமகள்) அவர்களும் சேர்ந்து "மத்தாப்பு" என்னும் குறுநாவல் ஒன்றினை எழுதினார்கள். மத்தாப்பின் ஐந்து நிறங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிறத்தில் ஒவ்வொரு அத்தியாயத்தினை எழுதி நாவலை வளர்த்துச் சென்று முடிவடைவதாக அஃது அமைந்திருந்தது. அந்த நாள்களிலே புதியதோர் உத்தி கையாளப்பட்டு எழுதப்பட்ட போது, இலங்கையின் எழுத்தாளர்களின் மத்தியில் ஏற்பட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்த பரபரப்பையும் அவர்களால் கொடுக்கப்பட்ட வரவேற்பை யும் நான் நன்கறிவேன். புகழ்பெற்றிருந்த மூத்த எழுத்தாளர் களுக்கு ஈடுகொடுத்துத் தனது அத்தியாயத்தினை நேர்த்தி யாக எழுதிய வள்ளிநாயகி அவர்கள் பெற்றுக்கொண்ட வாழ்த்துதலையும் நான் அறிந்து வைத்திருக்கிறேன். அவரை நேரிற் காணாமலே அவரில் பெருமதிப்பு ஏற்பட்டு விட்டது.

"இலக்கியப் பொன் மகள்" என்று போற்றப்படும் திருமதி வள்ளிநாயகி அவர்களின் படைப்புகள் பல வெளி வந்துள்ளன. அவருடைய சிறுகதைத் தொகுப்புகளாக "குறமகள் கதைகள்", "உள்ளக் கமலமடி" என்னும் இரண்டு நூல்களும் - கவிதைத் தொகுப்புகளாக, "ஈழத்து ரோஜா", "மாலை சூட்டும் நாள்" என்னும் இரண்டு நூல்களும்- கட்டுரைத் தொகுப்பாக, "இராமாயணம்" என்னும் நூலும்- ஆய்வு நூலாக "யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண் கல்வி - ஓர் ஆய்வு" என்னும் நூலும் வெளிவந்துள்ளன. திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம் அவர்களின் ஆய்வு நூலின் வெளியீட்டு விழாவினையிட்டு 2007 ஜுலை மாதம் வெளிவந்த "தமிழர் தகவல்" இதழில் குறிப்பிட்டிருப்பதனைக் கீழே தருகிறேன்.

"எழுத்துலகில் பொன்விழாக் கண்ட மூத்த எழுத்தாளர் குறமகள் (வள்ளிநாயகி இராமலிங்கம்) அவர்களால் எழுதப் பெற்று கொழும்பில் குமரன் பதிப்பகத்தால் அச்சேற்றப்பட்ட, "யாழ்ப்பாணச் சமூகத்தில் பெண்கல்வி - ஓர் ஆய்வு" என்னும் நூலின் வெளியீட்டு விழா இந்த மாதம் 16ம் திகதி சனிக் கிழமை ஸ்காபரோ சிவிக்சென்டரில், கனடிய சட்டத்தரணி திருமதி தெய்வா மோகன் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் செல்வா கனகநாயகம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்புரை நிகழ்த்தினார். மேர்ளின் இமானுவேல், மைதிலி சோமசுந்தரம், கவிஞர் உ. சேரன் ஆகியோர் நூலை ஆய்வுரை செய்தனர். பெண் கல்வியை மேம்படுத்தும் இரண்டு அரங்க நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெற்றன. தென்னாசிய பெண்கள் நிலையத்தின் அனுசரணையுடன் விழா ஏற்பாடாகி இருந்தது. நூலாசிரியர் குறமகள் பதிலுரையும் ஏற்புரையும் நிகழ்த்தினார்" திருமதி வள்ளிநாயகி அவர்களுக்கு "ஈழத்து ஔவை", "முத்தமிழ் வித்தகி", இலக்கிய வித்தகி", என்னும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகள் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. நான் கனடாவுக்கு வந்த பின்னர் இரண்டொரு சந்தர்ப்பங்களில் திருமதி வள்ளிநாயகி அவர்களைக் கண்டிருக்கிறேன். மூன்று சந்தர்ப்பங்களில் நெருங்கிப்பழகிடக் கூடியதாயிருந்தது.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா 20.12.2003இல் நடைபெற்றபோது அவ் விழாவில் மூத்த எழுத்தாளர்களான கலாநிதி க.தா. செல்வ ராசகோபால், திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் ஆகி-யோருடன் நானும் கௌரவிக்கப்பட்டேன். அவ்வாறே ஆர்.ஆர். கிறியேஷன் நிறுவனம் 11.11.2006 இல் நடத்திய 2006ஆம் ஆண்டிற்கான நாடகப் பெருவிழா விலே தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்த ஒன்பது பேரில் திருமதி வள்ளிநாயகி அவர்களும் நானும் இடம்பெற்று இருந்தோம்.

ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையானது, பேரவைத் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்களின் தலைமையில் 06.10.2007இல் நடத்திய பண்டிதர் அப்புத்துரை அவர்களால் எழுதப்பட்ட புலவர் வரலாற்று நூலின் அறிமுக விழாவிலே நூலின் அறிமுகவுரையினை இலக்கிய வித்தகி திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களும் வெளியீட்டு உரையினை பேரறிஞர் முருகவே. பரமநாதன் அவர்களும் ஆய்வுரையினை நானும் நிகழ்த்தினோம்.

18.07.2004இல் எனது தலைமையில் நடைபெற்ற சுவாமி விபுலானந்தரது ஐம்பத்தேழாவது ஆண்டு நிறைவு விழாவின் ஓர் அங்கமான கவியரங்கில் பங்கேற்குமாறு திருமதி வள்ளிநாயகி அவர்களை அழைத்தேன். அவர் அன்புடன் அழைப்பினை ஏற்றுக்கொண்டார். விழா நடை-பெறுவதற்கு இரண்டொருநாள் இருந்தவேளையிலே அவரது உடல்நலம் சிறிது பாதிக்கப்பட்டமையால் விழாவிற் பங்கேற்க முடியாதநிலை அவருக்கு ஏற்பட்டது. அவர் எழுதிவைத்திருந்த கவிதை எனக்கு அனுப்பி வைக்கப்பட்டதால் அக்கவிதை திருமதி பிலோமினா கிருஷ்ணபிள்ளை அவர்களால் விழா விலே படிக்கப்பட்டது. நாங்கள் மேற்கொண்ட இந்த ஒழுங்கு திருமதி வள்ளிநாயகி அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் அவர்களுடனான தொடர்பினை நான் பெரிதும் மதிக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள்



வன்னிப் பிரதேசத்திலே குமுளமுனை என்னும் கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பார்வதி கந்தசாமி அவர்கள் பிறந்தார். இவருடைய தந்தையார் திரு. தங்கராசா ஆவார். பிரபல கல்வி நெறியாளரும் சமூகப்பணியாளருமான திரு. தங்கராசா சிவபாலு அவர்கள் திருமதி கந்தசாமி அவர்களின் தமையனார் ஆவார்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்ற திருமதி பார்வதி அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்திற் கற்று மொழியியல் பட்டதாரியானார். அவுஸ்திரேலியாவிலுள்ள மொனாஸ் பல்கலைக்கழகத்திற் பயின்று மொழியியற் துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். தமது கல்வியினை மேலும் வளமாக்கிட விழைந்த கலாநிதி பார்வதி அவர்கள், ரொரன்ரோ பல்கலைக்கழகம், ரொரன்ரோ உள நலன் சிகிச்சை நிலையம், குழந்தைகள் மருத்துவ நிலையம், டெல் கிறெஸ்ற் கெயில் அப்பேல் நிறுவனம் ஆகியவற்றில் பல்பண்பாட்டியல், பெற்றோரியம், உளவியல், உளநலவியல் முதலிய கற்கை நெறிகளைத் தொடர்ந்து கற்றுத் தனது சேவையை உளநலவியலோடு இணைத்துள்ளார்.

இலங்கையிலே வித்தியாலங்கார பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய கலாநிதி பார்வதி அவர்கள் கலிபோனியாவிலுள்ள ஸ்ரான்போட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமையாற்றிய பெருமைக்கும் உரியவர். தற்போது ரொரன்ரோ சமூகவளத் தொடுப்பு நிலையத்தில் உளநல ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.

பிரபல பொதுவுடைமைவாதியாக விளங்கிய வி. பொன்னம்பலம் அவர்களின் பொதுவுடைமைக் கருத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால், தமது இளம் பராயத்திலே கவரப்பட்ட கலாநிதி பார்வதி அவர்கள் தமது வாழ்வைப் பொதுமக்களின் பணிக்காக அர்ப்பணித்துள்ளமை கருத்திற் கொள்ளப்படவேண்டியதாகும்.

மொழியியல், அரங்கியல் ஆகிய துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள கலாநிதி பார்வதி அவர்கள் கனடிய மண்ணிற் குடியேறிய பெண்கள், முதியோர் சார்பாகவும் பெண்கள் உளநல உடல் நலம் தொடர்பாகவும் தன்னார்வத் தொண்டராகவும் பணியாற்றி வருவது குறப்படத் தக்கதாகும். வசந்தம் முதியோர் நிலையம் இவரது அயராத பணியின் விளைவே. குடிவரவாளருடனும் தமிழ்ப்பெண்களோடும் முதியோரோடும் ஆரம்பித்த சேவை படிப்படியாகப் பல்லின மக்களையும் தழுவியதாக விரிவடையலாயிற்று.

ரொரன்டோ கல்விச் சபையின் அனைத்துலக மொழிகளுக்கான பாடத்திட்டத்தைத் தயாரித்த குழுவில் ஒருவராகப் பணியாற்றியுள்ள கலாநிதி பார்வதி அவர்கள் ரொரன்டோ பல்கலைக்கழகத்தில் பகுதி நேரத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றுவதோடு மனோண்மணியம் சுந்தரனார் பலகலைக் கழக கனடிய வளாகத்தின் தமிழ்ப் பேராசிரியராகவும் கடமையாற்றுகிறார்.

கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் மொழியியல் நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அத்துடன் பெண்களின் நிலை, மன உளைச்சல், மது அரக்கன், முதியோர், குடிவரவாளர்கள், அகதிகள் முதலிய பல்வேறு துறைகளிலும் பலகட்டுரைகள் எழுதியுள்ளார். அவ்வாறே குடிவரவாளர்களின் நலன்கருதி பல நூல்களையும் வெளியிட்டுள்ளார். எயிட்ஸ், இருதயநோய், மனநோய், மன வருத்தம், பெண்கள் காப்பகம், பெண்கள் துன்புறுத்தப்படுதல், பற் பாதுகாப்பு தொடர்பாகவும் பல நூல்களை வெளியீடு செய்துமுள்ளார்.

கலாநிதி பார்வதி அவர்கள் பல்இன சேவைக் குழுக்களில் சேர்ந்து பணியாற்றியுள்ளதோடு, தற்போதும் தொடர்புகளைப் பேணியும் வருகிறார். உளநலன், மது போதைக்கு அடிமையாதலுக்கான சிகிச்சை நிறுவனத்தின் தமிழ் உளநல ஆய்வுக்குழு, அகதிக் குழந்தைகளின் தேசிய ஆய்வுக்குழு, ரொரன்டோ குழந்தைகள் உதவி அமைப்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் ஆலோசனைக்குழு, ரொரன்டோ குழந்தைகள் நிலையத்தின் திறன் கட்டுமானக் குழு, ரொரன்டோ அயலக சட்டச்சேவை, அபேசியா நிறுவனம், மாநகர முதல்வரின் குடி-வரவாளர்கள், அகதிகள்குழு, தமிழ்ப் பெண்கள் பணிக்குழு தமிழர்சேவை ஒன்றியம், சுகாதார அமைச்சின் மாவட்ட அமைப்பு, யுனைட்டட்வே தென்னாசிய ஆலோசனைச்சபை, வசந்தம் முதியோர் உளவள நிலையம், 42ஆவது பிரிவு பொலிஸ் நிலையத் தமிழ் ஆலோசனைக்குழு, மெற்றோ பெண்கள் துன்புறுத்தல் குழு, சென்மைக்கல் வைத்தியசாலை-பெண்கள் நலன்குழு முதலிய பலநிறுவனங்களில் தொண் டாற்றிவந்த கலாநிதி பார்வதி அவர்கள் தொடர்ந்தும் தமது தொண்டினை ஆற்றியே வருகிறார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பெண்கள் அமைப்புகள் பலவற்றோடு இணைந்து பணியாற்றிவரும் கலாநிதி பார்வதி அவர்கள் ஆழிப்பேரலையாற் பாதிக்கப்பட்டோரின் துயரிற் பங்குகொண்டு துவிச்சக்கர வண்டிகள், தையல் கருவிகள் முதலியவற்றை வழங்கியும் நன்கொடைகள் வழங்கியும் உதவியுள்ளார். குமுளமுனை, முல்லைத்தீவு மகாவித்தி யாலயங்களுக்கு நிதி சேகரித்தும் உதவியுள்ளார்.

கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்கள் பரிசுகள் பல வற்றையும் விருதுகள் பலவற்றையும் பெற்றுள்ளார். அவற்றுள் ஒரு சிலவற்றினைக் குறிப்பிடுவோம்:

1. 1969இல் கொழும்பு பல்கலைக் கழகத்தின் அனைத்து மாணவர் உயர்விருது.
2. 1980இல் அவுஸ்திரேலியா மொனாஸ் பல்கலைக் கழகத்தின் அனைத்து மாணவர் உயர்விருது.
3. 1989இல் கலிபோர்ணிய ஸ்ரண்போட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்ற முது புலமைப் பரிசில்.
4. 2001இல் ரொரன்டோ மேயர் மெல் லாஸ்மனின் சமூகக் காப்பு விருது.
5. 2002இல் கனடிய தமிழ் இளைஞர் அபிவிருத்தி நிலைய விருது.
6. 2006இல் ரொரன்டோ மேயர் டேவிட் மில்லர் வழங்கிய கொன்ஸ்ரன் ஈ ஹமில்ரன் விருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள், சமூகசேவை தொடர்பாக வழங்கப்படும் மேற்படி விருதினைப் பெற்றுக்கொண்ட முதல் இலங்கையர் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களே என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

7. கலாநிதி பார்வதி அவர்களின் சிறப்புக்குரிய சேவையைப் பாராட்டி ரொரன்டோ நகரசபைப் பெண் உறுப்பினர்கள் விருது வழங்கிச் சிறப்புச் செய்துள்ளனர்.
8. 2007ஆம் ஆண்டுக்கான "உதயன் வேளிர் விருது" (Uthayan Leadership Award) கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களில் மரியாதை-யோடு இணைந்த அன்பு எனக்குண்டு. தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்க்கும் அவருடைய சிறந்த பணிகள் என்னைச் சிலிர்க்க வைத்துள்ளன. காலம், நேரம் பாராது சமூகப்பணி ஆற்றிவரும் அவரது செயலாற்றும் திறமை பல சந்தர்ப்பங் களில் என்னை வியக்கச் செய்துள்ளன.

2002இல் என்னால் எழுதப்பட்டு, கனடாத்தமிழ் எழுத்தாளர் இணையத்தாரால் வெளியிடப்பட்ட "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூலின் ஆய்வுரையினை கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களே செய்தார். அவ்வாறே 2005இல் என்னால் எழுதப்பட்டு 2006 ஏப்பிரலில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தாரால் வெளியிடப்பட்ட "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலின் ஆய்வுரையி-னையும் அவரே செய்து சிறப்புச் செய்தார். இவற்றின்மூலம் கலாநிதி பார்வதி கந்தசாமி அவர்களுடனான எனது தொடர்பு மேலும் நெருக்கமாகியது. அத்தொடர்பினை நான் பெரிதும் மதிக்கிறேன்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தார் எனது எழுபத்தைந்து வயது நிறைவினையிட்டு வெளியிட்ட "வித்துவ ரத்தினம்" என்னும் பவள விழா மலரிலே கலாநிதி பார்வதி கந்தசுவாமி அவர்கள் 'நல்லிசை வலித்த நாணுடை மனத்தர்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பகுதியைக் கீழே தருகிறோம்:

"பெரியவர்களின் கடைக்கண் பார்வைக்காக நல்லிசை வலிந்த பூதந் தேவனாரின் பாரம்பரியம் கொண்டவர். பல்கலைக் கழகத்தில் வித்துவான் கல்வி பயின்ற அறுவரில் முதன்மையானவராக விளங்குகிறார். விபுலானந்த வெள்ளத்தில் மூழ்கிக் குளித்து எழுந்த வித்துவான் விபுலானந்தரை மானசீகக் குருவாகக் கொண்டவர். அவரின் வாழையடி வாழைகளான புலவர்மணி பெரியதம்பி, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரை ஆசிரியராகக் கொண்ட மகிழ்வு கொண்டவர். பேராசிரியர் செல்வநாயகத்தின் மனைவி கனடாவில் இறந்தபோது பேராசிரியரிடம் தான் கல்வி கற்றுப் பெற்ற சிந்தனை பற்றிப் பெரிதாகப் பேசிப் புகழ்ந்தார் செபரெத்தினம். விபுலானந்தரின் மாணாக்கரின் மாணாக்கன் என்ற காரணத்தால் விபுலானந்தத் தேன்தன்னில் ஊறிய உணர்வுடன் "வாழையடி வாழை"யை விபுலானந்த அர்ப்பணமாகச் செய்தார். கல்விமானிக்கு எடுத்துக் கொண்ட விபுலானந்த சிந்தனைக் கருவை அடிப்படையாகக் கொண்டு அதை விரிவுபடுத்தி "வாழ்வும் வளமும்" என்ற நூலை வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் ஆறுமுக நாவலரும் அவர் சீடர் பாரம்பரியமாக பண்டிதமணி படைப்புக்கள் இருப்பதுபோல விபுலானந்தசீட பாரம்பரியத்தின் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் சீடரான வித்துவான் செபரெத்தினம் வளமான தமிழ் நூல்களை ஆக்கித் தந்துகொண்டிருக்கிறார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி, கவிநாயகர், விநாயகர் கந்தவனம் அவர்கள்



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நுணாவில் மேற்கிலே 1933.10.28 ஆம் திகதி பிறந்த கந்தவனம் அவர்கள் ஆங்கில மொழிக் கல்வியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியிற் கற்று சிரேட்ட தராதரப் பரீட்சையிற் சித்தியடைந்தார். பட்டப் படிப்புக்காக சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிற் சேர்க்கப் பட்ட கந்தவனம் அவர்கள் புவியி யலைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு கற்று பட்டதாரியாக வெளியேறினார்.

பட்டதாரியாக நாடு திரும்பிய கந்தவனம் அவர்களுக்கு மாத்தளை புனித தோமையர் கல்லூரியில் ஆசிரியர் நியமனம் கிடைத்தது. அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த வேளையிலே கொழும்பு பாடப் புத்தக வெளியீட்டு சபைக்குத் தெரிவாகி, அங்கு எழுத்தாளர்களுள் ஒருவராகப் பணியாற்றினார். அங்கிருந்து வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற கந்தவனம் அவர்கள் அங்கு ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டு கொழும்புத்துறை ஆசி ரியர் பயிற்சிக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கல்வி டிப்ளோமா, நாடக டிப்ளோமா ஆகிய பட்டப் பின்படிப்பு நெறிகளைக் கொழும்பு பல்கலைக்கழகத்திலே கற்றுத் தேறிய கந்தவனம் அவர்கள் அங்கிருந்து யோகபுரம் மகாவித்தியாலயத்திலும் அதன் பின்னர் அருணோதயக் கல்லூரியிலும் அதிபராகப் பணியாற்றியுள்ளார். நாட்டின் அரசியற் சூழ்நிலை மோசமாகத் தொடங்கியதைக் கண்ட கந்தவனம் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறி தென்னாபி ரிக்கா சென்றார். அங்கு ஒன்பது ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய அவர் 1988இல் கனடா வந்தார்.

கருவிலே திரு அமையப் பெற்றிருந்த கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் இளமைப் பராயத்திலேயே எழுதத் தொடங்கி விட்டார். அவருடைய ஆரம்பகால ஆக்கங்களுக்கு ஈழகேசரி யின் பாலர் பகுதி களம் அமைத்துக் கொடுத்தது. அவரு-டைய எழுத்தாற்றல் ஈழகேசரி ஆசிரியரான இராஜ அரியரத்தினம் அவர்களால் வளர்க்கப்பட்ட தெனலாம். அவ்வாறே அவருடைய தமிழ் இலக்கிய இரசனை நாவற்குழியூர் எம். கார்த்திகேசு அவர்களாலும் நாடக ஆற்றல் பி. டி. சின்னர் அவர்களாலும் பேச்சுத்திறமை ஐயாத்துரை அவர்களாலும் நடிப்பு ஆற்றல் தம்பிப்பிள்ளை அவர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்டதாக கந்தவனம் அவர்கள் நன்றியுணர் வுடன் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, கறிஸ்தவக் கல்லூரியிற் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த கந்தவனம் அவர்களுக்குத் தமிழாசானாக இருந்தவர் பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரனார் ஆவார். இவர் பேராசிரியர் விபுலானந்த அடிகளாரது முதல் மாணாக்கருள் ஒருவர். ஆலாலசுந்தரனாரிடம் தமிழை முறையாகக்கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கந்தவனம் அவர்களுக்குச் சித்தித்தமை இறையருளேயாம். இளமையிலேயே கவிதை புனையும் ஆற்றல் கைவரப் பெற்றிருந்த கந்தவனம் அவர்கள் பேராசிரி யர் ஆலாலசுந்தரனாரிடம் பெற்றுக்கொண்ட கல்வியின் மூலம் மேலும் அதனை வளப்படுத்தி வளர்த்துக் கொண்டார்.

ஈடிணையற்ற சமய பக்தி கொண்டிருக்கும் கந்தவனம் அவர்கள், தலபுராணங்களைப் படைப்போரின் எண்ணிக்கை அருகிவரும் சூழ்நிலையில் தலபதிகங்கள் பலவற்றைப் படைத்திட முன்வந்தமை பலரின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது. முறிகண்டிப் பத்து, குரும்பசிட்டி விநாயகர் பத்து, புன்னையம் பதிகம், வீரகத்தி விநாயகர் ஊஞ்சல், நல்லூர் நாற்பது, நுணாவில் வீரகத்தி விநாயகர் மீது பாடப்பட்ட விநா யகப்பா, விநாயக வெண்பா, விநாயகர் விருத்தம் என்பன அவர் பாடிய தலபதிகங்களுட்சில.

சமய பக்தியைப் போலவே தாய் மொழியிலும் தாய் நாட்டிலும் கந்தவனம் அவர்கள் ஈடிணையற்ற பக்தி கொண்டவர். தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ் வணக்கம், நானும் தமிழும், தாய்மொழியைக் கற்றல், வாழிய தமிழீழம், விடுதலை வேட்கை, விடுதலைத் தென்றல், தன்மானமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் மானமும் முதலிய கவிதைகள் அவரது மொழிப் பக்தியையும் நாட்டுப் பக்தியையும் புலப்படுத்திடப் படைக்கப்பட்ட கவிதைகளுக்கு உதாரணங்களாம். மேலே கூறப்பட்ட கவிதைகள் ஒவ்வொன்றும் அவருடைய உள்ளுணர்வின் அறுவடைகளாம்.

இலக்கிய உலகம், கீரிமலையினிலே, பாடு மனமே, உய்யும் வழி, கவியரங்கில் கந்தவனம், வரிக்கவிகள் ஆகிய படைப்புகள் கந்தவனம் அவர்களின் கவிதை ஆற்றலைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றன. அவரது ஆற்றொழுக்குப் போன்ற நடை இறைவனின் கொடையாகும்.

மேலே சுட்டப்பட்ட இலக்கிய உலகம் என்னும் நூலானது 54 பக்கங்களைக் கொண்ட ஒரு சிறிய நூலாக இருந்த போதிலும் அஃது இலக்கியம் என்றால் என்ன? இலக்கியம் யாராற் பிறக்கின்றது? இலக்கியம் ஏன் பிறக்கின்றது? இலக்கியம் எங்கே பிறக்கின்றது? இலக்கியம் எப்பொழுது பிறக்கின்றது? இலக்கியம் எப்படிப் பிறக்கின்றது? என்னும் ஆறு வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருவதோடு, மரபினையிட்ட தெளிவான பார்வையையும் காட்டுகிறது. அதேவேளையில் இலக்கியங்கள் படைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவை காலத்தை வென்று நீடித்து நிலைக்க வேண்டிய தேவையையும் விளக்குவதாக இருக்கக் காண்கிறோம்.

கந்தவனம் அவர்களின் படைப்பாகிய மணிக் கவிகள், அவருடைய மணிவிழாவையொட்டி வெளியிடப்பட்ட நூலாகும். எட்டுச் சீர்களைக் கொண்ட ஈரடிக் கவிகள் அறுபதினைக் கொண்டுள்ள இச் சிறுநூல், கந்தவனம் அவர்கள் அநுபவ முதிர்ச்சியின் அறுவடையாம்.

தங்கம்மா நான்மணி மாலையானது துர்க்கா துரந்தரி தங்கம்மா அவர்களைப் போற்றிப் பரவிடும் வண்ணம் கந்தவனம் அவர்களால் ஆக்கப்பட்டதாகும். வெண்பா, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா என்பவற்றால் அந்தாதி முறையிலான நாற்பது செய்யுள்களால் அமைவதே நான்மணி மாலையாகும். கந்தவனம் அவர்களின் உன்னத படைப்புகளில் இஃதும் ஒன்று.

பத்துப்பாட்டு என்னும் நூலானது, கனடா வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே கந்தவனம் அவர்கள் கண்டவை, கேட்பவை, அநுபவித் தவை பற்றிப்பாடிய 162 பாடல்களைக் கொண்டிருக்கிறது. சுவையுடன் யதார்த்தமாகக் கூறப்படும் சம்பவங்கள் உணர்வு பூர்வமாக அமைந்திருக்கின்றன.

கந்தவனம் அவர்களின் இன்னுமோர் அற்புத படைப்பு "ஆறுமுகம்". சுந்தரம் என்னும் பெயர் கொண்ட ஒருவனைச் சுற்றிப்படரும் இந்நூலானது, ஆறு முகங்களாகப் பிரிக்கப்பட்டு சம்பவங்கள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளன. மிகச் சிறந்த கற்பனை வளத்துக்கும் மிகச் செட்டான கவிதை வடிவத்துக் கும் சான்று தருவதாய் கந்தவனம் அவர்களது தனித்துவ முத்திரையினைக் கொண்டதாய் இப்படைப்பு மிளிர்கிறது.

மலரும் தமிழீழம், கொடுமை, மலரும் இலக்கியங்கள், ஆற்றாமை முதலிய அறுபத்தைந்து பொருள்களையிட்டுப் பாடிய பாடல்களின் தொகுப்பு நூல் "வரிக்கவிகள்" ஆகும். சமூக நோக்குடன் மக்கள் அறிந்து கொள்ள வேண்டியவற்றை ஆணித்தரமாகக் கூறும் பாடல்களாக அவை அமைந்துள்ளன.

பொருளடக்கத்திலும் நூலின் பக்கங்களைப் பொறுத்த வரையிலும் கனதியான படைப்பு "ஓ கனடா!" ஆகும். தமிழ் மொழி, விடுதலை வேட்கை, பாரம்பரியம், சமூகம், மணிக் கவிகள், கொஞ்சும் மொழி, சமயம், வாழ்த்து, பெரியோர், அமைப்புகள், இயற்கை, அஞ்சலி, கவியரங்கு, நான்காவது பரிமாணம், கனடியம் என்னும் பொருள்களிற் பாடப்பட்ட 187 பாடல்களைக் கொண்ட இந்நூலானது, கந்தவனம் அவர்களது சிந்தனைத் தெளிவினையும் அழகிய தமிழையும் அற்புதமான இலக்கியச் சுவையினையும் வெளிப்படுத்தி நிற்கக் காணலாம்.

"தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் உயரிய தத்துவத்தை வரிந்துகொண்ட கவிநாயகர் கந்தவனம் அவர்கள் கவிதை புனைதல், கட்டுரை எழுதுதல், நாடகம் எழுதுதல் முதலியவற்றில் நாட்டமுள்ள பலருக்குப் பயிற்சி கொடுத்த - கொடுத்துவரும் சிறப்புக்குரியவர். மேற்படி விடயங்கள் தொடர்பாக அவர்களால் எழுதப்பட்ட ஆழமான கட்டுரைகள், பத்திரிகைகளிலும் இதழ்களிலும் வெளியிடப் பட்டுள்ளன. கவிநாயகர் அவர்களின் தலைமையில் ஏராள மான பயிற்சிப் பட்டறைகள் மேலே சுட்டிய துறைகளில் நடத்தப்பட்டமை நன்றியுடன் குறிப்பிடப்பட வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடாகும்.

கவிநாயகரால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பன்னிரு சிறுகதைகள் அடங்கிய நூலும் (12 Short Stories), Lasting Light என்னும் நூலும் கனடிய பாடப் புத்தக சபையி-னரால் சிரேட்ட வகுப்புகளுக்கான துணை நூல்களாக அங்கீ-கரிக்கப் பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். தமிழர் தகவல் விருது, ஆர்.ஆர். கிரியேஷன்ஸ் நிறுவனத் தினரின் 2006ஆம் ஆண்டுக்கான நாடகப் பெருவிழா விருது, உதயன் பத்திரிகையின் 2006ஆம் ஆண்டின் விருது வழங்கும் விழா விலே கலை இலக்கிய மேன்மை விருது முதலிய ஏராள மான விருதுகள் வழங்கப்பட்டு கவிநாயகர் அவர்கள் பாராட்டப் பட்டுள்ளமை அவரின் தனித்துவத்தைப் பறை சாற்றுவதாய் அமைந்துள்ளது.

"கவியரங்குக்கோர் கந்தவனம்" என்று இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களால் போற்றப்பட்ட கவிநாயகர் கனடாவிலும் அதே போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்து வருவது குறிப்பிடத் தக்கதே.

கவிநாயகரில் அன்பும் மதிப்பும் நிறையப்பெற்ற கவிஞர் இரா. சம்பந்தன் அவர்கள் கவிநாயகரின் பெருமை-களை வெளிக்கொணரும் வண்ணம் "கவிநாயகர் காவியம்" பாடி, "அவருக்காகவே ஆக்கியமாலை

அவரின் திருவடிக்காகுதல் கடனே"

என்று முடித்திருப்பது பெருமைக்குப் பெருமை சேர்க்கும் செயலாக விளங்குகிறது.

2002இல் "கனடாவிலே சேவையிற் சிறந்த மனிதர்" என்ற சிறப்பு விருது, கவிநாயகருக்குக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

அமெரிக்காவிலுள்ள உலகப் பல்கலைக்கழகம், கவி நாயகர் கந்தவனம் அவர்களின் தமிழ்ப் பணிகளையும், சமய, சமூகப் பணிகளையும் பாராட்டி "இலக்கியக் கலாநிதி" என்னும் மதிப்பார்ந்த பட்டமளித்துச் சிறப்பித்தமை குறிப்பிடப்படவேண்டிய செய்தியல்லவா?

திரு. க. தெ. சண்முகராசா, அளவெட்டி திரு. சிறி கந்தராசா ஆகியோருடன் சேர்ந்து கவிநாயகர் கந்தவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் மேற்கொண்ட பெரு முயற்சியினால் 19.06.1993இல் அமைக்கப்பெற்ற கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையமே கவிநாயகர் கந்தவனம் அவர்களுடனான தொடர்பினை ஏற் படுத்திட எனக்கு வழியாக அமைந்தது. எழுத்தாளர் இணை யத்தின் தலைவராகப் பணியாற்றிய கவிநாயகர் அவர்களும் இயக்குநர் சபைப் பிரமுகராக விளங்கிய உதயன் பத்திரி கையின் பிரதம ஆசிரியர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் என்னால் எழுதப்பட்ட சிறுகதைத் தொகுதியாகிய "நயனங்கள் பேசுகின்றன" என்னும் நூலினை இணையத்தி னூடாக வெளியிடப் பெரிதும் துணை நின்றனர். அதனைத் தொடர்ந்து என்னால் வெளியிடப்பட்ட ஏனைய நூல்களும் எழுத்தாளர் இணையமே வெளியிட்டன என்பதையும் இணை யத் தலைவராகிய கவிநாயகரே வெளியீட்டு விழாக்களுக்குத் தலைமை தாங்கினார் என்பதையும் மனம் நிறைந்த நன்றி உணர்வுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கவிநாயகர் அவர்களில் எனக்கேற்பட்ட அன்பின் மேலீட்டினாலேயே "கவிஞர் கந்தவனத்தின் கவிதை வளம்" என்னும் ஆய்வு நூலினை எழுதி டிசம்பர் 2005இல் வெளி யிடக் கூடியதாயிருந்தது என்பதனைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்திட விரும்புகிறேன்.

எனது எழுபத்தைந்தாண்டு நிறைவினை கனடா தமிழ் எழுத்தாளர் இணையமானது கலாநிதி கவிநாயகர் கந்தவனம் அவர்களது வழிகாட்டலோடு பவள விழாவாக நடத்தி "வித்துவரத்தினம்" என்னும் பெயரிய பவள விழா மலரையும் வெளியிட்ட அதன் பெருந்தன்மையை நானும் என் துணைவி யாரும் மனநிறைவுடன் பாராட்டுகிறோம். அன்பு கலந்த நன்றியையும் எழுத்தாளர் இணையத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" - குறள் 101



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வித்துவரத்தினம்" என்னும் பெயரிய எனது பவள விழா மலரில் வெளிவந்த கவிநாயகர் அவர்களின் வாழ்த்துக் கவிதை கீழே தரப்படுகிறது.

## எழுபத்தைந்து ஆண்டான இளைஞர்!

முத்தமிழில் முத்துக்களைக் குளிக்க லாகும்
முன்னவரின் மரபுகளில் திளைக்க லாகும்
புத்தமுதப் பண்பாடு சிறக்க லாகும்
புதியபல சிந்தனைகள் சிறக்க லாகும்
சொத்துசுகச் செல்வநலம் மெத்தத் தேறும்
தொட்டவுடன் மணற்கேணி போல ஊறும்
வித்துவான் செபரத்தினம் அவர்க ளோடு
விரும்பிச்சிறு பொழுதுதனைக் கூடி னாலே!

அழகாக அவையேறிப் பேச வல்லார்
ஆராய்ந்து கட்டுரைகள் எழுத வல்லார்
தழுவாது சிறுகதைகள் படைக்க வல்லார்
தலையாய அறிஞர்விபு லாநந் தர்க்குக்
குழுவாகப் பெரியவிழா எடுத்த மேலோர்
குணமென்னும் குன்றேறி நிற்குஞ் சான்றோர்
விழியாகச் சமூகத்துக் குதவுந் தொண்டர்
மீன்பாடுந் தேனாட்டு மைந்த ராமே!

ஐயநினக் கென்ன வயதெழுபத் தைந்தோ
அமுதத்தமிழ் அருந்துபவர் இளமை குன்றாத்
தெய்வமென நீடுலகில் திரிவ ரன்றோ
திரிந்தரிய பணிகள்பல புரிவ ரன்றோ
செய்யதமிழ் வளர்த்துவரும் துய்ய சான்றோய்
திருமைந்தன் யேசுபிரான் அருளி னாலே
வையமதில் வேண்டுவன யாவும் எய்தி
மனைமக்கள் சுற்றமுடன் வாழ்க நன்கே!

**வி. கந்தவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள்



நாவலர் என்றால் அஃது ஆறுமுக நாவலரைச் சுட்டுவது போலவும் முத்தமிழ் வித்தகர் என்றால் அது விபுலாநந்த அடிக-ளாரைச் சுட்டுவது போலவும் கனடாவின் ஒன்ராறியோ மாகாணத் திலே அதிபர் என்றால் அஃது அதிபர் பொ. கனகசபாபதி அவர்-களையே சுட்டி நிற்கக் காண்கி றோம். யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற சோமாஸ்கந்தா கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராக அவர் ஆற்றிய பணிகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என, மேற்படி கல்லூரிகளின் பழைய மாணாக்கர்களும் முன்னாள் ஆசிரியர்களும் நன்றி கலந்த பெருமையோடு கூறுகிறார்கள்.

விஞ்ஞானப் பட்டதாரியான கனகசபை அவர்கள், விலங்கியல் கற்பிப்பதில் ஒப்பாரும் மிக்காருமின்றித் தனித்துவச் சிறப்பினைப் பெற்றிருந்தார். இதனையிட்டு அவருடைய பழைய மாணாக்கருள் ஒருவரான ஆஸ்திரேலியாவிலுள்ள மேற்கு சிட்னி பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் உயிரியல் தொழில் நுட்பத்துறைப் பேராசிரியர் ஆசி. கந்தராசா அவர்கள் கூறுவதைக் கீழே காண்க:

"திரு. பொ. கனகசபாபதி அவர்களை நான்கு தசாப்தங்களுக்கு மேலாக நான் அறிவேன். இன்றும் அவரை என் பேராசானாகவே மதிக்கிறேன். பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பை யாழ். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் படித்த காலங்களில் அவரிடம் விலங்கியல் படித்த மாணவன் நான். அந்தக் காலத்தில் கணணியில் பாடக் குறிப்புகளைப் பதிவு செய்யவோ, அன்றேல் ஒளி நகல்கள் எடுத்துக் கொள்ளவோ வசதிகள் இருக்கவில்லை. இருப்பினும் அன்றைய வசதிகளைப் பயன்படுத்தி பாடக் குறிப்புகளை "றோணியோ" அச்சுப் பதிவுசெய்து, நூல் வடிவில் எங்களுக்குத் தந்திருந்தார். அவை எமக்குப் பெரிதும் உதவின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறப்புரிமை இயல்", "கூர்ப்பு" ஆகிய தலைப்புகளில் அவர் எழுதித்தந்த விரிவான விடையங்கள், நாற்பது ஆண்டுகள் கழிந்தும் இன்னும் எனக்கு மனப்பாடமாக இருக்கிறது.

சிக்கலான விஞ்ஞானக் கோட்பாடுகளை விளக்க அன்று அவர் கையாண்ட உதாரணங்களும் நகைச்சுவை கலந்த மொழி நடையும் இன்றும் எனது பல்கலைக்கழக விரிவுரைகளுக்குப் பெரிதும் உதவுகின்றன. விளங்கக் கஷ்டமான விஞ்ஞான தரவுகளையும் இலகுவான நடைமுறை உதாரணங்களுடன் மாணவர் மனதில் பதியும்படி எடுத்துரைப்பது அவரது தனிச்சிறப்பு"

பிரபல எழுத்தாளரும் அதிபர் கனகசபாபதி அவர்களின் அபிமான மாணவியுமான திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் கூற்றிலிருந்து ஒருசிறு பகுதியைக் கீழே தருகிறேன்.

"எனது குரு ஒரு காலத்தின் மலர். தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் படித்த மாணவரின் வீட்டு வாசல் தோறும் விலங்கியல் என்ற பூரண கும்பத்தைப் பொலிவாக வைத்தவர்".

கல்வி அனைத்து மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டுள்ள கனகசபாபதி அவர்கள், சோமாஸ்காந்தாவின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் தாழ்த்தப்பட்டவர் என்று முத்திரை குத்தப்பட்ட மக்களின் கல்வித்தரத்துடன் சமூகத் தரமும் உயர்ந்திட பல்லாற்றானும் உழைத்துத் தாம் சமத்துவவாதி என்பதனை நிரூபித்துக் காட்டியுள்ளார்.

தாம் பணியாற்றிய கல்லூரிகள் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத்துறையிலும் கலைத்துறையிலும் வளர்ச்சி அடையச் செய்வதில் அயராது பாடுபட்டுள்ளார். மேற்படி துறைகளில் மாணாக்கர் சாதனைகள்பல புரிந்திட அவரே வழிகாட்டியாய் இருந்தார். மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்தில் நாடக மன்றம் ஒன்றினை உருவாக்கி நாடகங்களை மேடையேற்றிட வழிவகுத்துள்ளார்.

1987ஆம் ஆண்டில் கனடா வந்து சேர்ந்த அதிபர் அவர்கள் இங்கும் ஓய்ந்திருக்கவில்லை. தமிழ்ப் பணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகப் பணியும் அவருடைய நேரத்தை ஆக்கிரமித்துக் கொண்டன. 1988இல் தமது துணைவியாரை இழந்த அந்த ஈடுசெய்ய முடியாத இழப்பினாற்கூட அவருடைய பணிகளைத் தடுத்து நிறுத்திட முடியவில்லை.

1996இல் நிறுவப்பட்ட ஒன்ராறியோ நுண்கலைக் கூடமானது அதற்குப் பொருத்தமான அதிபர் திரு. கனக சபாபதி அவர்களே எனக்கண்டு அவரையே அதிபராக நியமித்துள்ளது. அவருடைய அநுபவத்துடன் இணைந்த நிருவாகத்திலே, ஒன்ராறியோ பாடத்திட்டத்திற்கமைய தராதரம் பெற்ற ஆசிரியர்களால் வாய்ப்பாட்டு, வீணை, புல்லாங்குழல், கடம், மிருதங்கம், தப்ளா, பரதநாட்டியம் முதலிய நுண்கலைகளும், கணிதம், விஞ்ஞானம், பௌதிகம், உயிரியல், ரசாயனவியல், கணக்கியல் முதலிய விஞ்ஞான பாடங்களும் ஆங்கில மொழியும் முதலாம் வகுப்பிலிருந்து பல்கலைக்கழக வகுப்புவரையுமாகக் கற்பிக்கப்படுகின்றன. "வெற்றி உங்களுடையது; கடமை எங்களுடையது" என்னும் இலட்சிய நோக்குடனும் அதிபர் கனகசபாபதி அவர்களுடைய ஆளுமையின் வழிகாட்டலுடனும் நுண்கலைக்கூடம் சிறந்த பணியாற்றி வருவதைக் காண்கிறோம்.

கனடாவிலுள்ள பல்லின மக்கள் அனைவரதும் கல்வி வளர்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டிவரும் திரு. கனகசபாபதி அவர்கள் ரொரன்ரோ கல்விச் சபையினதும் வட யோர்க் கல்விச் சபையினதும் ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார். குறிப்பாகக் கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் கல்வித் தரத்தையும் உயர்த்திட அரும்பாடுபட்டு வருகிறார்.

தமிழ் மாணாக்கருக்கேற்ற பயிற்சி நூல்களை ஆக்கும் பணியில் ஆர்வமும் ஆற்றலும் நிறைந்த கல்வியியலாளர்களையும் இணைத்து, முதலாம் தரம் தொடக்கம் எட்டாம் தரம் ஆகிய வகுப்புகளிற் பயன்படுத்துவதற்கான தமிழ் மொழிப் பயிற்சி நூல்களைத் தொகுத்துத் தந்தமை திரு. கனகசபாபதி அவர்களின் தமிழ்ப் பணியினை வெளிப்படுத்தி நிற்கிறது. இப்பணி 1995இல் ஆற்றப்பட்டதாகும்.

இனி அவரால் எழுதப்பட்ட நூல்களை நோக்குவோம். "அதிபர் ஒருவரின் கூரிய பார்வை" என்னும் நூல் 1995இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டுள்ளது. "பெற்றோர் பிள்ளைகள் உளவியல்" என்னும் நூல் 1998இல் வெளியிடப்பட்டுள்ளது. வாழ வேண்டிய வாலிபப் பராயத்தில் அகால மரணமடைந்த தமது அன்பு மகன் மாறனின் நினைவாக, அதிபர் கனகசபாபதி அவர்களால் எழுதப்பட்ட "மாறன் மணிக்கதைகள் -பாகம் 1" வெற்றிமணி வெளியீடாக ஜேர்மனியில் 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. "மாறன் மணிக்கதைகள் - பாகம் 2" தெல்லிப்பளை கலை இலக்கியக்கள வெளியீடாக 2004இல் வெளியிடப்பட்டது. திரு. கனகசபாபதி அவர்களால் எழுதப் பட்ட விஞ்ஞானக் கட்டுரைகள் அடங்கிய "திறவுகோல்" என்னும் நூல் வெற்றிமணி வெளியீடாக 2007இல் வெளியிடப் பட்டுள்ளது. அவருடைய உளவியல் கட்டுரைகளின் தொகுப் பாகிய "மனம் எங்கே போகிறது?" தெல்லிப்பளை கலை இலக்கியக்கள வெளியீடாக 2008இல் வெளியிடப்பட்டுள்ளது.

கலாநிதி சு. வித்தியானந்தன் - பத்தாவது ஆண்டு நினைவு மலரான "வித்தியானந்தச் சுடர்" வெளியீடு, நினைவு விழா ஆகியவற்றிற்கான செயற் குழுவுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட இருவருள், அதிபர் கனகசபாபதி அவர்கள் ஒருவராவார். அஃது அவருடைய முக்கியத்துவத்துக்குத் தக்கதொரு சான்றாகும்.

இன்று கனடாவிலே நடைபெறுகின்ற முக்கியமான விழாக்களிலே கனடாவின் தேசியகீதம் தமிழ்மொழியில் பாடப்படுதல் வழக்கமாகிவிட்டது. கனடா தேசியகீதம் கவி நாயகர் கலாநிதி கந்தவனம் அவர்களாற் தமிழ்மொழி ஆக்கம் செய்யப்பட்டதென்பதனையும் நாம் அறிந்திருக்கிறோம். அத் தமிழ் மொழி ஆக்கம் எவ்வாறு நிகழ்ந்தது என்பதனையிட்டு அதிபர் கனகசபாபதி அவர்கள் கூறுவதைக் கீழே தருகிறோம்.

"மகாஜனாக் கல்லூரிப் பழைய மாணவர் சங்க விழாக்களிலே கனடா தேசிய கீதத்தை தமிழில் இசைத்தால் என்ன? என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்படிச் செய்கின்ற பொழுது நிறையச் சிக்கல் உண்டு என்பது தெரியும். மொழி-பெயர்ப்பு மூலத்தின் அர்த்தத்தில் கொஞ்சமேனும் மாறுபடக் கூடாது. அதன் உணர்வும் சந்தமும் அப்படியே பிரதிபலிக்க வேண்டும். ஒரு தேர்ந்த கவிஞரால்தான் இது சாத்தியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்” கவிஞரிடம் பணி ஒப்படைக்கப்பட்டது. கவிஞர் கந்தவனம் அற்புதமாக அதனை மொழி பெயர்த்துத் தந்தார். நாம் அதை இசைத்ததோடு மட்டுமல்லாமல் சில வடயோர்க் பாடசாலைகளிலும் விசேட தினங்களில் அதனை ஒலிக்கச் செய்தோம். இப்பொழுது பல விழாக்களிலே கவிஞரின் மொழி பெயர்ப்பு பாடப்பட்டு வருகிறது. அவரின் “ஓ கனடா” பரந்துபட்ட ரீதியில் அங்கீகாரம் பெற்று வருகிறது”

கவிநாயகர் கந்தவனம், பண்டிதர் அலெக்ஸ்சாந்தர், கலாநிதி சிவநாயகமூர்த்தி, திரு. த. சிவபாலு, சிந்தனைப் பூக்கள் பத்மநாதன், திரு. குரு அரவிந்தன், திரு. சு. இராசரத் தினம் முதலிய கனடிய தமிழ் எழுத்தாளர்களின் நூல் களுக்கு அதிபர் கனகசபாபதி அவர்கள் எழுதியுள்ள அணிந் துரைகள், அறிமுகவுரைகள், ஆசியுரைகள், ஆய்வுரைகள் யாவும் பொருள் பொதிந்தவை. படித்து இன்புறத் தக்கவை. அதிபரவர்களின் ஆழ்ந்தகன்ற அறிவுடைமைக்குச் சான்று பகர்பவை.

அதிபர் கனகசபாபதி அவர்களுக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்பில்லை. ஒருவரிலொருவர் அன்பும் மதிப்பும் வைத்துள்ளோம். என்னால் எழுதப்பட்ட “கவிஞர் கந்தவனத் தின் கவிதை வளம்” என்னும் நூல் வெளியிடப்பட்டபோது அந்நூலினையிட்ட ஆய்வுரையை அவர்களே நிகழ்த்தி இருந்தார்கள். என்னையிட்டு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் வெளியிட்ட பவள விழா மலரில் இடம்பெற்றுள்ள அதிபர் அவர்களின் கட்டுரையிலிருந்து ஒரு பகுதியினைக் கீழே தருகிறோம்:

“சில வருடங்களுக்கு முன்னர் கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் சுவாமி விபுலானந்தர் பற்றிய மலர் ஒன்றினை வெளியிடும் நோக்கிலே சுவாமியின் கல்விப்பணிபற்றி என்னை ஒரு கட்டுரை எழுதித் தருமாறு கேட்டிருந்தார். ‘ஆம்’ என்றேன். நான் அச்சமயம் இலங்கை சென்றமையால் அங்கு நிறைய விடயங்கள் சேகரிக்கலாம் என்று எண்ணி முதலில் இராமகிருஷ்ண மடத்திற்குச் சென்று அவர்களது நூலகத்தில் தேடல் நடத்தியபொழுது எனக்குத் திருப்தியாகத் தகவல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை. பின்னர் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சென்றேன். அவர்கள் மிகவும் அனுசரணையாக இருந்தார்கள். சில சிற்றேடுகளையும் நூல்களையும் தந்து உதவினார்கள். அவைகளைத் திறந்து பார்த்த பொழுது எனக்கு ஆச்சரியம் காத்திருந்தது. அதில் அனேகமானவை திரு. க. செபரத்தினம் அவர்களால் எழுதப்பட்டவையே. இதற்காக நான் இங்கே வந்திருக்க வேண்டியதில்லையே. அவர் அங்கேயே இருக்கி றார். அவரிடம் இவைகளைப் பெற்றிருக்கலாமே என்றேன் வேடிக்கையாக. நாம் என்ன செய்வது! அவர் சுவாமிமேல் அத்தனை பக்தி உடையவர். அவர் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பவர். நீங்கள் அவருடன் பழகினால் புரிந்து கொள்வீர்கள் என்றனர். அவருடன் பழகும் வாய்ப்புத்தான் எனக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லை.

இவர் முதலில் எழுதிய "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" எனும் நூலை வாசித்த பொழுது ஏற்பட்ட எனது வியப்பு அவரது அடுத்த நூலாகிய "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்", என்னும் நூலைக் கண்டதும் எல்லை கடந்து விட்டது. இத்தனை தகவல்களையும் இவரால் எப்படிச் சேகரிக்க முடிந்தது. இது சாமானியமான வேலை அல்லவே. நான் என் வியப்பு மேலீட்டால் அவரைக் கேட்டும் விட்டேன். அவர் பதில் சொன்னால்தானே. அவரது அடக்கம் ஒரு புன்முறுவலாகத்தான் பரிணமித்தது".

"பணியுமாம் என்றும் பெருமை", "பெருமை பெருமிதம் இன்மை" என்னும் கூற்றுக்கள் அதிபர் கனகசபாபதி அவர்க-ளிடம் விளக்கம் பெற்றுத் துலங்கக் காண்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்தந்தை பேராசிரியர் யோசப் சந்திரகாந்தன் அவர்கள்



பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்கள் 1953 மார்ச் 10ஆம் நாளிலே பிறந்தவர். பொதுக் கல்வியை நிறைவு செய்த அடிகளார் இறையியற் கல்வியை விழைந்து இந்தியா சென்று திருச்சி, பூனா ஆகிய இடங்களிலுள்ள இறையியற் கல்லூரிகளிற் சேர்ந்து கொண்டார். அங்கு உரிய முறையிற் கற்று முதுமானிப் பட்டத்துடன் வெளியேறினார். குருத்துவ பயிற்சி பெற்ற அடிகளார் 1979 ஏப்ரல் 29ஆம் நாளிலே குருவானவராகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

1981ல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகப்பீடம் நிறுவப்பட்டபோது அதன் பொறுப்பு யோசப் சந்திரகாந்தன் அடிகளாரிடமே ஒப்படைக்கப்பட்டது. மெய்யியலில் கலாநிதிப் பட்டத்தையும் தத்துவ சாஸ்திரத்தில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றிருக்கும் அடிகளார், யாழ். பல்கலைக் கழகத்தில் வகித்த கிறிஸ்தவ இஸ்லாமிய பீடத்தின் பேராசிரியர், பீடாதிபதிப் பதவிகளைத் தொடர முடியாதபடி, நாட்டின் உள்நாட்டுப் போர்ச்சூழல் நெருக்குதலை ஏற்படுத்தியதால் 1996இல் கனடாவிற்கு புலம் பெயர்ந்து வரவேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் மொன்றியல் கொங்கோடியா பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி யாற்றிய யோசப் சந்திரகாந்தன் அடிகளார் தற்போது ரொரன்ரோ மைக்கல் பல்கலைக் கழகத்தில் இறையியல் மருத்துவ அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

புகழ் பெற்ற தமிழறிஞரான, செவாலியர் இலக்கியக் கலாநிதி வித்துவான் அடைக்கலமுத்து அவர்களுடைய மகனாரான அடிகளுக்குத் தமிழ்ப் புலமை பிறவிச் சொத்தாக அமைந்திருக்கிறது. கருவிலே திரு அமையப் பெற்ற அடிகளாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமை அவருடைய எழுத்திலும், பேச்சிலும் பளிச்சிட்டு நிற்கின்றன. அடிகளாரது இணையற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தாற்றலும் கேளாரும் வேட்ப மொழியும் பேச்சாற்றலும் தமிழ்ச் சான்றோர் அனைவருக்கும் பெருவிருந்தாம். அவரது ஆழ்ந்தகன்ற ஆய்வுத்திறமை ஆய்வில் அடிபதித்துள்ளோருக்கு ஒரு கலங்கரை விளக்காம். "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் கூற்று அவரிடம் விளக்கம் பெற்று நிற்கிறது.

சந்திரகாந்தன் அடிகளார் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளோடு பிரஞ்சு, இலத்தீன், மலையாளம் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றுள்ளார். போர்த்துக்கேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளிலும் ஓரளவு ஆற்றலையும் அவர் பெற்றுள்ளார். அவருடைய பன்மொழி அறிவு அவர் மேற்கொள்ளும் ஆய்வுகளுக்குப் பேருதவியாக அமைந்திருப்பதனை அவருடைய ஆய்வு நூல்கள் புலப்படுத்தி நிற்கின்றன.

பத்துக்கு மேற்பட்ட அறிவு சார்ந்த நூல்களைத் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஆக்கித் தந்துள்ள அடிகள், ஐந்து நூல்களைப் பதிப்பித்துமுள்ளார். யாழ். பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் "தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்" என்னும் நூல் அடிகளின் முன்னுரையுடன் 1993இல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. "கிறிஸ்தவ நாகரிகம்" என்னும் நூல் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிக-ளில் எழுதப்பட்டு 1995இல் வெளியிடப்பட்டுள்ளது. ஈழத்தில் முதன்முதலில் எழுந்த தமிழ்க் கிறிஸ்தவக் காப்பியம் என்று போற்றப்படும் பூலோகசிங்க அருளப்ப நாவலரால் 1896இல் வெளியிடப்பட்ட "திருச்செல்வர் காவியம்" என்னும் நூல், சந்திரகாந்தன் அடிகளாரால் எழுதப்பட்டுள்ள ஆராய்ச்சியுடன் கூடிய பதிப்புரையுடன் 1997இல் அடிகளாராலேயே பதிப்பித்து வெளியிடப் பட்டுள்ளது. அடிகளார், பேராசிரியர் ஏ. ஜே. உவில்சன் அவர்களோடு இணைந்து இலங்கைத் தமிழ்த் தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்னும் நூலை ஆங்கிலமொழியில் (The Origin and Development of Sri-Lankan Tamil Nationalism) எழுதி 1998இல் வெளியிடப்பட்ட நூல், 2002இல் மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது. "ஆண்டவரும் கிறிஸ்துவுமாகிய இயேசு" ("Jesus-Lord and Christ) என்னும் பெயரில் ஆங்கில மொழியில் 2006இல் வெளியிடப்பட்ட நூலின் பதிப்பாசிரியராக சந்திரகாந்தன் அடிகளாரே விளங்குகிறார்.

அகில உலக மாநாடுகளிலும், உலகப் பல்கலைக் கழகங்களிலும் உலகம் தழுவிய கருத்தரங்குகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக இன ஒடுக்குதல்கள் பற்றியும் மக்களின் இடப் பெயர்வுகள் பற்றியும் நடைபெற்ற கலந்துரையாடல்களிலும் வாசிக்கப்படுவதற்காக அடிகளாரால் எழுதப்பட்ட ஐம்பதுக்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் குறிக்கப்பட்ட அமைப்பு களால் பிரசுரிக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. பல்கலைக் கழகங்களாலும் சர்வதேச அமைப்புகளாலும் வெளியிடப்பட்டுள்ள இதழ்கள், சஞ்சிகைகள், வெளியீடுகள் ஆகியவற்றின் பிரதம ஆசிரியராகவும் சந்திரகாந்தன் அவர்கள் பணியாற்றிச் சிறப்பித்துள்ளார்.


தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக உழைத்து வரும் கனடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் தலைவராகவும் முதியோர் நலன்புரி மன்றமாகிய "வசந்தம்" உட்பட, பொது அமைப்புகள் பலவற்றின் காப்பாளராகவும் சந்திரகாந்தன் அடிகளார் ஆற்றிவரும் பணி அனைத்து மக்களதும் மதிப்பி-னையும் அன்பினையும் அவருக்கு ஈட்டிக் கொடுத்துள்ளது. எனக்கும் அடிகளாருக்கும் உள்ள தொடர்பு ஓரளவு நீண்ட வரலாற்றினைக் கொண்டது. அதனையிட்டு என்னால் எழுதப் பட்ட "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்ற நூலுக்கு அடிகளார் எழுதிய ஆய்வுரையில் குறிப்பிட்டுள்ளதைக் கீழே தருகிறேன்:

"இந்நூலாசிரியர் எனது தந்தையாரின் இனிய நண்பர். பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறையில் எனது தந்தையாருடன் சமகால மாணாக்கனாக வித்துவான் பட்டத்துக்கான கல்வியினை மேற்கொண்டவர். இவரது முதல் நூலான "வாழையடி வாழை" என்னும் நூல் வெளியான கை-யோடு அந்நூலின் சில பிரதிகளை எமது தந்தையாருக்கு அன்பளிப்பு செய்வதற்காக 1962இல் இளவாலையில் உள்ள எமது இல்லத்திற்கு வந்து தங்கிச் சென்ற நினைவு எனது அடிமனதில் இன்றும் பசுமையாகவே உள்ளது. அப்போது நான் எட்டு வயதுச் சிறுவன். ஆசிரியர் செபரத்தினம் அவர்க-ளின் தமிழ் மொழி ஆர்வம், வரலாற்றுப் பேருணர்வு, பரந்து விரிந்த தமிழ் இலக்கியச் செழுமை முதலியவற்றைப்பற்றி எனது தந்தையார் பலதடவைகள் கூறக்கேட்டிருக்கிறேன். எனவே இந்நூலுக்கு நான் வழங்கும் இச்சிறிய ஆய்வுரை, என் வாழ்த்துரையும் எனது அன்புரையுமாகும்".

அடிகளாருடைய அன்போடிணைந்த தொடர்பினை நான் பெரிதாக மதிக்கிறேன், இறைவனைத் துதிக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. தங்கராசா சிவபாலு அவர்கள்



முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த குமுளமுனையில் 5.01.1946 இல் பிறந்த திரு. சிவபாலு அவர்கள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி ஆகியவற்றிற் கற்று, பேராதனைப் பல்கலைக் கழகத்திலே கல்வியலிற் சிறப்புப் பட்டம் பெற்றார். 1974இல் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய இவர், ஆசிரிய ஆலோசகராகவும் பாடசாலை அதிபராகவும் கொத்தணி அதிபராகவும் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொண்டார். இக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுத் தமது கல்வித் தகைமையினை வளம்படுத்தி கல்வியியலாளராகத் தம்மை உயர்த்திக் கொண்டார்.

கல்வியியல் தொடர்பான கட்டுரைகளை எழுதி எழுத்துத்துறைக்குள் காலடி வைத்த சிவபாலு அவர்கள் அத்துறையிலே பிரகாசிக்கத் தொடங்கினார். கவிதை புனைய வேண்டுமென்னும் ஆசை தமது இளமைப்பராயத்திலிருந்தே தமது உள்ளத்திற் கருக்கட்டத் தொடங்கியதாகவும் கூறும் திரு. சிவபாலு அவர்கள் புகழ்பெற்ற புலவர்கள் படைப்புகளை படித்துச் சுவைக்கத் தொடங்கியதாகவும் கூறியுள்ளார். பேராதனைப் பல்கலைக் கழகத்திற் பயின்றவேளை, புதுவை இரத்தினதுரை அவர்களை அங்கு அழைத்து அவரது கவிதைகளை அவர் வாயிலாகவே செவிமடுத்தமை கவிதை எழுத வேண்டும் என்னும் தமது இளமைப்பராய ஆசையை உதைத்து, உதைத்து வெளியே கொண்டுவர உதவியதென சிவபாலு அவர்கள் நன்றி உணர்வுடன் உரைத்திருப்பதைப் பார்க்கிறோம்.

பிரான்ஸ் நாட்டுக்குப் புலம் பெயர்ந்து சென்ற திரு. சிவபாலு அவர்களுக்கு கவிதை புனையவேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பங்கள் வலியவந்து சேர்ந்தன. மரணச் சடங்குகளில் கண்ணீர் அஞ்சலிகளை எழுதி வாசிப்பது பெருவழக்காகும். பிரான்ஸ் நாட்டிலே கல்விமானாகப் போற்றப்பட்ட சிவபாலு அவர்களுக்கு அஞ்சலிகளை எழுதும்பணி நண்பர்களினால் ஒப்படைக்கப்பட்டது. சந்தர்ப்ப சூழல், திரு. சிவபாலு அவர்களுக்கு அவருடைய உள்ளத்தில் நிறைந்திருந்த கவிதை ஆற்றலுக்குரிய வடிகாலாக உதவலாயிற்று. கண்ணீர் அஞ்சலிகள் மட்டுமல்ல கவிதைகளும் ஆக்கப் பட்டன.

25.12.1995ஆம் திகதி கனடா வந்துசேர்ந்த திரு. சிவ-பாலு அவர்களுக்கு தம்முடைய ஆற்றல்களை வெளிப்படுத் திட வசதிகளும் வாய்ப்புகளும் நிறைந்திருந்தன. கட்டுரை, விமர்சனம், கவிதை, கதை, நாடகம் எனப் பல்துறைகளிலும் அவர் பிரகாசிக்கத் தொடங்கினார். "குமுளன்", "தங்கபாலு" என்னும் புனைபெயர்களிலும் அவரது சொந்தப் பெயரிலும் ஆக்கங்கள் வெளிவந்தன.

உதயன், தமிழர் செந்தாமரை, விளம்பரம், தமிழர் தகவல் முதலிய பத்திரிகைகள் இவருடைய ஆக்கங்களை விரும்பிப் பிரசுரித்தன. சில ஆண்டுகளுள் உதயன் பத்திரிகை சிவபாலு அவர்களை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டது. விழாக்கள், அரங்கேற்றங்கள், ஒன்று கூடல்கள், கவியரங்குகள் முதலிய நிகழ்ச்சிகளையிட்டு சிவ-பாலு அவர்களால் எழுதப்படும் அறிக்கைகளும், விமர்சனங் களும் பெரும் வரவேற்பைப் பெறலாயின. கல்வியியலாள ரான அவருடைய கல்வியுடன் தொடர்புடைய கட்டுரைகள், பெற்றோருக்கான அறிவுரைகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றன.

ரொரன்ரோ கல்விச்சேவையில் ஆசிரியர்களாக இணைந்து சிவபாலு அவர்களும் துணைவியர் தயாதேவி அவர்களும் ஆற்றிவரும் கல்விப்பணி சிறந்த சமூகப்பணி யாகவும் போற்றப்படுகிறது. கவிநாயகர் கந்தவனம், அதிபர் கனகசபாபதி, பண்டிதா அலெக்ஸ்சாந்தர், கலாநிதி பாலசுந்தரம் அவர்களுடன் இணைந்து ரொரன்ரோவிலே ஆற்றப்படும் கற்பித்தற்பணி, புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த கொடை என்றே கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993இல் அமைக்கப்பெற்ற கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்திலே 1996இல் இணைந்து கொண்ட சிவபாலு அவர்கள் இணையத்திற் காட்டிய அர்ப்பணிப்போடு இணைந்த அக்கறை அவரைச் செயலாளராகவும் தறிபோது தலைவராகவும் பொறுப்பான பதவிகளை வகிப்பதற்கு வழி சமைத்துத் தந்துள்ளது. அவர் செயலாளராகப் பதவி வகுத்தபோதுதான், எனது பவள விழாவும் “தமிழ் நாடும் ஈழத்துச் சான்றோரும்” கவிநாயகர் கந்தவனத்தின் “கவிதை வளம்” ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு விழாவும் நடைபெற்றன என்பதனை நன்றியுடன் நினைவு கூருகிறேன். அவர் தலைமை தாங்கும் காலத்திலேயே பண்டிதர் சி. அப்புத்துரை எழுதிய ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு இரண்டாம் பாகத்தின் அறிமுக விழா, கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயலாளராகப் பணியாற்றிய அமரர் தமிழவேள் கந்தசுவாமி அவர்களின் மறைவுக்கான அஞ்சலிக்கூட்டம் முதலிய பல முக்கியமான நிகழ்வுகள் அவர்களின் தலைமை யில் நடைபெற்றுள்ளன.

“மணவினை முறைகள்- வைதீகத் திருமணமும் தமிழர் திருமணமும்” என்னும் நூல் 29.03.2003இல் திரு. சிவபாலு அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட முதல் நூலாகும். திரு. திருமதி ஞானகுமாரன் கவிதா ஆகியோர் தங்களின் திருமண நினைவாக அன்பளிப்புச் செய்த இந்நூல் காலத்தினாற்செய்த உதவியென அணிந்துரை வழங்கியுள்ள அதிபர் பொ. கனக சபாபதி அவர்கள் குறிப்பிட்டிருப்பது பொய் உரையல்ல. 56 பக்கங்களைக் கொண்ட இந்நூலினை வாசித்து முடிக்கும் ஒவ்வொருவரும் அதிபரின் கூற்றினை ஏற்றுக்கொள்ளவே செய்வர்.

“உலகுக்கு உழைப்போம்” என்னும் கவிதைத் தொகுதியினை சிவபாலு அவர்கள் 2004ஆம் ஆண்டிலே தமிழ் நாடு மணிமேகலைப் பிரசுரமாக வெளியிட்டுள்ளார். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு நோக்கங்களுக்காக அவரால் ஆக்கப்பட்ட கவிதைகளுள் 60 கவிதைகளைத் தேர்ந் தெடுத்து இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. சித்திரைப் புத்தாண்டே விரைந்துவா, விபுலாநந்தர் புகழ் பாடுவோமே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நாடு, திராவிடர் பொங்கல், பாரத மாதா, சாதிவெறி தீரவில்லை, மனிதநேயம் பேச்சிலா?, இன்பத் தமிழ், தமிழர் திருநாள், கல்வி, புலம் பெயர்ந்த தமிழ், நத்தார் பண்டிகை முதலிய கவிதைகள் சிவபாலு அவர்களது பண்பட்ட குண நலனையும் பரந்துபட்ட மனநலனையும் உயர்ந்த கவி நலனையும் புலப்படுத்தும் ஒருபானைச் சோற்றுக்கான பதச் சோறாய் அமைந்துள்ளன. சிவபாலு அவர்கள் உதயனிலே தொடர் கட்டுரையாய் எழுதிவரும் கல்வியியல் சார்ந்த கட்டுரைகள் நூல்களாக வெளிவர உள்ளன.

சிறுவர்களுக்கான கவிதைகளையும் படைத்துள்ள திரு. சிவபாலு அவர்கள், அவற்றுள் ஒருசிலவற்றைத் தேர்ந்தெடுத்து "எங்கள் குடும்பம்" என்ற தலைப்பில் குறும் இசைத் தட்டினையும் வெளியிட்டுள்ளார். சிறுவர்கள் அவற்றைப் பாடிப் பயனடைவர் என்பது எனது துணிபு.

திரு. சிவபாலு அவர்களுக்கும் எனக்கும் உள்ள தொடர்பு ஆழமான அன்போடு கூடியதாகும். எங்கள் பவள விழாவின்போது அவருடைய செயலாற்றும் திறமையையும் அப்பழுக்கற்ற நேர்மைத் திறனையும் கண்டு வியந்து நின்றேன். சிவபாலு ஆற்றல்களைக்கண்டு வியந்தபோது,


"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்னும் குறள் நினைவுக்கு வந்தது. அந்த நினைவிலே சிவ-பாலு அவர்களை முதன்மைப்படுத்தி ஊக்குவித்துவரும் அதிபர் கனகசபாபதி அவர்களும் கவிநாயகர் கந்தவனம் அவர்களும் உதயன் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர் களும் உயர்ந்து நிற்கிறார்கள். திரு. சிவபாலு அவர்கள் இன்னும் சாதிப்பார். அவரை நிறைந்த உள்ளத்தோடு வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி க.தா. செல்வராசகோபால் அவர்கள்

- ஈழத்துப் பூராடனார் -



கலாநிதி செல்வராசகோபால் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த செட்டிபாளையம் என்னும் ஊரில் 13.12.1928இல் பிறந்து, தேற்றாத் தீவில் திருமணம் செய்து, அங்கு வாழ்ந்து தற்போது கனடாவைத் தமது வாழ்விடமாகக் கொண்டுள்ளார்.

34 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய செல்வராசகோபால் அவர்கள் தமிழ் மொழியோடு ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் ஆற்றல் பெற்றுள்ளார். பயிற்றப்பட்ட தமிழாசிரியரான இவர் தமது நெருங்கிய உறவினர்களான கணபதிப்பிள்ளை புலவர், சின்னவப் புலவர் ஆகியோரிடமும் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்களிடமும் தமிழறிவை வளர்த்துக் கொண்டார். மருதானை தொழில் நுட்பக் கல்லூரியில் தட்டெழுத்து, சுருக் கெழுத்து, அச்சுக்கலை ஆகியவற்றை முறையாகக் கற்றுக் கொண்டார். ஹோமியோபதி மருத்துவம், ஓவியம் ஆகியவற்றி லும் தராதரம் பெற்றிருந்தார். இவ்வாறு செல்வராசகோபால் அவர்கள் பல்கலைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தமை அவரு-டைய உன்னத வளர்ச்சிக்குப் பேருதவியாக அமைந்திருந்தன.

1956இல் தேற்றாத்தீவிலே அவரால் நிறுவப்பட்ட மனோகரா அச்சகமும் அதனோடு இணைந்து ஆரம்பிக்கப் பட்ட ஜீவா பதிப்பகமும் செல்வராசகோபால் அவர்களுடைய உயர்ச்சிக்கு இடப்பட்ட உறுதியான அடித்தளங்களாம். அவர் கற்றுக்கொண்ட கலைகளும் அவர் பெற்றுக்கொண்ட கல்வியும் முதலீடுகளாகக் கொள்ளப்பட்டு ஆற்றல் நிறைந்த துணைவியாரதும் கலைவளங்கொண்ட மக்கட்செல்வங்களதும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பினை ஆதாரமாகக் கொண்டு தொடங்கப்பட்ட அச்சகப்பணி வெற்றிநடைபோடத் தொடங்கி யது. ஏராளமான நூல்கள் வெளியிடப்படலாயின. கிழக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலங்கையில் மனோகரா அச்சகமும் ஜீவா பதிப்பகமும் மதிப்புக்குரிய இடத்தைப் பெற்றுக் கொண்டன.

1985இல் கனடாவிற்குக் குடும்பத்துடன் இடம் பெயர்ந்து வந்த செல்வராசகோபால் அவர்கள் தமது இரத்தத்தோடு கலந்துவிட்ட அச்சுக்கலையை முன்னெடுத்துச் செல்லலானார். அவருடைய மூத்த மகனான ஜோர்ஜ் இதயராஜ் தனது தம்பியாரான கலாநிதி வெஸ்லி இதய ஜீவ-கருணா என்னும் பொறியியலாளருடன் சேர்ந்து மின்கணனித் தமிழ் அச்சமைப்பைக் கொண்டு ரொரன்ரோ நகர மத்தியில் "றிப்ளக்ஸ்" அச்சகத்தை நிறுவினார். இஃது அமெரிக்கக் கண்டத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட மின்கணனித் தமிழ் அச்சகமாகும். இதன் வளர்ச்சிக்கு செல்வராசகோபால் அவர்களுடன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பங்களிப்புச் செய்து வருவதனால் இவர்களுக்கு "றிப்ளக்ஸ் குடும்பம்" என்னும் காரணப் பெயர் ஏற்பட்டுவிட்டது.

மேற்படி மின்கணனித் தமிழ் அச்சகமான றிப்ளக்ஸ்சிலே முதன் முதலாக நூறு வீதம் கொம்பியூட்டரில் தமிழ் எழுத்துக்கள் கோர்க்கப்பட்டு பிழை திருத்தமும் மாதிரி அமைப்பும் சீர்செய்யப்பட்டு அச்சிடப்பட்டு வெளிவந்த முதல் நூல் என்னும் பெருமையை "பெத்தலேகம் கலம்பகம்" என்னும் கிறிஸ்தவப் பிரபந்தம் பெற்றுக் கொண்டது. இச்சாதனையை றிப்ளக்ஸ் குடும்பத்தினர் 1986சித்திரைப் பௌர்ணமியன்று நிகழ்த்தியமை குறிப்பிடத் தக்கது.

பழைமை வாய்ந்த மகா காவியங்களாகிய ஹோமரின் ஒடிஸ்சியை விருத்தப் பாவாகவும் இலியட்டை வெண் பாவாகவும் தமிழாக்கம் செய்துள்ள செல்வராசகோபால் அவர்கள் ஆதி கிரேக்க துன்பியல் நாடகங்களாகிய அரிஸ்ர பான், மெனாண்டரின் ஆகியவற்றையும் தமிழாக்கம் செய்து சாதனை படைத்துள்ளார்.

பரணி, கலம்பகம், குறவஞ்சி, பிள்ளைத்தமிழ், கோவைபள்ளு, அம்மானை, சதகம், மாலை, புராணம், காதை, குறள், வெண்பா, கலிப்பா, கீதை, உலா என முப்பத்தாறு பிரபந்த நூல்களை யாத்துத் தந்துள்ள செல்வராசகோபால் அவர்கள் கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாநிலத் தமிழறிஞர் களின் தமிழ்ப் பங்களிப்புப் பற்றி பன்னிரு நூல்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்துள்ளார். இவற்றைவிட இலக்கிய நூல்கள், கற்பித்தல் நூல்கள், எழுத்துறுப்பு நூல்கள், நாடகத் தமிழ் நூல்கள் என ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்கள் அவரால் வெளியிடப் பட்டுள்ளன. இவற்றுடன் ஒன்பது காண்டங்களைக் கொண்டு மூவாயிரம் பக்கங்களில் "தமிழழகி" என்னும் சிறந்ததொரு காவியத்துடன் இயேசு புராணம் என்னும் இயேசு பாவியம். கைக்கிளையம் - இரண்டு பாகங்கள், வயலும் வாரியும், மல்லிகைப் பந்தல் ஆகிய காவியங்களும் செல்வராசகோபால் அவர்களால் ஆக்கப்பட்டவையாம்.

கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் என்னும் சிறந்ததொரு நூலினை, தமிழ்மணி இரா. நாகலிங்கம் அன்புமணி, திரு. அஜந்தா ஞானமுத்து, செல்வி க. தங்கேஸ்வரி, திரு. பரதன் கந்தசாமி, திரு. கனக்ஸ் கல்கி தாசன், திரு. மு. நடேசானந்தம், திரு. எஸ். சிவப்பிரகாசம் ஆகியோரின் உதவியுடன் செல்வராசகோபால் அவர்கள் 2001ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இப்பணியின் முதலாம் பாகமாக வெளியிடப்பட்ட மேற்படி நூலில் சிலை வடிவம் பெற்ற செம்மல்கள், கலாநிதிகள், பேராசிரியர்கள், வித்துவான் கள், பண்டிதர்கள், புலவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எனப் புகழ்பூத்த கிழக்கிலங்கை மைந்தர்கள் 63 பேர்களது வாழ்க்கைக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.

கிழக்கிலங்கை மண்ணின் புகழ்பூத்த மைந்தர்கள் என்னும் நூலின் இரண்டாம் பாகத்துக்குரிய விபரங்களைத் திரட்டி எழுதும்பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. முதலாம் பாகத்துக்குரிய தகவல்களைத் திரட்டி உதவிய அன்பர்க ளோடு, வித்துவான் நாகலிங்கம், கவிஞர் சோ. ஞானதேசிகன், சிற்பக் கலைஞர் டாக்டர் கந்தசாமி ஆகியோர் எனக்குத் தேவைப்பட்ட தகவல்களைப் பெரு மனதுடன் அனுப்பி உதவினார்கள். இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப் படையில் 145 பேர்களது வாழ்க்கைக் குறிப்புகளை எழுதக் கூடியதாய் இருந்தது. 145 பேர்களுள் 26 இஸ்லாமிய சகோ தரர்களும் அடங்குவரென்பது இங்கு குறப்பிடத் தக்கதாகும். என்னால் திரட்டி எழுதப்பட்டவற்றைத் தொகுத்துப் பதிப்பிக் கும் பணியினை செல்வராசகோபால் அவர்களே செய்தார். இந்நூல் 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி செல்வராசகோபால் அவர்களுக்கு எழுத் தாற்றல் இறைவன் கொடுத்தகொடை. எழுதுதலும் அச்சிடுத லும் புத்தகம் கட்டுதலும் அவருக்குக் கைவந்த கலைகள். வயோதிபமோ, சுகவீனமோ, வேறு தடைகளோ மேற்படி கொடையையும் கலைகளையும் எந்த வகையிலும் பாதிக்கவு மில்லை. இனிப் பாதிக்கவும் மாட்டா. அவர் தொடர்ந்து எழுதிக்கொண்டும் நூல்களை வெளியிட்டுக் கொண்டும் இருப்பார். செல்வராசகோபால் அவர்கள் இற்றைவரை எழுதி வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை நூற்றைம்பதைத் தாண்டிவிட்டது. விரைவில் அஃது இருநூறாகலாம். அதன் மூலம் "கின்னஸ்" சாதனையாகவும் அமையலாம்.

கலாநிதி செல்வராசகோபால் அவர்களுடன் இலங்கை யிலே நெருங்கிய தொடர்பு கொள்ளும் சந்தர்ப்பங்கள் எனக் குக் கிடைக்கவில்லை. மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தினை ஆரம்பித்த காலத்தில் அவருடைய மனோகரா அச்சகத்திற்கு ஓரிரு தடவைகள் போயிருக்கிறேன். அவர் பேணிவைத்திருந்த மிகச் சிறந்த நூலகத்தைப் பார்ப்பதற்காகவும் சென்றிருக்கி றேன். எங்களின் சமயத்துடன் தொடர்பான நிகழ்வுகளில் சந்தித்திருக்கிறோம். கனடாவுக்கு வந்த பின்னரே ஓரளவு நெருங்கிப் பழகலானோம். கிழக்கிலங்கை மண்ணின் புகழ் பூத்த மைந்தர்கள் என்னும் நூலின் இரண்டாம் பாகத்தினை எழுதும்பணி எங்களின் தொடர்பினை நெருக்கமாக்கி விட்டது.

நெருங்கிய தொடர்பு கலாநிதி செல்வராசகோபால் அவர்களின் எழுத்துப் பணியினையிட்டு நிறைய அறிந்து கொள்ள வாய்ப்பினைத் தந்தது. அவர் தமது படைப்புகளின் மிகக் குறைந்த பிரதிகளையே அச்சிட்டுக் கொள்வார். அவற்றினை தமிழ் நாடு, மலேசியா, இலங்கை முதலிய தமிழர் வாழும் நாடுகளின் பல்கலைக் கழகங்களுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் முக்கியமான நூல் நிலையங்களுக்கும் புகழ் பெற்ற கல்லூரிகளுக்குமென அனுப்பி வைப்பார். நூல்களை விற்றுப் பணம் சம்பாதிப்பதில் அவர் என்றுமே நாட்டம் கொள்ளவில்லை. இக்காரணத்தினாலேயே அவர் தமது நூல்களுக்கு வெளியீட்டு விழாவினையோ அன்றி அறிமுக விழாவினையோ வைக்காது தவிர்த்து வந்துள்ளார்.

கலாநிதி செல்வராசகோபால் அவர்கள் எழுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியோடு சமூகப் பணிகளிலும் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் பிரதித் தலைவராகத் திகழ்ந்த இவர் கனடாவில் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தை ஆரம்பித்த பெருமைக்குரியவராக இருக்கிறார். தற்போது அந்த இயக்கத்தின் காப்பாளராக கடமை புரிகிறார். கனடா விபுலானந்த கலைமன்றத்தின் காப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். ஒன்ராறியோ விராம்ரன் புனித அன்ரனிஸ் கல்லூரியில் தாய் மொழிக் கல்விக்குரிய பணியுமாற்றியுள்ளார்.

செல்வராசகோபால் அவர்களது தமிழ்ப் பணியையும் சமூகப் பணியையும் பாராட்டி ஏராளமான பட்டங்களும் பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. ஒருசிலவற்றைக் கீழே தருதும்:

1. மட்டக்களப்பு கலாசார பேரவை - இலக்கியமணிப் பட்டம்
2. உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கம் - தமிழ்நெறிப் பாவலர்
3. மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை -பனுவல்பாரி
4. ரொரன்டோ சேக்கம் - சமூகசேவை விருது
5. ரொரன்டோ ராவ்பகதூர் தாமோதரனார் மன்ற விருது
6. கனடிய அரசின் நற்குடிமகனுக்கான சான்றிதழ்
7. ஆதிக் கிரேக்க இலக்கியங்களை தமிழாக்கம் செய்தமைக்கு அமெரிக்க, கிரேக்க இலக்கிய மன்றின் விருது
8. கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்தின் கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம்.

கலாநிதி செல்வராசகோபால் அவர்களின் உயர்வுக்கு அடித்தளங்களாக அமைபவை, அவருடைய தூயகுருபக்தியும் அவரோடு இணைந்துள்ள விடாமுயற்சியும் வாழ்நாள் நீடித்த கல்வியில் அவர் கொண்டுள்ள பற்றுறுதியும் அவரின் பணி-வுடைமைப் பண்புமே என்று துணிந்து கூறலாம்.

செல்வராசகோபால் அவர்களுடைய ஆசிரியர்களாகிய திரு. ஐங்கரப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை, பண்டிதர் பூபாலபிள்ளை அவர்களையும் தமது பிள்ளைப் பராயத்தில் கற்றலில் ஊக்குவித்த சின்னவப் புலவர், கணபதிப் புலவர் ஆகிய உறவினர்களையும் அவர் என்றுமே மறந்ததில்லை. அவர்கள் அத்தனை பேரையும் போற்றும் வண்ணம் பாமாலைகள் சூடியுள்ளார்; நூல்கள் எழுதி உள்ளார்; தமக்குப் புலமைத் தமிழ் தந்த புலவர்மணி அவர்களுக்குத் திரு உருவச்சிலை நிறுவியுள்ளார். எழுத்தறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தவன் இறைவனல்லவா? செல்வராசகோபால் அவர்கள் சோர்ந்திருந்ததை எவரும் கண்டிலர். "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" அல்லவா?

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை"

என்று கூறுகிறது பொய்யாமொழி. "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் பொய்யா மொழியும் கலாநிதி செல்வராச கோபால் அவர்களிடம் விளக்கம் பெறக் காண்கிறோம்.

தமிழ் ஒளி வித்துவான், கலாமுதுமானி
திரு. க. செபரத்தினம் அவர்களின்
தமிழ் கல்விப் பணிகள் செயலாற்று
வெண்பா

**ஆசானின் ஆசி வேண்டல்**

ஐங்கரன் என்தமிழை ஆக்கிவைத்த பேராசான்
பொங்கிதயத் தேந்திநான் பூந்தமிழ்ச்- சங்கையுற
வித்துவான் செபரத்தின வியன்மணியின் பலபணியை
சித்தம்நிறை வரலாறாய்ச் செப்பும்

**வித்துவானின் மலர்வு**

மருதமகள் நெய்தலுடன் மருவுகின்ற கிழக்கீழத்
திருவுறையுந் தம்பிலுவில் திகழூர்- பெருமையுடன்
இரட்சகரின் இறைப்பணி இயற்றிவந்த கனகரத்தின
குரவன் மகனாகக் குவிந்து

செபரத்தினப் பெயரிட்டு செந்தளிராய் வளர்த்தெடுக்க
தவத்திருவாய் வளர்ந்ததந்தத் தமிழ் - உவப்புள்ள
பலபணிகள் செய்து பயன்தரும் பேறுகளை
உலகினிற்கு ஊட்டியதை உரை

**கல்வியில் உயர்தல்**

புரட்டாதி இருபதுபுரை நான்கு முப்பதிலே
புரக்கவனி தனிலுதித்து மட்டக்- களப்புற்று
ஆங்கிலத்திற் கற்ற அடையாளப் பத்திரத்தை
ஓங்குமத்திய கல்லூரியிற் பெற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரில் கிறிஸ்தவ நல்லாசிரியப் பயிற்சிபெறு
கல்லூரியிற் கல்விகற்றுத் தேறி - நல்லதொரு
ஆசிரியர் என்று அவரிடங் கற்றவர்கள்
பேசிடவே சிறந்திட்டார் பின்பு

பேராதனைப் பல்கழகப் பீடமதன் வித்துவானென்
தராதரப் பரீட்சையிலே தேறி - ஆராதிக்குங்
கல்வியால் இளமானிக் கரைசேர்ந்து கல்வித்துறை
வல்ல வித்துவமும் வாய்த்தார்

**கற்பித்தற் பணியும் கனடியப் பாராட்டுகளும்**

கல்விகற்ற பள்ளியிலே கற்பிக்கும் வரம்கிடைத்த
நல்லதொரு ஆசிரியர் ஆகி - வல்லமையால்
வித்தியாலய அதிபராய் விளங்கி இளைப்பாறி
கத்துகடல் தாண்டினார் கனடா

ஆடியகால் ஆடாது அவமே இருந்திடாதென்
பாடியதாம் பாட்டின்பாற் படவே - கோடிடாது
இலங்கையில் செய்தமிழ் இணையிலாப் பணியதனை
துலங்கிடவே செய்தார் துணிந்து

கனடிய எழுத்தாளர் கவினிணையம் இவர்பணியை
கனப்படுத்திப் பாராட்டி விருதுத் - தனமீய
தமிழர்தக வலதும் தக்கதோர் விருதளிக்கும்
தமிழறிஞர் ஆனார் தலைத்து

இலக்கியத்தில் எழுத்தில் இறவாத பணிபுரிந்து
துலக்கிய தூயறிவு கண்டு - இலக்கியத்துக்
கலாநிதி ஆகுகின்ற ஆளுமைக்கு கிழக்கிலங்கை
கலாபீடம் கௌரவித்த களிப்பு

முதுமானி என்றார் முழுமைபெற்ற முதிர்நிலைக்காய்
புதுவிருதோ வெனப்புலவோர் புழுங்க - பொதுவாக
கற்றோர்கள் செய்யுங் காரியத்தில் தவறொன்று
உற்றதென்று உழன்றதே உலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ குடும்ப நலச் சிறப்பு

திருப்பளூ காமத்து திருநிறையும் நேசம்மா
உருப்பாவை தனைமணந்து உலகில் - மருளற்று
இல்லறத்தில் இணைந்து இறையருள் கைக்கொண்டு
நல்லறமே கண்டாரென நவில்

யேசுமதப் பணியில் இவர்குடும்பம் இயற்றியவை
பேசுவதே பெருநூலாய் பெருகும் - ஆசுகவி
இவர்தந்தை செய்த இரட்சணிய அம்மானை
நவமான நூலென்பார் நயந்து

வித்துவானின் உடன்பிறந்த வேதநாயகம் கிறிஸ்தவத்து
தத்துவப்போ தகர்அவர் சுதனும் - அத்தகைய
கிறிஸ்தவ அருட்பணியின் கிருபைமகன் அதுபோல
மறித்திவரின் மகனும்மறை மகனே

தமிழ்ப்பணியில் மட்டுமல தம்மதத்தைப் போதிக்கும்
அமிழ்தறிவும் கொடுக்குமிவர் ஆகமத்து - கமழறிவு
அருளுரை பகர்வதற்கு ஆனதகை பெற்றதனால்
திருக்குடும்ப மென்றெண்ணித் தேர்

## தமிழறிஞர் ஆவண நூற்தகை

தமிழ்மொழியுந் தமிழினமுந் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு
தமிழ்செய்து உயர்ந்தவரைத் தாங்கல் - அமிழ்தாயும்
எனவுணர்ந்த இவ்வறிஞர் ஈழத்தில் வாழ்ந்தபல
இனத்தமிழர் தமையிட்டு எழுதி

வருங்காலச் சந்ததியார் வளமிக்க தமிழ்வளர்த்த
பெருமக்கள் தமையிட்டு அறிய - அரும்பெரும்
தேடலுந் திரட்டலுந் தெளிவுறச் செய்தாய்ந்து
நாடறிய தொகுத்திட்டார் நூல்

வாழையடி வாழைஎனும் வளநூலே முதல்நூலாம்
தாழைமண முத்தமிழின் பெரியன் - வாழ்வியலை
மயில்விபுலர் வாழ்வும் வளமும் அதையடுத்து
நயனங்கள் பேசுகின்ற நூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கை மண்ணின் கிளர்ந்தெழுந்து புகழ்பூத்த
பழந்தமிழர் மைந்தரெனும் பனுவல் - அழகால்
இரண்டாவது பாகம் இனிதாய்ந்து தொகுத்ததிவர்
புரண்டுருண்ட மண்ணுக்கிடு பூசை

சங்க காலந்தொட்டு சார்ஈழத் தமிழறிஞர்
சங்கத் தமிழாய்ந்த பேறு - பொங்கியபோல்
அதன்பின்பும் பலஈழ அறிஞர்கள் அங்குசென்று
இதமான பணிசெய்தார் என்க

அத்தனை தமிழறிஞர் யாரென்று ஆய்ந்தறிந்து
முத்தமிழ் நூலாக்கி முனைந்த - வித்துவான்
ஈழத்தமிழ்ப் பங்கழிப்பு எத்துணைத்து எனவிளம்பும்
ஆழத்தமிழ் நூலென்று அறை

பதினெட்டாம் நூற்றாண்டில் பைந்தமிழ்செய் அறிஞர்கள்
மதியுள்ள ஈழத்து மாவறிஞர் - புதிதாகத்
தமிழகத்தில் பணிசெய்த தகவல்கொள் வரலாறு
அமிழ்தான ஆவணத்தின் நிதி

பார்புகழும் கந்தவனப் பாவலர்தம் கவிநயமென
சீர்கொண்ட ஆய்வுநூற் சிறப்புத் - தார்பூண்டு
நூற்பதிப்பில் முத்திரை முகப்பிட்டு தமிழ்செய்து
நாற்திசையும் புகழ்கொண்ட நயம்

பணிபுரிந்த பள்ளிகளில் பலகாலும் விபுலர்தனை
அணிசெய்து அறிய ஆங்காங்கு - மணியான
சிலைகள்தமை நிறுவிச் செய்தசெயல் யாழ்நூலார்
தலையாய பணியோதும் தகை

இலங்கையிலே செய்த இணையிலாத் தமிழ்ப்பணிக்கு
துலங்கிந்து கலாச்சார அமைச்சு - இலங்க
தமிழ்ஒளி என்னும் தகைவிருது தானீந்து
தமிழ்செய்து வைத்தசெயல் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள் ஆய்வுகள் கதைகள் கவிநயங்கள்
மட்டிலாத் தொகையாக வரைந்து - இட்டபணி
இணையில்லாத் தமிழ்வளத்தை இனிதாக்கித் தந்ததுவும்
துணையாக்கித் தந்ததுவுந் தோய்

செந்தமிழில் ஆங்கிலத்தில் சீர்கொண்ட செம்மலிவர்
தந்தபல ஆக்கங்கள் தரத்தால் - முந்திடவே
பத்திரிகை கழகங்கள் பார்மக்கள் ஆதியென
சந்திவிரு தளித்தனவே சிறக்க

குஞ்சரத்துக் குட்டிபோல் குறைவான பனுவல்களை
நெஞ்சாரத் தந்திட்ட இவர் - எஞ்சும்பல
இனியதமிழ் நூலாக்கி எதிர்காலச் சந்ததியார்
கனிநெஞ்சிற் கனிந்திருப்பார் காண்

**எனதெண்ணத் திண்ணியர்**

இருநூறு பனுவல்களை எழுதி வெளியிட்டவென்
ஒருநூலுக் குமட்டுமே அறிமுகப் - பெருமுரையைப்
பெற்றுள்ளேன் அதுவுமிவ் அறிஞரிடம் எனச்சொன்னால்
உற்றமனத் தெளிவதனை உணர்

பனைபோலச் சுவடியாய்ப் பயின்றஇரண் யசம்ஹாரந்
தனைஅச்சிற் பதிப்பித்த போது - எனைஈர்த்த
செபரத்தினச் செம்மலிடம் அதற்கோர் முகவுரையாம்
உபதேசம் பெற்றிட்டேன் நான்

**விபுலாநந்தரின் பணிகள்**


முத்தமிழ் முதுபுலவர் முனிவிபு லாநந்தவடி
வித்தகத்தில் விழைவுற்ற வினையால் - சித்தமுறச்
சென்றவிட மெல்லாம் சிலைவைத்தார் விழாவெடுத்தார்
இன்றுமவர் அப்பணியைத் தொடர்ந்து

தொரன்ரோ கனடாவில் தூய்விபுலர் நினைவுமன்ற
பொருந்துமுயர் காப்பாள ராக - ஒருங்கிணைந்து
பணியாற்றி வருகுமிந்தப் பைந்தமிழர் பல்லாண்டு
அணிகொள்ளப் பரனருளை வேண்டு.

**- ஈழத்துப் பூராடனார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்துவான் க. ஞானரத்தினம் அவர்கள்



கிழக்கிலங்கையிலே கல்முனையைச் சேர்ந்த பாண்டிருப்பு என்னும் பழந்தமிழ்க் கிராமத்தில் 15.02.1932 இல் பிறந்த ஞானரத்தினம் அவர்கள் கல்முனை லீஸ் உயர்தரப் பாடசாலையிற் கற்றவர். பயிற்றப் பட்ட ஆசிரியரான இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வித்துவான் பட்டதாரியுமாவார். ஆசிரியராகவும் பின்னர் துணை அதிபராகவும் நீண்டகாலம் பணியாற்றியுள்ள ஞானரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து குடும்பத்தாரோடு கனடாவுக்கு குடிபெயர்ந்து வந்துள்ளார்.

இயல்பாகவே கவி புனைவதிலும் கட்டுரை வரைவதிலும் ஆற்றல் கொண்டிருந்த ஞானரத்தினத்தின் படைப்புகள் இலங்கைப் பத்திரிகைகளின் வார இறுதி இதழ்களில் வெளிவந்தன. கிழக்கு மண்ணின் பாரம்பரிய கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள ஞானரத்தினம் அவர்களாற் தயாரிக்கப் பட்ட கிராமியக்கலை நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியில் தொடர்ந்து ஒலிபரப்பப்பட்டன. அவ்வாறே அந்நிகழ்ச்சிகள் ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத் தாபனத்திலும் ஒளிபரப்பப் பட்டன. குரல்வளம் அவருடைய பிறவிச் சொத்து. மேலே குறிப்பிட்ட ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் யாவும் அவருடைய குரல்வளத்தால் புகழடைந்தன.

கனடாவில் வசிக்கத் தொடங்கிய பின்னர், கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் "வைகறை வானம்" என்னும் மட்டக்களப்புப் பிரதேச மாண்பினை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியினை கடந்த ஆறு வருட காலமாக வாரந்தோறும் நடத்திவரும் ஞானரத்தினம் அவர்கள் "தமிழ் அமுதம்" என்னும் சுவையான நிகழ்ச்சியையும் வாரந்தோறும் நடத்தி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளாம். மட்டக்களப்புக் கலைச் செல்வங்களையும் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளையும் உரிய முறைப்படி அறிந்து வைத்திருக்கும் ஞானரத்தினம் அவர்களின் வானொலி ஒலிபரப்புகள் தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் பாராட்டைப் பெற்றிருப்பதில் வியப்பில்லை. கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் ஒழுங்கு செய்துள்ள "நிறைவும் குறைவும்" என்னும் நிகழ்ச்சியில் ஞானரத்தினம் அவர்களின் நிகழ்ச்சிகளில் குறை சொல்வார் எவரும் இலர் என்பதே அவற்றின் உயர்ந்த தரத்தை உணர்த்திடப் போதுமான சான்றாகும்.

வித்துவான் ஞானரத்தினம் அவர்கள், கனடாத் தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியின் அமைப்பாளர்களால் நிறுவப்பட்டு நடைபெற்றுவரும் மீனாட்சி சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் கனடிய வளாகத் தமிழ் இளமாணி வகுப்பு மாணாக்கருக்கு தமிழ் இலக்கண, இலக்கிய பாடங்களுக்கான விரிவுரையாளர்களுள் ஒருவராகவும் பணியாற்றி வருகிறார்.

கிறிஸ்தவ சமய உள்ளூர் அருளுரையாளர்களுக்கான தேர்வில் தேர்ச்சியடைந்துள்ள வித்துவான் ஞானரத்தினம் அவர்கள், கிறிஸ்தவ சபைகளில் சபை வழிகாட்டிகளுள் ஒருவராகவும் பாடகர்குழு உறுப்பினராகவும் சமயப்பணி ஆற்றிவருவதும் குறிப்பிடத் தக்கதே

ஞானரத்தினம் அவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் "கிறிஸ்தவ பக்திப் பாக்கள்" என்ற நூல் 1970ஆம் ஆண்டில் அவரால் எழுதி வெளியிடப் பட்டுள்ளது. கனடாவில் கலாநிதி க.தா.செல்வராசகோபால் அவர்களால் 2003ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மீன்பாடும் தேன்நாட்டு செல்வங்கள் தொகுதி-1 என்னும் நூலினை தொகுத்துப் படைத்தவர்களாக வித்துவான் ஞானரத்தினம் அவர்களும் கலாநிதி செல்வராச கோபால் அவர்களும் குறிக்கப் பட்டுள்ளார்கள். இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளோடு நேரடித் தொடர்பு கொண்டவர்களிடமிருந்து திரட்டப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டவை. இத்தகைய தேடலுக்கும் திரட்டலுக்கும் பக்கத் துணையாய் இருந்தவர் வானொலி வித்தகன் வித்துவான் க.ஞானரத்தினம் அவர்களாவார். அவரைத் துணைகொண்டு இந்நூலைப் படைப்பதில் பெருமிதம் அடைகிறேன் என்று கலாநிதி செல்வராசகோபால் அவர்கள் குறிப்பிடும் கருத்து மனதிற் கொள்ளத் தக்கது.

மேற்படி நூலிலே வித்துவான் அவர்களால் எழுதப் பட்ட "மட்டக்களப்பு மாநிலத் தொழிற் துறைகள்", "மட்டக் களப்பின் மண்வள மரபுத் தமிழ்ச் சொற்கள்", "மட்டக்களப்பு மக்களின் சமுதாய நம்பிக்கைகளும் சடங்கு சம்பிரதாயங் களும்", "வைகறை வானம் வானலைத் தயாரிப்பு நிகழ்ச்சி" ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன.

அண்மையில் வித்துவான் ஞானரத்தினம் அவர்களால் வெளியிடப்பட்ட நூல் "ஒருதலைக் காதல்" ஆகும். அவரால் எழுதப்பட்டு கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் ஒலி பரப்பப்பட்ட பதினைந்து நாடகங்களின் தொகுப்பு நூலே "ஒருதலைக் காதல்". ரொரன்ரோ நகர மண்டபத்தில் மண்டபம் நிறைந்த மக்களின் மத்தியில் இந்நூலின் வெளியீட்டு விழா இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

வித்துவான் ஞானரத்தினம் அவர்கள், வானொலி ஒலிபரப்பு மூலம் ஆற்றிவரும் சிறந்த தமிழ்ப் பணியை பாராட்டும் வகையில் மட்டக்களப்பு மக்கள் சமுதாயமானது அவருக்கு "வானொலி வித்தகன்" என்னும் பட்டத்தினை வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது.

கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பத்தாவது ஆண்டு நிறைவின்போது கௌரவிக்கப்பட்ட ஐந்து கலைஞர்களுள் வானொலி வித்தகன், வித்துவான் க.ஞானரத் தினம் அவர்களும் ஒருவர் என்பது அவரின் சிறப்பினைப் புலப்படுத்துகிறதல்லவா?

வித்துவான் ஞானரத்தினம் அவர்களுக்கும் எனக்கும் உள்ள அன்புடன் இணைந்த உறவினையிட்டு அவர் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ள கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பந்தி விளக்குவதைக் கீழே காணலாம்.


"வித்துவான் தமிழ் ஒளி க.செபரத்தினம் அவர்களைப் பற்றி இந்தக் கட்டுரையை எழுதக் கிடைத்த வாய்ப்பினை யிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். வித்துவான் அவர்கள் எனது நெருங்கிய உரித்தினர். அவரின் இல்லத்தரசி நேசம்மா எனது ஒன்றுவிட்ட சகோதரி. இவரின் கல்வித்திறமை பற்றி நான் சொல்லி அறிய வேண்டியதில்லை. நிறைந்த அறிவு பூர்வமான கல்விமான். இவர் தனது ஆசிரியர் பயிற்சியை முடித்த பின்னர் பேராதனை பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்று பின்னர் அதே பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பையும் நிறைவு செய்தார்.

இவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்தவேளை, அந்தப் பட்டத்தை நானும் பெற எனக்கிருந்த ஆவலைத் தமது வழிகாட்டல்கள் மூலம் நிறைவு செய்தவர். இன்று நான் வித்துவான் பட்டத் தோடு இருக்கிறேன் என்றால் அது என் முயற்சியை விட அவரின் உதவியும் வழிகாட்டலும் என்று கூறின் அது மிகை யாகாது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. இளையதம்பி தங்கராசா அவர்கள்



மட்டக்களப்பு நாவற்குடாவில் 08.04.1932இல் பிறந்த தங்கராசா அவர்கள் சிவானந்த வித்தியாலயத்தில்கற்று ஆங்கிலமொழி மூலமான சிரேட்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் அதிவிசேட சித்திகளுடன் தேர்ச்சியடைந்ததால் இலங்கை மத்திய வங்கியில் எழுது வினைஞராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆற்றலும் முயற்சியும் கொண்டவராக தங்கராசா அவர்கள் இருந்ததால் படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று முதுநிலை அதிகாரியாக நியமிக்கப் படலானார். இவ்வாறு இலங்கை மத்திய வங்கியிலே 38 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, புலம் பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் தங்கராசா அவர்கள் தம்மிடம் இயல்பாக அமைந்திருந்த எழுத்தாற்றலையும் கவிதை புனையும் ஆற்றலையும் வெளிக்கொணரும் சந்தர்ப்பங்களைப் பெறலானார்.

விபுலானந்த அடிகளாரின் மாணாக்கர்களான பண்டிதர் வித்துவான் வி.சீ.கந்தையா, கலாநிதி வி.சதாசிவம் (குப்புசாமி) ஆகியோரிடம் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் ஆகியவற்றையும் புகழ்பெற்ற அதிபரான க.கணபதிப்பிள்ளை எப்.ஆர்.ஜி.எஸ் அவர்களிடம் ஆங்கிலமொழி ஆங்கில இலக்கியம் ஆகியவற்றையும் முறையாகக் கற்று இரு மொழிப் பாண்டித்தியம் கைவரப் பெற்ற தங்கராசா அவர்கள் இலங்கை மத்திய வங்கியில் நீண்ட காலம் பணி செய்ததால் ஆங்கிலமொழிப் புலமையை மேலும் வளர்த்துக் கொண்டார்.

18.07.2004இல் சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம்-கனடா நடத்திய அடிகளாரது 57ஆவது நினைவுதின விழாவினை தலைமை தாங்கி நடத்தும் பணி எனக்கு ஒப்புவிக்கப்பட்டது. அவ்விழாவின் ஓர் அங்கமாக இடம்பெற்ற கவியரங்கிலே திரு. தங்கராசா அவர்களும் பங்கேற்று கவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசித்தார் என்பதைவிட படித்தார் என்பதே பொருத்தம். குரல்வளம் அவருடைய பிறவிச் சொத்து. அவருடைய கவிதைகளை இராகத்தோடு அவர் பாடியபோது சபையோர் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். கன்னி முயற்சியிலேயே அவர் வென்றுவிட்டார்.

மேற்படி கவியரங்குச் செய்திகளை அறிந்துகொண்ட திரு.க.தா. செல்வராசகோபால் (ஈழத்துப் பூராடனார்) அவர்கள் தங்கராசா அவர்களிடமிருந்து அக்கவிதைகளைப் பெற்று தாம் புதுப்பித்து மீள்பதிப்புச் செய்த வை.கா.சிவப்பிரகாசம் அவர்களின் "விபுலாநந்தரின் கல்விச் சிந்தனைகள்" என்னும் நூலில் பிரசுரித்துள்ளார். அதன்மூலம் தங்கராசா அவர்களையிட்டுப் பலரும் அறிந்து கொள்ள வழி ஏற்படலாயிற்று.

வித்துவான் எப்.எக்ஸ்.சி.நடராசா, மா.சற்குணம் ஆகியோரால் எழுதப்பட்ட "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வாழ்க்கைக் குறிப்புகள்" என்னும் நூலினைப் புதுப்பித்து மூன்றாம் பதிப்பாய் வெளியிட்ட திரு.க.தா. செல்வராசகோபால் அவர்கள் அந்நூலிலே திரு. தங்கராசா அவர்களால் ஆக்கப்பட்ட "நல்லூர் ஆறுமுகநாவலர் போற்றிப்பா" என்னும் படைப்பினையும் இணைத்துள்ளார். தங்கராசா அவர்களின் மேற்படி கவிதையிலிருந்து ஒருசில அடிகளைக் கீழே தருதும்:

"பைபிளைத் தமிழில் பாங்குடன் பகர்ந்தவன்
பாதிரிமாருக்கு ஐயமறத் தமிழமுதம் ஈந்தவன்"

"மண்ணிலோ சலத்திலோ அல்ல அவனது சமாதி
தமிழ் மக்களின் இதயக் கோவில்களில்
என்றென்றும் நிலைக்க இறைபதம் எய்தினன்"

திரு.தங்கராசா அவர்களின் முதலாவது தமிழ்க் கட்டுரையான "சுவாமி விபுலாநந்தா" நம்நாடு பத்திரிகையில் 18.07.2003இல் வெளிவந்தது. அக்கட்டுரை அவருடைய தமிழ் மொழி ஆற்றலைப் புலப்படுத்தி நிற்கும் பதச்சோறாகும். எனது எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவை உத்தேசித்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தினர் வெளியிட்ட "வித்துவ ரத்தினம்" என்னும் பவளவிழா மலரிலே, "வித்தாகி நின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தகன்" என்னும் தலைப்பில் தங்கராசா அவர்கள் எழுதிய கட்டுரையும் இடம் பெற்றிருந்தது. அஃதும் அவரது தமிழ்ப் புலைமையினைப் புலப்படுத்தி நிற்கிறது.

விபுலாநந்தர் கலைமன்றம் கனடா, 2003இல் வெளியிட்ட நினைவு விழாச் சிறப்பு மலராகிய "உள்ளத்தில்" "Mayilkunju" என்னும் தலைப்பில் தங்கராசா அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலமொழிக் கட்டுரை பெரியவர்களின் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது.

திரு. தங்கராசா அவர்களின் ஆங்கிலமொழிப் புலமையை பயன் கொண்டிட விழைந்த திரு. செல்வராச கோபால் (ஈழத்துப் பூராடனார்) அவர்கள் தம்மாற் படைக்கப் பட்ட ஆக்கங்களில் அவற்றோடு தொடர்புபட்ட கட்டுரைகளை திரு. தங்கராசா அவர்கள் மூலம் ஆங்கில மொழியில் எழுதச்செய்து, சேர்த்து வெளியிட்டதன் மூலம் தங்கராசா அவர்களின் ஆற்றலை அறிஞர்கள் அறிந்து போற்றிட வழிசமைத்துத் தந்துள்ளார்.

அவற்றின் விபரங்களைக் கீழே தருகிறோம்:

1. கலாநிதி, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பண்டிதர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

   Pularvarmany Pandit A. Periyathambipillai
   The Poet Laureate of Batticaloa - August - 2005

2. தமிழ்ப் பேராசான், பண்டிதர் செ. பூபாலபிள்ளை வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள்

   Pandit S. Poopalapillai - The Architect of the Batticaloa Teacher Training College.
   The purpose of an article of this nature - 2006

3. தமிழ்வேள், வைத்தியகலாநிதி மா. பரசுராமன் அவர்களின் நினைவு மலர்

   தொகுப்பாசிரியர்: அஜந்தா ஞானமுத்து
   ஆலோசகர்: கலாநிதி க.தா. செல்வராசகோபால்.

   Dr. Parasuraman
   A life in Dedication - November - 2006



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தமிழகத் தாயகத் தரையை உண்டழித்த
கடல்கோள் ஓவியம்

1. The tsunami

ii. Rasiah Nagalingam

A Contemparary writer of Repute

iii. A Biographical sketch of Mr. Rasiah Nagalingam

5. சீவகசிந்தாமணி

A Short Biographical profile of
Thangeswary Kathiraman
Member of Parliament - Sri Lanka - 2008

6. ஐங்குறு நூற்று அரங்கம்

The hands that shepherded me on the
path of service to the Tamil Language - 2008

7. பெருங்கதை ஆய்வு நோக்கு

The legacy of late E.K.E. Kandasamy
The General secretary of
Colombo Tamil Sangam - 2009

திரு. தங்கராசா அவர்கள் தமது பாடசாலையில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழி இதழின் ஆசிரியராகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

திரு. தங்கராசா அவர்கள் விநாயகப் பெருமானைத் தனது குல தெய்வமாகக் கொண்டவர். மாமாங்கப் பிள்ளை யாரின் முன்னிலையிலே தமது மாங்கல்யத் திருமணத்தை வைத்துக் கொண்டவர். இவற்றால் இயல்பாகவே மாமாங்கேஸ் வரப் பிள்ளையார் ஆலயத்தில் ஓர் அற்புதமான ஈர்ப்பு அவருக்கு ஏற்பட்டதன் விளைவே அவராற் படைக்கப்பட்ட மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் மான்மியம் என்னும் நூலாகும். நீண்ட நாள்களாக அவரால் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப் புடன் இணைந்த ஆராய்ச்சியின் பெறுபேறாக ஆக்கப்பட்ட இந்நூலின் பயன்பாட்டை நோக்கி ஆங்கில மொழியிலும் எழுதித் தந்துள்ள திரு. தங்கராசா அவர்கள் அனைவரதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்குரியவராகிறார். தங்கராசா அவர்களின் மேற்படி நூல் வெளியீடு மட்டக்களப்பிலே மாமாங்கேஸ்வரப் பிள்ளை யார் ஆலயத் திருவிழா இடம்பெற்ற காலத்தில் 30.07.2008 ஆம் திகதியன்று நிகழ்ந்தமை மிகமிகப் பொருத்தமான நிகழ்வென்போம். திரு. தங்கராசா அவர்கள் உண்மையில் கொடுத்து வைத்தவர்தான்.

என்னையும் என் துணைவியாரையும் வாழ்த்தி திரு. திருமதி தங்கராசா அனுப்பி வைத்த வாழ்த்து மடலானது அவர்களிருவரும் எங்களிருவரிலும் கொண்டுள்ள ஆழ்ந்த அன்பினையும் தங்கராசா அவர்களின் ஆங்கிலப் புலமையி னையும் உணர்த்தி நிற்கிறது. படித்துப் பாருங்கள்; உணர்ந்து கொள்ளுவீர்கள்.

## A Wedding Wish To Vidhwan Thamil Oli
## K. Sebaratnam and Wife Nesamma Sebaratnam

By

Cal Udaichan

### Navatkudah Elayathamby Thangarajah
### and wife Sornamma Thangarajah

A twinkle in his eyes,
A spring in his steps,
An impish smile on his face,
That is Vidhwan Sebaratnam,
In whose company, laughter is infectious.

A man of words,
A man to trust,
A man to look up for help,
That is Vidhwan Sebaratnam.
In whose company, laughter is infectious.

Among the thousands you meet,
None so witty you beat,
In whose presence your time gallops,
That is Vidhwan Sebaratnam,
In whose company, laughter is infectious.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A star born in the east,
Lighting the literary sky aloft,
Ushering cheer to many,
That is Vidhwan Sebaratnam
In whose company, laughter is infectious.

Laughter is his next best cousin,
A trait that enjoyed quite often,
A lovable couple made for each other,
That is Vidhwan Sebaratnam,
In whose company, laughter is infectious.


Both teachers by nature,
Taught many to rise in stature,
Blessed with children and grandchildren,
That is Vidhwan Sebaratnam,
In whose company, laughter is infectious.

Books are many he wrote,
Speeches are numerous he made,
Lord's Gospel aplenty he preached,
That is Vidhwan Sebaratnam,
In whose company, laughter is infectious.

With Golden Wedding now in bloom,
Wishing them a healthy and long life,
To see the Diamond Wedding next,
Are our Lord's prayers to NESAM and SEBAM,
In whose company, laughter is infectious.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள்



ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர் எனப் பெருமைப் படுத்தப்படும் திரு. திருச்செல்வம் அவர்களின் எழுத்துப்பணி யாழ்ப்பாணத்திலே ஈழநாடு பத்திரிகையோடு தொடர்புடையதாகவே இருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற அவர், ஏரிக்கரை பத்திரிகை நிருவாகத்தில் இணைந்து கொண்டார். தினகரன் பத்திரிகையின் மதிப்புக்குரிய செய்தியாளராகவும் இலக்கியப்பிரிவுப் பொறுப்பாளராகவும் பணியாற்றிய திருச்செல்வம் அவர்கள், தினகரனின் பிரதம ஆசிரியராக அக்காலத்தில் விளங்கிய திரு. ஆர். சிவகுருநாதன் அவர்களின் அன்புக்கும் பாராட்டுதலுக்கும் உரியவராக விளங்கினார்.

ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்திலிருந்து விலகிய திருச்செல்வம் அவர்கள், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆங்கில செய்தி நிலையத்தில் இணைந்து கொண்டார். தமிழ்ச் செய்தி வாசிப்பவராகவும் நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் செயலாற்றிக் கொண்டிருந்தபோது 1983 ஆடிக்கலவரம் வெடித்து கொழும்பு பிரதேசத்தையே ஆட்டங்காணச் செய்தது. திருச்செல்வம் அவர்கள் யாழ்ப்பாணம் சென்றடைந்தார்.

யாழ்ப்பாணத்திலே ஈழமுரசு, முரசொலி ஆகிய இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கி, அவற்றின் உரிமையாளராகவும் ஆசிரியராகவும் பணியாற்றத் தொடங்கினார். உற்சாகமாகப் பணியாற்றிய அவர் இளைய தலைமுறையினர் பலரை எழுத்தாளர்களாக்கிய அரியசாதனையை நிகழ்த்தினார்.

ஆபத்தும் திருச்செல்வம் அவர்களும் இரட்டைக் குழந்தைகளாக இருக்கவேண்டும். செவ்வனே நடந்து கொண்டிருந்த பத்திரிகைப்பணி ஆபத்தை எதிர்நோக்கியது. அரசியல் காழ்ப்புணர்வு செயலூக்கம் பெற்றது. திருச்செல்வம் அவர்கள் குறிபார்க்கப்பட அருமை மகன் அகிலனே பலியானான். தாங்க முடியாத பேரிழப்பு புலம் பெயரத் தூண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்செல்வம் அவர்களும் துணைவியார் றஞ்சி அவர்களும் கனடா வந்து சேர்ந்தனர்.

திருச்செல்வம் அவர்களின் இரத்தத்தோடு கலந்து விட்ட பத்திரிகைத் தொழிலே அவருடைய வாழ்வாகிவிட்ட நிலையில், கனடாவிலே 1991 பெப்ரவரி மாதத்திலே "தமிழர் தகவல்" உதயமாகியது. இழக்கப்பட்ட தங்கள் மகன் அகில னின் நினைவுக்காக நிறுவப்பட்ட "அகிலன் அசோஷியேற்ஸ்" வெளியீடாகவும் ஈழத்தமிழர் தகவல் நிலையம், தமிழர் தகவல் ஆய்வுப்பிரிவு ஆகியவற்றின் தயாரிப்பாகவும் தமிழர் தகவல் இதழ் 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலிருந்து வெளிவரத் தொடங்கிற்று.

மாதாந்த வெளியீடாக 5000 பிரதிகள் பெப்ரவரி 5ஆம் திகதியில் வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப் படுகிறது. அவ்வாறே வருடாந்த சிறப்பு வெளியீடாக 6000 பிரதிகள் பெப்ரவரி மாதத்தில், விருது வழங்கும் நிகழ்வோடு கூடிய வருடாந்தவிழா நடைபெறும் தினத்தில் வெளியிடப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

இவ்வாறு வெளியிடப்படும் தமிழர் தகவல் இதழ்கள் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் வெளியிடப்பட்டு வருவது ஓர் அசாதாரண நிகழ்வாகும். காலந் தவறாமை, நேரம் தவறாமை என்பன திருச்செல்வம் அவர்களின் தனிச்சிறப்புக்களாம். இவற்றினையிட்டு 201ஆவது இதழில் வந்துள்ள வாழ்த்து மடல் ஒன்றினைக் கீழே தருதும்:

தமிழர் தகவல் தனது 200வது இதழை
இன்று வழமைபோல் குறித்த நேரத்தில்
தன்குறி தப்பாது வெளியீடு செய்கின்றது.

முதலாவது இதழ் சொன்ன நேரத்தில்
வந்தால் அது வழமை!
200ஆவது இதழ் சொன்ன நேரத்தில்
வந்தால் அது புதுமை!

ஒற்றைக் காலில் நிற்பதும்
நீண்ட தூரம் துப்புவதும்
இரவு பகலாய் ஆடுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நடப்பதும்
என்று கின்னஸ் சாதனைக்காய்
சாதனை படைக்கும்
மக்கள் மத்தியில்
சாதனை என்று தெரியாமலே
மக்களுக்காய் சாதனை படைக்கும்
தமிழர் தகவலை
திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைப் போக்கவும்
என வெற்றிமணி, சிவத்தமிழ் வாழ்த்துகின்றது.

அன்புடன்
வெற்றிமணி மு.க.சு. சிவகுமாரன்
ஜேர்மனி

தமிழர் தகவலின் மாதாந்த வெளியீடானது, ஆங்கில மொழியிலே கனடிய அரசினால் வெளியிடப்படும் அரசின் செயற்திட்டங்கள், சட்டதிட்டங்கள் அறிவித்தல்கள் ஆகிய வற்றை தமிழாக்கம் செய்து வெளியிட்டு வருகிறது. அவை தொடர்பான மேலதிக தகவல்கள், ஆலோசனைகள் முதலிய வற்றை துறைசார் அறிஞர்களைக் கொண்டு சிறு, சிறு கட்டுரைகளாக எழுதுவித்தும் வெளியிட்டு வருகிறது. புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், கனடிய மண்ணின் நிருவாக நடைமுறைகளைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அவற்றிற்கு அமைய ஒழுகிவர இம்மாதாந்த இதழும் கணிசமான உதவி யை வழங்கி வருகிறது.

தமிழர் தகவலின் வருடாந்த வெளியீடானது, தகவற் களஞ்சியமாகவே அமைந்துள்ளது. பெரும்பாலும் விபரமான தகவற் கட்டுரைகள் நூற்றுக்கு அதிகமானவை இடம் பெறு கின்றன. கனடாவில் மட்டுமல்லாது எல்லைகளைக் கடந்து உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களையும் அவர்களது வரலாறுகளையும் புலம்பெயர் வாழ்வியலில் அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் அவற்றிற்கான ஆலோசனைகளையும் கூறும் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்திட ஆங்கில மொழியி லான கட்டுரைகளும் சேர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுதோறும் நடைபெறும் வருடாந்த மலர் வெளியீட்டு நிகழ்வின்போது தமிழர் தகவல் விருது வழங்கப்பட்டு வருவதனைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். சமூகசேவை, சமயப் பணி, பொதுப் பணி, புனர் வாழ்வுப் பணி, கலை இலக்கியப் பணி, ஊடகப் பணி, கல்விப் பணி, எழுத்துப்பணி, அகதிகள் சேவை, வர்த்தகத் திறமை முதலிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டு சாதனைகள் புரிவோர்களை ஊக்குவிக்கும் உயரிய நோக்குடன் அவர்களிலிருந்து விருதுக்குரியவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தமிழர் தகவல் விருதும் ஒரு பவுண் எடையுள்ள தங்கப் பதக்கமும் விழாவிலே வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே கல்வித்துறை, கலைத்துறை, தொண்டர் சேவை, விளையாட்டு, தேசிய இளைஞர் சேவை ஆகியவற்றில் சாதனை படைத்த மாணாக்கரும் சிறப்பிக்கப் படுகிறார்கள். இவற்றைவிட வாழ்நாள் முழுவதுக்குமான பல்துறைப் பணிக்காகவும், ஊடகத்துறையின் மகத்தான சேவைக்காகவும் தொழிற்துறை சார் மகத்துவத்துக்காகவும் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வாழும் மூன்று பிரமுகர்களும் தமிழர் தகவல் சிறப்பு விருது வழங்கிச் சிறப்பிக்கப் படுவதையும் குறிப்பிட வேண்டும்.

2006ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற்ற தமிழர் தகவலின் பதினைந்தாவது ஆண்டு விருதுவழங்கும் விழாவிலே தமிழ்ப்பணி மற்றும் எழுத்துப்பணிகளுக்கான விருதினைப் பெறுவதற்கு நான் தெரிவு செய்யப்பட்டேன். விழாவிற் பங்கேற்றபோது பல காரியங்களை என்னால் அவதானிக்க முடிந்தது. அழைக்கப்பட்டோர் ஒழுங்காக வரவேற்கப்பட்டார்கள். அழைக்கப்பட்டோர் மாத்திரமே வருகை தந்திருந்ததால் இடநெருக்கடியோ பதற்றமோ ஏற்படவில்லை. வருகை தந்தவர்கள் உரிய இடங்களில் அமர்த்தப்பட்டார்கள். விழா நிகழ்ச்சிகள் குறிக்கப்பட்ட நேரத்துக்குத் தொடங்கி குறிக்கப் பட்ட நேரத்துக்கு முடிவடைந்தன. சீரமைப்பும் நேர்த்தியும் இணைந்திருந்தன. அநுபவ முத்திரையும் அறிவுத் திறமையும் ஒன்றோடொன்று கைகோர்த்து நின்றன.

திரு. திருச்செல்வம் அவர்கள் தமிழர் தகவலில் "ஆசிரியரிடமிருந்து" என்னும் மகுடத்தில் எழுதிவரும் கருத்துரை ஆழமானதாகவும் அவருடைய அற்புதமான எழுத்தாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுக்குத் தக்க சான்றாகவும் அவருடைய அநுபவ முத்திரை பளிச்சிடுவதாகவும் இருக்கக் காண்கிறோம். அவ்வாறே தமிழர் தகவல் இதழ்களில் "எஸ்.தி" என்னும் குறியீட்டோடு எழுதி-வரும் தகவல்கள் அன்றாட அரசியலை அலசுபவையாகவும் தமிழ் மக்களின் பல்வேறு இடர்பாடுகளை வெளிக்கொணர் பவையாகவும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்குக் கூறவேண்டிய அவசரமும் அவசியமுமான செய்திகளைத் தாங்கியவையாகவும் அமைந்திருக்கின்றன.

கலாநிதி க.தா. செல்வராசகோபால் அவர்களால் எழுதப்பட்டு நிழல் வெளியீடாக 1992இல் வெளியிடப்பட்ட "ஈழத்தமிழ் அறிஞர்கள்" என்னும் நூலுக்கான, நூல் அறி-முகத்தை திரு. திருச்செல்வம் அவர்களே எழுதியுள்ளார். அத்துடன் மேற்படி நூலினை ஆக்குவதற்கு ஊக்கங் கொடுத்ததோடு வேண்டிய தகவல்களைத் தேடிக்கொடுத்தும் அறிஞர்களின் உருவப் படங்களைத் தேடிக் கொடுத்து உதவியவரும் திருச்செல்வம் அவர்களே என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டிருப்பதும் மனங்கொள்ளத் தக்கது.

அவ்வாறே கலாநிதி பண்டிதர் ம.செ. அலெக்ஸ்சாந்தர் அவர்கள் "வெற்றிபெற" என்னும் நூலினை எழுதி வெளியிட ஊக்குவிப்புச் சக்தியாய் விளங்கியவரும் திருச்செல்வம் அவர் களே என்பது குறிப்பிடத் தக்கது. நூலின் வெளியீட்டுரை திரு. திருச்செல்வம் அவர்களால் எழுதப்பட்டுள்ளதென்பதும் அஃது "அகிலன் அசோஷியேற்ஸ்" வெளியீடென்பதும் குறிப் பிடப்பட வேண்டிய செய்திகளே.

அதிபர் பொ.கனகசபாபதி, கவிநாயகர் வி. கந்தவனம், கலாநிதி கே.எஸ். நடராஜா, கவிஞர் அம்பிகைபாகன், துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி முதலியோரின் சில நூல்களும் "அகிலன் அசோஷியேற்ஸ்" வெளியீடுகளே.

கனடாவில் வெளியிடப்படும் சிறப்பு இதழ்களிலும் மலர்களிலும் திரு. திருச்செல்வம் அவர்களால் எழுதப்படும் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. அத்துடன் "நினைவு களில் அகிலன்" என்னும் தொகுப்பு நூலும் அவரால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர் தகவலின் இருநூறாவது இதழ் வெளியீட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைச் சிறப்பித்து கனடிய அரசு 52சதம் பெறுமதியான தபாற் தலையை 2007இல் வெளியிட்டுள்ளமை சிறப்புக்குரிய செய்தி யாகும். உருவம் எதுவும் பொறிக்கப்படாமல் "தமிழர் தகவல்" என்னும் சொல் தமிழில் எழுதப்பட்டு கனடாவில் வெளியிடப் பட்ட முதலாவது தபாற்தலை இஃதென்பது நமக்கெல்லாம் பெருமைதரும் செய்தியல்லவா? தமிழர் தகவலின் தனித்துவத் தை அரசினரின் தபாற்தலை வெளியீடு வெளிச்சம் போட்டுக் காட்டி நிற்கிறது.

ஈழநாட்டிலும் கனடாவிலும் பத்திரிகைத் துறையில் முத்திரை பதித்தவரும் ஈழத்தின் மூத்த பத்திரிகையாளருமான திரு.எஸ். திருச்செல்வம் அவர்களின் முப்பது ஆண்டுகாலப் பத்திரிகைச் சேவையை மதித்துக் கனடிய கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் 1996ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ஆம் நாள் மாபெரும் பாராட்டு விழா ஒன்றினை ரொறன்ரோ நகரில் நடத்தியமை பெருமைக்குப் பெருமை சேர்த்ததாக இருந்தது.


"செய்தித் தொகுப்பில் சிங்கார வடிவமைப்பில்
உய்யும் கருத்தில் உவப்பான மொழி நடையில்
தமிழர் தகவல் தனக்கோர் தனித்துவத்தை
அமைவாய் வகுத்தினிது நம்மை ஆள்கிறது"

என்று கவிநாயகர் வி.கந்தவனம் அவர்கள் கூற்று; பொருள் பொதிந்த உண்மைக் கூற்றல்லவா?

திரு. திருச்செல்வம் அவர்களுக்கும் எனக்குமிடையில் அன்புடன் இணைந்த நட்பு நீண்ட நாள்களாய் நிலவி வருகி றது. இந்த நட்பினை நான் பெரிதும் மதிக்கிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "சிந்தனைப் பூக்கள்" திரு. எஸ். பத்மநாதன் அவர்கள்



யாழ்ப்பாணம் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பத்மநாதன் அவர்கள், பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புப் பட்டதாரியாவார். அதே பல்கலைக் கழகத்தில் உதவி விரிவுரையாளராகச் சிறிது காலம் பணியாற்றிய பத்மநாதன் அவர்கள் மத்திய மாகாணத்தில் ஏறத்தாழ ஒன்பது ஆண்டுகள் கல்வி ஆலோசகர் பதவியினை வகித்துள்ளார். 1980 இல் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற பத்மநாதன் அவர்கள் 1983இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளராக நியமனம் பெற்றார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்ட பத்மநாதன் அவர்கள், வானொலி நிகழ்ச்சிகளிற் பங்கேற்றும் வீரகேசரி, தினபதி, ஈழநாடு முதலிய பத்திரிகைகளில் கல்வி தொடர்பான அறிவியற் கட்டுரைகளை எழுதியும் தமது தமிழ்ப் பணியினை ஆரம்பிக்கலானார். 1983 இறுதியில் கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த பத்மநாதன் அவர்கள், "தமிழர் ஒளி", "இளந்தொண்டர்" ஆகிய அமைப்புகளில் இணைந்து பணியாற்றியுள்ளார். 1987 தொடக்கம் ரொரன்ரோவில் வசித்து வரும் பத்மநாதன் அவர்கள் உளவியல் தொடர்பான கட்டுரைகளை நம்நாடு பத்திரிகையில் தொடர்ந்து எழுதி வந்தார். ஆழமான பொருளை சிறந்த தமிழ் நடையில் எழுதிச் சாதனை படைத்துள்ள பத்மநாதன் அவர்கள் அறிஞர்களாற் பெரிதும் பாராட்டப்பட்டார். "தாம் அறிந்ததை, அவதானித்ததை, கேட்டதை, கண்டதை, உணர்ந்ததை சமூக மேம்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதி எழுத்திலே வடித்து நம்நாடு பத்திரிகையில் பிரசுரித்தார்" என கல்விச் சிந்தனையாளரான அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் குறிப்பிட்டிருப்பது நோக்குவதற் குரியது. தமிழ் மொழியில் உளவியல் சிந்தனைக் கட்டுரை கள் வெகு குறைவு. வாழ்விடத்தின் தேவையையும் காலத்தின் அவசியத்தையும் உணர்ந்து நண்பர் பத்மநாதன் தாய் மொழியிற் தந்துள்ள கட்டுரைகள் அபாரமானவை என்று கூறினால் அது முகத்துதியாகாது என தமிழர் தகவல் ஆசிரி யர் திரு. எஸ். திருச்செல்வம் அவர்கள் கூறியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

நம்நாடு பத்திரிகையில் வெளிவந்த, திரு. பத்மநாதன் அவர்களின் கட்டுரைகளில் எஞ்சியவை தொகுக்கப்பட்டு "சிந்தனைப் பூக்கள் பாகம்-1" 1996இல் வெளியிடப்பட்டது. மக்கள் மத்தியிலே அந்த மலர் பெற்றுக்கொண்ட மகத்தான வரவேற்பின் விளைவே, பத்மநாதன் அவர்கள், "சிந்தனைப் பூக்கள்" பத்மநாதன் என அழைக்கப்படுவதும், "சிந்தனைச் செல்வர்" எனப் பாராட்டப்படுவதும் ஆகும்.

நம்நாடு பத்திரிகையில் வெளிவந்த, திரு. பத்மநாதன் அவர்களின் கட்டுரைகளில் எஞ்சியவை தொகுக்கப்பட்டு "சிந்தனைப் பூக்கள் பாகம் - 2" எனும் பெயருடன் 2000 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. பத்மநாதன் அவர்களின் நூல் வெளியீடானது, தமிழில் தகுதியான உளவியல் நூல்கள் இல்லாதிருக்கும் பெருங்குறையை நீக்கிட ஓரளவாவது உதவியுள்ளதென்று துணிந்து கூறலாம்.

திரு. பத்மநாதன் அவர்கள் எழுத்துத் துறையில் மட்டும் கால் பதிக்கவில்லை. சமூக சேவையிலும் தீவிர அக்கறை காட்டி வருகிறார். 1997இல் ஒன்ராறியோ அரசி னால் இவரது சமூகசேவை, விருது வழங்கிப் பாராட்டப் பட்டுள்ளது. பத்மநாதன் அவர்களின் இலக்கிய சேவையின் சிறப்பை அறிந்து தமிழர் தகவல் சஞ்சிகையானது 2000ஆம் ஆண்டுக்குரிய விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ளது. தமிழர் தகவல் சஞ்சிகையை வெளியிடும் தமிழர் தகவல் நிலையத்தினரின் விதந்துரைக்கேற்ப, ஒன்ரா-றியோ மாகாணத் தன்னார்வத் தொண்டர் விருதுகள் வழங்கப் பெற்ற ஏழு பேரில் ஒருவராகத் திரு. பத்மநாதன் அவர்கள் இடம் பெற்றிருப்பது அவருடைய சிறப்பினை உணர்த்தி நிற்கிறது. தமிழர் தகவலின் 200வது இதழ் மலர்வு வைபவம் 2007ஆம் ஆண்டு செப்டம்பரில் நடைபெற்றபோது, பட்டயமும் சான்றிதழும் வழங்கி மதிப்பார்ந்த சிறப்பளிக்கப்பட்ட தமிழர் தகவல் பங்காளர்களுள் ஒருவராகத் திரு. பத்மநாதன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

பழகுதற்கு ஏற்ற பண்பாளராகவும் பணி செய்வதில் மகிழ்ச்சி காணும் அன்பாளராகவும் "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப நடக்கும் உத்தம உறவாளராகவும் திகழும் திரு. பத்மநாதன் அவர்கள் எனது "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்னும் நூலின் வெளியீட்டு விழா 2002 ஆவணி மாதம் 18ஆம் திகதி நடை-பெற்றபோது அதனையிட்டு 2002.08.16 'உதயன்' பத்திரிகை யில் எழுதிய ஆய்வுக் கட்டுரையில்,

"இந்நூலின் முதலாவது சிறப்பு யாதெனில் காலத்தின் தேவை கருதி வெளியிடப்படுவதாகும். தமிழகத்திலுள்ள தமிழறிஞர்கள், கவிஞர்கள் பற்றி நூற்றுக் கணக்கான நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. எனினும் எமது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற யுத்தம் எமது இலக்கிய வரலாற்றி னைத் துண்டித்து நிற்கின்ற சூழ்நிலையில் புலம்பெயர்ந்த இலக்கியகாரர் என்றதொரு புதிய தலைமுறையொன்று உருவாகியுள்ளது. எனவே இங்கிருந்து கொண்டு ஈழத் தமிழ் அறிஞர்களின் தகவல்களைத் திரட்டி தமிழ்நாட்டுக்கு அனுப்பி நூலாக வெளியிடும் "அசுர உழைப்பு" இவர்களுக்குரியது. எனவே 'க. செ' அவர்களது அயராத முயற்சியினால் தமிழறி ஞர்களின் தகவல்களை, தரவுகளை இங்கிருந்து பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டுக்கு அனுப்பி நூலாக்கிய பெருமை ஒரு வரலாற்றுப் பதிவாகும்" என்றும்,

"தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலின் வெளியீட்டு விழா 2006 சித்திரை மாதம் 08ஆம் திகதி நடைபெற்றபோது, அதனையிட்டு 2006.04.07 உதயன் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில்,


"8.4.2006இல் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும் என்னும் நூலை வெளியிடவுள்ளது. இந்நூல் இவரின் திறமையை உயர்த்தி நிற்கிறது. தமிழ் நாட்டில் வாழ்ந்து பணிபுரிந்த 24 பேர்களைச் சேர்த்து இந்நூலில் எழுதியுள்ளார். ஈழத்துப் பூதந்தேவனார் தொட்டு பேராசிரியர் முகம்மது உவைஸ் வரை கால அடிப்படையில் வாழ்க்கைக் குறிப்புகளையும் பணியையும் தொகுத்துத் தந்துள்ளார்.

ஆய்வுக் கூர்மையும் அறிவுத் தேடலும் கொண்ட வித்துவானின் எழுத்துகள் தெளிவான தமிழ் நடையாகும். உருவத்தால் எளிமையான இவர் உள்ளத்தால் கம்பீரமானவர். தமிழ் மக்களின் அன்புக்குப் பாத்திரமான இவ் அறிஞர் பல்துறை சார்ந்த வித்தகர். தமிழிலக்கிய ஆய்வுத்துறையில் இடைவெளியை நிரப்பி வருகின்ற இவர் தமிழுக்கு செழுமை சேர்த்து நின்றும் இலக்கியத்தின் ஒளிவிளக்காகத் திகழ் கின்றார்" என்றும் அவர் எழுதியிருப்பதானது,

திரு. பத்மநாதன் அவர்களின் பண்பட்ட உள்ளத்தை யும் அவர் என்மீது பாராட்டிவரும் அன்பையும் புலப்படுத்தி நிற்கக் காண்கிறோமல்லவா? திரு. பத்மநாதன் அவர்களது அன்பினை நான் பெரிதும் மதித்துப் போற்றுகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரறிஞர் முருக. வே. பரமநாதன் அவர்கள்



திரு. பரமநாதன் அவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்த வல்லி புரத்திலே 30.01.1924 ஆம் திகதி பிறந்தவர். வல்லிபுரம் என்னும் மேற்படி கிராமம் வரலாற்றுப் புகழ் கொண்டது. சிங்கை ஆரியச் சக்கர வர்த்திகள் கந்தரோடைக்குப் பின் வல்லிபுரத்தைத் தலைநகராகக் கொண்டிருந்தார்கள் என்றும் அதன் பின்னரே நல்லூரைத் தலை நகராக்கினார்களென்றும் வரலாற்றா சிரியர்கள் கூறுகிறார்கள். இதனால் வல்லிபுரமானது சிங்கை நகர் எனப் பெயர் பெற்றிருந்ததாகவும் கூறப்படுகிறது.

வரலாற்றுப் புகழ்மிக்க வல்லிபுரத்திலே பிறந்த பரம நாதன் அவர்கள் புற்றாளை மகாவித்தியாலத்தில் தமிழ் மொழி மூலமான கல்வியைப் பெற்றுக் கொண்டார். கனிட்ட தராதரப் பரீட்சையில் திறமைச் சித்தியையும் சிரேட்ட தராதரப் பரீட்சையிற் சாதாரண சித்தியையும் அவர் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பேரறிஞர் கந்த முருகேசனாரிடம் தமிழ் மொழியை ஆழமாகக் கற்றிடும் பேற்றினையும் பெற்றுக் கொண்டார்.

ஆங்கிலமொழிக் கல்வியில் நாட்டங்கொண்ட பரம நாதன் அவர்கள் கரவெட்டி விக்னேசுவராக் கல்லூரியிற் சேர்ந்து கொண்டார். அங்கு கற்றுக் கொண்டிருக்கும் வேளை யில் பண்டித பட்டத்துக்கு நிகரான ஆசிரியர் பயிற்சியினை வழங்கி வந்த பரமேசுவரா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிற் சேர்ந்து கொள்ளுவதற்கான பரீட்சைக்குத் தோற்றிச் சித்தி அடைந்தார். மேற்படி பயிற்சிக் கலாசாலையின் அதிபராக விளங்கியவர், கீமைப்புலோலி குமாரசுவாமிப் புலவரவர்களின் மகனாரான கலாநிதி கு. சிவப்பிரகாசம் என்னும் பேரறிஞர் ஆவார். அங்கு விரிவுரையாளர்களாக கல்வியியலாளர் க. சிதம்பரப்பிள்ளை, பண்டிதமணி நவநீதகிருஷ்ணபாரதியார், பண்டிதர் சோ. இளமுருகனார் ஆகியோர் கல்விப்பணி ஆற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்கள். ஏற்கனவே அறிஞர் கந்தமுருகேசனாரிடம் பெற்றுக்கொண்ட தமிழறிவோடு பயிற்சிக் கலாசாலையிலே சேர்ந்துகொண்ட பரமநாதன் அவர்கள் அங்கு பணியாற்றிய அறிஞர் பெருமக்களின் போதனையின் பலனாகத் தாமும் பேரறிஞராகிடும் தகைமையைப் பெற்றுக் கொண்டார்.

1949 பெப்ரவரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய திரு. பரமநாதன் அவர்கள் கண்டியில் 15 ஆண்டுகளும் யாழ்ப்பாணத்தில் 20 ஆண்டுகளும் சேவை செய்து ஓய்வு பெற்றார்.

இலங்கையில் வாழ்ந்த காலத்திலேயே பரமநாதன் அவர்களுடைய எழுத்துப்பணி ஆரம்பமாகி விட்டது. வல்லி புரத்தான் தலபுராணம், வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ், நவநாதசித்தர், ஆழ்கடலான் முதலிய பத்து நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். தவத்திரு சபாரத்தின சுவாமிகளைத் தமது குருநாதராக வரிந்துகொண்ட திரு. பரமநாதன் அவர்க-ளின் படைப்புகளில் பெரும்பாலானவை சமய அடிப்படை யிலான நூல்களாகவே இருக்கக் காண்கிறோம். இலங்கை வானொலி ஒலிபரப்பிற் பங்கேற்ற சமய, தமிழ் நிகழ்ச்சிகள் பலரது பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத் தக்கது.

20.04.1997இல் கனடா வந்து சேர்ந்த திரு. பரமநாதன் அவர்களுடைய பேராற்றல் பல அமைப்புகளால் பயன் கொள்ளப்படுவதனைக் காணலாம். அதன் பயனாக அவரு-டைய ஆக்கங்கள், பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் விசேட மலர்களையும் அலங்கரிக்கத் தொடங்கின. சமய விழாக்கள், தமிழ் விழாக்கள், நூல் வெளியீட்டு விழாக்கள் அப்பெரியாருடைய சொற்பொழிவுகளால் நிறைவு கண்டன. நினைக்க நினைக்க, வேலவா வடிவேலவா, பன்னிரு திருமுறை விழுமியம், ஈழத்துச் சித்தர் குடைச் சுவாமிகள், ஆழ்கடலான் இரண்டாம் பதிப்பு, ஈழத்துச் சித்தர்களும் சுவாமிகளும் முதலிய நூல்கள் வெளியிடப்பட்டு அறிஞர் களுக்கு விருந்தாயின.

"நினைக்க நினைக்க...எனத் தலைப்பிட்டு அவரால் எழுதப்பட்ட அவருடைய வாழ்க்கைச் சரிதம் ஓர் அருமையான படைப்பு." ஒருவருடைய வாழ்க்கைச் சரிதம் உள்ளதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளபடியே, சத்தியவாக்காக அமைந்தால் அஃது அறிஞர் களுக்குப் பெருவிருந்தாகவே அமையும் எனத் தத்துவமேதை சர்வபள்ளி இராதாக்கிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ள கூற்றானது சத்தியத்தின்பாற்பட்ட கூற்றாகும். திரு. பரமநாதன் அவர்களது வாழ்க்கைச் சரிதமானது நமக்கெல்லாம் பயன் பயக்க வல்லது. நூலுக்கு அவர் எழுதியுள்ள "உள்ளத் தொனி" யிலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். படித்துப் பாருங்கள் உண்மை புரியும்!

"பேசும் பேனாவின் வல்லமை பெரிது. பேனை தீட்டியன சொற் சித்திரங்கள். மௌனத்தோடு எழுதும் கரம் மனத்தோடு தொடர்புடையது. மனக்கோலங்கள் எழுத்தில் வடிவம் பெறுகின்றன. நீங்காத நினைவுக் கோலங்களில் ஒரு பாகம்தான் இது; எழுதாதவைகூட, நினைவுகள் மனதிற் பதிவாகி பல ஆண்டுகளாய் மறை மனதில் தூங்கிய பகுதியே அநேகம். சுருக்கம் கருதி இரத்தினக் கசிவாய் எழுதப்பட்டது. இது ஒரு அநுபவப் பிழிவு; நினைவு முத்திரை. சுய விமர்சனம் அல்ல; சமகாலச் சம்பவங்கள் எதிர்கால வரலாற்றின் நாற்றுகள். மறைக்க முயன்ற வரலாறு பற்றிய யதார்த்தம், விழிப்புணர்வு, சிந்திக்க வைத்த சிறுப்பினைகள். ஆழ்கடலின் அடிவாரத்து முத்தும் கற்பாரில் மிதந்த பவளமும் இதிலே சிரிக்கின்றன. ஆரமாய் அழகு சொரிகின்றன. இப்படிக் கோவாத் துணுக்குகள் எல்லோரதும் நினைவோட்டத்திலும் மிதக்காமல் இல்லை. அவற்றைக் கோப்பது எழுதுவோன் திறன்."

24 அத்தியாயங்களைக் கொண்ட "வேலவா வடிவே லவா" என்னும், திரு. பரமநாதன் அவர்களுடைய படைப்பிலே, 24 அத்தியாயங்களும் ஒன்றில் ஒன்று சார்ந்திருக்காமல், ஒவ்வொன்றும் தனித்தனி விடயங்களாய் அமைந்து அரிய பெரிய பலவிடயங்களைச் சிறிது சிறிதாகக் கூறுவதாய், மெள்ள மெள்ள அவற்றைப் புரிந்து கொள்ள வைப்பதாய் இருப்பதைப் பலரும் பாராட்டுகிறார்கள். திரு. பரமநாதன் அவர்களின் அறிவின் முதிர்ச்சியும் அநுபவத்தின் முதிர்ச்சியும் எழுத்தின் முதிர்ச்சியும் கைகோத்து நிற்பது பாராட்டுக்குரியது. அவர் கூறியிருப்பதுபோல் அவருடைய படைப்புகள் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவப் பிழிவுகளே!

"ஆழ்கடலான்", "இளம்பிறையான்", "சிங்கை ஆழியான்" என்னும் புனைபெயர்களிலும் எழுதிவரும் திரு. பரமநாதன் அவர்களின் பெருஞ்சிறப்பினை மதித்து கௌரவப் பட்டங்கள், விருதுகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

பண்டிதர், இலக்கிய கலாநிதி மு. கந்தையா அவர்கள் பரமநாதன் அவர்களுக்குப் "புலவர்" பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்துள்ளார்.

கனடா இந்துசமயப் பேரவை கவிநாயகர், கலாநிதி வி. கந்தவனம் அவர்களின் தலைமையிலே பரமநாதன் அவர்களுக்குப் "பேரறிஞர்" என்னும் பட்டத்தைச் சூட்டிப் பெருமைப்படுத்தியுள்ளது.

மூதறிஞர் கந்த முருகேசனார் நூற்றாண்டு விழாவினர், அம்மூதறிஞரின் மாணாக்கரான பேரறிஞர் பரமநாதன் அவர்களுக்கு வித்துவ சிரோமணிப் பட்டம் வழங்கிப் பெருமை தேடிக்கொண்டனர்.

தமிழர் தகவல் நிறுவனத்தினர் 2005ஆம் ஆண்டில் நடத்திய கௌரவிப்பு விழாவிலே பேரறிஞர் பரமநாதன் அவர்களுக்கு விருது வழங்கி, தங்கப் பதக்கத்தினையும் சூட்டி பெருமை சேர்த்தனர்.

கனடா கம்பன் கழகத்தினர் 2008ஆம் ஆண்டில் ஸ்ரீவித்யா பூஷண விருது வழங்கி, தங்கப் பதக்கத்தினையும் சூட்டி பெருமை சேர்த்தனர்.

உதயன் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டிகளில் ஒரு தடவை முதற் பரிசையும் அடுத்த தடவை மூன்றாம் பரிசையும் பெற்றுக் கொண்ட பேரறிஞர் பரமநாதன் அவர்கள், தமிழர் செந்தாமரை நடத்திய கவிதைப் போட்டியில் மூன்றாம் பரிசையும், முழக்கம் பத்திரிகை நடத்திய கவிதைப் போட்டியில் முதலாம் பரிசையும், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்திய கவிதைப் போட்டியில் இரண்டாம் பரிசையும் பெற்று தாம் சிந்தனையில் இளமைத் துடிப்போடிருப்பதனை உறுதி செய்துள்ளார்.

பேரறிஞர் பரமநாதன் அவர்களுக்கும் எனக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பு வாணி விழா ஒன்றிலே ஏற்பட்டது. கனடா தமிழ்க்கலை தொழில் நுட்பக் கல்லூரியிலே ஆசிரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாக நான் பணியாற்றிய காலம் அது. கல்லூரியின் வருடாந்த வாணி விழா வின்சன்ற் சேர்ச்சில் கல்லூரியில் நடைபெற்றது. விழாவிலே சிறப்புச் சொற்பொழிவாற்றிட கலாநிதி இ. பாலசுந்தரம் அழைக்கப்பட்டிருந்தார். விழாத் தினத்தன்று கலாநிதி பாலசுந்தரம் அவர்களுக்கு விழாவிற் பங்கேற்றிட முடியாதவகையில் தடை ஏற்பட, அவருக்காக அவரால் பேரறிஞர் பரமநாதன் அவர்கள் அனுப்பப்பட்டார். பேரறிஞர் அவர்கள் தமது பேச்சிலே காட்சி, வீரம், கல்வி ஆகியவற்றை வலியுறுத்தி சிறப்பாக பேசினார். கணீரென்ற குரல், இலக்க ணச் சுத்தமான தமிழ் நடை, ஆற்றொழுக்கெனப் பேசினார். கவர்ச்சியான பேச்சு, அவர் உதாரணமாக எடுத்துக் கொண்ட செய்யுள் ஔவையாருடையது. அச்செய்யுளின் இறுதி அடி என் நினைவுக்கு வரவில்லை. பேரறிஞரிடம் நேரிற் சென்றேன். என் வாழ்த்துதலைத் தெரிவித்தேன். செய்யுளை எழுதித் தரும்படி கேட்டேன். பெருமனதுடன் எழுதித் தந்தார். ஒருவரை ஒருவர் அறிமுகம் செய்து கொண்டோம். விட்டகுறை, தொட்டகுறை என்பார்கள். எங்களிடையே அன்பு ஏற்பட்டு விட்டது. அன்பு தொடர்கிறது. தொடர்ந்து கொண்டே இருக்கும்.

"அன்பீனும் ஆர்வம் உடைமை அதுவீனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

என்கிறது பொய்யாமொழி.


எங்கள் நண்பெனும் நாடாச்சிறப்புக்கு அடித்தளமிட்ட ஔவையார் பாடலைக் கீழே தருகிறேன்:

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் - என்றுந்தான்
சாகாமற் கற்பதே கல்வி பிறர்தம்மை
ஏவாமல் உண்பதே ஊண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள்



விபுலாநந்த அடிகளார் பிறந்த காரைதீவிலே 05.09.1946 இல் பால சுந்தரம் அவர்கள் பிறந்தார். ஆரம் பக் கல்வியை காரைதீவு இராம கிருஷ்ண மிசன் பாடசாலையிலும் உயர் கல்வியை சிவானந்தா வித்தி யாலயத்திலும் பெற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்விற் சித்தியடைந்து கொழும்பு பல்கலைக் கழகத்திற் சேர்ந்த பாலசுந்தரம் அவர்கள் அங்கு கலைமானிப் பட்டத்துக்கான முதலாண்டுக் கல்வியைப் பெற்றதன் பின்னர் பேராதனைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து சிறப்புக் கலைமானியாக வெளியேறினார்.

திரு. பாலசுந்தரம் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1969ஆம் ஆண்டிலே தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெற்றார். ஆங்கு ஈராண்டுகள் பணியாற்றிய அவர் 1971இல் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் முதுநிலை விரி-வுரையாளராகச் சேர்ந்து கொண்டார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்திலேயே கலாநிதிப் பட்டத்தினை அவர் பெற்றுக் கொண்டார். அதனைத் தொடர்ந்து பாலசுந்தரம் அவர்கள் 1984இல் முதுநிலை தமிழ் விரிவுரையாளராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து கொண்டார். 1991இல் அவர் தமிழ்ப் பேராசிரியர் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்திற் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது கலாநிதி பின்பட்டப்படிப்பினை மேற்கொண்டிட புலமைப்பரிசில் பெற்றுக்கொண்ட கலாநிதி பாலசுந்தரம் அவர்கள், இங்கிலாந் தில் உள்ள செவ்பீல்ட் பல்கலைக் கழகம் சென்றார். படிப்பை முடித்து மீண்டும் யாழ் பல்கலைக் கழகத்தில் பணியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார்.

1994இல் புலம் பெயர்ந்து கனடா வந்த கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் 1996ஆம் ஆண்டிலிருந்து அனைத்துலக மொழிக்கல்வி தமிழ் ஆசிரியராகவும் பின்னர் குடியமர்வுச் சேவை அலுவலராகவும் கடமையாற்றிய பின்னர் பாடசாலை குடியமர்வுச் சேவை அலுவலராகப் பணியாற்றி வருகிறார். அத்துடன் 2000ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ்க்கலை, தொழில் நுட்பக் கல்லூரி நடத்திவரும் தமிழ்நாடு மனோன் மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக வெளிநிலை பட்டப் படிப்புக்கான விரிவுரையாளராகவும் கலாநிதி பாலசுந்தரம் பணியாற்றி வருகிறார்.

பத்திரிகைகள், இதழ்கள், சஞ்சிகைகள் எனப் பல்வேறு வெளியீடுகளுக்கு இலக்கியம், கலை தொடர்பான கட்டுரைகளை எழுதிவந்த கலாநிதி பாலசுந்தரம் பல நூல் களையும் ஆக்கியுள்ளார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய காலத்தில் நாட்டார் இலக்கியம் ஆய்வும் பதிப்பீடும் - மட்டக் களப்பு மாவட்டம் என்னும் நூல் 1979இல் வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆறு நூல்கள் வெளி யிடப்பட்டுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:

1. காத்தவராயன் நாடகம் (1986)
2. இடப்பெயராய்வு - காங்கேயன் கல்வி வட்டாரம் (1988)
3. இடப்பெயராய்வு -
   வடமராட்சி, தென்மராட்சி வட்டாரங்கள் (1989)
4. தமிழ் இலக்கியத்தின் சித்தர் மருத்துவம் (1989)
5. ஒப்பனைக்கலை (1990)
6. நாட்டாரிசை - இயல்பும் பண்பாடும் (1991)

கனடாவுக்கு வந்தபின்னரும் அவருடைய நூல் வெளியிடும் ஆர்வம் தொடரத்தான் செய்தது. இற்றைவரை இங்கு நான்கு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. விபரம் வருமாறு:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஈழத்து இடப்பெயராய்வு - யாழ்ப்பாண மாவட்டம் (2002)
2. மட்டக்களப்பு மாவட்டத் திருமண நடைமுறைகள் (2003)
3. விபுலாநந்தம் (2004)
4. நாட்டார் இலக்கியம் - ஆய்வும் மதிப்பீடும் (2005)

இலங்கையில் வாழ்ந்த காலத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கம், மட்டக்களப்பு அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாண மாவட்டக் கலாசாரசபை, இலங்கை கலாசாரசபை முதலிய பல அமைப்புகளில் முக்கிய பதவிகள் வகித்து பணியாற்றிய கலாநிதி பாலசுந்தரம் கனடாவுக்கு வந்த பின்னரும் உலகத் தமிழர் இயக்கம், இலங்கைப் பட்டதாரிகள் கழகம், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், தமிழ்ப் பெற்றோர் சங்கம், ஒன்ராறியோ நுண்கலைக் கல்லூரி, சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் முதலிய அமைப்புகளில் முக்கிய பதவிகள் வகித்துத் தமிழ்ப்பணி ஆற்றிவருகிறார்.

கலாநிதி பாலசுந்தரம் அவர்கள் இலங்கையில் வாழ்ந்த காலத்தில் அவரோடு பழகிடும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தில. எனது ஆசான், பேராசிரியர் ஆ. சதா சிவம், எனது மதிப்புக்குரிய நண்பர் பேராசிரியர் பொ. பூலோக சிங்கம் ஆகியவர்கள்மூலம் கலாநிதி பாலசுந்தரத்தையிட்டு ஓரளவு அறிந்து வைத்திருந்தேன். கனடாவுக்கு வந்த பின்னர் அதிலும் சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் அமைக்கப்பட்ட பின்னரே அவருடன் நெருங்கிப் பழகிடவும் அவரை முழுமை யாக அறிந்திடவும் எனக்குச் சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் 18.02.2003இல் கனடாவில் அமைக்கப்பட்டபோது அதன் தலைவராக கலாநிதி பாலசுந்தரம் அவர்களும் செயலாளராகத் திரு. அஜந்தா ஞானமுத்து அவர்களும் துணைத் தலைவராக நானும் தெரிவு செய்யப்பட்டோம். மன்றத்தின் சார்பில் அடிகளாரது நினைவு தினம் கொண்டாடப்பட வேண்டுமென்றும் 'விபுலம்' என்னும் பெயரிய நினைவு விழாச் சிறப்புமலர் வெளியிடப்பட வேண்டு மென்றும் கலைமன்றக் கூட்டத்தில் தீர்மானித்தோம். விழாவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் வெளியீடும் சிறப்பாக நடந்தேறின. இச்செயற்பாடுகள் ஊடாக கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் செயலாற்றலை என்னாற் காண முடிந்தது.

கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் தமிழ்ப் பணியும் சமய, சமூகப் பணிகளும் பல்வேறு அமைப்புகளாற் பாராட்டப் பட்டுள்ளன. "முத்தமிழ் வித்தகர்", "வண்டமிழ் வள்ளல்", "சிவத்தமிழ் வித்தகர்" முதலிய பல விருதுகளைப் பெற்றுள்ள கலாநிதி பாலசுந்தரம் அவர்களைத் தமிழர் தகவல் நிறுவனம் அவருடைய தமிழ்க்கல்வி, தமிழ் ஆராய்ச்சிச் செயல்பாடு களைப் பெருமைப்படுத்தும் முகமாக 2006ஆம் ஆண்டிற்கான சிறப்பு விருதினை அவருக்கு வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது. ஆர்.ஆர். கிறியேஷன் நிறுவனத்தினர் கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் கல்விச் சாதனைகளைப் பாராட்டி அவர்களது 2006ஆம் ஆண்டு நாடகப் பெருவிழாவில் தங்கப் பதக்கம் வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியுள்ளது.

2006ஆம் ஆண்டில் கலாநிதி பாலசுந்தரம் அவர்களின் அறுபது வயதுப் பூர்த்தியை முன்னிட்டு தமிழர் செந்தாமரை, ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை, ரொரன்ரோ தமிழ் முதி-யோர் மன்றம் என்பன அவருக்கு மணி விழா எடுத்து பெருஞ் சிறப்புச் செய்துள்ளன. இவை யாவும் அவர் பெற்றுள்ள சமூக மதிப்பினையும் அவரது சாதனைகளையும் புலப்படுத்து வனவாக இருக்கின்றன அல்லவா?

எனது எழுபத்தைந்தாண்டு நிறைவுற்றதையொட்டி, கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தினர் ஏற்பாடு செய்திருந்த பவள விழாவிலே வெளியிடப்பட்ட மலரில் கலா நிதி பாலசுந்தரம் அவர்கள் எழுதிய கட்டுரையிலே,

"செபரத்தினம் அவர்களின் பரந்துபட்ட இலக்கிய அறி வையும் இலக்கிய வரலாற்று நோக்கினையும் வெளிப்படுத்து வனவாக அவர் எழுதியுள்ள "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" (2002), "தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்களும்"(2005) என்ற இரு நூல்களும் அமைகின்றன. இவ்விரு நூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆசிரியன், சமூகம், கல்வி, பொருள்மியம், சமயம், வரலாறு, தேசியம் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாகவும் ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பதிவாகவும் மதிப்பீடாகவும் அமைகின்றன. ஈழத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களின் பணிகளை காலக்கண்ணாடியாக வைத்து ஆராய்ந்தது மட்டுமன்றி ஈழத்தமிழ் அறிஞர்கள் தமிழகத்தில் எத்தகைய பணிபுரிந்தார்கள், தமிழகத்து அறிஞர்கள் எவ்வாறு ஈழத்து அறிஞர்களைப் போற்றிக் கௌரவித்தார்கள்? முதலான செய்திகளும் இவரது கட்டுரைகளில் நன்கு விளக்கம் பெற்றுள்ளன. பேராசிரியர் சந்திரகாந்தன் அவர்கள், ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் என்ற நூல் பற்றிக் குறிப்பிடும்போது "இந்நூல் எமது சமகாலத்தின் தேசிய வரலாற்றுத் தேவையையும் அதனுடன் கூடிய தமிழின எழுச்சி சார்ந்த அறிவுத்தேடலையும் ஆவணப்படுத்துதலையும் ஏதோ ஒரு வகையிலும் அளவிலும் பூர்த்தி செய்யும் பங்களிப்பாக அமைகின்றது" என்றார். மேலே கூறப்பட்ட ஈழத்து இலக்கிய வரலாற்று ஆய்வாளர் வரிசையில் வித்துவான் அவர்களையும் வைத்து மதிப்பிடத் தக்கதொரு தகுதியை இவ்விரு நூல்களும் அவருக்கு அளித்துள்ளன."

என்று குறிப்பிட்டிருப்பதானது என்பால் அவர் கொண்டிருக்கும் அன்புடன் கூடிய அறிவு சார்ந்த தொடர்புக்குச் சான்றாக அமைந்துள்ளது என்பதனை நன்றியுடன் கூறிக் கொள்ளுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள்



கனடாவில் மட்டுமன்றி தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் ஏனைய நாடுகளிலும் வரவேற்பைப் பெற்றுள்ள கனடா 'உதயன்' வாராந்தப் பத்திரிகையின் ஆசிரியரான திரு. ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் சிறப்புக்குரிய ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறார்.

சிறுவயதிலிருந்தே எழுத்துத் துறையில் ஈடுபாடு கொண்டிருந்த திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் காலப் போக்கில் படைப்பிலக்கியவாதியாக வளர்ச்சி அடைந்தார். 1975ஆம் ஆண்டிலே அவர் எழுதிய கவிதை ஒன்று சிரித்திரன் பத்திரிகையில் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டது.

அவர் இலங்கையில் இருந்த காலத்தில் முற்போக்குக் கவிதைகளையும் சிறுகதைகளையும் எழுதிவந்தார். மலையன்பன், புதுமைலோலன் என்பன அவர் சூடிக்கொண்ட புனை-பெயர்களாகும்.

கீற்று, மாற்று என்னும் பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணியாற்றிய லோகேந்திரலிங்கம் அவர்கள் 'அக்கினி' என்னும் சஞ்சிகையின் இணையாசிரியராகத் திரு. ஈழவாணன் அவர்களோடு பணியாற்றியுள்ளார்.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த லோகேந்திரலிங்கம் அவர்கள் 'சூரியன்' என்னும் பெயருடன் ஒரு பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி வந்தார். பத்திரிகைத் தொழில் அவரின் இரத்தத்துடன் கலந்துவிட்ட படியால், பத்திரிகைத் துறையைப் பொறுத்த வரையில் அவர் தொட்டதெல்லாம் துலங்கத் தொடங்கின.

'சூரியன்' என்னும் பெயர் 'உதயன்' என மாற்றப்பட்டது. உதயன் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கினான். படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலக்கியவாதியான திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் 'உதயன்' பத்திரிகையை வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டும் நடத்தாமல் அதனை இலக்கியப் பணி புரிகின்ற சாதனமாகவும் நடத்தலானார். சிறுகதைகள், கவிதைகள், இலக்கியக் கட்டுரைகள், நேர்காணல்கள் என இலக்கியப் பாதையில் 'உதயன்' வெற்றிநடை நடக்கலானான்.

உதயன் பத்திரிகையின் ஆண்டு நிறைவுகளைக் குறித்து சிறுகதைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள் வைக்கப்படலாயின. ஆண்டு நிறைவு விழாக்களைக் கோலா கலமாக நடத்திப் போட்டிகளிற் பரிசு பெற்றோருக்கு சான்றிதழ்களும் தங்கப் பதக்கங்களும் வழங்கப்பட்டன. போட்டிகளிற் பரிசு பெற்ற சில கதைகளையும் உதயன் இதழில் இடம்பெற்ற சில சிறப்புக் கதைகளையும் சேர்த்து ஒரு தொகுதியாக "தூரமும் துயரமும்" என்னும் பெயரில் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் மணிமேகலைப் பிரசுரமாக 2001ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

கவிதைத் தொகுப்பாக வெளிவந்த "காலத்தின் பதிவுகள்" என்னும் கூட்டு அமைப்பில் லோகேந்திரலிங்கம் அவர்களது பத்துக் கவிதைகள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

19.06.1993இல் அமைக்கப்பெற்ற கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் இயக்குநர்களுள் ஒருவராகப் பணியாற்றிவந்த திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் 2006ஆம் ஆண்டில் இணையத்தின் தலைமைப் பதவியையும் வகித்துள்ளார். 1993இல் இணையம் வெளியிட்ட 'அரும்பு' என்னும் பெயர் கொண்ட தமிழ்க் கனடியச் சிறுகதைகள் தொகுதி-1 இல் இடம் பெற்றுள்ள பன்னிரு கதைகளுள் 'போர்வை' என்னும் லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுதிய கதையும் இடம் பெற்றிருக்கிறது.

திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் தமது உதயன் பத்திரிகையின் பெயரில் சிறுகதை அரங்கொன்றினை கவிநாயகர் கந்தவனம் அவர்கள் தலைமையில் நடத்தி உள்ளார். அஃது இளைய தலைமுறையினர்களான எழுத்தாளர்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆற்றிய அரும்பணியாகவே அமைகிறது. மேற்படி சிறுகதை அரங்கிலே கவிநாயகர் அவர்கள், "சிறுகதை வளர்ச்சி - ஒரு கண்ணோட்டம்" என்னும் பொருளில் ஆற்றிய தலைமை உரையானது நாம் முன்னர் சுட்டிய 'அரும்பு' என்னும் பெயரிய தமிழ்க் கனடிய சிறுகதைகள் தொகுதி-1 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளமை பயன் தரும் செயலாகும்.

திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் ஆழமாகச் சிந்திப்பவர். அதன் விளைவே உதயன் பத்திரிகையின் துரித வளர்ச்சி. அவர் எழுதும் ஆசிரியர் தலையங்கங்கள் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. அவருடைய சில ஆசிரியர் தலையங்கங்கள் உலகின் பிற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்க-ளால் மீளப் பிரசுரிக்கப்பட்டுப் பாராட்டப்படுகின்றன.

"ஆண்டு தோறும் உதயன் விருது வழங்கும் திட்டம்" திரு. லோகேந்திரலிங்கம் அவர்களின் சீரிய சிந்தனையின் மற்றுமொரு விளைவாகும். ஆண்டுதோறும் பெப்ரவரி 26ஆம் நாளில் "உதயன் வேளிர் விருது", "உதயன் கலை இலக்கிய மேன்மை விருது", உதயன் தொழிலதிபர் விருது", உதயன் சமூக நல்லுறவு விருது", "உதயன் அனைத்துலக விருது - தமிழ் நாடு", உதயன் அனைத்துலக விருது - இலங்கை" ஆகிய ஆறு விருதுகள வழங்குவதாகத் தீர்மானித்த திரு. லோகேந்திலிங்கம் அவர்கள் 2006 பெப்ரவரி மாதம் 26ஆம் திகதி முதலாவது விருது வழங்கும் விழாவினை மிகச் சிறப்பாக நடத்திக்காட்டியுள்ளார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையமானது அதன் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின்போது இணையத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் மூத்த உறுப்பினரான திரு. ஆர்.என். லோகந்திரலிங்கம் அவர்களுக்கு நிறைகுடக் கேடயம் வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது. அச்செயலானது பெருமைக்குப் பெருமை சேர்த்ததாக அமைந்தது.

2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்திலே ஒன்ராறியோ மாநில அரசு, திரு. லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு சத்தியப் பிரமாண ஆணையாளர் பதவியினை வழங்கியமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைக் கொண்டாடும் முகமாகக் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் விருந்தபசாரத்துடன் இணைந்த பாராட்டு விழா வொன்றினைச் சிறப்பாகச் செய்துள்ளது. இப்பதவியானது புலம் பெயர்ந்து ஒன்ராறியோ மாகாணத்தில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களுக்குச் சேவையாற்றிட பிறிதொரு வழியை ஏற்படுத்தியுள்ளதாக நோக்கப்படுகிறது.

"வாழி புதுப்பதவி வாழி பொதுச்சேவை
வாழி புகழோங்கும் மலையன்பன் - வாழிய
குற்றமிலா உதயன் நற்றமிழர் சுற்றம்
ஒற்றுமையோ டென்றும் உயர்ந்து"

இச்செய்யுள் மேலே சுட்டிய பாராட்டு விழாவிலே கவிநாயகர் கலாநிதி வி. கந்தவனம் அவர்கள் பாடி வழங்கிய செய்யுள் களுள் ஒன்றாகும்.

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையின் முக்கிய உறுப்பினரான திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் மலேசியா, தென்னாபிரிக்கா ஆகிய இடங்களில் நடைபெற்ற பண்பாட்டு இயக்க மாநாடுகளில் கனடியப் பிர-திநிதிகளுள் ஒருவராகப் பங்கேற்றுள்ளமை அவரது சமூகப் பண்பாட்டு ஆர்வத்தை வெளிப்படுத்தி நிற்கிறது. தென்னா பிரிக்காவில் நடைபெற்ற மாநாட்டில் அவருடைய மகள்மார் இருவரும் பங்கு கொண்டு நடனவிருந்தளித்தமையும் சிறப்பா கக் குறிப்பிடப்பட வேண்டிய செய்தியாகும்.

நாங்கள் 1996 ஜூன் மாதம் கனடாவுக்கு வந்தது தொடக்கம் உதயன் பத்திரிகையுடனான தொடர்பும் ஏற்பட்டது. என்னால் எழுதப்பட்ட கட்டுரைகள் பல உதயனில் வெளி வந்தன. எழுத்தாளர்களை ஊக்குவிப்பதில் உதயனின் பிரதம ஆசிரியரான திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் முன்னணி வகிப்பதனை தொடர்புடையோர் நன்கறிவர்.

கனடாவிலே நான் வெளியிட்ட நான்கு நூல்களதும் வெளியீட்டு விழாக்களை கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அநுசரணையுடனேயே நடத்தினேன். தனிப் பட்ட வகையில் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் காட்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் தந்த ஒத்துழைப்பும் அவருடைய பெருந்தன்மைக்குச் சான்றுகளாம். வெளியீட்டு விழாக்களையிட்ட விளம்பரங்களை மிகவும் விளக்கமாகப் பிரசுரித்து உதவியதோடு நூல்களை-யிட்டு அன்பர்கள் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளையும் தக்கவாறு பிரசுரித்து உதவியுள்ளார். அவர் எழுத்தாளர் இணையத் தலைவராக இருந்த காலத்திலேயே எனது "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்ற நூலும் "கவிஞர் கந்தவனத்தின் கவிதை வளம்" என்ற நூலும் அவருடைய தலைமையின்கீழ் வெளியிடப்பட்டன என்பதனை மிக்க மன நிறைவுடன் குறிப்பிட விரும்புகிறேன். அத்துடன் அன்றைய-தினம் இடம்பெற்ற எனது பவள விழாவையும் அவரே தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.


"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்னும் தமிழர்தம் வாழ்க்கைத் தத்துவத்தோடு பின்னிப் பிணைந்தவரும் அனைவரோடும் அன்போடு பழகுபவரும் உதவி வழங்கிட எவ்வேளையிலும் ஆயத்தமாக இருப்பவருமான திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் பிற இன மக்களோடும் அன்போடு பழகும் இயல்பினர். சமூகத்தலைவர்களாலும் அரசியற் தலைவர்களாலும் விரும்பப்படுபவர். இப்பண்புகளே அவரை "நட்பின் நாயகன்" என அழைக்கச் செய்துள்ளன.

திரு. லோகேந்திரலிங்கம் அவர்களுடனான தொடர்பி-னையும் அன்புடன் பின்னிப் பிணைந்துள்ள நட்பினையும் நான் பெரிதும் மதிக்கிறேன். நானும் 'உதயன்' பத்திரிகைக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று கூறிக்கொள்ளுவதில் மன நிறைவு அடைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. தம்பிராசா வசந்தகுமார் அவர்கள்



திரு. வசந்தகுமார் அவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்த பெரிய புல்லுமலையில் 16.06.1958இல் கிராமாட்சி மன்றத் தலைவர் திரு. தம்பிராசா அவர்களின் மூத்த மகனாகப் பிறந்தார்.

மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயத்தில் க.பொ.த.ப சாதாரண தர வகுப்பு மாணாக்கனாக இருந்த போது தந்தையாரின் சுகவீன நிலையால் படிப்பை இடைநிறுத்தி விட்டு தந்தையாரின் வர்த்தக நிலையத்தையும் வயற் செய்கையையும் பொறுப்பேற்க வேண்டிய நிலைக்கு வசந்தகுமார் அவர்கள் தள்ளப்பட்டார். அத்துடன் தமது இளைய சகோதரர்களாகிய பகீரதி, கேசவன், நந்தகுமார், புஸ்பலதா ஆகியோருடைய கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதும் அவருடைய பொறுப்பாகி விட்டது.

தமது படிப்பினைத் தொடர முடியாமற் போனதையிட்டு வசந்தகுமார் அவர்கள் மனமடிவு கொண்ட போதிலும் தம்மீது சுமந்துள்ள பெறுப்புகளைச் சிறப்புற நடத்துவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டார். அவர் தொட்டதெல்லாம் பொன்னாகத் தொடங்கின. வர்த்தகம் கொடிகட்டிப் பறந்தது. அரசாங்கக் கட்டிட ஒப்பந்தக்காரராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார். லொறிகள், உழவு இயந்திரங்கள் என அவருடைய தொழில்களுக்கேற்ற வசதிகள் நிறைந்தன.

தம்பி கேசவன் விஞ்ஞானப் பட்டதாரியாகி இலண்டனில் ஆசிரியராகவும் தம்பி நந்தகுமார் வைத்திய கலாநிதியாகி அமெரிக்காவில் துணைப் பேராசிரியராகவும் தங்கை பகீரதியும் தங்கை புஸ்பலதாவும் விஞ்ஞானப் பட்டதாரிக-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவும் உயர்வடைந்தனர். "தந்தையொடு கல்விபோம்" என்று சொல்லப்படுகிறது. ஆனால் வசந்தகுமார் அவர்கள் சகோதரர் களுக்குத் தந்தையாக இருந்து அவர்களின் கல்வி நிலையை வளர்த்துள்ளமை பாராட்டுக்குரிய செயல்பாடாகும்.

1997இல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த வசந்த குமார் அவர்கள் எல்லாவித சமூகசேவை அமைப்புகளிலும் பங்கேற்று தமது உழைப்பினை நல்கி வருகிறார். கனடா, சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம், சிவானந்தா பழைய மாணவர் சங்கம், கிழக்கிலங்கை சிறுவர் முன்னேற்றச் சங்கம் (CHIDAES), கிழக்கு சமூக அபிவிருத்தி நிறுவனம் (E.S.D.O) என்பன அவர் பங்கேற்றுச் செயற்பட்டு வரும் சமூகசேவை அமைப்புகளில் ஒருசிலவாம்.

மீன்பாடும் தேனாட்டாரின் ஒன்றுகூடலுக்காக "பாடும் மீன்களின் பொழுது" என்னும் அமைப்பினை 2002ஆம் ஆண்டிலே உருவாக்கியவர்களுள் வசந்தகுமார் அவர்களே முதன்மையானவர் என்பதனை அனைவரும் ஏற்பர். மட்டக் களப்பு பிரதேச மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமி யங்களைப் பேணும் வகையிலும் புலம் பெயர்ந்த மண்ணில் வாழ்கின்ற மக்களை ஐக்கியப் படுத்தி தாயகத்தில் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவும் வகையிலும் ஆரம்பிக்கப் பட்ட "பாடும் மீன்களின் பொழுது" என்னும் இந்த அமைப்பா னது வருடா வருடம் ஒன்றுகூடல் நிகழ்ச்சியைப் பயனுள்ள வகையில் நடத்திவருவதோடு, தாயகத்தில் இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 2007ஆம் ஆண்டில் 1300 டாலர் களை அனுப்பியும் இருக்கிறது.

வசந்தகுமார் அவர்கள் எழுத்துத் துறையில் நேரடி யாகப் பங்களிப்பினைச் செய்யாவிட்டாலும் எழுத்தாளர்களைப் பல்லாற்றானும் ஊக்குவித்து வருகிறார். மட்டக்களப்பு மாமாங் கேஸ்வரப் பிள்ளையார் மான்மியம் என்னும் சிறந்ததொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலினை ஆக்கித் தந்துள்ள கவிஞர் நாவற்குடா இளைய தம்பி தங்கராசா அவர்கள் தமது நூலுக்கு எழுதிய முன்னு ரையிலே, "நான் இந்த மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் மான்மியம் என்னும் நூலை எழுதுவதற்கு எனக்கு யானைப் பாகனாக இருந்த காரணகர்த்தா திரு. தம்பிராசா வசந்தகுமார் ஆவார்" என்று குறிப்பிட்டிருப்பது நோக்குதற்குரியது. அவ்வாறே மட்டக்களப்பு மண்ணின் புகழ் பெற்ற மைந்தர்கள் பற்றியும் சிறப்புக்குரிய கலைச் செல்வங் கள் பற்றியும் கலாநிதி க.தா. செல்வராசகோபால் அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்கள் பலவற்றிற்கான விபரங்களைத் தேடிக் கொடுத்தோரில் திரு. வசந்தகுமார் அவர்களும் ஒருவ-ரென குறிப்பிடப் பட்டிருப்பதானது வசந்தகுமார் அவர்களின் தமிழ்ப் பணியைச் சுட்டுவதாக இருக்கிறது.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்திற்கு கோபுரம் ஒன்று நிர்மாணிக்க வேண்டியதாய் இருந்தது. இப் பணிக்கு உதவிட பாடும் மீன் அமைப்பு முன்வந்தது. இப்புனித பணிக்கு நிதி திரட்டுவதற்காக, "தீர்த்தக் கரையினிலே" என்னும் ஒலிநாடா, இசைக்குறுந் தட்டு ஆகியவற்றைத் தயாரித்து அவற்றை விற்கலாம் எனவும் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. இதன் அடிப்படை யில் கிழக்கு மண்ணின் புகழ் பூத்த கவிஞர்களாகிய மூனாக்கானா, திமிலைத்துமிலன், காசி ஆனந்தன், எருவில் மூர்த்தி, சிவாநந்ததேவன், செ. குணரத்தினம் ஆகிய எட்டுக் கவிஞர்களால் ஆக்கப்பட்ட பன்னிரு பாடல்களைத் தேர்ந் தெடுத்து அரவிந்த் அவர்களால் இசை அமைப்பித்து புகழ் பெற்ற தமிழ் நாட்டுப் பாடகர்களான டாக்டர் எஸ்.பி. பாலசுப்பிரமணியம், திரு. ரீ.எஸ். மகாராஜன், திருமதி வாணி-ஜெயராம், திரு. ஹரிஸ் ராகவேந்திரா, திரு. உன்னி கிருஷ்ணன், திருமதி அனுராதா ஸ்ரீராம், செல்வி மகாநதி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஷோபனா ஆகியவர்களைக் கொண்டு பாடுவித்து, சென்னை யிலுள்ள "தினேஷ் அய்யா மியூசிக் டிராக்ஸ்" மூலம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடா, இசைக்குறுந்தட்டு ஆகி யவை பல இடங்களிலும் விற்கப்பட்டு சேகரிக்கப்பட்ட பணம் ஆலய நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இப்புண்ணிய பணியில் ஈடுபட்டிருந்தோரில் முக்கிய இடம் பெற்றவராக விளங்கியவர் திரு. வசந்தகுமார் அவர்கள் என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும்.

நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், விழாக்களை ஒழுங்கு செய்தல், அவற்றை நெறிப்படுத்துதல், தொகுத்து வழங்குதல் முதலிய பல்வேறு துறைகளிலும் ஆற்றல் பெற்று விளங்கும் திரு. வசந்தகுமார் அவர்கள் பொறுப்பேற்கும் பணி-களை மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது பணிகள் நிறைவுறும் வரையும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி முடிப்பதனை விரதமாகக் கொண்டிருக்கிறார். அனைவராலும் "பாபு" என்னும் செல்லப் பெயரால் அழைக்கப்படும் அவரை, "எங்க வீட்டுப் பிள்ளை" என்று உரிமையுடன் அழைப்பவர்கள் பலரை நான் கண்டுள்ளேன். புன்னகை தவழும் முகத்துடன் நல்லவற்றை நினைத்து, நல்லவற்றைக்கண்டு, நல்லவற்றைச் செய்யும் பாபு வசந்தகுமார் அவர்கள் எனக்கும் இனியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள்



யாழ்ப்பாணத்திலே 28.08.1934 இல் பிறந்த சுப்பிரமணியம் சிவநாயகமூர்த்தி அவர்கள் உயர்கல்வியைத் தொடர்ந்து, நல்லூர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வர்த்தக விசேட ஆசிரியர் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். வவுனியா விவசாயக் கல்லூரியிற் கற்று விவசாய ஆசிரியர் பயிற்சியையும் இவர் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வி கரையில்லாததென்பதனை நன்கு உணர்ந்திருந்த சிவநாயகமூர்த்தி அவர்கள் "கற்கை நன்றே கற்கை நன்றே" என்பதனைத் தாரக மந்திரமாக வரிந்து கொண்டு கற்றற் செயற்பாட்டை ஆசையுடன் தொடரலானார். பேரதேனியாப் பல்கலைக் கழகத்தில் கலைமானிப் (B.A) பட்டத்தினையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா (Diploma in Education) பட்டத்தினையும் பெற்றுக் கொண்டமை அவருடைய கற்றற் செயற்பாட்டிற்குக் கிடைத்த அறுவடைகளே.

கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்களின் கற்றற்பணி எவ்வாறு படிப்படியாக முன்னேற்றம் கண்டதோ அவ்வாறே அவரது கற்பித்தற் பணியும் அமைந்திருக்கக் காணலாம். உதவி ஆசிரியராக, பாடசாலை அதிபராகப் பணியாற்றிய இவர் 1973இல் கல்வி நிருவாக சேவையில் போட்டிப் பரீட்சை மூலம் சேர்த்துக் கொள்ளப்பட்டு ஆரம்பத்தில் பண்டாரவளை கல்விப்பிரதேசத்தில் தமிழ்ப் பிரிவின் கல்வி அதிகாரியாகவும் அதனைத் தொடர்ந்து மருதனாமடம் கல்விக் காரியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி உள்ளார்.

1989இல் கனடாவுக்குப் புலம்பெயர்ந்துவந்த சிவநாயகமூர்த்தி அவர்கள் இங்கும் தனது கற்றல், கற்பித்தல் ஆகிய செயற்பாடுகளில் நாட்டங்கொள்ளலானார். வாழ்நாள் நீடித்த கல்வியில் (Life Long Learning) அவர் கொண்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுறுதியினால் ரொறன்ரோ பல்கலைக் கழகத்திலே பல்கலாசாரப் பாடத்தில் (Multiculturism) சித்தியடைந்தார்.

ரொறன்ரோவிலே பாக்டேல், குவீன்விக்டோரியா ஆகிய ஆரம்பப் பாடசாலைகளிலும் பின்னர் பாக்டேல் கல்லூரி, வெஸ்ட் ரொறன்ரோக் கல்லூரி, மத்திய தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவற்றிலும் தமிழ்த் திறமைச் சித்திகளுக்கான 9ஆம், 10ஆம், O.A.C வகுப்புகளிலும் கற்பித்து வந்துள்ளார். ரொறன்ரோ கல்விச் சபையின் கீழுள்ள பாடசாலைகளில் மொழி பெயர்ப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.

எழுத்துத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள சிவநாயகமூர்த்தி அவர்கள் தங்கத்தீபம், முரசொலி ஆகிய பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். தங்கத் தீபத்தில் சங்ககால தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங் களையிட்டு இவர் எழுதிவரும் கட்டுரைகள் பெரும் வரவேற் பைப் பெற்று வருகின்றன. சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களையிட்டு எழுதப்பட்ட கட்டுரைகள் அழகிய தமிழ் நடையில் வேண்டிய செய்திகள் அனைத்தையும் தாங்கியவையாக அமைந்திருக்கின்றன. அக்கட்டுரைகளோடு இணைந்த தமிழ் இலக்கிய நூல்களின் பெயர் விபரங்களும் அவற்றின் ஆசிரியர்களின் பெயர்களும் கொடுக்கப்பட்டிருப்பதானது, தங்கத்தீபம் பத்திரிகையின் பயன்தரும் செயலாக உள்ளது.

கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்கள், "நெடுந்தீவு மக்களும் வரலாறும்", "பெற்றோர் அறியவேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும்" என்னும் நூல்கள் இரண்டினை எழுதி வெளியிட்டுள்ளார்.

"நெடுந்தீவு மக்களும் வரலாறும்" என்னும் நூல் நெடுந்தீவினையிட்ட தகவல்கள் அத்தனையையும் உள்ள டக்கி இருப்பதோடு வரலாற்று உண்மைகள் பலவற்றை ஆதாரபூர்வமாக விளக்கிக் காட்டுவதாகவும் எழுதப் பட்டிருக்கிறது. இந்நூல் நெடுந்தீவு மக்களுக்கு மட்டுமல்ல வரலாற்றுத் துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் அரிய தோர் ஆவண நூலாகும். இந்நூல் பலரின் பாராட்டைப் பெற்றுக் கொண்டதில் வியப்பில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெற்றோர் அறியவேண்டியவையும் மாணவர் பிரச்சனைகளும்" என்னும் நூல் கற்றலுடன் தொடர்பான பயனுள்ள பல தகவல்களைக் கொண்டுள்ளது. இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியுள்ள அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் "இந்நூலிலே ரொறன்ரோவின் கல்வி முறைமை மற்றும் பெற்றோரியம் சம்பந்தமான தமவல்கள் அத்தனையையும் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடிய விதத்திலே சேகரித்து தேவையான விளக்கங்களுடன் தந்துள்ளார்" என்று கூறியுள்ளமை மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல.

மாணவர்கள் தங்கள் தாய்மொழியைக் கற்கவேண்டிய தின் அவசியத்தையும் சமயக்கல்வி அனைத்து மாணவர் களுக்கும் புகட்டப்பட வேண்டியதின் அவசியத்தையும் வலி யுறுத்திக் கூறும் கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்கள் பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதனை யும் தெளிவாக விளக்கியுள்ளார்.

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற வள்ளுவனாரின் கூற்றுப்படி சிவநாயகமூர்த்தி அவர்க-ளின் மேற்படிநூல் 78 பக்கங்களைக் கொண்ட சிறிய நூலாக இருந்தபோதிலும் காலத்தினாற் செய்யப்பட்ட நன்றியாக அமைவதனால் ஞாலத்தின் மாணப் பெரிதாகவே கொள்ளப் படுகிறது.

கல்விப் பணியுடன் சமூகநலப் பணிகளிலும் சிவநாயகமூர்த்தி அவர்கள் ஈடுபாடு காண்பித்து வருகிறார். நெடுந்தீவு மக்கள் ஒன்றியம், கனடாப் பட்டதாரிகள் சங்கம், கனடாத் தமிழ்ப் பெற்றோர் சங்கம், கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் ஆகிய அமைப்புகளில் முக்கிய பதவி வகித்து அவர் ஆற்றிவரும் சமூகநலப் பணிகள் பலராலும் பாராட்டப்படுகின்றன. சிறந்த பேச்சுவன்மை கொண்டுள்ள சிவநாயகமூர்த்தி அவர்கள் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார்.

சிவநாயகமூர்த்தி அவர்களது கல்வித் தகைமைகள், கல்விப்பணிகள், சமூகநலப் பணிகள், எழுத்துப் பணிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றினை ஆய்வுசெய்த அமெரிக்க உலக பல்கலைக் கழகமானது 2003ஆம் ஆண்டில் இவருக்கு கல்வித்துறையில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிச் சிறப்புச் செய்துள்ளது. கனடாத் தமிழர் தகவல் வெளியீட்டகம் 2008இல் நடத்திய 141வது கனடாதின விழாவில் இவரது கல்வி, கலாசார, சமூகநலப் பணிகளுக்காக விருது வழங்கி, தங்கப்பதக்கம் சூட்டி மதிப்புச் செய்துள்ளது.

கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட நட்புடன் கூடிய தொடர்பினையிட்டு அவர் கூறுவதைக் கீழே தருகிறேன்:

"இவருடன் முதன்முதலாக யான் விபுலாநந்த அடிகளாரின் விழாவில் பேராசிரியர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் மூலம் அறிமுகமானேன். அதன் பிற்பாடு பல விழாக்களிலும் நூல் வெளியீட்டு நிகழ்வுகளிலும் சந்தித்துக் கலந்துரையாடவும் அவரைப்பற்றி அறியவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. பின்னர் அவருடன் பழகவும் அவரின் பேச்சுக் களைக் கேட்கவும் அவரின் நூல்களை வாசிக்கவும் சந்தர்ப் பங்கள் கிடைத்தன. அவற்றின்மூலம் அவரின் பண்பையும் அறிவையும் திறமைகளையும் நன்கு அறிந்து கொண்டேன். மற்றவர்களோடு அன்பாகப் பழகும் சுபாவமும் இனிமையான வார்த்தைகளும் அவரின் ஆழ்ந்த கருத்துக்களும் உயரிய சிந்தனைகளும் என்னை மிகவும் கவர்ந்தன".

உண்மையாகவே கலாநிதி சிவநாயகமூர்த்தி அவர்களுடைய ஆழ்ந்த கருத்துக்களும் உயரிய சிந்தனைகளும் தூய்மையான பண்பும் என்னையும் கவர்ந்துள்ளன என்பதனை விநயமாகக் கூறிக்கொள்ள விழைகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய இராச்சியத்தில் நாங்கள்

ஸ்கொத்லாந்து தேசத்தில் வதியும் எங்கள் மகள் குடும்பத்தாரையும், இங்கிலாந்து தேசத்தில் வதியும் மருமகள் குடும்பத்தாரையும் சந்தித்துவரும் நோக்குடனும் என்னால் எழுதப்பட்ட, "தமிழ்நாடும் ஈழத்துத்தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலினை அறிமுகஞ் செய்யும் நோக்குடனும் 2006 ஜூலை மாதம் 31 ஆம் திகதி நானும் எனது துணைவியாரும் கனடாவிலிருந்து புறப்பட்டோம்.

இங்கிலாந்து தேசத்தின் இலண்டன் மாநகரிலுள்ள எங்கள் மருமகளின் வீட்டில் 2006 ஆகஸ்ட் 24 ஆம் திகதி-வரை தங்கி நின்றோம். எங்களுடைய வருகையையிட்டு, எங்கள் அன்புக்குரியவரும் பிரபல நூலகவியலாளருமான திரு. என். செல்வராசா அவர்கள் இலண்டனிலிருந்து வெளி-வரும் அனைத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் மூலம் அறிவித்திருந்தார்.

எங்கள் உறவினர்கள், பழைய மாணாக்கர்கள், எங்கள் வித்தியாலய முன்னாள் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் எனப் பலர் வந்து எங்களைச் சந்தித்தார்கள். பலர் தங்கள் இல்லங்களுக்கு அழைத்துச் சென்று விருந்தளித்து உபசரித்தார்கள்.

ஊடகவியலாளர் திரு. செல்வராசா அவர்கள் பெரு மனதுடன் ஒழுங்கு செய்திருந்த நேர்காணல் நிகழ்வுகள் "தீபம்" தொலைக்காட்சி, இலண்டன் தமிழ் வானொலி அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களில் குறிப்பிட்ட ஒழுங்கிலே இடம்பெற்றன.

வாய்ப்பு வசதிகள் கிடைத்த வேளைகளில் இராணி மாளிகை, தேவாலயங்கள், பல்கலைக்கழகங்கள், தேம்ஸ் நதிக்கரை, மெழுகு உருவச்சாலை (MADAME TUSSAUDS) நூதனசாலை, பாராளுமன்றக் கட்டடங்கள், பூஞ்சோலைகள் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டோம். களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழுவினரின் விருந்துபசாரத்திற் பங்கேற்றோம். "வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்" ஒழுங்கு செய்த எனது நூல் அறிமுக விழாவிற் கலந்து கொண்டோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


25.08.2006 இல் ஸ்கொத்லாந்து தேசத்திற்குச் சென்றோம். அங்கு கிளாஸ்கோ பட்டணத்தில் வசிக்கும் எங்கள் மகள் குடும்பத்தாருடன் தங்கியிருந்தோம்.

பழமை வாய்ந்த எடின்பரோ அரண்மனை, எடின்பரோ பல்கலைக்கழகம், Deep Sea World, Loeh Lomond நதி, துறைமுகம், மிருகக்காட்சிச்சாலை, ஆர்ட்கலரி, நூதனசாலை, பழைய அரண்மனைகள் முதலியவற்றைப் பார்வையிட்டோம். இரண்டாம் உலகமகா யுத்த காலத்திற் பயன்படுத்தப்பட்ட பெரிய கப்பல்களைப் பார்த்தோம். 18.09.2006 இல் எங்களின் ஐக்கிய இராச்சியப் பயணம் நிறைவடைந்து நாங்கள் கனடா திரும்பினோம்.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. திருமதி சிறிதரன் அவர்கள்

நானும் என் துணைவியாரும் 31.07.2006 இல் இலண்டன் மாநகரை அடைந்தோம். எனது துணைவியாரின் அண்ணார் திரு. வேல்முருகு ஆசிரியர் அவர்களின் இளைய மகள் திருமதி வினோதினி சிறிதரன் அவர்கள் இல்லத்தி-லேயே தங்கி நின்றோம். 144, டிறேகொற் அவனியு ஹறோ, இலண்டன் (144, DRAYCOTT AVENUE, HARROW HA3OBZ LONDON) என்பதே முகவரி. நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்கள் இலண்டனில் வெளிவரும் தமிழ் மொழிப் பத்திரிகைகளுக்கு இந்த முகவரியையே கொடுத் திருந்தார்.

வினோதினி அவர்களின் கணவர் திரு. சிறிதரன் ஆவார். அவர் திருகோணமலையைச் சேர்ந்த திரு. அழகரத் தினம் அவர்களின் மகன். சிறிதரன் அவர்களை "பாபு" என்றும், "திருமலை பாபு" என்றும் செல்லமாக அழைப்பர்.

திரு. திருமதி சிறிதரன் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். எங்களுடைய சொந்த வீட்டில் இருப்பதுபோன்ற உணர்வுடன் அவர்களுடன் தங்கினோம். எங்கள் வயது, உடல்நிலை ஆகியவற்றிற்குத் தக்கதாக உணவினைத் தயாரித்துத் தருவதில் அவர்கள் இருவரும் காட்டிய கவனமும் அக்கறையும் எங்களை வியக்க வைத்தன. எங்கள் உடுப்புகளைக் கழுவி ஒழுங்குசெய்து வைப்பதிலும் எங்கள் மருமகள் காட்டிய அக்கறையில் நாங்கள் நிறைந்து நின்றோம். எங்களுக்கேற்ற கறிவகைக-ளையும் பழவகைகளையும் தேடி வாங்குவதில் எங்கள் மகன் சிறிதரன் காட்டிய அக்கறை எங்கள் கண்களைப் பனிக்கச் செய்தன. அவர்களின் Johnny, Joel என்னும் பெயரிய மகன்மார் இருவரும் எங்களோடு உரிமையுடன் ஒட்டிக்கொண்டனர்.

நாங்கள் தங்கிநின்ற வீட்டின் முகவரியைப் பத்திரிகைகளிற் பார்த்த இலக்கிய நண்பர்களும், மாணாக்கர்களும் உறவினர்களுமெனப் பலர் வீட்டுக்கு வந்தபோது அவர்களை வரவேற்று உபசரித்ததோடு தூரத்திலிருந்து வந்தவர்களை வரவேற்று உணவளித்த,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. திருமதி சிறிதரன் அவர்களின் பண்பு எங்களை வியக்க வைத்த சந்தர்ப்பங்கள் மிகப்பல.

நாங்கள் ஓய்வாயிருந்த நாள்களில் எங்களை அழைத்துச்சென்று இலண்டனின் சிறப்புக்குரிய இடங்களைக் காட்டுவதிலும் சந்திக்க வேண்டியவர்களைச் சந்திக்கச் செய்வதிலும் திரு. திருமதி சிறிதரன் அவர்கள் குடும்பமாகப் பேருதவியாக இருந்தார்கள். அத்துடன் நான் போக வேண்டிய கூட்டங்களுக்கும், வானொலி நிலையங்களுக்கும், தொலைக் காட்சி நிலையத்துக்கும் எங்கள் மகன் திரு. சிறிதரன் அவர்களே அழைத்துச் சென்றார் என்பதனை நன்றியறித லுடன் நினைவில் வைத்திருக்கிறோம்.

நாங்கள் இலண்டனுக்குப் புறப்பட முன்னர் அனுப்பி வைத்த புத்தகப் பொதியை உரிய இடத்துக்குச் சென்று கட்டவேண்டிய பணத்தைக்கட்டி எடுத்து வைத்தவரும் எங்கள் அன்புக்குரிய சிறிதரன் அவர்களே என்பதை நினைக்குந் தோறும் அவருடைய பிரதி உபகாரம் கருதாத பண்பு எங்கள் உள்ளத்தை நிறைத்து நிற்கிறது. அப் பண்பினைப் போற்றி நிற்கின்றோம்.

பயன் தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது (குறள் 103)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவாலியர், கலாநிதி
## ச. அடைக்கலமுத்து அவர்கள்

பேரறிஞர் தனிநாயக அடிகளார் பிறந்த நெடுந்தீவிலே 15.09.1918 இல் பிறந்தவரே திரு. அடைக்கலமுத்து. இவர் தமது இடைநிலைக் கல்வியைக் கொழும்புத்துறை கத்தோலிக்க சாதனா பாடசாலையிற் பெற்று, சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் திறமைச் சித்தி பெற்றார். அப்பாடசாலை அதிபராகத் திகழ்ந்த அருட்சகோதரர் பேதுருப்பிள்ளை அவர்கள் தமிழ் இலக்கண இலக்கியங் களில் பாண்டித்தியம் பெற்றவராக இருந்தார். "சின்னப் பவணந்தி முனிவர்" என்று போற்றப்படத் தக்கவராய் அவர் நன்னூலின் கரைகண்டவராகவும் விளங்கினார். இத்தகைய அதிபரிடம் கற்றிடும் பேற்றினைப் பெற்றுக்கொண்ட திரு. அடைக்கலமுத்து அவர்களுக்கு மேற்படி பேறுதான் எதிர்கால உயர்வுக்கு அசைக்க முடியாத அத்திவாரமாக அமைவதைக் காண்கிறோம்.

சி.பா.த. பரீட்சையிற் தேர்ச்சியடைந்த திரு. அடைக்கல முத்து அவர்கள் கொழும்புத்துறையில் அமைந்துள்ள கத்தோலிக்க ஆசிரியா கலாசாலையிற் சேர்ந்து கொண்டார். அக்கலாசாலையின் அதிபராக அக்காலத்தில் விளங்கியவர், வணக்கத்துக்குரிய கலாநிதி ஜே. எமிலியானுஸ்பிள்ளை ஆவார். இளம்பராயத்திலே விஞ்ஞானப் பட்டதாரியாகத் தேர்ச்சியடைந்த அடிகளாரிடமும் அங்கு விரிவுரையாளராகப் பணியாற்றிய புலவர்மணி சோ. இளமுருகனாரிடமும் பாடங் கேட்கும் பாக்கியத்தை திரு. அடைக்கலமுத்து பெற்றிருந்தார். ஏற்கனவே அவர் பெற்றிருந்த அறிவு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மேலும் வளர்ச்சி கண்டது.

பயிற்றப்பட்ட ஆசிரியராக வெளியேறிய திரு. அடைக்கலமுத்து அவர்கள் "கல்வி கரையல" என்பதை உணர்ந்தவராக காவிய பாடசாலையிற் சேர்ந்து, நாவலர் பரம்பரையினரான பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்க-ளிடம் பாடம் கேட்கலானார். பண்டிதமணி அவர்களுடைய அருட்பார்வை அடைக்கலமுத்து அவர்களை நிறைத்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் கழகமும் திரு. அடைக்கலமுத்து அவர்களின் அறிவுப் பசிக்குத் தீனிபோடும் அரியபணியினை ஆற்றி யிருக்கிறது. வித்துவசிரோமணி ந. சுப்பையாபிள்ளை, வித்து வான் க. வேந்தனார், வித்துவான் க.சி. நடராசா, வித்துவான் க. கார்த்திகேசனார் ஆகியோர் அடைக்கலமுத்து அவர்களைச் சான்றோன் ஆக்கிய பேரறிஞர்கள் ஆவர். மகாவித்து வான் சி. கணேசையர் அவர்களிடமும் பாடங்கேட்ட அடைக் கலமுத்து அவர்கள், இத்தனை அறிஞர் பெருமக்களிடம் பாடங் கேட்டிடும் பெரும் பேற்றினைப் பெற்றமை வாலறிவனாம் எம் பெருமானின் கொடையே என்போம். உண்மையில் திரு. அடைக்கலமுத்து அவர்கள் கொடுத்து வைத்தவர்தாம்.

சாந்துணையும் கற்றிடவேண்டுமென்னும் வள்ளுவனார் வழிநின்று கற்றிடும் பணியை மேற்கொண்ட அடைக்கலமுத்து அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்திற் சேர்ந்து தமிழ் வித்துவான் கற்கைநெறியினை மேற்கொண்டார். அங்கு பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, அறிஞர் வி. செல்வநாயகம், கலாநிதி சு. வித்தியானந்தன், கலாநிதி ஆ. சதாசிவம் ஆகியோரிடம் தாம் ஏற்கனவே பெற்றிருந்த கல்விக்கு மேலும் வளஞ்சேர்த்துக் கொண்டார். திரு அடைக்கலமுத்து அவர்களுடன் வித்துவான் கற்கை நெறியில் இணைந்திருந்தவர்களுள் நானும் ஒருவன் என்று கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வித்துவான் அடைக்கலமுத்து அவர்களது பேரறிவின் அறுவடைகள் வருமாறு:

1. மாதா அஞ்சலி
2. நெஞ்சே நினை - 1975
3. இவ்வழிச் சென்ற இனியமனிதன்
4. காக்கும் கரங்கள்
5. அமுதுவின் கவிதைகள் - 1991
6. அன்பின் கங்கை அன்னை திரேசா
   மூன்று பதிப்புகள் 1997, 2002, 2005
7. மடுமாதா காவியம்
8. இளவாலை ஆலய வரலாறு
9. அமுதுவின் கவிதைகள் - திருத்திய பதிப்பு 2002
10. இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்துவான் அடைக்கலமுத்து அவர்களின் போற்றுதற் குரிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டி காலத்துக்குக்காலம் பட்டங்கள் வழங்கப்பெற்று அவர் சிறப்பிக்கப் பட்டுள்ளார். அவ்வாறு வழங்கப்பெற்ற பட்டங்கள் வருமாறு:-

1. சொல்லின் செல்வன் - யாழ். தமிழ் இலக்கியக்கழகம்.
2. புலவர்மணி - இளவாலை ப. மா. சங்கம் -லண்டன்
3. செந்தமிழ்த் தென்றல் - லண்டன் தமிழ் மன்றம்
4. முப்பணி வேந்தன் - பேராசிரியர் கலாநிதி வண. S.J. இம்மானுவேல் - லண்டன் அக்கிரன் பட்டின மண்டபம்
5. கவியரசர் - பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ், லண்டன் ஈலிங் அம்மன் கோவில்
6. தமிழ்க்கங்கை - கலாநிதி அ.பி. ஜெயசேகரம் ஜேர்மன் நாட்டுத் தமிழ்ப்பணி மன்றம்
7. பாவேந்தர் - பாப்பரசர் ஜோன் - போல் ii
8. மதுரகவி - யாழ் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்
9. மகாகவி - லண்டன் மா.எ. சங்கம்
10. கலாபூஷணம் - இந்துகலாசார அலுவலகம் கொழும்பு
11. செவாலியர் - பரிசுத்த பாப்பரசர் ஜோன் போல் ii
12. கௌரவ கலாநிதி - யாழ். பல்கலைக் கழகம்.

தமது பதினேழாவது வயதில் "பாதுகாவலன்" என்ற வார இதழுக்குக் கட்டுரைகள் எழுதத் தொடங்கி, படிப்படியாக வீரகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளுக்கான சிறப்புக் கட்டுரையாக வளர்ச்சி அடைந்து பின்னர் பிரபல எழுத்தாளராக, நாடறிந்த எழுத்தாளராக உயர்ந்து நிற்கும் கலாநிதி. செவாலியர் அடைக்கலமுத்து அவர்கள் பல்வேறு அமைப்புகளாலும் மன்றங்களாலும் பாராட்டிப் போற்றப் பட்டுள்ளார். பதச்சோறாக ஓர் உதாரணத்தைத் தருதும்.

1991 பெப்ரவரி மாதம் கனடாவிலே ரொரண்ரோவில் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் தகவல் நிறுவனமானது ஒவ்வோர் ஆண்டின் நிறைவிலே எழுத்துத்துறை உட்பட பல்வேறு துறைகளிலும் சிறப்புற்று விளங்குவோருக்கு விருது வழங்கிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புச் செய்வதை வழக்கமாக்கியுள்ளது. அவ்வகையில் அந்நிறுவனமானது தனது பதினைந்தாவது ஆண்டு நிறைவின் போது விருது வழங்குவதற்காகத் தெரிவு செய்தோர்களுள், கலாநிதி செவாலியர் ச. அடைக்கலமுத்து அவர்கள் முக்கிய மானவர். ஆண்டு நிறைவு குறித்து வெளியிடப்பட்ட பதின்ம மலரிலே அப்பெரியாரின் புகைப்படத்தோடு கூடிய சுருக்கமான வாழ்க்கைக் குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. குறிப்புகளின் இறுதிப் பந்தியில்,

"கல்வி, பண்பு, ஒழுக்கம், சேவை, இனவுணர்வு ஆகிய அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் திகழ்ந்து வரும் பெரியார் ச.அ. அடைக்கலமுத்து அவர்களுக்கு தமிழர் தகவலின் "வாழ்நாள் முழுவதற்குமான விருது" டன் தங்கப் பதக்கமும் (Life time achievement) சூட்டப்படுகின்றது" என்று குறிப்பிடப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

இவ்விருதினைப் பெற்றுக் கொள்வதற்காக இலண்டன் மாநகரிலிருந்து பெரியார் அடைக்கலமுத்து அவர்கள் கனடா வருவதற்கும் விழா முடிவடைந்த பின்னர் இலண்டன் மாநகர் செல்லுவதற்குமான விமானப்பயணச் சீட்டுக்குரிய பணத்தினை தமிழர் தகவல் நிறுவனமே கொடுத்ததன் மூலம், பெரியாரின் பெருமை கூறாமலே அமைகிறதல்லவா?

தமிழ் வித்துவான் கற்கை நெறிக்காகப் பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற 1957 இல் செவாலியர் அடைக்கலமுத்து அவர்களுடன் எனக்கு ஏற்பட்ட அன்புடன் இணைந்த நட்பு மென்மேலும் வளர்ச்சியடைந்து குடும்பம் தழுவிய பாசமாகப் பர்ணமித்துள்ளது. அப்பாசத்தில் நாங்கள் நிறைந்து மகிழ்கிறோம்.

"அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் (குறள் 443)

வள்ளுவனாரின் வாக்கு வாய்மை உடைத்தன்றோ! எனது "ஈழத்தமிழ்ச் சான்றோர்" நூலுக்காக என்னைப் பாராட்டி அவர் வைத்த பொட்டும் எனது "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலின் வெளியீட்டு விழாவின்போது அவர் பாடிச்சூடிய "முல்லை மாலையும்" இத்துடன் இணைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" என்ற அரிய நூலை எழுதிய

வித்துவான் க. செபரத்தினம்

அவர்களைப் பாராட்டிப்

புலவர்மணி வித்துவான்

அடைக்கலமுத்து (அமுது) வைத்தபொட்டு

பிறப்பறியாத் தமிழரசி துயில் கொண்ட திண்ணை
பேரறிஞர் புலம் உழுது பயிர் செய்த பண்ணை
சிறப்பறிந்த சான்றோர்கள் வரப்புயரக் கட்டி
செம்மைசேர் வாய்க்கால்கள் முத்தமிழை பாய்ச்சி
மறப்பரிய உரமிட்டுக் களைகளையும் நீக்கி
வளர்த்த தமிழ் செழிப்படைந்து தென்றலிலே ஆட
உறக்கமற்றுப் பணிபுரிந்த பதினெட்டுச் சான்றோர்
உண்மைவர லாறுகளைச்சாறாகப் பிழிந்தார்.

நாட்டினிலே மூதறிஞர் வரலாறு கண்டோம்
நாடுவிட்ட படலத்தில் பிறநாடு வந்தோம்
கேட்டபல செய்திகளின் வேர்விழுதும் அறிந்தோர்
கேளாத வரலாற்றின் கிளைநதிகள் எந்த
மேட்டினிலே உற்பத்தி யானதெனத் தெரிந்தோம்
விரிந்தபல வரலாறு காலத்தால் சிதையாத்
தேட்டமிது என்றுவரும் சந்ததிகள் சொல்லும்
சிந்தையிலே சந்தத்தைப் பூசிவிடும் தென்றல்.

பாக்காட்டில் கண்டெடுத்த பாவலர்கள் சரிதம்
பார்த்தவிழி பசிமறந்து காத்துவந்த பெருமை
சாக்காட்டை அறியாத இலக்கியங்கள் தோற்றம்
தமிழர்புகழ் பிறமொழியில் தளித்த வரலாறு
தீக்காட்டில் அரசபடை தமிழ்நூல்கள் எரித்துச்
சிந்தையொடு சிலைகளுமே வெந்துருகச் செய்தும்
பூக்கூடை போலிந்தச் சான்றோர்கள் வாழ்வு
பொங்குதமிழ் ஈழத்தின் சங்கொலியாய்க் கேட்கும்.

தண்ணென்ற குளிர்ந்தநடை எழுதுதற்கு வல்லான்
தமிழீழப் பற்றினிலே முற்றியவோர் நெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணென்று இலக்கணங்கள் இலக்கியங்கள் கற்றோன்
கவிதைகளின் மழை உரைநடையில் நனைந்தோன்
எண்ணற்ற பலநாட்கள் ஊர்உறங்கும் போதும்
இமைமூடான் ஈழத்துச் சுடர்மணிகள் தேடி
வண்ணத்தின் நூல்அமைத்து மனம்குளிர நெஞ்சில்
மணியான செபரத்தினம் வித்துவான் வாழி!

வித்துவான் க. செபரத்தினம் அவர்களின்
தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச்சான்றோரும்
நூல் வெளியீட்டு விழாவின்போது பாடிச்சூடிய
"முல்லை மாலை"

எண்சீர் விருத்தம்

விண்முட்டும் புகழ் சுமந்த ஈழநாட்டின்
வேரினிலே பால் வார்த்த சான்றோர் தங்கள்
பண் முட்டும் வரலாற்றைப் பதிய வில்லை
பாவியவள் காலமகள் கழித்தேவிட்டாள்
மண்பட்ட வரலாறு தேடித் தேடி
மணிபொறுக்கி ஈழத்துச் சான்றோர் என்ற
பொன்பெற்ற நூலொன்றை ஆக்கித்தந்தான்
புகழ்பூத்த வித்துவான் செபரத்தினமே!

செந்தமிழின் சுவையினிலே நாள்தோறும் முழுகி
தீஞ் சுவையின் காவியங்கள் உரைநடையும் பழகி
விந்தைபெறும் தமிழ்நாடு சென்றிட்ட சான்றோர்
வெளியிட்ட பதிப்போடு விளக்கவுரை ஆய்ந்து
அந்தமிலா அவர்பணிகள் திருவுரைகள் கவிதை
அந்தாதி உரைவளமும் அச்சினிலே தொண்டு
பந்தலிலே பாவக்காய் என்றிருக்கக் கண்டு
பால்தேனாய்ச் சுவைத்திடவே நூலெழுதினாரே!

வேறு

பூவிரிந்த சோலைகளில் பொங்கிவரும் தேனீக்கள்
நாவினிக்கும் தேன்சேர்க்கும் நலம் சிறந்த மட்டுநகர்
மீன்பாடும் மெல்லிசையை விரும்பிவரும் சந்திரனார்
வான்தடவும் மரக்கிளையில் மறைந்திருக்கும் மட்டுநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைமன் காசிச் செட்டியென்பார்!
போற்றும் புலவர்களைப் புளூராக் எனப்புனைந்தார்!
தோற்றும் புலவர்களின் தொடர்ந்து வரலாற்றை
ஏற்றவிதம் ஆராய்ந்து எழுதிவைத்தார் சதாசிவத்தார்!

செல்லரித்த ஏடுகளைத் தேடித் திரிந்தெடுத்து
அல்லும் பகலுமதை ஆராய்ந்த சுன்னாகம்
நல்ல தமிழ்ப்புலவர் நவில் குமாரசுவாமி என்பர்
சொல்லும் புலவர்களின் தொடர் கதையைச்
சொல்லி விட்டார்!

என்றாலும் சான்றோர்கள் எழுதா வரலாறுகளோ
குன்றி மயங்கிக் குறைவாய் இருந்தமையால்
அங்கு மிங்கும் நூலாய்ந்து அவற்றிலே தேனெடுத்து
தங்கத் தமிழினிலே சான்றோர் வரலாற்றை
இங்கிதமாய்த் தரிக்கவைத்தார் இனிய செபரத்தினமே
எங்கும் இதைப்படிப்போர் ஈழத்தை வாழ்த்துவரே!

மனிதரின் மறைந்த நெஞ்சை மனத்திலே படங்களாக்கி
கனியுடன் கருப்பஞ் சாறாய்க் கவிதைகள் புனையவல்லோன்
நற்றவக் கவிஞர் போற்றும் நாயகம் பட்டம் பெற்றோன்
புற்றினில் ஈசல் போலப் புதுக்கவி பெருகும் நாட்டில்
செந்தமிழ் வளத்தின் செம்மல் சீர் கந்த வனத்தார் செய்த
விந்தைசேர் கவிதை யெல்லாம் வியந்திட வரியாய்க் கற்றுப்
புவியினர் தலையிற்போற்ற கவிதையின் வளம் சொன்னாரே!

ஆக்கம்:
இளவாலை
"அமுது"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல நூலகவியலாளர்
# திரு. என். செல்வராஜா அவர்கள்



ஈழத்தமிழ் எழுத்தாளர்கள் அனைவரதும் சகல படைப்புகளையும் அட்டவணைப்படுத்தி "நூல்தேட்டம்" என்னும் தொகுப்பைத் தன் சொந்த முயற்சியால் வெளியிட்டுவரும் பிரபல எழுத்தாளரே திரு. செல்வராஜா அவர்கள்.

பட்டதாரியும் நூலகவியலில் தகைமை பெற்றிருப்பவருமான திரு. செல்வராஜா அவர்கள் சிறப்புமிகு யாழ். நூலகத்தின் நூலகவியலாளராகப் பதவி வகித்த சிறப்புக்குரியவர். யாழ். நூலகத்தில் பக்திபூர்வமான அன்பு கொண்டிருந்த இவர் அப்பாரிய நூலகம் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்ட துயரத்தை இன்றும் உள்ளத்தில் சுமந்து வாழ்கிறார். இலண்டனில் தற்போது வாழ்ந்து வந்தபோதிலும் தாய் மொழியிலும் தாய் நாட்டிலும் அவர் கொண்டிருந்த பக்தியிலும் பாசத்திலும் ஓர் இம்மியளவுதானும் குறைவு ஏற்படவேயில்லை. "யாழ். நூல் நிலையம் - வரலாற்று ஆவணம்" என்னும் அவருடைய நூல் பேணிக்காக்கப்பட வேண்டிய ஒன்றாகும். யாழ். நூல் நிலையத்திற்குப் பிரித்தானிய நாட்டிலிருந்து நூல்களைச் சேகரித்து அனுப்புவதனை அவர் புனித பணியாகக் கருதுகிறார்.

நாம் முன்னுரையிற் சுட்டிய நூல் தேட்டம் என்னும் தொகுப்பில் 5000 நூல்களின் விபரங்களைக்கொண்ட ஐந்து தொகுதிகள் திரு. செல்வராஜா அவர்களால் வெளியிடப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் செறிந்து வாழும் இடங்களிலெல்லாம் "நூல் தேட்டம்" இடம் பெறுவதில் நாட்டம் கொண்டிருக்கும் இவர் "மலேசிய சிங்கப்பூர்" நூல் தேட்டத்தினை 01.12.2007 இல் கோலாலம்பூரிலே வெளியிட்டு வைத்துள்ளார். மாண்புமிகு டத்தோ.க. வீரசிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற மேற்படி வெளியீட்டு விழாவிலே திரு. செல்வராஜா அவர்களுடன் அவர்தம் துணைவியாரும் பங்குகொண்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

நூலகவியலாளர் திரு. செல்வராஜாவை ஆசிரியராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கொழும்பு வீதியிலுள்ள குமரன் புத்தக இல்லம் வெளியிட்டுவரும் "நூலகவியல்" என்னும் இதழானது தரம் வாய்ந்த கட்டுரைகளைத் தாங்கிவருவதனால் அறிஞர்களின் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறது.

நூலகவியலாளரான திரு. செல்வராஜா அவர்கள் இலண்டனிலிருந்து வெளிவரும் கலை, இலக்கிய, அரசியல் சமூக இதழான சுடரொளியின் சிரேட்ட ஆலோசகர்கள் இருவரில் ஒருவராகப் பணியாற்றி வருவதானது அவரது சிறப்பினைப் புலப்படுத்துகிறதல்லவா?

பிரித்தானியாவில் நூல்களைப் பேணிப்பாதுகாக்கும் நூல்காப்பகம் ஒன்றை உருவாக்கி தமிழ் நூல்களைச் சேகரித்து வைப்பதற்குரிய ஒரு சிறந்த முயற்சியில் திரு. செல்வராஜா அவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளாரென்பது குறிப்பிடவேண்டிய செய்தியல்லவா?

எனக்கும் திரு. செல்வராஜா அவர்களுக்கும் இடையில் அண்மைக்காலமாக நெருங்கிய தொடர்பு நிலவுகிறது. 29.01.2006 இல், இலண்டனிலிருந்து இயங்கும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சர்வதேச ஒலிபரப்பின் "காலைக் கலசம்" நிகழ்ச்சியில் "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் எனது நூலைப்பற்றிய விரிவான ஓர் அறிமுக உரையினை செல்வராஜா அவர்கள் நிகழ்த்தி னார். அவருடைய உரையிலே எனது வாழ்க்கைக் குறிப்பு களையும் தெரியப்படுத்திய அவர் என்னுடைய ஏனைய படைப்புகளாகிய "வாழையடி வாழை", "விபுலானந்த அடிக-ளாரின் வாழ்வும் வளமும்", "நயனங்கள் பேசுகின்றன", "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்" ஆகிய நூல்களையிட்டும், என்னால் தொகுக்கப்பட்ட நூலாகிய "கிழக்கிலங்கை மண்ணின் புகழ் பூத்த மைந்தர்கள்" என்னும் நூலையிட்டும் குறிப்பிட்டிருந்தமை அவருடைய விரிந்த மனப்பான்மையை விளக்கி நிற்கிறது.

எனது ஐந்து நூல்களையும் தொகுக்கப்பட்ட நூலினை யும் தமது நூல் தேட்டம் நான்காவது தொகுதியிற் சேர்த்துக்கொண்ட திரு. செல்வராஜா அவர்கள் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் எனது எழுபத்தைந்தாவது வயது நிறைவினையிட்டு வெளியிட்ட "வித்துவ ரத்தினம்" பவள விழா மலரையும் நூல் தேட்டம் நான்காவது தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் சேர்த்துள்ளார். எனது நூல்கள், எனது இலக்கியப் பணிகளையிட்டு ஐ.பீ.சீ. காலைக்கலசம் நிகழ்ச்சிகளில் உரையாற்றிட பேருதவியாக இருக்கின்றன என்று எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

நானும் எனது துணைவியாரும் 2006 ஆகஸ்ட் மாதத்தில் இலண்டனுக்கு வருவோமென்றும் அவ்வேளையில் இலக்கிய சந்திப்புகளை விரும்புவதாகவும் அதற்கேற்ற ஒழுங்குகளை மேற்கொண்டு உதவுமாறும் நூலகவியலாளர் திரு. செல்வராஜா அவர்களை அன்புடன் கேட்டுக் கொண்டேன். எங்கள் பிரயாண காலத்தில் அவர் வெளிநாடு களுக்குச் செல்லும் ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டாயிற் றென்றும் தாம் நிற்காவிட்டாலும் சில ஒழுங்குகளைச் செய்த பின்னரே பயணத்தை மேற்கொள்வதாகவும் எழுதியிருந்தார்.

அவர் செய்திருந்த ஒழுங்குகள் என்னை வியக்க வைத்தன. உண்மையில் ஆச்சரியத்தின் விளிம்புக்கே சென்று விட்டேன். இலண்டனில் வெளிவரும் அத்தனை தமிழ்ப் பத்திரிகைகளிலும் எங்களின் இலண்டன் வருகையினையிட்ட செய்திகள் பிரசுரமாகி இருந்தன. நாங்கள் தங்கி நிற்கப் போகும் முகவரி அறிவிக்கப் பட்டிருந்தது. ஐ.பீ.சி. வானொலி, இலண்டன் தமிழ் வானொலி, தீபம் தொலைக்காட்சி முதலிய வற்றில் நேர்காணல்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. முக்கிய பிரமுகர்கள் மேலே சுட்டப்பட்ட ஊடகங்களூடாக உரையாடவும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தார்கள். நாங்கள் இலண்டன் சென்று எங்கள் மருமகள் வீட்டில் தங்கியிருந்த முதல்நாள் இரவுவேளையில் என்னைச் சந்தித்த திரு. செல்வ ராஜா அவர்கள் சகல ஒழுங்குகளையிட்டும் விபரமாகக் கூறினார். அடுத்தநாட் காலையில் தாம் வெளிநாடு செல்வ தாகவும் தெரிவித்தார். முதற் சந்திப்பு முழு நிறைவு தந்தது. அவருடைய புன்னகை தவழும் முகம் என் உள்ளத்தில் ஆழ மாகப் பதிந்துவிட்டது. அவர் செய்திருந்த ஒழுங்குகள் யாவும் இனிதே நிறைவேறின. உண்மையில் அவர் செயல் வீரரே.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது (குறள் 101)

என்னும் வள்ளுவனாரின் வாக்கு நூலகவியலாளர் திரு. செல்வராஜா அவர்களை நினைக்குந் தோறும் முழு விளக்கம் தருவதாய் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கம்

01.08.2006 இல் இலண்டன் போய்ச்சேர்ந்த நானும் என் துணைவியாரும் ஹரோவிலுள்ள எங்கள் மருமகள் வீட்டில் தங்கியிருந்தோம். நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்கள் பெருமனதுடன் எனது வருகையை யிட்டும் நான் தங்கியிருந்த வீட்டின் முகவரியையிட்டும் இலண்டனில் வெளிவரும் அனைத்துத் தமிழ்ப் பத்திரிகை களில் அறிவித்திருந்ததால் எனது பழைய மாணாக்கர்களும் எழுத்தாள நண்பர்களும் உறவினர்களும் 02.08.2006 ஆம் திகதியிலிருந்து வரத் தொடங்கினார்கள்.

என்னைச் சந்தித்த பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலய பழைய மாணாக்கர்கள் தாங்கள் அமைத்து நடத்திவரும் களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்திற் பங்கேற்க வேண்டுமென எங்கள் இருவருக்கும் அழைப்பு விடுத்தனர். 06.08.2006இல் நடை-பெற்ற செயற் குழுக் கூட்டத்திற்கு அவர்களே வந்து கூட்டிச் சென்றனர். மாலை வேளையில் நடைபெற்ற கூட்டத்தில் எனது பழைய மாணாக்கரைச் சந்தித்ததில் பெருமகிழ்சி அடைந்தேன். தலைவர் திரு. செ. பாலகுமார் அவர்களும் செயலாளர் திரு. நா. சதானந்தன் அவர்களும் எங்களை வரவேற்று உரையாற்றியதோடு தங்களின் சங்கம் களுவாஞ்சிக்குடிக் கிராமத்திற்கும் ஆங்கு அமைந்துள்ள எங்கள் பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்கும் செய்துவரும் உதவிகளையிட்டு விரிவாகக் கூறினார்கள்.


மேற்படி சங்கத்தின் ஒன்பது செயற்குழு உறுப்பினர் களும் எங்கள் வித்தியாலய முன்னாள் விஞ்ஞான பாட ஆசிரி யர் திரு. கிருஷ்ணானந்தபவான் அவர்களும் பங்கேற்றிருந்த அக்கூட்டத்திலே எங்கள் பழைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். நான் என்னுடன் கொண்டுசென்ற, “தமிழ்நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்” என்னும் நூலினையிட்டும் ஒரு சிறிது விளக்கிக் கூறினேன். கனடாவில் எனது தமிழ்ப் பணி யினையிட்டும் எடுத்துக் கூறினேன். பல விடயங்களைப் பற்றியும் கலந்துரையாடினோம். பட்டிருப்பு மகாவித்தியாலயத் தின் வளர்ச்சிக்குச் செய்யப்படவேண்டிய பணிகளையிட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்தோம். இலண்டன் மாநகரில் தமிழ்மொழி வளர்ச்சிக் குச் செய்யக்கூடிய பங்களிப்பினையிட்டும் ஆராய்ந்தோம். எங்கள் முன்னாள் ஆசிரியர் திரு. கிருஸ்ணானந்தபவான் அவர்களின் வழிகாட்டுதல் சங்கத்திற்குப் பலவழியிலும் கிடைத்து வருவதனையிட்டு மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டது. எனது நூலின் கணிசமான தொகைப் பிரதிகளைக் கொள்வனவு செய்ததன் மூலம் எனது இலக்கியப் பணிக்கு களுவாஞ்சிக்குடி அபிவிருத்திச் சங்கம் தந்த ஊக்குவிப்பு மன ஆறுதலைத் தந்தது.

அபிவிருத்திச் சங்கக்கூட்டம், சங்கத்தலைவர் திரு. பாலகுமார் அவர்களுடைய வீட்டிலே நடைபெற்றதனால், கூட்டம் முடிந்ததும் சுவையான இரவுணவும் கொடுக்கப் பட்டது. நாடுவிட்டு வேறுநாட்டுக்குக் குடிபெயர்ந்துள்ள போதிலும் தாய் நாட்டுப்பற்றோடும் தாய் மொழிப்பற்றோடும் எழுத்தறிவித்த பாடசாலைப் பற்றோடும் சங்கமமைத்துச் செயலாற்றிவரும் எனது பழைய மாணாக்கரின் பண்பு கண்டு வியந்து வீடு திரும்பினோம்.


நாங்கள் கனடாவுக்குத் திரும்பி வந்தபோது எங்கள் விபுலானந்த கலைமன்றத்தின் கைவசமிருந்த, மீள்பதிப்புச் செய்யப்பட்ட விபுலாநந்த அடிகளாரின் யாழ் நூலின் பதினைந்து பிரதிகளைக் கொள்வனவு செய்து எமது கலை மன்றப் பணியினை ஊக்குவித்த களுவாஞ்சிக்குடி அபிவி ருத்திச் சங்கத்தினையும் அதன் தலைவர் திரு. பாலகுமார் அவர்களையும் மனம் நிறைந்து வாழ்த்துகிறோம். எல்லா நலன்களும் சித்திக்க இறைவனை வேண்டுகிறோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. எஸ். கருணானந்தராஜா அவர்கள்



திரு. கருணானந்தராஜா கிழக்கிலங்கை களுவாஞ்சிக் குடியிலே 1951 இல் பிறந்தவர். களுவாஞ்சிக் குடியிலும் மட்டக்களப்பிலும் ஆரம்பக் கல்வியையும் யாழ்ப்பாணம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரியில் இடை நிலைக் கல்வியையும் பெற்றுக் கொண்ட இவர், பேராதனைப் பல் கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியாக வெளி-யேறினார். தாய்லாந்து, நெதர்லாந்து முதலிய நாடுகளில் பட்ட மேற்படிப்பையும், பயிற்சி நெறிகளையும் மேற்கொண்ட கருணானந்தராஜா அவர்கள் தமது தகைமையை மேம் படுத்திக் கொண்டார்.

இளமைப் பராயத்திலிருந்தே தமிழ் இலக்கியத்தில் மிகுந்த ஈடுபாட்டினை வெளிப்படுத்திவந்த கருணானந்தராஜா அவர்கள் கவிதைகளைப் படைக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தார். அவருடைய படைப்புக்கள் பல பரிசுகளையும் ஈட்டிக்கொண்டன. கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்திய உடன் கவிதையாக்கற் போட்டியில் பரிசு பெற்ற இவர், 1986 இல் வீரகேசரிப் பத்திரிகை நிறுவனமானது எழுத்தாளர் ஆண்டினைக் குறித்து அகில இலங்கைக்காக நடத்திய சிறு-கதைப் போட்டியில் முதற்பரிசைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இதைத்தவிர பிரதேச ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் அகில இலங்கை மட்டத்திலும் நடத்தப்பட்ட இலக்கிய போட்டிகளிலும் இவர் பரிசில்கள் பலவற்றைப் பெற்றுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் தமிழ்ச்சங்க இதழான இளங்கதிரின் ஆசிரியராக 1976-77 ஆண்டில் பணியாற்றிய சிறப்பினைப் பெற்றுள்ள கருணானந்த ராஜா அவர்கள் கொழும்பிலே பணியாற்றிய காலத்தில் கொழும்புத் தமிழ்ச்சங்க நிருவாகசபை உறுப்பினராக 1990-94 காலப்பகுதியில் பணியாற்றியுள்ளார். 1986இல் கோலாலம்பூரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற ஆறாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிப்பதற்காக இவரால் எழுதப்பட்ட "பாரதியின் குயில் பாட்டின் தத்துவ மர்மம்" என்னும் ஆய்வுக்கட்டுரை ஏற்கப்பட்டு நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்ற போதிலும் அவர் அங்கு போகமுடியாத நிலை ஏற்பட்டதால் அக்கட்டுரை வாசிக்கப்படவில்லை. இந்நூலிலே கருணானந்தராஜா அவர்கள் பாரதியின் குயில் பாட்டிலே பாரதியார் சுட்டிட விழைத்த உட்பொருளினை நுட்பமாக ஆராய்ந்து கூறும் புதிய விளக்கத்தைக் காணலாம். அவர் பாரதியின் படைப்புக்குள் ஆழமாக உள்நுழைந்து, அப்படைப்பானது பாரதியின் வாழ்க்கையின்சில பின்னணி நிகழ்ச்சிகளை வேதாந்தக் கருத்துடன் இழைத்துள்ள ஒரு கதை என்பதை நிறுவி உள்ளார். அவருடைய விளக்கங்கள் காரணகாரியத் தெளிவினைக் கொண்டவையாய் அமைந்திருப்பதனைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

2004 நவம்பரில் வெளியிடப்பட்ட கருணானந்தராஜா அவர்களின் "ஈழத்தாய் சபதம்" என்னும் நூலானது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட போதிலும் 2003 ஆம் ஆண்டிலேயே கனடா உதயன் பத்திரிகையில் தொடர் கவிதையாகப் பிரசுரிக்கப்பட்டு 2004 இல் நூல் வடிவம் பெற்றுள்ளது. இந்நூலைப்பற்றிக் கருணானந்தராஜா அவர்கள், "இந்நூல், ஈழத்தமிழரின் இதிகாச, சரித்திர, சமகால வரலாறுகளை ஆங்காங்கே கவிதை வடிவில் தொட்டுச் செல்கின்றது" என்றும் "எது எவ்வாறிருப்பினும் ஈழத்தாய் தனக்கெனவோர் சத்தியத்தை, சபதத்தைச் செய்திருக்கிறாள் என்பது மறக்க முடியாத ஓர் உண்மை". "ஈழ தேசமே ஈழத் தாய் சபதம்". அந்தச்சபதம் உருவான பின்புலக்காரணங்களே இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன" என்றும் கூறியிருப்பது மனங்கொளத்தக்கவை.

இதே காலப்பகுதியில் அதாவது 2004 நவம்பரில் வெளியிடப்பட்ட கருணானந்தராஜா அவர்களின் மற்றுமொரு நூல் "வள்ளுவன் காதல்" ஆகும். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளாக அவராற் படைக்கப்பட்ட கவிதைகளின் தொகுப்பே மேற்படி நூலாகும். அவரால் ஆக்கப்பட்ட கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைகளுடன் ஆங்கில மொழியிலிருந்து பெயர்த்தெழுதப்பட்ட கவிதைகளையும் கொண்ட இத்தொகுப்பிலே "சரி பின்னக் காதலிப்பம்" என்னும் சிறுகதை ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்னர் சுட்டிய ஈழத்தாய் சபதம் என்னும் அவரது நூலின் இசைத்தட்டும் 2004 நவம்பரில் வெளியிடப் பட்டுள்ளமை இங்கு குறிப்படத்தக்கது. சதீஸ் குழுவினரின் இசையில் கருணானந்தராஜா அவர்களோடு மாட்டின், சோபியா, சதீஸ் ஆகியவர்களும் பாடியுள்ளார்கள். கருணா னந்தராஜா அவர்களுக்கு குரல்வளம் ஒரு பிறவிச் சொத்து. பாடல்களை ஆக்கிய அவரே அவற்றுக்கான மெட்டுகளையும் ஆக்கியுள்ளாரென்பது ஆச்சரியம்தரும் செய்தியல்லவா?


பாங்கொக் கசற்சாட் பல்கலைக்கழகம் பென்சான் வளாகத்திலியங்கும் கிளை நிலையமொன்றினால் கருணா னந்தராஜா அவர்களின் ஆங்கில மொழியிலான ஆய்வு நூலொன்று 1989 இல் வெளியிடப்பட்டுள்ளது. "Home Garden Pattern with Nuwaraeliya (Sri Lanka) Pattern" என்பது அந்த நூலின் பெயராகும்.

நான் 2006 ஆவணி மாதத்தில் இலண்டன் மாநகர் சென்றவேளையில் திரு. கருணானந்தராஜா அவர்கள், சட்டத்தரணி சிறீக்கந்தராசா அவர்களோடு வந்து என்னைச் சந்தித்தார். அவர் நான் அதிபராகக் கடமை புரிந்த பட்டிருப்பு மகாவித்தியாலயம் அமைந்துள்ள களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்தவர் என்பதும் அவருடைய துணைவியான திருமதி தயாபரி அவர்கள் என் பிறந்த ஊராகிய தம்பிலுவைச் சேர்ந்தவர் - என் உறவினர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய செய்திகளாம்.

திரு. கருணானந்தராஜா அவர்கள் சட்டத்தரணி சிறீக் கந்தராசாவால் ஆரம்பிக்கப்பட்ட வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின் உறுப்பினர். எனது நூல் வெளியீட்டு விழாவிலே பங்கேற்று நூலாய்வு செய்த மூவருள் ஒருவர். யுகசாரதி என்னும் கவர்ச்சியான புனைபெயர் அவருடையது. துடிப்பான சிந்தனையாளரான அவருக்கு ஒளிமயமான எதிர்காலம் விரைவிற் சித்திக்கும். அவரை வாழ்த்துவதில் நிறைகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள்



திரு. சிறீக்கந்தராசா அவர்கள் மேலைப்புலோலியூரில் வழக்கறிஞர் மாணிக்கம் செல்லத்தம்பி அவர்களுக்கும் திருமதி காந்திமதி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் தசாவதானி மேலைப்புலோலியூர் கதிரவேற்பிள்ளை அவர்க-ளின் மரபில் வந்தவரென்பது குறிப்பிடத்தக்கது. தென் புலோலியூர் கந்தமுருகேசனார், சிவன்கருணாலப் பாண்டியனார் முதலிய பெரும் புலவர்களிடத்திற் பாடங்கேட்ட பெருமையும் இவருக்குண்டு.

இடைநிலைக் கல்வியை முடித்துக்கொண்ட திரு. சிறீக்கந்தராசா அவர்கள் உயர்நிலைக் கல்வியைப் பெறுவதற்காகத் தமிழ் நாட்டின் திருச்சி தூயவளவனார் கல்லூரியிற் சேர்ந்துகொண்டார். அங்கு விஞ்ஞான கற்கை நெறியை மேற்கொண்டுவந்த அவருக்கு தமிழ்ப் பேராசிரியர் ஐயன்பெருமாள்கோனார் என்னும் பெரியாரிடம் தமது தமிழறிவை வளப்படுத்திடும் பேறு கிடைத்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பட்டதாரியாக நாடு திரும்பிய திரு. சிறீக்கந்தராசா அவர்கள் சட்டக் கல்வியையும் துறைபோகக் கற்றுக்கொண்டார்.

உயர்கல்வியை முடித்துக்கொண்ட திரு. சிறீக்கந்தராசா சட்டத்துறையுடன் தொடர்பான சில பதவிகளை வகித்தார். வித்தியோதயப் பல்கலைக்கழகம், வித்தியலங்காரா பல்கலைக்கழகம், கொழும்பு தொழில் நுட்பக்கல்லூரி ஆகியவற்றில் வருகைதரும் விரிவுரையாளராகவும் அவர் கடமையாற்றியுள்ளார்.

நாட்டின் யுத்த சூழல் காரணமாக வெளியேறிய திரு. சிறீக்கந்தராசா அவர்கள் 1980 இல் நைஜீரியாவைச் சென்றடைந்தார். அங்கு அவர் உயர்கல்வி நிறுவனங்களில், ஆங்கிலமொழி, சட்டக்கல்வி என்பனவற்றைப் போதித்து வந்தார். அங்கிருந்து 1985இல் இலண்டன் மாநகருக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற அவர், இலண்டன் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து கற்று சட்டத்துறையில் முதுமாணி (LL.M)ப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். தற்போது இங்கிலாந்து வேல்ஸ் அரசுகளின் சட்டத்துறைச் சேவையிலே பிரதம அலுவலராகப் பணியாற்றி வருகிறார். இவர் தமிழறிஞனும் சிந்தனையாளனுமாகிய சித்தாந்தப் புலவன் கலாநிதி, வித்துவான் க.ந. வேலன் அவர்களுடைய மகளாராகிய மாதினி அவர்களைத் தமது வாழ்க்கைத் துணையாக வரிந்து கொண்டுள்ளார். தமிழ்ப் புலமை இயல்பாக அமையப்பெற்ற திருமதி மாதினி அவர்கள் இசையிலும் நடனத்திலும் முத்திரை பதித்த கலைஞராவார்.

இலங்கையில் சட்டத்தொழிலில் ஈடுபட்டிருந்த காலத்தில் "சட்டமும் தமிழும்" என்னும் நூலினை காலஞ்சென்ற சட்டத்தரணி பூர்ணானந்தன் அவர்களோடு சேர்ந்து எழுதி 1971இல் வெளியிட்ட திரு. சிறீக்கந்தராசா அவர்கள் "பங்காண்மைச் சட்டம்" என்னும் நூலை எழுதி 1972 இல் வெளியிட்டுள்ளார். அத்துடன், "சட்டமும் சிரிக்கும்", "தெரியுமா சட்டம்" ஆகிய கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டுள்ளார்.

திரு. சிறீக்கந்தராசா அவர்கள் ஆங்கில மொழியில் எழுதிய "The Ethical Essence of The Tamils" என்னும் நூலானது 1993 இல் வெளியிடப்பட்டுள்ளது. 41 அதிகாரங்களைக் கொண்ட மேற்படி நூலின் முதலாம் அதிகாரம் முகவுரையாய் அமைய ஏனைய நாற்பது அதிகாரங்களும் நாற்பது திருக்குறள்களை மையக்கருவாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. மிகவும் நேர்த்தியாக எழுதப்பட்டுள்ள இந்நூலானது திரு. சிறீக்கந்தராசா அவர்களுக்குப் பொன்றாப் புகழைக் கொடுத்துள்ளது எனலாம். பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்களும் பேராசிரியை சரஸ்வதி இராமநாதன் அவர்களும் எனது மேற்படி கூற்றினை அரண் செய்துள்ளனர்.

திரு. சிறீக்கந்தராசா அவர்களது இன்னுமோர் அற்புத படைப்பு "ஔவையார் காட்டியவழி" என்னும் நூலாகும். 2003இல் வெளிவந்த இந்நூலில், ஔவையாரின் மூதுரையிலிருந்து 10 செய்யுள்களும் நல்வழியிலிருந்து 12 செய்யுள்களும் தனிப்பாடல்களிலிருந்து 7 செய்யுள்களும் ஆத்திசூடியில் இருந்து ஒன்றுமாக மொத்தம் 30 செய்யுள்களை விளக்கும் முப்பது அதிகாரங்கள் உள. அவற்றின் ஈற்றிலே, மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பது செய்யுள்களுக்குமான ஆங்கில மொழி பெயர்ப்புகள் கொடுக்கப்பட்டிருப்பதானது, ஆக்கியோனின் இருமொழிப் புலமைக்குச் சான்று தருவதோடு இன்றைய தேவையை நிறைவுசெய்யும் பணியாகவும் இருக்கக் காண்கிறோம்.

இலண்டன் மாநகரில் வழக்கறிஞராகவும் நூலாசிரியராகவும் ஒலிபரப்பாளராகவும் நயனாய்வாளராகவும் பணியாற்றிவரும் திரு. சிறீக்கந்தராசா அவர்கள், நூல் வெளியீடுகள், பொதுக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பவற்றில் தலைமை தாங்கி வருகிறார். அவரது மாமனாரும் பேரறிஞருமாக விளங்கியவருமான கலாநிதி, வித்துவான் வேலன் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வண்ணம் "வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்" என்னும் ஓர் அமைப்பினை நிறுவி இலக்கிய ஆர்வலர்களையும் சான்றோர்களையும் இணைத்து இலக்கியப்பணி ஆற்றிவரும் திரு. சிறீக்கந்தராசா அவர்கள் அனைவரதும் அன்பைக் கவர்ந்தவராயிருக்கிறார்.

2006 ஆவணித்திங்களில் நானும் என் துணைவியாரும் இலண்டன் மாநகருக்குச் செல்லுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டபோது, என்னால் எழுதப்பட்ட "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலுக்கான ஓர் அறிமுகவிழாவை அங்கு நடத்திடவும் விரும்பினேன். எனது விருப்பத்தினை எனது நண்பர் செவாலியர், கலாநிதி அடைக்கலமுத்து அவர்களுக்கு அறிவித்தபோது, இது விடயமாகத் திரு. சிறீக்கந்தராசா அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி அவர் ஆலோசனை வழங்கினார். தொடர்பு கொண்டேன்: உற்சாகமான வரவேற்புக் கிடைத்தது. புத்தக அறிமுகவிழாவினை சிறப்பாகச் செய்யலாமென திரு. சிறீக்கந்தராசா அவர்கள் உறுதியுடன் தெரிவித்தார்.

நாங்கள் இங்கிலாந்து சென்றிருந்த வேளையில் அவருடைய துணைவியார் அவருடைய இசை, நடனம் ஆகியவற்றுடன் தொடர்பாக தமிழ்நாடு சென்றிருந்தார். அவருடைய மாமியாரான திருமதி. வேலன் அவர்கள் நோயுற்று மருத்துவமனையிற் சேர்க்கப்பட்டிருந்தார். இவ்வித இடர்ப்பாடுகளின் மத்தியிலும் எனது நூல் அறிமுக விழாவைச் சிறப்பாக நடத்திமுடித்த திரு. சிறீக்கந்தராசா அவர்களதும் வித்துவான் வேலன் இலக்கியவட்ட உறுப்பினர்களதும் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வத்தினைப் பெரிதும் மதிக்கிறேன். எனது மனம் நிறைந்த நன்றியறிதலும் வாழ்த்துதலும் அவர்களுக்கு உரித்தாகட்டும்.

நூல் வெளியீட்டுவிழா அழைப்பிதழின் பிரதி இணைக்கப்படுகிறது.

# தமிழிலக்கியர் வரலாற்று நூல் வெளியீடு

தமிழிலக்கியரும் நாடக அறிஞரும் வளஞ் செறிந்த
பழுத்த எழுத்தாளரும் ஆகிய வித்துவான்
க. செபரத்தினம் அவர்கள் எழுதிய
**"தமிழ் நாடும் ஈழத்துச் சான்றோரும்"**
என்ற வரலாற்று இலக்கிய நூல் வெளியீடு
இடம்: சைவ முன்னேற்றச் சங்க மண்டபம்
Salisbury Road, Manor Park, London E12 6AB

நாள்: சனிக்கிழமை (19.08.2006)
நேரம்: மாலை 5.30 மணி

வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்தின் ஆதரவுடன்
நிகழும் இந்த விழாவில் கலாநிதி, கவிஞர் அமுதுப்புலவர்
உட்படத் தமிழறிஞர் பலர் உரையாற்ற உள்ளனர்.

நூலாய்வு செய்பவர்கள்: திரு. கருணானந்தராசா,
திரு. சிவநாதன், திரு. நாகன் சூரி

இந்த விழாவிற்கென வித்துவான் க. செபரத்தினம் அவர்கள்
கனடாவிலிருந்து வருகை தந்திருக்கிறார்.
தமிழ் மொழிக்காகத் தம்மை அர்ப்பணித்திருக்கும்
வித்துவான் ஐயாவை நேரிற்கண்டு மகிழ்ந்து குலவி
அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் ஆசியும் வழங்கிடத்
தமிழார்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வித்துவான் வேலன் இலக்கிய வட்டத்து உறுப்பினர்
66 உவெஸ்றோ காடின்ஸ், இல்போட்

மேலதிகத் தொடர்புகளுக்கு: சிறீ 0208 590 9905
பாலரவி 0208 503 6643 குமார் 0208 590 2068



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. திருமதி றோஷான் அவர்கள்

நானும் என் துணைவியாரும் இலண்டன் மாநகரில் தங்கிநின்ற வேளையில் எங்களை அழைத்துச்சென்று, தங்கள் வீட்டிலும் சிலநாள்கள் நிற்கச்செய்து, தங்களின் அன்பான விருந்தோம்பல் மூலம் எங்களை மகிழச் செய்தவர்களே திரு. திருமதி றோஷான் குடும்பத்தினர்.

திரு. நோயல் றோஷான் அவர்கள், நாங்கள் ஏற்கனவே நன்றிக்குரியவர்களாகக் குறிப்பிட்டிருந்த திரு. அல்பிரட் தம்பிராஜா, ஜெயரத்தினம் அவர்களின் மூத்த மகன் ஆவார். இவர் இலங்கையிலே தமது ஆரம்ப, இடைநிலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் இலண்டன் மாநகரிலே பொறியியற் துறையில் உயர் கல்வியை மேற்கொண்டு பட்டம் பெற்று பொறியியலாளராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. றோஷான் அவர்களின் துணைவியார், மட்டக் களப்பில் புகழ்பெற்று விளங்கும் திரு. ஜீவன் யோசப் அவர்க-ளின் தம்பியாரான திரு. யோகராஜா யோசப் அவர்களின் மக-ளாவார். திரு. யோகராஜா அவர்கள் எனது மாணாக்கர் என்பதும் என்னுடன் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் கடமைபுரிந்த எனது உடன் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத் தக்கது. அவ்வாறே திருமதி மிராந்தி றோஷான் அவர்க-ளுடைய தாயாராகிய திருமதி. கெங்கேஸ்வரி யோகராஜா அவர்கள் எனது துணைவியாரிடம் பெரியகல்லாறு மெ.மி. பெண்கள் பாடசாலையில் படித்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. திரு. திருமதி ஜெயரத்தினம், திரு. திருமதி. யோகராஜா ஆகியோர் ஆசிரியர்களாகப் பணியாற்றி யவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க செய்தியே.


திரு. திருமதி றோஷான் தம்பதியினருக்கு யோயன்னா என்னும் பெண் குழந்தையையும் யேடன் என்னும் ஆண் குழந்தையையும் ஆண்டவர் அருளியிருக்கிறார். இக்குடும்பத் தினர் கடவுளுக்குப் பயந்து, கடவுள் விதித்துள்ள கட்டளை-களுக்குக் கீழ்ப்படிந்து, கடவுளுக்குரியவர்களாய் வாழ்ந்து வருவதையும் கடவுளின் கிருபையினால் அற்புதமாக ஆசீர் வதிக்கப்பட்டு வருவதையும் ஏற்கெனவே நாங்கள் கேள்விப் பட்டிருந்தோம். அவர்களுடன் தங்கியிருந்த நாள்களில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய விசுவாச வாழ்க்கையின் சிறப்பினை முகமுகமாகக் கண்டு கடவுளைத் துதித்தோம். "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்" என்றும் "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது" என்றும், "தனது வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது" என்றும் வேதாகமம் கூறும் வகையில் அன்பான மகள் மிராந்தி வாழ்ந்து வருவதற்காக கடவுளுக்கே நன்றி செலுத்துகிறோம்.


"தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் எனது நூலின் வெளியீட்டு விழாவினை, "வித்துவான் வேலன் இலக்கிய வட்டம்" இலண்டனிலுள்ள மனோர்பார்க், சலிஸ்பரி வீதியில் அமைந்துள்ள சைவ முன்னேற்றச்சங்க மண்டபத்தில் நடத்தியபோது அவ்விழாவிற் பங்கேற்றிருந்த திரு. றோஷான் அவர்கள் விழா முடிந்ததும் எங்களை அவருடைய இல்லத் துக்கு அழைத்துச் சென்றார். எங்களின் மருமகள் குடும்பத் தினர் எங்களுக்குக் காண்பித்திட வாய்ப்பில்லாதிருந்த இடங் களை தம்பி றோஷான் அவர்கள் கூட்டிச்சென்று காண்பித் தார். பக்கிங்காம் அரண்மனை, வெஸ்ட்மினிஸ்டர் அபே, தேம்ஸ் நதிக்கரை, தேவாலயங்கள், அழகிய பூஞ்சோலைகள், சரித்திரப்பிரசித்தமான கட்டடங்கள், பல்கலைக்கழகங்கள் எனப்பல இடங்களைப் பார்த்தோம். ஓட்டுநர் இல்லாது ஓட்டப் படும் புகையிர தத்திலும் பயணித்தோம்.



திரு. திருமதி றோஷான் தம்ப தியினரும் திருமதி. கெங்கேஸ்வரி யோகராஜா அவர்களும் அன்பான குழந்தைகளும் எங்களிற் காட்டிய அன்பினையும் அக்கறையினையும் எங்கள் உள்ளங்களிற் பசுமையாக வைத்திருக்கிறோம். எல்லாம்வல்ல இறைவனின் அன்பான பாதுகாப்பும் நிறைவான ஆசீர்வாதமும் அவர்க ளோடு என்றென்றும் நிலைத்திடப் பிரார்த்திக்கிறோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிபரப்பாளர் திரு. எஸ். கே. ராஜன் அவர்கள்



நாங்கள் இலண்டனில் தங்கிநின்ற போது அனைத்துலக ஒலிபரப்பு நிலையத்தில் ஒரு நேர்காணலை எங்கள் அன்புக்குரிய நூலகவியாலாளர் ஒழுங்கு செய்திருந்தார். 08.08.2006 இல் மேற்படி நேர்காணல் காலை வேளையிலே 9.00 - 10.00 மணிக்கிடை யில் நடைபெற்றது.

நேர்காணலுக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதில் மிகுந்த ஆற்றலுள்ளவராகச் சிலாகிக்கப்படுபவர் திரு. இராஜன் என்று ஏற்கனவே அறிந்திருந்தேன். நூலகவியலாளர் திரு. செல்வ ராஜா அவர்களில் திரு. இராஜன் அவர்கள் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கையால் எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது என்பதை என்னால் அறியமுடிந்தது.

நேர்காணலின்போது அவருடைய வசீகரமான முகத் தோற்றத்தினாலும் அகத்தினழகினை வெளிப்படுத்தி நின்ற செந்தளிப்பான புன்னகையாலும் அவரின் சுத்தமான தமிழ் உச்சரிப்பினாலும் நான் வெகுவாகக் கவரப்பட்டேன்.

என்னையிட்டு நூலகவியலாளர் திரு. செல்வராஜா அவர்கள் கூறிவைத்திருந்த செய்திகளை அடித்தளமாகக் கொண்டு நேர்காணலை அவர் ஆரம்பித்தார். அவருடைய வினாக்கள் தமிழ் இலக்கியப் பரப்பில் அவர் கொண்டிருக்கும் ஆழமான புலமையைத் தெற்றெனப் புலப்படுத்தின. பல வினாக்கள் என்னைச் சிந்திக்கத் தூண்டின. சில வினாக்கள் என்னைச் சிலிர்க்க வைத்தன. ஈழத்தமிழகத்தின் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவர் காட்டிய அக்கறை என்னை மகிழச் செய்தது.

முதற் சந்திப்பு மறக்க முடியாத ஒன்றாக அமைந்து விட்டது. ஒருமணி நேரம் எவ்வாறு கழிந்ததென்பதனை நினைத்துப் பார்க்கவே முடியாததாகி விட்டது. பொற்காலமாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலத்திலிருந்து ஈழத்துப் பூதத்தேவனாரோடு உறவாடி, களப்பிரர் காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர்காலம் ஆகியவற்றுக்கூடாக நடைபயின்று, நல்லூர் ஞானப்பிரகாச சுவாமிகளைத் தரிசித்து, கற்பிட்டி சைமன் காசிச்செட்டியுடன் உறவாடி, ஈழத்தின் தமிழிலக்கிய வரலாற்றின் பொற்காலத்தினுட் தரித்து நின்றோம். ஆம்! என்னுடைய "ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்", "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" ஆகிய இரு நூல்களும் என்னு டைய நேர்காணலிலே முக்கிய இடம் வகித்தன. நிறைவில் மகிழ்ந்தோம்.

நேர்காணலின் இறுதியில் தொலைபேசி இணைப்பின் மூலம் அறிஞர் பெருமக்களின் தொடர்பு கிடைத்தது. திரு. ஐ. தி. சம்பந்தன், திரு. ஈ.கே. இராஜகோபால், செவாலியர் கலாநிதி அடைக்கலமுத்து முதலியோர் கருத்துப் பரிமாறிக் கொண்டனர். பயனுள்ள கருத்தாடல், களம் அமைத்துத்தந்த ஒலிபரப்பாளர் நன்றிக்குரியவராகிறார்.

எழுத்தாளர்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு ஆதரவு வழங்கும் வழிவகைகளுள் ஊடகத்துறையே முன்னணி வகிக்கிறதென்பதை உறுதிபடக் கூறுவேன். பணம், புகழ், விளம்பரம் ஆகியவற்றினை நோக்கங்களாகக் கொண்டு ஒலிபரப்பு, ஒளிபரப்பு, செய்தித் தாள் முதலிய ஊடகங்கள் செயலாற்றாமல் சமுதாயவளர்ச்சி, சமூகப்பணி என்பதனை இலட்சியமாகக் கொண்டு அனைத்துலக ஒலிபரப்பு சேவையை நடத்திவரும் ஊடகவிய லாளர் திரு. எஸ். கே. இராஜன் அவர்களை மனநிறைவுடன் பாராட்டுவதோடு, அவர் பணி மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிபரப்பாளர் திரு. உதயகுமார் கண்ணன் அவர்கள்

திரு. உதயகுமார் கண்ணன் அவர்கள் சாதாரண ஒளிபரப்பாளர் அல்லர். அவர் மிகச்சிறந்த நூலாய்வாளர். அவருடைய அற்புதமான ஆற்றலை நான் இலண்டன் மாநகருக்குச் சென்ற வேளையில் அறிந்திடும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டேன். இந்த வாய்ப்பினையும் நூலகவியலாளர் திரு. என். செல்வராஜா அவர்களே ஏற்பாடு செய்து தந்திருந்தார். 09.08.2006 புதன்கிழமை முற்பகல் 8.00 மணி தொடக்கம் 9.00 மணி வரையுமான ஒருமணிநேரம் எனக்காகக் குறிப்பிடப் பட்டிருந்தது. முற்பகல் 7.30 மணிக்கு நான் கலையகம் வர வேண்டுமெனக் கூறப்பட்டிருந்தது. நான் எழுதிய நூல்களின் பிரதிகளுடன் குறிக்கப்பட்ட நேரத்திற்குப் போய்ச் சேர்ந்தேன்.

திரு. உதயகுமாரன் கண்ணன் அவர்கள் என்னை எதிர்நோக்கிக் காத்திருந்தார். மலர்ந்தமுகம், கவர்ந்திழுக்கும் பார்வை, வசீகரத் தோற்றம்! ஆமாம், என் உள்ளத்தில் அவர் நிறைந்து உறைந்து விட்டார். ஏற்கனவே என்னையிட்டு அவர் விசாரித்து அறிந்திருக்க வேண்டும். எனது நூல்களை அவர் படித்திருக்க வேண்டும். அவருடைய உரையாடல், என்னை யிட்டு அவர் கூறிய அறிமுகம் யாவும் அப்படித்தான் என்னை நினைக்கச் செய்தன.

"ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்", "தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச்சான்றோர்" ஆகிய இரண்டு நூல்களையிட்டே விளக்கமாக உரையாடப்பட்டது. ஏனைய நூல்களையிட்டு ஓரிரு குறிப்புகள் மட்டும் கூறப்பட்டன. உரையாடலின் போது அவர் என்னுடைய நூல்கள் இரண்டினையுமிட்டு அறிந்து வைத்திருந்த ஆழமான செய்திகள் என்னை வியக்க வைத்தன. அதே வேளையில் ஈழவள நாட்டின் தமிழிலக்கிய வரலாற்றிலும் அவர் பெற்றிருந்த அறிவும் என்னை மகிழச் செய்தன. எனது நேர்காணலுக்கென ஒதுக்கப்பட்டிருந்த ஒரு மணிநேரத்தையும் முழுமையாகப் பயன்கொண்டோம். அவருக்கு என் நன்றி என்றும் உரியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாய்வாளர் கலாநிதி மு. நித்தியானந்தன் அவர்கள்

கலாநிதி மு. நித்தியானந்தன் அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராகப் பணி புரிந்தவர். புலம்பெயர்ந்து இலண்டன் மாநகர் சென்றடைந்த தைத் தொடர்ந்து பல்வேறு தமிழ்ப் பணிகளிற் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். பொருளியலில் ஆழமான புலமை பெற்றிருந்த கலாநிதி. நித்தியானந்தன் அவர்கள் தமிழிலும் புலமை பெற்றிருந்தார். இப்புலமையே அவருடைய தமிழ்ப் பணிகளுக்கு வழிசமைத்துக் கொடுத்தது.

இலண்டனில் புகழ்பெற்று விளங்கும் தீபம் தொலைக் காட்சி நிறுவனம் இவ்வாறு புகழ் பெற்றுள்ளமைக்கு வழிவகுத் தோரில் கலாநிதி நித்தியானந்தன் அவர்களுக்கு முக்கிய மானதோர் இடமுண்டு. அவருடைய வழிகாட்டுதலால் ஒளி பரப்பு, ஒலிபரப்பு, கலைத்துறை முதலியவற்றில் பலர் வழி நடத்தப்பட்டனர். தீபம் தொலைக்காட்சி நிறுவனம் இலண்டன் மாநகரிற் தனக்கென்று தனித்துவமான ஓர் இடத்தைத் தனதாக்கிக் கொண்டு வளர்ச்சி கண்டது. நூலாய்வுத்துறை யில் நிபுணத்துவம் பெற்று விளங்கும் கலாநிதி நித்தி யானந்தன் அவர்களால் அத்துறை முக்கியத்துவம் பெற லாயிற்று. அவரிடம் இயல்பாய் அமையப்பெற்ற நுண்மாண் நுழைபுலம், அவர் மேற்கொண்டுள்ள நூலாய்வுத்துறையை, இலக்கிய வளர்ச்சிக்கு இன்றியமையாததொரு துறையாக வளர்த்திட பெரிதும் உதவிற்று.

எனது அன்புக்குரியவரும் சங்கநூற் செல்வர், உரை யாசிரியர், புலவர்மணி அருளம்பலவனார் அவர்களின் மகனா ருமான திரு. சிவானந்தநாதன் அவர்கள் மூலமே கலாநிதி நித்தியானந்தன் அவர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. தமது சொந்த அலுவல் காரணமாக இலண்டன் மாநகர்சென்ற திரு. சிவானந்தநாதன் அவர்கள், அங்கு வெளியிடப்படும் புதினம் பத்திரிகையில் என்னை யிட்டும் எனது தமிழ்ப் பணியினையிட்டும் நான் எழுதிய நூல்களையிட்டும் கட்டுரைகள் எழுதியிருந்தார். தீபம் தொலைக்காட்சி நிறுவனத்தாருடனும் தொடர்புகொண்டு எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களையிட்ட நூலாய்வுகளை நிகழ்த்திட சாத்தியக்கூறுகள் உளவா? என விசாரித்தபோது அவருக்கு கலாநிதி நித்தி யானந்தன் அவர்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டது. நூல்களின் பிரதிகளைத் தமக்குத் தரக்கூடுமாயின் நூலாய்வினை மேற்கொள்ளலாமென கலாநிதி நித்தியானந்தன் அவர்கள் கூறியதும் திரு. சிவானந்தநாதன் அவர்கள் என்னுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு எனது நூல்களின் ஒவ்வொரு பிரதியை கலாநிதி நித்தியானந்தன் அவர்களின் முகவரிக்கு உடனடியாக அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். நானும் தாமதிக்காமல் அனுப்பி வைத்தேன். கலாநிதி அவர்கள் மிக அருமையான நூலாய்வினைச் செய்துள்ளார். அவருடைய ஆற்றல், அனுபவ முதிர்ச்சி, அறிவின் வெளிப்பாடு பல இடங்களிலும் துலாம்பரமாகத் தெரிந்தன. நூலாய்வின் இசைத்தட்டு எனக்கு அனுப்பப் பட்டது. பதச்சோறாக ஒரு பந்தியைத் தருதும்:

"வித்துவான் அவர்களின் நூல் மிகச்சிறந்ததொரு தகவற்களஞ்சியமாகவே திகழ்கிறது. ஈழத்தறிஞர்களின் தமிழ்ப் பணியையிட்டு சிறப்பாகத் தமிழ் நாட்டிலே அவர்கள் ஆற்றிய பணியையிட்டு மிகவும் விபரமாக விளக்கியுள்ள அவரின் நூல் பெரும் பாராட்டுக்குரியதாக அமைந்துள்ளது. ஈழத்தறிஞர்களின் தமிழ்ப்பணி பற்றிய நூல்கள் ஒரு சிலவே உள. பண்டிதமணி கணபதிப்பிள்ளை, பன்மொழிப் புலவர் க.சி. குலரத்தினம், கலாநிதி கைலாசபதி, கலாநிதி பூலோ-கசிங்கம் முதலிய அறிஞர்கள் இப்பணியில் உழைத்துள்ள போதிலும் இப்பணியில் வித்துவான் செபரத்தினம் அவர்களின் நூல் பலதரப்பட்ட தகவல்களை ஒழுங்காகக்கூறும் தகவற் களஞ்சியமாகத் திகழ்வதைப் பாராட்டவேண்டியது நமது கடமையாகும். உண்மையிலேயே ஈழத்தமிழ்ச் சான்றோர்க-ளின் தகவல்களை அறிய விழையும் அனைவரதும் கைகளில் தவழ வேண்டிய சிறப்புக் கொண்டதாய் இந்நூல் அமைந்திருக்கிறது."


நானும் எனது துணைவியாரும் 2006 ஆகஸ்ட் மாதம் இலண்டன் மாநகர் சென்றபோது கலாநிதி நித்தியானந்தன் அவர்களைச் சந்திக்கவும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நூல்களையிட்ட நூலாய்வினையும் கருத்துப் பரிமாறலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்திடவும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஊடகங்களுடனான தொடர்புகளைப் பெருமனதுடன் ஏற்பாடு செய்துதந்த நூலகவி யலாளர் திரு.என். செல்வராஜா அவர்களே கலாநிதி நித்தியானந்தன் அவர்களுடனான தீபம் தொலைக்காட்சி நிறுவனச் சந்திப்பினையும் ஏற்பாடு செய்து தந்தார்.

கலாநிதி நித்தியானந்தன் அவர்களைக் கண்டபோது, ஆன்றவிந்தடங்கிய சான்றோராகவே அவர் காட்சி தந்தார். "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் வள்ளுவரின் இலக் கணத்திற்கேற்ற இலக்கியமாகவே என்னுடன் நடந்து கொண்டார். என்னுடைய நூல்களைத் தனித்தனியாக நோக்கி-னோம். பலவிடயங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டார். அவருடைய நூலாய்வின் தனித்துவத்தை என்னால் கண்டு கொள்ள முடிந்தது. உண்மையாகவே அஃது ஓர் இனிமையான சந்திப்புத்தான். கலாநிதி நித்தியானந்தன் அவர்களின் இனிய நினைவு நிறைவு தருகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா நாட்டில் நாங்கள்

அவுஸ்திரேலியா நாட்டின் நியூ சவுத்வேல்ஸ் மாகாணத்திலே உவின்ஸ்ரன் பட்டணத்தில் வசிக்கும் எங்கள் இளைய மகனுடன் சில நாள்களைச் செலவிடுவதற்காக நானும் என் துணைவியாரும் 25.05.2007 இல் கனடாவிலிருந்து புறப்பட்டுச் சென்றோம்.

எங்கள் மகன் வீட்டில் தங்கிநின்றபோது எங்களின் உறவினர்களும் நண்பர்களும் பழைய மாணாக்கர்களும் எங்களைப் பார்க்க வந்தார்கள். ஆலய வழிபாடு, புத்தக வெளியீடு, ஒன்று கூடல்கள் எனப் பல நிகழ்ச்சிகளிற் பங்கு கொண்டோம்.

"இன்பத் தமிழ் ஒலி" என்னும் வானொலி நிறுவனத்தாரின் நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கேற்றோம். வேதப்படிப்பு நிகழ்ச்சிகள் சிலவற்றிலும் கலந்து கொண்டோம்.

சிட்ணி பட்டணத்திலே, சிட்ணி டவர், சிட்ணி ஹார்பர், ஓபரா ஹவுஸ் (opera House), ஹார்பர் ஹவுஸ் (Harbour House), பொண்டி பீச் (Bondi Beach) முதலியவற்றைப் பார்வையிட்டோம். கன்பரா பட்டணத்திலே பாராளுமன்றக் கட்டடத்தைப் பார்த்தோம். மெல்போர்ண் பட்டணத்திலே எங்கள் உறவினர்களைப் பார்த்தோம்.

மிகப் பழைமை வாய்ந்ததும் மிகுந்த ஆழமுடையதுமாக இருந்த தங்கச் சுரங்கமொன்றினைப் பார்ப்பதற்காகச் சென்றோம். எங்களனைய வயோதிபர்கள் அங்கு போவதற்கே பயப்படும் சுரங்கத்தின் அடிவாரத்துக்குள் நாங்கள் இருவரும் சென்றபோது பலரும் ஆச்சரியப்பட்டனர். ஆங்கு ஓடிக்கொண்டிருந்த மின்சாரத் தொடர் வாகனத்தில் நாங்கள் பயணித்தமையும் பலரின் விழிகளை உயரச் செய்தது.

பறவைகளின் சரணாலயம் ஒன்றினைப் பார்த்தோம். மிகவும் அழகான பலவர்ணக் கிளிகள் எங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களிலும் தலைகளிலும் அமர்ந்து கொண்டமை மிகுந்த களிப்பினைத் தந்தது.

அவுஸ்திரேலியாவின் தேசியச் சொத்துக்களாகிய கங்காரு, கோலாஸ், தீக்கோழி என்பன பல இடங்களிலும் பரக்கக் காணப்பட்டன. அவற்றிற்கு அண்மையிற் சென்று பார்த்து மகிழ்ந்தோம். பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

அவுஸ்திரேலியாப் பயணம் மிகுந்த மகிழ்ச்சி தந்தது. அன்பு மாணாக்கர் வண. ஜோன் ஜெகசோதி அவர்களின் அழைப்பை ஏற்று அவருடைய சபை ஆலயத்தில் ஆண்டவரின் செய்தியைக் கொடுத்ததும் என் அன்பு மாணாக்கன் திரு. நிசாகரன் அவர்களை அவரின் தாயாரோடும் துணைவியார், பிள்ளைகளுடன் சந்தித்ததும் என் அன்பு நண்பர் கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களையும் துணைவியாரையும் கண்டு அளவளாவியதும், "இன்பத் தமிழ்ஒலி" வானொலி மூலம் அவுஸ்திரேலியாவாழ் தமிழ் அன்பர்களுடன் தமிழ் உணர்வினைப் பகிர்ந்து கொண்டதும் எங்கள் பழைய மாணாக்கர்களையும் உறவுகளையும் கண்டு மகிழ்ந்ததும் இனிமையான, சுவையான நினைவுகளாம். இந்த நினைவுகளுடன் 27.06.2007 கனடா திரும்பினோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கத்துக்குரிய ஜோன் ஜெகசோதி அவர்கள்



வண. ஜோன் ஜெகசோதி அவர்கள், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியிலே என்னிடத்தில் ஆரம்ப வகுப்பிற் கற்றவர். செழிப்பான முகவளமும் இனிப்பான குரல் வளமும் அவருக்கு இறைவன் கொடுத்த கொடைகள். ஆசிரியர்கள் அனைவருக்கும் அவர் செல்லப்பிள்ளை. கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவுக்காக நானும் எனது நண்பர் திரு. எஸ். பொன்னுத்துரை அவர்களும் தயாரித்தளித்த "முள்ளோ? முடியோ" என்னும் வரலாற்று நாடகமொன்றில் இளவரசி வேடம் தாங்கிச் சிறப்பாக நடித்த ஜெகசோதி அவர்களின் உருவம் இன்னும் என் மனத்திரையிற் பசுமையாகவே பதிந்திருக்கிறது.

உயர் கல்விகற்றுத் தன்னைத் தகுதியாக்கிக் கொண்ட ஜெகசோதி அவர்கள் இலங்கை வங்கியில் அலுவலராகச் சேர்ந்து கொண்டாரென்றும் அக்காலத்திலே அவ்வங்கியில் நிறைவேற்றதிகாரம் கொண்ட உயரதிகாரியாகக் கடமையாற்றிய செல்வி சாந்தி அவர்களைக் காதலித்து திருமணம் செய்துகொண்டாரென்றும் அறிந்து கொண்டேன். அவ்வாறு வளமாக வாழ்ந்து வரும்போது ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்யும்படியான அழைப்புக் கிடைத்து, தமது பதவியை உதறிவிட்டு வேதசாத்திரக் கல்லூரியில் ஜெகசோதி அவர்கள் இணைந்து கொண்டார் என்ற செய்தி என் விழிகளை உயரச் செய்தது. அதிர்ச்சி ஒருபக்கம், மகிழ்ச்சி மறுபக்கம். நாங்கள் கருத்தோடு படிக்கும் கிறிஸ்தவ பாடல் ஒன்று நினைவுக்கு வந்தது. அந்தச் சரணத்தைக் கீழே தருகிறேன்.

"உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய்?
உலக மேன்மை அற்பமென்றும்
உலக ஆஸ்தி குப்பை என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் நின்று கூறுவாயா?

ஊழியஞ் செய்ய வருவாயா"

இப்பாடல் நூறுவீதம் ஜெகசோதி அவர்களுக்குப் பொருத்த மாய் அமைந்திருக்கிறதல்லவா?

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பட்டப் பிற்படிப்பு கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியினை நான் பின்பற்றிக் கொண்டிருந்த நாள்களில் ஒரு ஞாயிற்றுக்கிழமை கடவுள் வழிபாட்டிற்காக கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தேவாலயம் சென்றிருந்தேன். காலையில் அங்கு தமிழாராதனை நடைபெறுவது வழக்கம். நான் வழமைபோல் முதல் வரிசையில் அமர்ந்திருந்தேன். வழிபாடு நடைபெறும் குறிப்பிட்ட நேரத்தில் போதகர் பிரசங்க மேடைக்கு வந்தார். போதகரை நான் நோக்கினேன். போதகர் என்னை நோக்கினார். ஏற்பட்ட அதிர்ச்சியும் வியப்பும் ஓரிரு நாளிகைகள் நீடித்தன. சமாளித்துக் கொண்டோம். என் அன்புக்கும் மதிப்புக்குமுரிய ஜெகசோதி அவர்களே அங்கு வந்திருந்த போதகர். ஆராதனை மிகச் சிறப்பாயிருந்தது. அவர் கொடுத்த தேவ செய்தி உள்ளத்தைத் தொடுவதாயிருந்தது. ஆற்றொழுக்குப் போல் பேசினார்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்

சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள் 69)

என்னும் வள்ளுவனார் குறள் எனக்குள் விளக்கம் பெற்று நிறைந்தது.

26.05.2007 இல் அவுஸ்திரேலியா சென்றடைந்த நானும் என் துணைவியாரும் 27.05.2007 ஞாயிறு கடவுள் வழிபாட்டுக்காக எங்கள் மகன் வழமையாகப் போகும் ஆலயம் சென்றிருந்தோம். அவுஸ்திரேலியாவில் வசிக்கும் வண. ஜோன் ஜெகசோதி அவர்கள் நாங்கள் வந்த செய்தி அறிந்து எங்களை வீட்டில் வந்து சந்தித்தார். அவர் அவுஸ்திரேலியாவில் வகிக்கும் முக்கிய நிலை அறிந்து பெரிதும் மகிழ்ந்தோம். அவர் பதவி வகிக்கும் ஒரு சில அமைப்புகளை கீழே தருதும்:

1. டல்விச்ஹில், ஹேஸ்ஸ்ரோன்பாக்,
   பல்கலாசாரச் சபைப் போதகர்
2. நியூசவுத்வேல்ஸ் மாகாண தமிழ் நிறுவனங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பின் கடந்தகாலத் தலைவர்

3. தமிழ் அகதிகளுக்கான அவுஸ்திரேலிய சபையின் தலைவர், அதன் சிட்ணிப் பகுதிக்கான இணைப்பாளர்
4. கொடுமைகளுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாக்கப் பட்டு உயிர் பிழைத்திருப்போருக்கு சிகிச்சை அளித்து புனர்வாழ்வு வழங்கும் அமைப்பின் உறுப்பினர்
5. புகலிடம் கோருவோர் அமைப்பின் உறுப்பினர்
6. அனைத்துலக மன்னிப்புச் சபையின் அவுஸ்திரேலியக் கிளையினால் 2003ஆம் ஆண்டுக்கான மனித உரிமை விருதுக்காக நியமிக்கப்பட்ட சிறப்புக்குரியவர்
7. நியுசவுத்வேல்ஸ் மாகாணத்தின் பல்கலாசார ஊழியக் குழுவின் தலைவர்

"மக்கள் சேவையே மகேசன் சேவை" யென வரிந்து கொண்டு, "பணிசெய்து கிடப்பதே என் கடன்" என்ற பொன் மொழியினைத் தாரகமந்திரமாகக் கடைப்பிடித்து வண. ஜோன் ஜெகசோதி அவர்களும் அவர்களின் துணைவியார் திருமதி சாந்தி அவர்களும் அவுஸ்திரேலியாவில் ஆற்றிவரும் பணிகள் எங்களை வியப்பில் ஆழ்த்தின.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவர் தந்தை
என்னோற்றான் கொல் எனுஞ் சொல்" (குறள்70)

என்னும் வள்ளுவர் வாக்கினைச் சிறிது மாற்றி "இவன் ஆசான்" எனக்கொண்டு வண. ஜோன் ஜெகசோதி அவர்களை மாணாக்கனாகக் கொண்டமைக்கு நான் என்ன தவம் செய்தே னென மகிழ்ந்து நின்றேன்.

வணக்கத்துக்குரிய ஜெகசோதி அவர்களின் பெரு மைக்குரிய சீரிய பணிகள் பெற்றோருக்கு ஆசிரியனுக்கு இன்பம் பயப்பதை விட அவுஸ்திரேலிய மக்களுக்குப் பொதுவாகவும் அவுஸ்திரேலியாவாழ் தமிழ் மக்களுக்குச் சிறப்பாகவும் அமைந்திருப்பதனால்,


"தம்மில்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது" (குறள் 68)

என்னும் வள்ளுவர் வாக்கு விரிந்த பொருள் கொண்டதாய் காணப்படுகிறதல்லவா? எங்களைச் சந்திக்க வந்த வண. ஜெகசோதி அவர்கள் 03.06.2007 ஞாயிறு ஆராதனையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் செய்தியைக் கொடுக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார். "திரித்துவ ஞாயிறு" ஆராதனையாக அஃது இருந்தது. கடவுளின் செய்தியைக் கொடுத்திட அழைப்பு விடுத்த போதகர் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். ஆராதனை முடிந்ததும் எங்களுக்காக நடத்தப்பட்ட வரவேற்பு உபசாரமும் எங்களை வெகுவாக நெகிழ வைத்தது. வண. ஜோன் ஜெகசோதி, திருமதி சாந்தி ஜெகசோதி, பிள்ளைச் செல்வங்களையும் சபையோரையும் வாழ்த்தி நிற்கின்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்கள்

ஈழத்தின் வடபிரதேசத்திலுள்ள வன்னியிலே 1937 இல் பிறந்த பொன். பூலோகசிங்கம் அவர்கள் தமது இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிற் பெற்றுக் கொண்டார். 1957 இல் இலங்கைப் பல்கலைக் கழகம் பேராதனையிற் சேர்ந்து கொண்டவர், தமிழ் சிறப்புக் கற்கை நெறியில் இணைந்து 1961 இல் முதலாம் வகுப்புச் சிறப்புச் சித்தியினைப் பெற்றுக் கொண்டார். பொன். பூலோக சிங்கம் அவர்களது கலைமாமணித் தேர்வு முடிவுகளின் புள்ளிகள் அடிப்படையில் கீழைத்தேய மொழி உயர் கல்விக்கான அரசாங்கத்தின் பல்கலைக்கழகப் புலமைப் பரிசினை அவர் பெற்றுக் கொண்டார்.

இலண்டன் மாநகரின் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் தோமஸ் பரோ அவர்களின் மேற்பார்வையில் 1963 முதல் 1965 வரை ஆராய்ச்சி மேற்கொண்ட பொன். பூலோகசிங்கம் அவர்கள் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டார்.

1965 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரை யாளராக இணைக்கப்பட்ட கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்கள் பேராதனை, களனி, கொழும்பு ஆகிய பல்கலைக் கழகங்களில் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தில் அவர் இணைப் பேராசிரிய ராகப் பதவி உயர்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொதுநல நாடுகளின் பல்கலைக்கழக ஆசிரியர் புலமைப் பரிசில் பெற்று ஐக்கிய அரசின் ஸ்கொத்லாந்து தேசத்திலுள்ள எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் எஸ். பிற்கோடர் அவர்களின் மேற்பார்வையில் இரண்டாம் மொழி கற்பித்தல் தொடர்பாக 1980-81 ஆண்டுகளில் ஆய்வினை மேற்கொண்ட பெருமை பொன். பூலோகசிங்கம் அவர்களுக்கு உண்டு.

கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்கள் அரசாங்கம் சார்பான, அரசாங்கம் சார்பற்ற ஸ்தாபனங்கள் பலவற்றில் இணைந்து இலக்கியம், சமூகம், பண்பாடு, சமயம் தொடர்பாக அர்ப்பணிப்போடு உழைத்துள்ளார். இவற்றைப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபனங்கள் முழுமையாகப் பயன்படுத்தியுள்ளன.

பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் விசேட மலர் களுக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வந்த கலாநிதி பூலோகசிங்கம் அவர்கள் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் அனைத்துலக சைவசமய மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து வாசித்தும் உள்ளார்.

"தமிழ் இலக்கிய வரலாற்றில் ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சி" என்னும் நூலே கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களின் முதற்படைப்பாகும். 1970 இல் வெளியிடப்பட்ட இந்நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினைப் பெற்றுக் கொண்டது. இந்நூலின் பிரதிகள் விற்றுத் தீர்ந்து விட்ட காரணத்தினால் இதன் இன்றியமையாமை கருதி 2002 ஆம் ஆண்டில் மறுபதிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

திரு. ஆணல்ட் சதாசிவம்பிள்ளை அவர்கள் 1886இல் வெளியிட்ட பாவலர் சரித்திர தீபகம் என்னும் தமிழ்ப் புலவர் வரலாற்று நூலை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வேண்டு கோளை ஏற்று மிகச்சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் மறுபதிப்புச் செய்த பெருமை கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களையே சாரும். மேற்படி நூலின் முதற்பாகம் 1975 ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகம் 1979ஆம் ஆண்டிலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தால் வெளியிடப்படலாயின.

இலங்கையின் முதன் முறையாக வெளியிடப்பட்ட இந்துசமய கலைக்களஞ்சியத்தின் முதற் தொகுதியின் ஆசிரி யர் கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களே ஆவார். மேற்படி கலைக்களஞ்சியம் இந்து சமய, இந்து கலாசார இராஜாங்க அமைச்சினால் 1990 இல் வெளியிடப்பட்டது.

அச்சுவேலியைச் சேர்ந்தவரும் இங்கிலாந்து தேசத்தில் பிரபல ஆங்கில மொழிக் கவிஞராகத் திகழ்ந்தவருமான திரு. தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் பணியையிட்டு ஆங்கிலத் திலும் தமிழிலும் விரிவாக எழுதி 1993 இல் வெளியிட்ட கலாநிதி அவர்களின் பணி காலத்தினாற் செய்யப்பட்ட பயனுடைய பணியாகக் கருதப்படுகிறது.

மேலே குறிப்பிட்ட ஆங்கில மொழிப் புலவரான திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிமுத்துப்பிள்ளை அவர்களையிட்டு ஒரு சிறிது அறிந்து கொள்வதன் மூலம் கலாநிதி பூலோகசிங்கம் அவர்கள் மேற்கொண்ட பணியின் காத்திரத் தன்மையைப் புரிந்து கொள்ள முடியும்.

பன்மொழிப் பண்டிதராகப் போற்றப்படும் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்கள் மானிப்பாயில் பெருமைக்குரிய ஒரு சைவக்குடும்பத்தில் பிறந்தவர். அவருக்கு இடப்பட்டிருந்த பெயர் வைத்திலிங்கம் ஆகும். தந்தையார் பெயர் சுவாமி நாதபிள்ளை. தாயார் பெயர் தங்கமுத்துப்பிள்ளை. வைத்திலிங்கம் ஒரு வயதுக் குழந்தையாய் இருக்கும்போது தந்தையார் இறந்துவிட்டார். இளம் விதவையாயிருந்த தங்கமுத்துப்பிள்ளை பெற்றோரின் விருப்பப்படி அச்சுவேலி-யைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தினரான சந்தியாப்பிள்ளை உடையாரின் மகனான தம்பிமுத்துப்பிள்ளையை கத்தோலிக்க சமய முறைப்படி மறுமணம் செய்துகொண்டார். தாயாருடன் மகனான வைத்திலிங்கமும் கத்தோலிக்க மதத்திற் சேர்க்கப்பட்டார். அப்போதுதான் அவருக்கு ஞானப்பிரகாசம் என்னும் கத்தோலிக்க சமயப்பெயர் சூட்டப்பட்டது. திரு. தம்பிமுத்துப்பிள்ளை அவர்கள் சிறந்த தமிழறிஞர், கவிஞர், நாடக ஆசிரியர், எழுத்தாளர், பதிப்பாளர் என்றெல்லாம் போற்றப்பட்டவர். அவர்களுக்குப் பிறந்த மகனே ஆங்கில மொழிக் கவிஞர் தம்பிமுத்துப்பிள்ளை ஆவார். இவர் சுவாமி ஞானப்பிரகாசம் அவர்களின் தம்பி. குலவித்தை கற்றுப்பாதி, கல்லாமற்பாதி என்பார்கள். தந்தையாராகிய அறிஞர் தம்பிமுத்துப்பிள்ளை அவர்களின் புலமையும் தமையனாராகிய ஞானப்பிரகாச சுவாமிகளின் புலமையும் தம்பியாரிடம் வெளிப்பட்டதில் வியப்பில்லை அல்லவா? இவ்விதமான ஆங்கிலமொழிக் கவிஞரான அச்சுவேலி தம்பிமுத்து அவர்களின் ஈடிணையற்ற புலமையினையே கலாநிதி பூலோகசிங்கம் அவர்கள் வெளிக் கொணர்ந்துள்ளார். "செயற்கரிய செய்வர் பெரியர்" என்பது பொய்யாமொழிப் புலவரின் கூற்றன்றோ!

"தமிழறிஞர் விபுலானந்தர் வாழ்வும் பணிகளும்" என்னும் நூலினை 1992இல் வெளியிட்ட கலாநிதி அவர்கள் 1993 இல் "ஈழம் தந்த நாவலர்" என்னும் சிறந்த நூலினையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டுள்ளார். இந்நூல் இலங்கை அரசின் சாகித்திய மண்டல விருதினைப் பெற்றுக் கொண்டது. இஃது அவரது ஆறாவது நூலாகும். அவரது முதலாவது நூலாகிய "தமிழிலக்கிய வரலாற்றில் ஈழத்தறிஞர்களின் பெருமுயற்சி" என்னும் நூலும் அரசவிருது பெற்றிருந்தமை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

கலாநிதி பூலோகசிங்கம் அவர்கள் எழுதிய கட்டுரை களின் தொகுப்பு நூலாகிய "நாவலர் பண்பாடு" 2000ஆம் ஆண்டிலும் ஈழத்துச் சிலப்பதிகார யாத்திரை, இளங்கோ காட்டும் வைதிக மதம், ஈழத்துச் சிலப்பதிகாரக் கதைகள், சிலப்பதிகாரத்திலே கிராமிய இலக்கியப் படிமங்கள், தமிழ் இசை வரலாற்றில் யாழ் நூலின் முக்கியத்துவம் ஆகிய ஐந்து கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய "சிலப்பதிகார யாத்திரை" 2002 ஆம் ஆண்டிலும் அவரால் வெளியிடப் பட்டுள்ளன.

இலங்கைப் பல்கலைக் கழகங்களில் 32 ஆண்டுகள் பணியாற்றித் தமது 60 வயது நிறைவு பெற்றதும் 1997 இல் பதவியிலிருந்து விலகிக்கொண்ட கலாநிதி பூலோகசிங்கம் அவர்கள் இலங்கைக் குடியுரிமையுடன் அவுஸ்திரேலிய நாட்டுக் குடியுரிமையினையும் பெற்றிருக்கிறார். ஓய்வு நிலையில் இலங்கை, இந்தியா, மலேசியா, கனடா, அவுஸ்தி-ரேலியா, நியுசிலாந்து முதலிய நாடுகளிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், விசேட வெளியீடுகள் ஆகிய வற்றிற்கு இலக்கியம், மொழியியல், பண்பாடு, சமயம் தொடர்பான கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதி வருகிறார்.

கலாநிதி பூலோகசிங்கம் அவர்களுக்கு அவரது தமிழ்ப் பணியைப் பாராட்டும் வகையில் இலங்கை அரசானது 1993 இல் கொண்டாடிய தேசிய தினத்தில் "கலாகீர்த்தி" என்னும் பட்டத்தினை வழங்கிப் பெருமைப் படுத்தியுள்ளது. அண்மையில் அவர் வாழ்ந்துவரும் அவுஸ்திரேலிய நாட்டு தமிழ் எழுத்தாளர் சங்கமானது விருது வழங்கி அவரைப் பாராட்டியுள்ளது.

தமிழ் வித்துவான் கற்கை நெறிக்காக நான் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்த அதே 1957ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிலேயே கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களும் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தார். அப்போது முகிழ்த்த அன்புடன் இணைத்த நட்பு இன்றுவரை நிலைத்திருக்கிறது. எனது திருமண நிகழ்வுக்காக கலாநிதி பூலோகசிங்கம், கலாநிதி கா. இந்திரபாலா, கணக்காய்வாளர் நல்லூர் சீவரெத்தினம் ஆகியோர் மனநிறைவுடன் அனுப்பி வைத்த வாழ்த்துடன் கூடிய அன்பளிப்பை இன்னும் நினைவில் வைத்துள்ளேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பினை வெளிவாரி மாணவனாக மேற்கொண்டிருந்த காலத்திலும் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினைப் பின்பற்றி வந்த காலத்திலும் கலாநிதி பூலோகசிங்கம் அவர்களுடனான நட்பு மேலும் இறுக்கமடைந்தது. க.பொ.த.ப. உயர்தர வகுப்புக்கான பரீட்சைக் காலத்தில் விடைத்தாள் மதிப்பிடும் பணியில் கலாநிதி அவர்கள் பிரதம பரீட்சகராகவும் நான் உதவிப் பரீட்சகராகவும் இணைந்து பணியாற்றியுள்ளோம்.

2007 மே மாத இறுதியில் எனது மகனைப் பார்ப்பதற் கென நானும் துணைவியாரும் அவுஸ்திரேலியா சென்றிருந்த வேளையில் கலாநிதி பொன். பூலோகசிங்கம் அவர்களையும் அவர்தம் துணைவியாரையும் சந்தித்து அளவளாவும் சந்தர்ப் பத்தைப் பெற்றிருந்தோம். நீண்ட நேரம் உரையாடினோம். பழையவைகளை நினைவுபடுத்தினோம். எங்கள் அன்பு நின்று நிலைக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் ரீ. வேலாயுதம் அவர்கள்

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பீடத்தில் திரு. ப. சந்திரசேகரம் அவர்கள் விரிவுரையாளராகக் கடமை யாற்றிக் கொண்டிருந்த காலத்தில் அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரும் அவருடைய அபிமான மாணாக்கருமான பேராசிரியர் வேலாயுதம் அவர்களைக் கண்டு பழகியிருக்கிறேன். திரு. சந்திரசேகரம் அவர்கள் எங்களின் உறவினராயிருந்த காரணத்தினால் அவரை இடையிடையே சந்திப்பது வழமையாக இருந்தது.

பேராசிரியர் வேலாயுதம் அவர்கள் மிகச் சிறந்த மாணாக்கரென்றும் பாடறிந்து ஒழுகும் பண்பாளரென்றும் அற்புதமான கல்வி நெறியியலாளரென்றும் கற்றலிற் பசி தாகம் மிக்கவரென்றும் நினைவாற்றல் நிறைந்த விவேகி என்றும் திரு சந்திரசேகரம் அவர்கள் என்னிடம் கூறியவை இன்னும் என் உள்ளத்தில் உறைந்திருக்கின்றன. திரு. சந்திரசேகரம் அவர்களின் அறையில் பல தடவைகள் பேராசிரியர் வேலாயுதம் அவர்களைச் சந்தித்துப் பழகியபோது திரு. சந்திரசேகரம் அவர்கள் கூறிய கருத்து நூறு வீதம் உண்மையின் பாற்பட்டதென்பதை உணர்ந்து கொண்டேன். என்னை அறியாமலே பேராசிரியர் வேலாயுதம் அவர்களிடம் எனக்கு பெரும் மதிப்பேற்பட்டுவிட்டது.

அவரையிட்டு முழுமையாக அறிந்தபோது "பணியுமாம் என்றும் பெருமை", என்னும் வள்ளுவனாரின் கூற்றுக்குத் தக்கதோர் உதாரண புருடன் பேராசிரியர் வேலாயுதம் என்பதை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது.

பேராசிரியர் வேலாயுதம் அவர்கள் அவுஸ்திரேலி யாவின் மெல்போர்ணிலுள்ள லா றோப் (La Trobe) பல்கலைக் கழகத்திற் கற்று கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர். அதனைத் தொடர்ந்து கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கல்விப் பீடத்திலும் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கல்விப் பீடத்திலும் பணியாற்றினார். யாழ். பல்கலைக் கழகத்தில் கல்விப்பீடம் ஆரம்பிக்கப்பட்டதும் அதன் ஆரம்ப கால பேராசிரியராகப் பணியாற்றிய பெருமை அவரையே சார்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1984 இல் அவுஸ்திரேலியாவிலுள்ள நியூ இங்கிலாந்து பல்கலைக் கழகத்தில் வருகைதரும் பேராசிரியர் பதவியை வேலாயுதம் அவர்கள் ஏற்றுக்கொண்டார். இலங்கையின் நிலை சீரழிந்து போகத் தொடங்கியதால் பேராசிரியர் அவர்கள் அவுஸ்திரேலியாவிற் தங்கியிருக்கத் தீர்மானித்தார். அவருக்குரிய வேலை வாய்ப்புகள் பல வந்தபோதும், பிஜித்தீவிலுள்ள தென்பசுபிக் பல்கலைக் கழகத்திற் பணி யாற்றுவதையே தேர்ந்தெடுத்தார். பன்னிரு பசுபிக் நாடுக-ளின் மாணாக்கர் கல்விபெறும் அப்பல்கலைக் கழகத்தில் 21 ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய பெருமை பேராசிரியர் வேலாயுதம் அவர்களுக்கு உண்டு.

பொதுநலவாய கல்வி நிருவாகத்துக்கான அவை உறுப்புரிமையை (FeeEA), நியூயோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் டானியல் ஈ. கிறிபித்ஸ் (Professor Daniel. E. Griffiths) அவர்கள் ரொரண்டோ பல்கலைக் கழகத்தில் வைத்து பேராசிரியர் வேலாயுதம் அவர்களுக்கு வழங்கியமை பெருமைக்குரிய செய்தியாகும்.

அத்துடன் அவுஸ்திரேலிய கல்விக் கல்லூரியின் உறுப்புரிமையுடன் கௌரவ உறுப்பினர் என்னும் மதிப்பார்ந்த தகைமையையும் பெற்றிடும் சிறப்பு பேராசிரியர் வேலாயுதம் அவர்களுக்குக் கிடைத்தது. மேலும் அவுஸ்திரேலிய கல்வி, நிருவாக வெளியீட்டினதும் கல்வி, நிருவாகம், முகாமைத்துவம் தொடர்பான பிரித்தானிய வெளியீட்டினதும் ஆசிரியர் குழுவின் உறுப்பினராகவும் பேராசிரியர் வேலாயுதமவர்கள் பணியாற்றி வருவதும் பெருமைக்குரிய செய்திகளே.

பேராசிரியரவர்கள் நீண்ட காலமாகப் பணியாற்றிய பிஜித்தீவின் தென்பசுபிக் பல்கலைக்கழகத்தினர் அவருடைய நீண்டகாலப் பணியினைப் பாராட்டும் வகையில் அண்மை யிலே அவரை மேற்படி பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியராக நியமித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எங்கள் மகன் ஆனந்தநாதன் அவர்கள் இங்கு வருவதற்கு முன்னர் பிஜித் தீவிலுள்ள சீமெந்து தொழிற்சாலையில் உற்பத்திப் பிரிவின் முகாமையாளராகப் பணியாற்றியிருந்தார். அவர் அங்கு வாழ்ந்த காலத்தில் பிஜித்தீவில் வேலை பார்த்த இலங்கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் அனைவரும் அடிக்கடி சந்தித்து தங்களுக்குள் ஆழமான நட்புறவை நிலைநாட்டிக் கொண்டனர். அவ்வகையிலேயே பேராசிரியர் வேலாயுதம் அவர்கள் எங்கள் மகனின் உற்ற நண்பராகி விட்டார். நட்புக்கு வயது தடையல்லவே! ஆழமாக வேரூன்றிய நட்பு, அவுஸ்திரேலி யாவிலும் தொடர்கிறது.

நாங்கள் அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது பலதட-வைகள் பேராசிரியரின் வீட்டிற்குச் சென்றுள்ளோம். பேராசிரி யரின் துணைவியாரின் விருந்தோம்பல் அலாதியானது. இலங்கையில் ஏற்பட்டிருந்த தொடர்பு அவுஸ்திரேலியாவில் மேலும் உறுதி நிலை அடைந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாநிதி கே. ஜெகசோதி அவர்கள்

திருகோணமலையைப் பிறந்த இடமாகக் கொண்டுள்ள கலாநிதி ஜெகசோதி அவர்கள், யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோ-தயாக் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி, புனித பீற்ரஸ் கல்லூரி ஆகியவற்றிற் கற்று 1972 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்திற் சேர்ந்து 1975 இல் விவசாயப் பட்டதாரி யாக வெளியேறினார்.

சிறிதுகாலம் பேராதனைப்பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தைச் சேர்ந்த விவசாயப் பொருளியல் திணைக்களத்தில் உதவி ஆய்வாளராகப் பணியாற்றிய பின்னர் பொருளியலில் முதுமானிப் பட்டத்தினைப் பெறும் நோக்கில் 1975 இல் இலண்டன் பல்கலைக்கழகத்திற் சேர்ந்தார். 1977 மார்ச் மாதத்தில் பட்டம் பெற்று இலங்கை திரும்பிய திரு. ஜெகசோதி அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தைச் சேர்ந்த விவசாய பொருளியல் திணைக்களத்தில் உதவி விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

கலாநிதி பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் நோக்குடன் 1980 ஜனவரி மாதத்தில் அமெரிக்காவிலுள்ள ரெக்ஸஸ் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கலாநிதிப் படிப்பினை 1984 டிசம்பரில் வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

கலாநிதி ஜெகசோதி அவர்கள் பட்டப் படிப்பினை நிறைவு செய்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு சென்று அங்குள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தில் 1985 இல் சேர்ந்து கொண்டார். அங்கு விரிவுரையாற்றுவதும் ஒதுக்கீடு செய்யப் பட்ட வேலைத்திட்டத்தில் ஆராய்ச்சி மேற்கொள்ளுவதும் அவருடைய பணிகளாய் இருந்தன. 1988 வரை இப்பணியில் அவர் ஈடுபட்டிருந்தார்.

1989 இல் பிஜித்தீவிலுள்ள தென்பசுபிக் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இணைந்து 1992 வரை அங்கு பணியாற்றிய பின்னர் 1993இல் அவுஸ்திரேலியாவிற்குக் குடி-யேறி அவுஸ்திரேலியாவின் விக்டோரியாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

1979 இல் கலாநிதி ஹேமா என்பவரைத் திருமணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்துள்ள பேராசிரியர் ஜெகசோதி அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். பேராசிரியரின் குடும்பத்தினர் மெல்போன் பட்டணத்தில் வசித்து வருகின்றனர்.

பேராசிரியர் ஜெகசோதி அவர்களின் அம்மம்மா தமிழ்மொழி அறிவு கொண்டவராய் விளங்கியதாகக் கூறும் பேராசிரியர் அவர்கள் தமது அம்மம்மா கல்கி, கலைமகள், அமுதசுரபி, ஆனந்தவிகடன் ஆகிய சஞ்சிகைகளை ஒழுங்காக வாசிப்பவராகவும், வாசித்தவற்றைப் பேணிக்காப்பவராகவும் திகழ்ந்தார் என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். இதனால் தாமும் மேற்படி சஞ்சிகைகளை தமது அறிவுக்கேற்ப சிறிது சிறிதாக வாசிக்கத் தொடங்கி காலப்போக்கில் அவற்றைக் கருத்தோடு வாசிக்கக் கூடியதாக இருந்ததாகவும் தற்போது தமிழ் மொழியில் தமக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டுள்ள தாகவும் குறிப்பிட்டபோது அவருடைய உணர்ச்சி நிலையைத் தெளிவாக அறிந்திட முடிந்தது. தங்கள் பிள்ளைகள் இருவரையும் தமிழ் மொழியில் ஈடுபாடு கொள்ளச் செய்ததிலும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

பேராசிரியர் அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங்குகிறார். அவர் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தில் பேராசிரி யராகப் பணியாற்றிய காலத்தில் கர்நாடக சங்கீதத்தையிட்டு விரிவாக ஆராய்ந்ததோடு கர்நாடக சங்கீதத்தோடு தமிழ்ப் பண்பாட்டுக்குள்ள தொடர்பு பற்றியும் ஆழமாக ஆராய்ந்த தாகவும் கூறுகிறார். தம்முடைய துணைவியாரும் பிள்ளைகள் இருவரும் வீணை வாசிக்கக் கற்றிருப்பதாகவும் தமது மகள் பரதநாட்டியம் கற்றுள்ளாரெனவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார்.

பிஜித்தீவில் என்னுடைய மகனுடன் நட்புப்பூண்ட பேராசிரியர் குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவிலும் அதே நட்புறவுடன்தான் இருக்கிறார்கள். நாங்கள் அவுஸ்திரேலியா சென்றிருந்தபோது அவர்களிடமும் சென்றோம். அவர்கள் எங்களில் காட்டிய அன்பும் மதிப்பும் எங்களை வியக்க வைத்தன. அவர்களுடைய உயரிய பண்பு எங்களை வெகுவாக ஈர்த்து நின்றன. அவர்களுடைய விருந்தோம்பல் மனநிறைவு தந்தது. "பெரியவர்கள் என்றும் பெரியவர்களே" என்பதனைப் புரிந்து கொண்டோம். என்னால் எழுதப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈழத்துத் தமிழ்ச் சான்றோர்", "தமிழ் நாடும் ஈழத்துத்தமிழ்ச் சான்றோரும்" என்னும் இரண்டு நூல்களதும் ஒவ்வொரு பிரதியை அவர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தோம். அவற்றை அவர் பெற்றுக் கொண்ட பக்குவத்தினைப் பார்த்தபோது "பணியுமாம் என்றும் பெருமை" என்னும் வள்ளுவரின் வாக்கின் விளக்கம் என் உள்ளத்தை நிறைத்து நின்றது.

நாங்கள் வீடு திரும்பி ஒரு வார முடிவுக்குள் பேராசிரியர் ஜெகசோதி அவர்களிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. எனது புத்தகங்களின் சில பக்கங்களைப் படித்ததாகவும் புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கும் ஒழுங்கும் கூறப்பட்டிருக்கும் தகவல்களும் தம்மை மிகவும் கவர்ந்திருப்பதாகவும் தாம் அவற்றை ஆறுதலாக அக்கறையோடு படித்து வருவதாகவும் தம்முடைய பாராட்டுதலைத் தெரிவிப்பதற்காகவே தொடர்பு கொண்டதாகவும் மனநிறைவுடன் அவர் கூறினார். "ஆன்று அவித்து அடங்கிய கொள்கைச் சான்றோர்" ஒருவருடைய கூற்று மனதை நிறைத்துக் கொண்டது. நூலாசிரியன் ஒருவனுக்கு இதைவிட வேறு என்னதான் வேண்டும்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. துரையப்பா நிசாகரன் அவர்கள்

பட்டிருப்பு மகாவித்தியாலயப் பணியில் நான் கண்டெடுத்த முத்துக்களுள் ஒன்றாகவும் நான் தேடிக்கொண்ட சொத்துக்களுள் ஒன்றாகவும் கொள்ளப்படுபவர் என் அருமை மகன் துரையப்பா நிசாகரன் அவர்களாவார்.

01.01.1978 இல் மேற்படி வித்தியாலய அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். நான் நீண்டகாலமாகப் பின்பற்றி வந்த ஒழுங்கின்படி 6 ஆம் வகுப்பின் ஒரு பிரிவுக்குத் தமிழ்ப் பாடம் படிப்பிக்கத் தொடங்கினேன். அந்த வகுப்பின் மாணாக்கர் அனைவரிலும் என்னை அறியாமல் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டுவிட்டது. படிப்பில் அவர்கள் காட்டிய ஆர்வமும், வேலைகளை ஒழுங்காகச் செய்த நேர்த்தியும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அந்த வகுப்பு மாணாக்கர் அடுத்த வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட்ட பின்னரும் அவர்களின் தமிழாசிரியன் நானே. அவ்வாறே அவர்கள் 1982 இல் பொதுப் பரீட்சை எடுக்கும்வரை நானே தமிழ் கற்பித்தேன். இந்த ஐந்து வருட காலத்தில் என் உள்ளத்திற் குடியேறியவர்களுள் முக்கிய மாணவன் என்மகன் நிசாகரன்தான்.

சாதாரணதரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெறும் வசதி படைத்த பெற்றோரின் பிள்ளைகள் விஞ்ஞான பாடக்கல்விக்காக பட்டணத்திலுள்ள பெரிய பாடசாலைகளிற் சேர்க்கப்படும் ஒழுங்கினை எங்கள் பாடசாலையிலேயே உயர்தர வகுப்புகளை தகுதியான ஆசிரியர்கள் மூலம் வளப்படுத்தியதைத் தொடர்ந்து, எங்கள் மாணாக்கர் எங்கள் பாடசாலையிலேயே எல்லாப் பாட நெறிகளிலும் கற்கத் தொடங்கினார்கள். தம்பி நிசாகரன் அவர்கள் க.பொ.த.ப. உயர்தர வகுப்பின் விஞ்ஞானப் பிரிவிற் கற்கத் தொடங்கினார். எங்கள் பிள்ளைகள் எல்லாப்பாட நெறிகளிலும் சித்தியடைந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு கிழக்குப் பல்கலைக் கழகம், பேராதனைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்பட்டனர். தம்பி நிசாகரன் விவசாய விஞ்ஞானமாணிக் கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

1985 செப்டம்பரில் ஆசிரிய சேவையிலிருந்து நான் ஓய்வு பெற்றுவிட்டேன். பிரசைகள் குழுவின் தலைவராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவுசெய்யப்பட்டதால் தீவிரமாக அப்பணியில் ஈடுபட வேண்டியதாயிற்று. பிரசைகள் குழுப்பணிகள் என் நேரத்தை முழுமையாக ஆக்கிரமித்துவிட்டது. இதனால் தம்பி நிசா கரனைப் பற்றியோ, ஏனைய மாணாக்கரைப் பற்றியோ அறிந்து கொள்ள அவகாசம் கிடைக்கவில்லை.

தம்பி நிசாகரன் அவர்கள் மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழகத்திற் சேர்ந்து விவசாய விஞ்ஞான கற்கை நெறியிலே இணைந்து பயின்றாரென்றும் பின்னர் விவசாய விஞ்ஞான மாணிச் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டா ரென்றும் அறிந்து கொண்டேன். அவ்வேளையிற்கூட அவருடன் தொடர்புகொண்டு அவரை வாழ்த்திடத் தவறி விட்டேன்.

இரண்டொரு வருடங்களில் தம்பி நிசாகரன் அவர்கள் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகச் சங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் பெற்று இலண்டன் மாநகரி லுள்ள பிறிஸ்ரல் பல்கலைக்கழகத்தில் (University of Bristol) இணைந்து, விவசாய முதுமாணிப் பட்டத்தினையும் பெற்றுக் கொண்டாரென்னும் மகிழ்ச்சிக்குரிய செய்தியையும் அறிந்து கொண்டேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள் 69)

என வள்ளுவராற் சுட்டப்படும் தாயினை விடவும் மகிழ்ந்தேன். என் உள்ளம் குளிர்ந்தது. அந்த வேளையிற்கூட என் மகனைப் பாராட்டிட என்னால் முடியாது போய்விட்டது. தொடர்பு கொண்டிட முயன்றேன், அவருடைய முகவரி கிடைக்கவில்லை. அவருடைய நினைவிலே நிறைவுகண்டு வந்தேன். எதிர்பாராத நேரத்தில் அவர் அவுஸ்திரேலியாவில் இருக்கிறார் என்னும் மகிழ்வுக்குரிய செய்தி கிடைத்தது. என் மகன் ஆனந்தநாதன் அவர்களும் அவுஸ்திரேலியாவில் வசிப்பதால் அவரை தம்பி நிசாகரன் அவர்கள் இருக்கும் இடத்தினை விசாரித்தறிந்து தொடர்பு கொள்ளும்படி கடிதம் எழுதினேன். இரண்டு வாரங்களுக்குள் அவர்களுக்கிடையில் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. என் மகிழ்ச்சி இரட்டிப்பாகியது. அவருடைய தொலைபேசி இலக்கம் கிடைத்ததால் தொடர்பு கொண்டோம். மிக நீண்ட இடைவெளிக்குப்பின் கிடைத்த தொடர்பு பெரு மகிழ்ச்சி தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.05.2007 இல் நானும் எனது துணைவியாரும் அவுஸ்திரேலியா போய்ச் சேர்ந்தோம். அடுத்த நாளே மகன் நிசாகரன் அவர்கள் தமது தாயாரோடும் இரண்டு பிள்ளைகளோடும் எங்களைச் சந்திக்க வந்தார்கள். ஏறக்குறைய 22 ஆண்டுளின் பின்னர் அவர்களைக் கண்டதும் உணர்ச்சியில் உறைந்துபோனோம். பேச்சுமூச்சின்றி ஒருசில நிமிடங்கள் கழிந்தன. தம்பி நிசாகரனின் தாயார் பண்பின் திருவுருவம். அவருடைய முகத்தில் சாந்தம் எப்போதும் குடியிருக்கும். 22 ஆண்டுகளுக்கு முன்னர் பார்த்த அதே தோற்றம். அம்மாவில் எனக்கு எப்போதும் உயர்ந்த மதிப்பு. அந்த அம்மாவின் இரத்தத்தின் இரத்தம் தம்பி நிசாகரன். தம்பி நிசாகரனின் தந்தையாரான துரையப்பா அவர்களையிட்டுக் கூறும்போது அவர் யாருக்கும் கட்டுப்படாத சண்டியன் என்பார்கள். மதிப்புக்குரிய தாயாரையும் அன்புக்குரிய தனயனையும் பார்த்துப் பழகியவரால் தந்தையாரைப்பற்றிக் கூறப்படுவதை நம்பவே முடியாது. குணமென்னும் குன்றேறி நிற்கும் தாயாரும், அதே பண்பிலே உருவான தனயனும் நம் நினைவில் என்றும் உயர்ந்த நிலையிலேதான் இருக்கிறார்கள். அருமருந்தென புதல்வனை வளர்த்து உருவாக்கிய உயர் பண்பு கொண்ட தாயார் இன்று புதல்வனின் பிள்ளைகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறார். தம்பி நிசாகரனும் அவர்களும் அவருடைய துணைவியாரும் கொடுத்து வைத்தவர்கள். ஆம், பேரப்பிள்ளைகளும் கொடுத்து வைத்தவர்கள்தாம். தம்பி நிசாகரன் அவர்கள் அவருடைய பெயர் பொறிக்கப்பட்ட பாக்கர் பேனை ஒன்றினை அன்பளிப்பாகத் தந்து, தங்களுடைய விட்டிற்கு வரவேண்டுமென அழைப்பையும் விடுத்து விடைபெற்றுச் சென்றார்.


எங்களைப் பார்ப்பதற்காக தம்பி நிசாகரன் அவர்கள் வந்தபோது அவருடைய துணைவியார் வரவில்லை. அன்று அவர் வேலைக்குப் போயிருந்தார். அவர்கள் அனைவரும் வீட்டில் இருந்த ஒருநாளில் அவர்களைப் பார்ப்பதற்காக நாங்கள் சென்றோம். தம்பி நிசாகரன் குடும்பத்தாரோடு, பட்டிருப்பு மகாவித்தியாலயத்தின் பழைய மாணாக்கர் சிலரும் அங்கு கூடியிருந்தனர். தம்பி நிசாகரன் அவர்களின் துணைவியார் அருமையான குடும்பப்பெண். காதலித்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த திருமணம். அருமையான அம்மாவின் ஆசியோடு மகிழ்ச்சிக்குரியதாக விளங்குகிறது. அவர்களின் விருந்தோம்பலில் நிறைந்துபோனோம். அவர்களின் வாழ்வில் வளமும் நலமும் நிறைந்திருக்கிறது. எல்லாம்வல்ல இறைவனின் அருள் வியாபித்திருக்கிறது. மனம் நிறைந்த வாழ்த்துதலுடன் விடைபெற்றோம். மனதில் அவர்கள் நிறைந்திருக்கிறார்கள்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செந்தமிழ்ச் செல்வர் சு. ஸ்ரீகந்தராசா அவர்கள்

01.10.1953 இல் மட்டக்களப்பு களவாஞ்சிக் குடியிற் பிறந்த ஸ்ரீகந்தராசா அவர்கள் பட்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்திலும் பின்னர் கோட்டைமுனை இந்துக் கல்லூரியிலும் கற்றவர். 1972 இல் இலங்கை பொது எழுது வினைஞர் சேவையில் இணைந்து 1985 வரை கடமை யாற்றியவர். உத்தியோகத்தில் இருக்கும்போதே உயர் கல்வியை மேற்கொண்டு 1983 இல் சட்டத்துறையில் பட்டம் பெற்றவர். 1984 இல் சட்டக்கல்லூரி இறுதிப் பரீட்சையிலும் தேறி 1991 செப்டம்பர் மாதம்வரை மட்டக்களப்பு, கல்முனை, கொழும்பு ஆகிய இடங்களில் சட்டத்தரணியாகவும் பிரசித்த நொத்தாரிசியாகவும் சத்தியப்பிரமாண ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார். 1991 செப்டம்பர் 11 ஆம் திகதி அவுஸ் திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து சென்ற ஸ்ரீகந்தராசா அவர்கள் தற்போது விக்டோரியா மாகாணத்திலே வாழ்ந்து வருகிறார்.

"விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பர். அஃது அனுபவத்தால் எழுந்த சத்திய வாக்கு. தம்பி ஸ்ரீகந்தராசா அவர்கள் விளையும் பயிர் என்பதை முளையி-லேயே கண்டு கொண்டோம். விவேகமும் நினைவாற்றலும் அவருடைய பிறவிச் சொத்துக்கள். நாவன்மை அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட கலை. நாடகங்கள் நடிப்பதிலும், சொற்பொழிவுகளை நிகழ்த்துவதிலும், மனனஞ் செய்து ஓதுவதிலும் ஈடும் எடுப்புமின்றி முதலிடம் வகித்து வந்தார். சுடர்விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பார்கள். அந்தவகையில் அறிஞர் பண்டிதர் க. கந்தையா அவர்கள் ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு வாய்த்த தூண்டுகோலாவார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிப் பண்டிதரான கந்தையா அவர்கள், தமது தந்தையாரை இளம்பராயத்திலே இளந்த நிலையிலிருந்த ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு தந்தையாகவும் ஆசானாகவும் அமையப் பெற்றமை கடவுளின் திருவருளே யாம். நானும் இடையிடையே ஸ்ரீகந்தராசாவை உற்சாகப் படுத்தியிருப்பேன்; பாராட்டியுமிருப்பேன். அவ்வளவுதான்!

ஸ்ரீகந்தராசா அவர்கள் நாடகங்களில் நடித்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகங்களை இயக்கி மேடையேற்றியும் வில்லுப் பாட்டுக் களைத் தயாரித்து மேடையேற்றியும் தமது ஆற்றல்களை வளர்த்துக் கொண்டதோடு மன்றங்களை நிறுவி, நூல் நிலையங்களை அமைத்து சமூகப் பணிகளும் ஆற்றியுள்ளார். பட்டிருப்புத் தொகுதி மக்களின் பாரம்பரியக் கலைகளைப் பேணிக் காக்கவும் அவற்றை வளர்க்கவுமென "பட்டிருப்புத் தொகுதி கலைஞர் ஒன்றியம்" என்னும் அமைப்பினை நிறுவிய அவருடைய பணி அவருக்குப் பொன்றாப் புகழை ஈட்டிக் கொடுத்துள்ளது.

ஸ்ரீகந்தராசா அவர்கள் இலங்கையில் இருக்கும்போது செயலாளராகவும் இயக்குநராகவும் தலைவராகவும் செயற் குழு உறுப்பினராகவும் இயக்குநர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்து செயலாற்றிய மன்றங்களும் சபைகளும் கழகங்களும் ஒன்றியங்களும் அவரின் செயற்பாடுகளைச் சுட்டி நிற்கும் சான்றுகளாம்.

அவுஸ்திரேலிய நாட்டுக்குப் புலம் பெயர்ந்து சென்ற பின்னரும் ஸ்ரீகந்தராசா அவர்களின் செயலூக்கம் குன்றிவிட வில்லை. இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் செயற்குழு உறுப் பினராகவும் முத்தமிழ் விழாக் குழுத்தலைவராகவும் அவுஸ்தி-ரேலிய தமிழ் அகதிகள் சங்கத் தலைவராகவும் "தமிழ் உலகம்" என்னும் இருமொழி இதழின் ஆசிரியராகவும் பணி யாற்றியுள்ள தம்பி ஸ்ரீகந்தராசா அவர்கள் தற்போது விற்றல்ஸ் தமிழ்ச்சங்கத்தின் தலைவராகவும் வானமுதம் தமிழ் ஒலிபரப்புச் சேவையின் தலைவராகவும் பிரதான அறிவிப்பா-ளராகவும் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

அவருடைய எழுத்துப்பணி அவுஸ்திரேலியாவுக்குப் போனபின்னரும் தொடர்கிறது. "தமிழ் உலகம்" பத்திரிகை, "வெள்ளி நாதம்" இதழ், "உதய சூரியன்" மாதப் பத்திரிகை முதலியன ஸ்ரீகந்தராசா அவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

களுவாஞ்சிக்குடியிலே பனையோலை ஏட்டிலிருந்த "கண்ணகி அம்மன் ஊர் சுற்றுக் காவியத்தை" களுவாஞ்சிக் குடி சைவ மகாசபையின் சார்பில் வெளியிட்ட ஸ்ரீகந்தராசா அவர்கள் அவுஸ்திரேலியாவில் இயங்கிவரும் இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாக்கள் மூன்றினையொட்டி இடம்பெற்ற அனைத்துலக மட்டத்திலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைப் போட்டிகளில் கிடைக்கப்பெற்ற மிகச்சிறந்த இருபது கதைகளைத் தொகுத்துப் "புலம் பெயர்ந்த பூக்கள்" என்ற நூலாக 1996 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இலங்கைத் தமிழ்ச் சங்கத்தின் முத்தமிழ் விழாக்களின் தலைவராக 1993 தொடக்கம் 2002 வரை பணியாற்றியவர் தம்பி ஸ்ரீகந்தராசா அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீகந்தராசா அவர்களால் எழுதப்பட்ட நாடகங்களின் தொகுப்பு நூலானது மண்முனை தென்எருவிற் பற்றுப் பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளது. "மனதைக் கவரும் மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள்" என்னும் நூல் மணிமேகலைப் பிரசுரமாக 2002 இல் வெளியிடப்பட்டுள்ளது. தம்பி ஸ்ரீகந்தராசா அவ்வப்போது எழுதிய கவிதைகளின் தொகுதி "தமிழினமே தாயகமே" என்னும் நூலாக 2003 இல் வெளியிடப்பட்டது. தம்பி ஸ்ரீகந்தராசா அவர்கள் அவுஸ்திரேலியாவில் புகழ்பெற்று விளங்கும் வானொலிச் சேவையான" இன்பத் தமிழ் ஒலி" யின் மூலம் ஆற்றிய ஆய்வுரைகளின் தொகுப்பான "தமிழின் பெருமையும் தமிழரின் உரிமையும்" என்னும் நூலும் "ஓர் ஆஸ்திரேலிய ஈழத்தமிழரின் இந்தியப் பயணம்" என்னும் நூலும் மணிமேகலைப் பிரசுரங்களாக 2006 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் சில நூல்கள் வெளிவர இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மட்டக்களப்பு கலாசாரப் பேரவையானது சிறந்த நடிகர், சிறந்த நாடக இயக்குனர், சிறந்த நாடக எழுத்தாளர், சிறந்த வில்லிசைக் கலைஞர் முதலிய விருதுகளை திரு ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு 1970 ஆம் ஆண்டுக்கும் 1982 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பலதடவைகள் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

வட்டாரம், மாவட்டம், அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களும் விருதுகளும் திரு. ஸ்ரீகந்தராசா அவர்களுக்குக் கிடைத்துள்ளன.

அவுஸ்திரேலியாவில் ஸ்ரீகந்தராசா ஆற்றிவரும் தமிழ், சமூகப்பணிகளைப் பாராட்டி, விக்ரோறியா ஈழத் தமிழ்ச்சங்கம், விக்ரோறிய தமிழ்கலாச்சாரக் கழகம், மெல்பேண் தமிழ்ச் சங்கம் என்பன விருதுகளை வழங்கிச் சிறப்பித்துள்ளன.

அவுஸ்திரேலியாவின் பல்லின கலாசார அமைச்சர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 2005 இல் "செந்தமிழ்ச் செல்வர்" என்னும் பட்டத்தி-னையும் சிறப்பு விருதினையும் ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு வழங்கி பெருமை சேர்த்துள்ளார்.

அவுஸ்திரேலிய அரசினால் விக்ரோறியா மாநிலத்துக் கான சமாதான நீதவானாக 2007 இல் நியமிக்கப்பட்ட ஸ்ரீகந்தராசா அவர்களுக்கு அதே ஆண்டில் இந்தியாவின் தமிழ் நாட்டிலுள்ள புனிதவளனார் கல்லூரியானது அயலக முத்தமிழ்ப் பணிகளுக்கான விருதினை வழங்கிச் சிறப்புச் சேர்த்துள்ளது.

"மாணவப் பிராயத்திலும் அதன் பின்னரும் தமிழ் மொழிமீதும் தமிழ் இலக்கியங்கள்மீதும் தமிழ் நாடகக் கலைமீதும் எனக்கு ஆர்வம் வருவதற்கும் அது வளர்வதற்கும் காரணகர்த்தாக்களாகவும் வழிகாட்டிகளாகவும் இருந்தவர்கள் எனது மதிப்புக்குரிய ஆசிரியர்கள் அமரர் பண்டிதர் கந்தையா அவர்களும் வித்துவான், தமிழ் ஒளி க. செபரத்தினம் அவர்களும் ஆவார்கள். அவர்கள் இட்ட தமிழ்ப்பிச்சை இன்று புகழேணியின் உச்சத்தில் என்னை நிற்க வைத்துள்ளது" என்றும்

"1969 ஆம் ஆண்டு எனது 14 ஆவது வயதில் எழுத்துத்துறையில் என்னை இறக்கிவிட்டவர் அப்போது எனது பாடசாலையில் உயிரினவியல் ஆசிரியராக இருந்த திரு. மயிலங்கூடலூர் பி. நடராசா அவர்கள். என்னுள்ளே எனக்குத் தெரியாமல் இருந்த எழுத்துத் திறமையை இனங்கண்டு "உயிர்ப்பு" என்ற பாடசாலையின் சஞ்சிகையின் ஆசிரியராக என்னை நியமித்து என்னை எழுத வைத்தவர் அவர். பின்னர் 1970 ஆம் ஆண்டு சுதந்திரன் பத்திரிகையின் நிருபராக என்னைச் சேர்த்துவிட்டார்" என்று தம்பி ஸ்ரீகாந்தராசா அவர்கள் குறிப்பிட்டிருப்பதானது அவருடைய குருபக்தியையும் நன்றிமறவா நற்பண்பினையும் உணர்த்தி நிற்கின்றன அல்லவா?

"தமிழ் நாடும் ஈழத்துத் தமிழ்ச் சான்றோரும்" என்னும் நூலினை நான் எழுதிய வேளையிலே திரு. ந.சி. கந்தையா பிள்ளை அவர்களையிட்ட சில தகவல்களையும் சில பிர-சுரங்களையும் எனது வேண்டுகோளை ஏற்று அனுப்பி உதவிய தம்பி ஸ்ரீகந்தராசா அவர்களின் பெருந்தன்மையைப் பெரிதும் மதிக்கிறேன். அவருடைய குருபக்தி உள்ளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெகிழவைக்கிறது.

திரு ஸ்ரீகந்தராசா அவர்களின் துணைவியாரும் எனது அன்புக்குரிய மாணவியாரே. விஞ்ஞானப் பட்டதாரியாகிய திருமதி கோமளாதேவி ஸ்ரீகந்தராசா அவர்கள் எனது உடனாசிரியராகவும் பணியாற்றியவர்.

நானும் எனது துணைவியாரும் அவுஸ்திரேலியா விற்குச் சென்றிருந்த வேளையில் விக்டோரியா மாகாணத்தில் இப்பிங் என்னும் பட்டணத்தில் வாழ்ந்துவரும் பாடும்மீன் ஸ்ரீகந்தராசா குடும்பத்தாரையும் சந்தித்தோம். அவர்கள் வீட்டிலே அவர்களின் விருந்தோம்பலைக் கண்டு பிரமித்துப் போனோம். மட்டக்களப்பு உணவு அதேசுவையுடன் பரி-மாறப்பட்டது. அவர்களின் மக்கட் செல்வங்களான சஞ்சீவ், விதுர்ஷன், ஜனகன் ஆகிய மூவரும் பண்புடன் பழகினார்கள். ஆண் மக்களாகிய அவர்கள் பெற்றோரின் வழியில் கல்வியிற் சிறப்புற்றுத் திகழ்கிறார்கள்.

"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" (குறள் 61)

என வள்ளுவர் கூறுவது பொருள் பொதிந்த கூற்றல்லவா?





தம்பி ஸ்ரீகந்தராசா அவர்களுடன் அவரை ஈன்று புறந்தந்ததோடு தந்தையாகவும் திகழ்ந்து சான்றோன் ஆக்கியவருமான திருமதி சின்னம்மா சுப்பையாபிள்ளை அவர்களும் வாழ்ந்து வருவது அக்குடும்பத்துக்கு நிறைவு தருவதாயிருக்கிறது. வீடு ஆலயமாகவும் துலங்குகிறது. மனநிறைவுடன் அவர்களை வாழ்த்தி விடைபெற்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலி பரப்பாளர்
## திரு. பாலசிங்கம் பிரபாகரன் அவர்கள்

நானும் என் துணைவியாரும் 26.05.2007 இல் அவுஸ் திரேலியா போய்ச் சேர்ந்தோம். நியு சவுத்வேல்ஸ் மாகா ணத்தில், வின்ஸ்ரன் ஹில்ஸ் பகுதியில் கோலியாத் அவனியூவிலுள்ள எங்கள் மகன் வீட்டில் தங்கி நின்றோம். 27.05.2007 ஞாயிறு வழிபாட்டிற் பங்கேற்றோம். 02.06.2007 சனிக்கிழமை மாலையில் முத்தமிழ் ஒலிபரப்பாளர் திரு. விமல் சொக்கநாதன் எழுதிய "வானொலிக்கலை" நூல் வெளியீட்டு விழாவில் அழைப்பின்பேரில் பங்கேற்றோம். விழாவிலே அவுஸ்திரேலியாவின் "இன்பத்தமிழ் ஒலி" என்னும் வானொலி நிறுவனத்தின் உரிமையாளர் திரு. பாலசிங்கம் பிரபாகரன் அவர்களைச் சந்தித்தோம். அவருடைய வானொலி மூலம் எங்கள் மகன் ஆனந்தநாதன் அவர்கள் கிறிஸ்தவ நிகழ்ச்சி களை நடத்தி வருவதனால் அவர்களுக்கிடையில் தொடர்பு நிலவியது. என்னுடனான ஒரு சந்திப்பு நிகழ்ச்சியை நடத்திட திரு. பிரபாகரன் அவர்கள் ஒப்புதல் தெரிவித்தார்.

வீடு திரும்பியதும் அங்கிருந்த வானொலியில் இன்பத் தமிழ் ஒலி நிகழ்ச்சிகளைச் செவிமடுத்தோம். நிகழ்ச்சிகள் தரம் வாய்ந்தமையாக இருந்தன. திரு. பிரபாகரன் அவர்களது குரல் வளம், உச்சரிப்புத் திறன், தெளிவு, பேச்சாற்றல் யாவும் பாராட்டத் தக்கவையாய் இருந்தன. இரண்டொரு நாள்களாக நிகழ்ச்சிகளை உன்னிப்பாக அவதானித்தோம். மக்களின் தேவை அறிந்து, தமிழ் மக்களின் நிலை அறிந்து, காலத்தின் போக்கினை அறிந்து நிகழ்ச்சிகள் அமைந்திருப்பதனைத் தெரிந்து கொள்ள முடிந்தது. "இன்பத் தமிழ் ஒலி" தனித்துவத்தை உயிர் நாடி யாகப் பேணுவது தெற்றெனப் புலப்பட்டது. உண்மையாகவே மன நிறைவு தந்தது.

குறிக்கப்பட்ட நேரத்தில் வானொலி நிலையத்துக்கு நானும் எனது மகன் ஆனந்தநாதன் அவர்களும் சென்றோம். திரு. பிரபாகரன் அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்றார். என்னால் எழுதப்பட்ட நூல்களின் ஒவ்வொரு பிரதியை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தோம். எங்கள் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே அறிமுகமானவராக இருந்ததால் எங்கள் உரையாடல் பயனுள்ளதாய் அமைந்தது.

என்னுடனான நேர்காணலுக்கென குறிக்கப்பட்ட நேரம் நெருங்கியதும் அதற்குரிய அறையினுட் சென்றோம். நேர் காணலை திரு. பிரபாகரன் அவர்கள் நடத்திய ஒழுங்கு அவருடைய அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தியது. என்னை அறிமுகப்படுத்தியமுறை தனித்துவமானதாய் இருந்தது. இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றுடன், தமிழகத்தின் இலக்கிய வரலாறு ஆகியவற்றில் அவர் பெற்றிருக்கும் தெளிந்த அறிவு உண்மையிலேயே எனக்கு மகிழ்ச்சி தந்ததோடு திரு. பிரபாகரன் அவர்களில் ஓர் உயர்ந்த அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தியது. அவருடைய வினாக்கள் எனக்குச் சிறந்த களம் அமைத்துத் தந்தன. நீண்டநேர நேர்காணலில் ஒரு சிறிது இடைவெளி விடப் பட்டது. அந்த இடைவெளி நேரத்தில் நான் விரும்பிய ஒரு பாடலை ஒலிபரப்பிட அவர் விருப்பந் தெரிவித்தார். நான் உடனடியாகவே என் உள்ளத்தில் உயிர்த்துடிப்புடன் உறைந்து நிற்கும் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்னும் பாரதிதாசரின் பாடலை ஒலிபரப்பும்படி கேட்டுக்கொண்டபோது அவர் சிலிர்த்து நின்றார். நான் அந்தப் பாடலைத்தான் கேட்கக்கூடுமென எதிர்பார்த்திருந்ததாக அவர் பெருமகிழ் வுடன் கூறினார்.

இடைவேளையின் பின்னர் நேர்காணல் தொடர்ந்தது. எனது அனைத்து நுல்களையிட்ட விளக்கம் கொடுக்கப் பட்டது. கனடாவின் தமிழ் இலக்கிய முயற்சி பற்றியும் வினவப்பட்டது. இலங்கையின் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் எதிர்காலம் பற்றியும் பேசப்பட்டது. தமிழ்மொழியின் எதிர் காலம் பற்றியும் ஆழமாக, நிதானமாக, நேர்மையாக ஆராயப் பட்டது.

மேற்படி நேர்காணலை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்கள் வினாக்களை வினவிட நேரம் கொடுக்கப்பட்டது. அவுஸ்திரேலியாவின் பல பாகங்களில் இருந்தும் அன்பர்கள் தொடர்பு கொண்டார்கள். பேர்த், அடிலயிற், மெல்போர்ன், கன்பரா, சிட்ணி, பிறிஸ்பேண் முதலிய இடங்களில் வாழ்ந்துவரும் தமிழர்களின் வினாக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வியப்பைத் தந்தன. வேறுசில வினாக்கள் ஆழமாக சிந்திக்க வைத்தன. சில வினாக்கள் தமிழ் மொழியின் எதிர்காலம் பற்றிக் கவலை தோய்ந்தவையாய் இருந்தன. இன்னுஞ்சில இலங்கையின் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிய ஏக்கத்தைப் புலப்படுத்தின. தம்பி பாலசிங்கம் பிரபாகரன் அவர்களோடு நானும் சேர்ந்து அனைத்துத் தமிழ் மக்களின் உணர்வுகளோடும் பங்கு கொண்டோம். எனது நேர்காணல் மகத்தான உண்மைகளைப் புலப்படுத்தியதாக இருந்தது. அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தமிழ் உணர்வுடனேயே வாழ்கிறார்கள் என்பது முதலாவது உண்மை. அவர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சியிற் காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகிறார்கள் என்பது இரண்டாவது உண்மை. தம்பி பிரபாகரன் அவர்களது "இன்பத் தமிழ் ஒலி" ஒலிபரப்பு அங்கு வாழும் தமிழ் மக்கள் மத்தியில் மிகச்சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது மூன்றாவது உண்மை. தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும் தமிழ் மக்கள் தமிழ் மக்களே என்பது அசைக்க முடியாத உண்மை.

எங்களுடைய நேர்காணல் நிகழ்ச்சி இடம்பெற்று ஓரிரு தினங்களில் நேர்காணலின் ஒலிநாடா ஒன்றினை எங்களிடம் ஒப்படைத்த தம்பி பாலசிங்கம் பிரபாகரன் அவர்களது செயற்திறனையும் தமிழ் உணர்வினையும் என்றும் நினைவில் வைத்துள்ளோம். அவரது சீரியபணி மென்மேலும் உயர்ந்து சென்றிட வாழ்த்துகிறோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி செலுத்துகிறோம்!

முதற்கண் எங்களைப் படைத்து, காத்து, எங்கள் திருமண நாளின் ஐம்பதாண்டு நிறைவினைக் காணச் செய்துள்ள பரம தந்தையாகிய இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து எங்களை ஈன்று, புறந்தந்து, சான்றோராக்கிய எங்கள் பெற்றோருக்கு நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து எங்களுக்கு அன்பு தந்து, அரவணைத்துதவிய சகோதர சகோதரிகளுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தனித்தனியாக நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து எங்களுக்கு எழுத்தறிவித்த இறைவர்களாகிய ஆசிரியர் பெருந்தகைகள் அனைவருக்கும்
நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து "நினைவில நிறைந்தவை" என்னும் எங்கள் நூலுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ள எங்கள் பேரன்புக்குரிய

- பேராசிரியர், அருட்திரு யோசப் சந்திரகாந்தன் அவர்கள்
- அருட்திரு ஸ்ரீதரன் ஜெயராஜா அவர்கள்
- செவாலியர், கலாநிதி, வித்துவான்
  ச. அடைக்கலமுத்து அவர்கள்
- மூதறிஞர், கலாநிதி க.தா. செல்வராசகோபால் அவர்கள்
- கலாநிதி, கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள்

ஆகிய சான்றோர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து எங்கள் நூலின் எழுத்தமைப்பினைச் செவ்வனே செய்தும் பக்கங்களைத் தக்கவகையில் அமைத்தும் தந்த "செல்வா கிராபிக்ஸ்" கிருபா அவர்களுக்கும்
நூலின் அட்டையினை அழகுற அமைத்தும் நூலினைச் சிறப்புற அச்சிட்டும் உதவிய "விவேகா" அச்சகத்தினருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

இறுதியாக எங்கள் நூலினை எழுதுவதற்குப் பல்லாற்றானும் உதவிய அன்பர்கள் அனைவருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

கனகரத்தினம் செபரத்தினம், நேசம்மா செபரத்தினம்
416-282-4338


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org